# ZION
# INTERNATIONAL SEMINARY

MATURE AND SERVE

## B.Th.

# வேதாகம விளக்கவியல்
## III Semester

ziontheology@gmail.com 9994172553

# ZION
## INTERNATIONAL SEMINARY

ZION
MATURE AND SERVE

# B.Th.
# வேதாகம விளக்கவியல்
## ஆய்வுக்கட்டுரைகள் (Assignments)

1. “சந்தர்ப்ப சூழமைவின் ஐந்து வட்டங்கள்” என்கிற தலைப்பின் அடிப்படையில் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் ஆய்வுக்கட்டுரை எழுதுக.

2. வேதத்தை விளக்கப்படுத்தும்போது “வேதமே வேதத்தை விளக்கும்படி செய்திட வேண்டும்” என்கிற தலைப்பின் அடிப்படையில் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் ஆய்வுக் கட்டுரை எழுதுக.

# III Semester

ziontheology@gmail.com 9994172553

# <u>வேதாகம விளக்கவியல்</u>

## பாடம் - (1)

**அறிமுகம்:**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே இன்றுமுதல் ஒரு முக்கியமான வேதாகம பாடத்தை நாம் கற்றுக்கொள்ள போகிறோம். அந்த பாடத்தின் தலைப்பு: **Hermeneutics (ஹெர்மெனியூடிக்ஸ்)** என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றது. தமிழில் "வேத விளக்கவியல்" என்றும் "வேத வியாக்கியான விதிகள்" என்றும் "வேத விளக்க ஆய்வு" என்றும் அழைக்கப்படுகின்றது.

இப்பாடத்தின் அறிமுகமாக சில காரியங்களை இப்பொழுது நாம் பார்க்கலாம். இந்த பாடத்தின் அவசியம் பற்றி பிற்பாடு நாம் படிக்கபோகின்றோம்.

"பரிசுத்த வேதாகமம்" தேவனால் மனுக்கூலத்திற்கு அருளப்பட்ட அற்புதமான புத்தகம். பரிசுத்த வேதாகமம்: "புத்தகங்களுக்கெல்லாம் புத்தகமாக இருக்கிறது". "இந்த புத்தகத்தோடு வேறு எந்த ஒரு புத்தகத்தையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கவே முடியாது. "இன்று உலகில் அதிகமாக அச்சிடப்பட்டு விற்பனையாகும் ஒரே புத்தகம் திருமறை தான்.

அமெரிக்காவின் முதல் அதிபரான "ஜார்ஜ் வாஷிங்டன்" இப்படியாக சொன்னார்: "தேவனும் பைபிளும் இல்லாது இவ்வுலகை சரியாய் அரசாள முடியாது" என்றார். பக்தன் யோபு சொல்லுகிறார்: யோபு.23:12-ல் "அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தை பார்க்கிலும் அதிகமாய் காத்துக் கொண்டேன்" என்கிறார்.

சங்கீதக்காரன்:சங்கீதம் 138:2-ல் "உமது சகலப் பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைபடுத்தியிருக்கிறீர்" என்கிறார்.

பிரியமானவர்களே! எத்தனையோ பேரரசுகளும், பெரும் அரசர்களும், சர்வாதிகாரிகளும் மற்றும் ரோமன் கத்தோலிக்க மதத்தவர்களும் வேதத்தை அழிக்க பெருமுயற்சி செய்தும், சர்வவல்ல தேவன் பரிசுத்த வேதாகமத்தை இன்றும் நாம் பயன்படுத்த காத்து வந்திருக்கிறார். அவரது வார்த்தைகள் சாகாவரம் பெற்றவைகள். இன்றும் திருமறை ஜீவிக்கின்ற வார்த்தைகளாகயிருக்கின்றது.

பரிசுத்த வேதாகமத்தின் அருமை பெருமைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். இவ்வுலகத்தில் பரிசுத்த வேதம் போன்று பயனுள்ள புத்தகம் வேறில்லை. இவ்வுலகத்தில் அதிகமான எதிர்ப்புகளை சந்தித்த ஒரே புத்தகம் திருமறைதான். மற்றும் அதிகமாக தவறாக புரிந்துகொள்ளப்பட்ட ஒரே புத்தகம் என்றால் அது "பரிசுத்த வேதாகமம்" மட்டும்தான்.

இதற்கெல்லாம் காரணம் “திருமறையை எவ்வாறு சரியாக புரிந்து கொள்வது” என்பதை கிறிஸ்தவர்கள் அறியாமல் இருப்பதுதான். இன்றைக்கு வேதாகமம் தவறாக வியாக்கியானம் செய்யப்படுகிறது, போதிக்கப்படுகிறது. தாங்கள் மனம்போன போக்கிலே வேதத்தை விளக்கப்படுத்துகிறார்கள். இன்றைக்கு தலைவிரித்தாடும் அனைத்து வேதபுரட்டுகள், போலி போதனைகளுக்கெல்லாம் மூலக்காரணம் திருமறையை தவறாக வியாக்கியானம் செய்வதாகும். ஆகவே பரிசுத்த வேதாகமத்தை சரியாக புரிந்துகொள்வதும், விளக்கப்படுத்துவதும் இக்காலத்தின் மிகவும் அவசியமான ஒன்றாகும். வேதத்தை சரியாக வியாக்கியானம் செய்தால் தான் நம் வாழ்க்கையில் அதனை சரியாக நடைமுறைப் படுத்துவோம். அதே நேரத்தில் வேதத்தை தவறாக வியாக்கியானம் செய்தால் நம் வாழ்க்கையில் வேத வசனத்தை தவறாக தான் நடைமுறைப்படுத்துவோம்.

வேத வசனம் தவறாக வியாக்கியானம் செய்யப்பட அதிக வாய்ப்புள்ளது. தேவனுடைய வார்த்தையானது “ஆதி” முதலே தவறாக வியாக்கியானம் செய்யப்பட்டு வரப்படுகின்றது. முதன்முதலில் தேவனுடைய வார்த்தையை தவறாக வியாக்கியானம் செய்தவன் “சாத்தான்”. ஆதியாகமம் 3-ம் அதிகாரத்தில் “தேவன் சொன்னது உண்டோ” என்று கேள்வி எழுப்பினான்.

தேவன்: ஆதாம்-ஏவாளிடம் சொல்லியிருந்தார்: ஆதியாகமம் 2:16-17-வசனங்களில் ”நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம், அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.” சாத்தான்: “தேவன் சொன்னது உண்டோ?” என்று ஒரு குழப்பமான கேள்வியை எழுப்புகிறான் (ஆதியாகமம் 3:1) ஆதியாகமம் 3:4-ல்: “நீங்கள் சாகவே சாவதில்லை” என்ற தவறான நம்பிக்கை கொடுக்கிறான். சாத்தான் சொன்னது சரியா? ஆம். ஒருவிதத்தில் சரிதான் ஆதாம் சரீரப் பிரகாரமாக உடனே மரிக்கவில்லை, 930 வருடங்கள் சரிப்பிரகாரமாக உயிரோடு இருந்தான், உடனே மரிக்கவில்லை என்பதை நாம் வேதாகமத்தில் படிக்கின்றோம். ஆனால் “ஆவியில் மரித்தான்” “தேவனோடுள்ள ஐக்கியத்தை இழந்தான்” தேவனோடுள்ள ஐக்கியத்தில் மரித்துப் போனான்.

சாத்தானின் வியாக்கியானம் ஒருபக்கம் சரியாகத்தான் இருப்பதுபோல இருந்தாலும், இன்னொரு பக்கம் முழுக்க முழுக்க தவறான வியாக்கியானமாகயிருந்தது. இன்றும் துர்உபதேசிகளின் வியாக்கியானம் சாத்தானின் வியாக்கியானம் போல் தான் இருக்கிறது. அவைகள் சத்தியம் போன்று தெரிந்தாலும், அது சத்தியமல்ல. சத்தியத்திற்கும்-பொய்க்கும் நூலிடை வித்தியாசம் தான் உண்டு. அந்த இடைவெளியைக் கண்டறிவது கடினமான காரியம்.

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது: 2தீமோ.2:15-ல் “நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப்

போதிக்கிறவனையும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" என்று சொல்கிறார்.

ஏன் வேதத்தை வியாக்கியானம் செய்வது கடினமாய் இருக்கிறது? ஏன் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக விளக்கம் கொடுக்கிறார்கள்?

காரணம்....

பரிசுத்த வேதாகமம் ஓர் பழமையான புத்தகம். மூவாரயித்திலிருந்து நான்காயிரம் வருடங்கள் பழமை கொண்ட புத்தகம். சுமார் 100 வருடத்திற்கு முன்பு எழுதப்பட்ட ஒரு புத்தகத்தை நம்மால் சரியாக விளங்கிக் கொள்ளமுடியாதிருக்கும்போது எவ்வாறு நான்காயிரம் ஆண்டுகள் பழமையான புத்தகத்தை இலகுவாக விளங்கிகொள்ள இயலும்?

வேதத்தை வியாக்கியானம் செய்யும் விஷயத்தில் முதலாவது பரிசுத்த ஆவியானவரின் உதவியை நாம் நாட வேண்டும், அது மாத்திரமல்ல நாம் வேதத்தை கற்றுக்கொள்வதற்கும், வேதத்தை வியாக்கியானம் செய்வதற்கும் கடின உழைப்பும் அவசியமாயிருக்கிறது. கடின உழைப்பு இல்லாமல் வேத வசனங்களை ஆழமாக அறிந்துகொள்வது மிக கடினமான காரியம்.

## ஹெர்மெனியூடிக்ஸ்( **Hermeneutics)** என்ற வார்த்தையின் அர்த்தம்:

வேதத்தை வியாக்கியானம் செய்யும் கலையை இறையியல் வட்டாரம் **ஹெர்மெனியூடிக்ஸ்** என்று அழைக்கிறது. **ஹெர்மெனியூடிக்ஸ்** என்ற ஆங்கில வார்த்தை *ஹெர்மெனியா* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து உருவானது; இதன் பொருள் ***"வியாக்கியானம்"*** அல்லது ***'"மொழிபெயர்ப்பு"*** என்று பொருள்.

இந்த கிரேக்க வார்த்தையானது-கிரேக்கர்கள்-வியாக்கியான கடவுளாய் நம்பும் *ஹெர்மஸ்* என்னும் பெயரிலிருந்து உருவானதாகும். இந்த கடவுளை கிரேக்கர்கள் அறிவியல் கண்டுபிடிப்புகள், பேச்சு, எழுத்து, கலை போன்ற காரணங்களுக்காகவும், அதனை தேவர்களுக்கும் மனிதர்களுக்கு செய்திக் கொண்டுவரும் கடவுள் என்றும் நம்பினர்.

***ஹெர்மெனியூடிக்ஸ்*** என்னும் வார்த்தை கிரேக்க கடவுளின் பெயரிலிருந்து வந்த பதமாயினும், கிறிஸ்தவ வட்டாரத்தில் வேத வியாக்கியானத்தைக் குறிப்பதற்கே இந்த பதம் முழுமையாக பயன்படுத்தப்படுகின்றது. வேதத்தை அதனுடைய நிஜமான சூழ்நிலையில் நின்று அறிந்துகொண்டு, அதை ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்திற்குட்பட்ட ஜனங்கள் விளங்கிக்கொள்ளும்படி எடுத்துரைப்பதையே *ஹெர்மெனியூடிக்ஸ்* என்று அழைக்கிறோம்.

***ஹெர்மெனியூடிக்ஸ்*** என்பது அறிவியல் மற்றும் கலை சார்ந்த இயல். வியாக்கியானம் செய்யும் தத்துவ அடிப்படைக் கோட்பாடுகளை கண்டறிவதினால் இதனை **வியாக்கியானயியல்** என்கிறோம். கண்டறிந்த அடிப்படை தத்துவ கோட்பாடுகளை வேதப்பகுதிகளுக்கு ஏற்றவாறு

நேர்த்தியாய் பயன்படுத்தி வேதத்தின் சரியான அர்த்தத்தைக் கண்டறிய முற்படுவதால் இதனை **கலை** என்கிறோம்.

***ஹெர்மெனியூடிக்ஸ்*** என்ற வேத விளக்கவியல் என்பது ஓர் கலையாகும் என்று நாம் ஏற்கனவே பார்த்தோம். வேதத்தை நாம் புரிந்துகொள்ளும் விதத்தில் எவ்விதமான தவறுகளும், பிழைகளும் ஏற்படாதவாறு இருக்க இந்த கலையறிவு நமக்கு உதவுகிறது. நாம் வாசிக்கும் வசனங்களை அர்த்தம் சொல்வதற்கோ அல்லது விளங்கிக் கொண்டு மற்றவர்களுக்கு விளக்கி உரைப்பதற்கோ, ஏன் நமக்கு ஒரு உதவி தேவை என்ற கேள்வி எழலாம்.

அதற்கு பதில், ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட கடிதம் ஒன்று உங்கள் கைகளில் கிடைக்கிறது என்று கற்பனை செய்துகொள்ளுங்கள்; அதை யார் எழுதினார்கள்? யாருக்கு எழுதினார்கள்? ஏன் எழுதினார்கள்? ஏன்று உங்களுக்குத் தெரியாது… அதில் வரும் நபர்கள், இடங்கள் மற்றும் சில வார்த்தைகளும் உங்களுக்குத் தெரியாது… இப்போது வேறு ஒரு நபருக்கு அந்த கடிதத்தைக் குறித்து நீங்கள் விளக்கம் தரவேண்டியதுள்ளது என்று வைத்துக்கொள்ளுங்கள்; அப்போது சிலவற்றை உங்களால் கூறயியலும்; ஆனால் பலவிதங்களில் நீங்கள் தவறான அனுமானத்துக்கு வந்துவிடுவீர்கள். எனவே அந்த கடிதத்தைக் குறித்து நீங்கள் சரியான விளக்கம் கூறவேண்டுமானால் அதை எழுதியவரைப் பற்றியும், பெறுபவர் பற்றியும், கடிதத்தின் நோக்கம் பற்றியும் நீங்கள் அறிந்துகொள்ளவேண்டியது அவசியமாகின்றது.

பரிசுத்த வேதாகமமும் அதுபோன்றதே. நாமும்கூட பரிசுத்த வேதாகமம் எங்கிருந்து வந்தது? அது எவ்வாறு எழுதப்பட்டது? ஏன் எழுதப்பட்டது? யாருக்கு எழுதப்பட்டது? என்பதைப் பற்றியெல்லாம் புரிந்து கொள்ளாவிட்டால், அதற்கு நாம் அர்த்தம் கொடுக்கும்போது அல்லது விளக்கம் கொடுக்கும்போது தவறுகள் ஏற்பட்டுவிடும். இதன் காரணமாகவே, இந்த வேதவிளக்கவியல்*(ஹெர்மெனியூடிக்ஸ்)* நமக்கு தேவன் எழுதியுள்ள **பரிசுத்த வேதாகமம்** என்ற *கடிதத்தை,* நாம் வாசிக்கும்பொழுது புரிந்துகொள்வதற்கு ஏதுவான அறிவையும் திறமையையும் வழங்குகிறது.

திரியேக தேவன், மனிதன், பாவம், இரட்சிப்பு, சபை, இறுதிகாலச் சம்பவங்கள், பரலோகம் போன்ற பலவிதமான வேதபோதனைகளைப் பற்றி நாம் கொண்டிருக்கும் சகல அறிவும், தேவனுடைய வசனமாகிய வேதாகமத்திலிருந்தே நமக்குக் கிடைக்கிறது; எனவே, வேதத்தை சரிவரப் புரிந்துகொள்ளாவிட்டால் அல்லது தவறாக விளங்கிக்கொண்டால், நீங்கள் உங்களையும் மற்றும் உங்கள் திருச்சபை மக்களையும் வழிதவறி நடக்க வைத்துவிடுவீர்கள்.

வேதாகமம் எழுதப்பட்டிருந்த காலம், இடம், பொருள், சமுதாயச்சூழல் என்பது வேறு, இன்று வேதாகமத்தைக் கைகளில் வைத்துக் கொண்டு வாசிக்கும் நாம் வாழுகின்ற காலம், இடம், சமுதாயச் சூழல் போன்றவைகள் முற்றிலும் வேறுபட்டது. ஆதலால் பரிசுத்த வேதத்தை அதன் இடம், காலம், பொருள், சமுதாயச் சூழ்நிலை போன்றவைகளின்

அடிப்படையில் விளக்கி, அர்த்தம் சொல்லிப் போதிப்பதும், அல்லது புரிந்துகொள்வதும் நமது அழைப்பும் கடமையுமாகும்.

<u>வேத விளக்கவியல்-என்ற இப்படத்தின் அவசியமென்ன?</u>

*1) தேவன் சொல்லியவற்றை அறிந்துகொள்வதற்க்காக:*

பரிசுத்த வேதாகமம் என்பது எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையாகும்(Written Word of God), நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஜீவிக்கின்ற தேவனுடைய வார்த்தையாகயிருக்கிறார்(Living Word of God). தேவன் தான் படைத்த மனிதனோடு தொடர்புகொண்டு, அவனுக்குத் தன்னை வெளிப்படுத்துவதற்க்காக பல்வேறு காலங்களாக, பல்வேறு விதங்களில் அவனோடு பேசியுள்ளார்(எபி.1:1); அவ்வாறு பேசினவைகளை அவருடைய பரிசுத்த மனிதர்கள், பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு திருமறையில் எழுதியுள்ள்னர்(**2 பேதுரு 1:21, 2தீமோ.3:16**).

எனவே வேதத்தை வாசிக்கும்போது, தேவனுடைய வார்த்தையை நாம் வாசிக்கிறோம். எனினும், தேவன் வேதாகமத்தில் சொல்லியவற்றை சரியான விதத்தில் அறிந்துகொள்வதற்கு “***வேத விளக்கவியல்*** அல்லது ***வேத விளக்க விதிமுறைகள்”*** அவசியமாகயிருக்கின்றன. இந்த விதிமுறைகள்படி வேத வசனங்களை நாம் வியாக்கியானம் செய்யாவிட்டால் தேவன் சொல்லியவற்றை நம்மால் சரிவர அறிந்துகொள்ளமுடியாமல் போவது மட்டுமல்ல, நாம் அவற்றைத் தவறாகவும் விளங்கிக்கொள்வோம்.

இன்றைய கிறிஸ்தவ உலகில் பலவிதமான நம்பிக்கைகளும், முன்பின் முரணான இறையியல் கருத்துகளும், குழப்பமான உபதேசங்களும் மலிந்து காணப்படுவதற்கு முக்கிய காரணம், அநேகர் வேதாகமத்தை சரியான விதத்தில் வியாக்கியானம் செய்யாமல், தமது ஊகங்களினாலும் கற்பனைகளினாலும் திருவசனங்களுக்கு அர்த்தம் சொல்வதேயாகும். இவர்கள் வேதாகமத்தில் தேவன் சொல்லியவற்றை பிரசங்கியாமல், தங்களது சுயஅறிவையும், தனிப்பட்ட அனுபவங்களையும், தங்கள் சுயகருத்துகளையும் அடிப்படையாகக் கொண்டு, வேத வசனங்களை வியாக்கியானம் செய்து வருகிறார்கள். இதனால், தேவன் உண்மையிலேயே வேதாகமத்தில் என்ன சொல்லியிருக்கிறார்? வேத வசனங்களின் உண்மையான அர்த்தமும் சரியான விளக்கமும் என்ன? என்ன அர்த்தத்தோடு தேவன் ஒவ்வொரு வார்த்தையையும் சொல்லியிருக்கிறார்? என நம்மால் அறிந்துகொள்ள முடியாத நிலையுள்ளது. எனவே, வேதாகமத்தில் சொல்லியவற்றை அறிந்துகொள்வதற்கு வேத வசனங்களை அர்த்தவிளக்கம் செய்யும் முறையை நாம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியமாகும்.

*2) தேவன் சொல்லாதவற்றை அறிந்துகொள்வதற்க்காக:*

தேவன் வேதாகமத்தில் *சொன்னவைகளை* மட்டுமல்ல, அவர் *சொல்லாதவற்றையும்* அறிந்துகொள்ளுவதற்கு வேத வசனங்களின் வேத விளக்கவிதிகள் நமக்கு அவசியமாக உள்ளது. வேத வசனங்களை நாம் சரியான விதத்தில் வியாக்கியானம் செய்யாவிட்டால்

தேவன் வேதாகமத்தில் சொல்லாதவற்றையெல்லாம், அவர் சொன்னதாக எண்ணிக் கொண்டிருப்போம். வேத வசனங்களின் சரியான அர்த்தத்தை நாம் அறிந்துகொண்டால் அவர் எவற்றையெல்லாம் வேதாகமத்தில் சொல்லவில்லை என்பதை நாம் இலகுவாக கண்டுகொள்ளலாம்.

*3) தேவன் நமக்கென்று சொல்லியிருப்பதை அறிந்துகொள்வதற்க்காக:*

தேவன் வேதாகமத்தில் சொல்லியவற்றையும், சொல்லாதவற்றையும் மட்டுமல்ல; அவர் நமக்கென்று சொல்லியிருப்பதையும் அறிந்துகொள்வதற்கும் "வேத விளக்கவியல்"(அ) "வேத விளக்கஆய்வு" அவசியமாகயுள்ளது. வேதத்தில் தேவன் ஏற்கனவே சொல்லியவற்றிலிருந்து இன்று நம்மோடு பேசி, தனது சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துகிறவராய் இருக்கிறார்.

பரிசுத்த வேதாகமத்தில் நமது வாழ்வுக்கு அவசியமான அறிவுறுத்தல்களையும், ஆலோசனைகளையும் கொடுத்துள்ள தேவன், அவ்வசனங்களின்படி நம்மை வழிநடத்துகின்றார்.

தேவனுடைய வசனமே நம் கால்களுக்குத் தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது(சங்கீ.119:105). அதாவது, வேதாகமம் கிறிஸ்தவர்களாகிய நாம் இவ்வுலகில் வாழவேண்டிய முறையையும், செல்லவேண்டிய வழியையும் நமக்கு சுட்டிக்காட்டும் புத்தகமாகயுள்ளது. ஏனவே திருமறை வசனங்களின் அர்த்தத்தை அறியும்முறை நமக்குத் தெரிந்திருந்தால் தானே வேதாகமத்தின் மூலமாகத் தேவன் நமக்கு சொல்லவிருப்பதை அறிந்து, அவருடைய வழிநடத்துதலின்படி வாழமுடியும்.

*4) தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொள்ள:*

பொதுவாக, தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொள்வது அவ்வளவு கடினமான காரியமல்ல, என்று நாம் நினைத்தாலும், அப்போஸ்தலர் 8-ம் அதிகாரத்தின்படி அதற்கு சில தடைகள் உண்டு. ஆம், அந்த எத்தியோப்பிய மந்திரியைப் போல, புரிந்துகொள்ள நமக்கு உதவிதேவை.

***5) பரிசுத்த வேதாகம புத்தகங்களை, நிருபங்களை எழுதிய அன்றைய எழுத்தாளர்களுக்கும்; இன்று வேதத்தை கைகளில் வைத்திருக்கும் நமக்குன இடையேயுள்ள இடைவெளிகளை சரிப்படுத்த:***

ஆதி எழுத்தாளர்களுக்கும் நமக்குமிடையே மொழி, காலம், கலாச்சாரம், புவியியல் போன்ற பலவிதமான இடைவெளிகளுண்டு. திருவசனத்தைப் புரிந்துகொள்வதில் இவைகள் நமக்கு தடையை உண்டாக்குகின்றன. எனவே நமக்கு உதவி தேவையாகயிருக்கின்றது.

பரிசுத்த வேதாகமம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பதாக, ஒரு குறிப்பிட்ட புவியியல் அமைப்பிலும், கலாசாரப்பின்னணியிலும் வாழ்ந்த சுமார் நாற்பது எழுத்தாளர்களால், பல்வேறு கால இடைவெளியில் எழுதப்பட்ட இறை வார்த்தையாகும். ஆனால் இவை எல்லாவற்றிற்கும் சற்றும் பொருந்தாத சரித்திர காலகட்டத்திலும், புவியியல் அமைப்பிலும், கலாச்சாரப் பின்னணியிலும், அதாவது 21-ம் நூற்றாண்டுகளில் வாழும் கிறிஸ்தவர்களாகிய நாம், வேதத்தின் சரியான வியாக்கியானத்தை புரிந்துகொள்வது என்பது சற்று சவாலான காரியமாகயிருந்தாலும்; திருமறையின் பிரதம ஆசிரியரான பரிசுத்த ஆவியானவரின் உதவியைக் கொண்டும், தேவ மனிதர்கள் இவ்வேதத்திற்கு எழுதியுள்ள எண்ணற்ற உதவி

நூல்களைக் கொண்டும் இந்த இடைவெளிகளை நிவர்த்தி செய்ய இயலும் என்பதே நமக்கிருக்கும் நம்பிக்கையாகும்.

- ## <u>மொழியியல் இடை வெளி (A Language Gap)</u>

பழைய ஏற்பாடு ***எபிரெய மொழியிலும்***, அதன் கடைசி ஒருசில பகுதிகள் ***அரமாயிக் மொழியிலும்*** எழுதப்பட்டது. புதிய ஏற்பாடு முழுவதும் ***கிரேக்க மொழியிலும்*** எழுதப்பட்டுள்ளதால், அம்மொழிகளைக் குறித்து நன்கு அறிந்து கொள்வதின் மூலமாக மொழி இடைவெளியை நாம் பூர்த்தி செய்யவேண்டியது நமக்கு முன்வைக்கப்பட்ட சவாலாகும்.

ஒவ்வொரு மொழியும் அதின் எழுத்துக்களிலும், எண்ணிக்கையிலும், உச்சரிப்பிலும், உருவ ஒற்றுமையிலும், வாக்கிய அமைப்பிலும், இலக்கண அமைப்பிலும் மற்ற மொழிகளைக் காட்டிலும் முற்றிலும் வித்தியாசப்படுவது இயல்பு. இஸ்ரவேலிலும் அதனைச் சுற்றியுள்ள தேசங்களிலும் உருவான மொழிகளில் பெரும்பாலான வார்த்தைகள், பொதுவாக ஒன்றுக்கு மேற்பட்ட அர்த்தம் கொண்டவைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ.ம்): யாத். 9:12-ல் கூறுகிறது: “கர்த்தர் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார்” என்றுள்ளது. அப்படியானால் தேவனே பார்வோனின் இருதயத்தைக் கல்லாக மாற்றிவிட்டார் என்று பொருளல்ல. எபிரெயர்களின் அன்றைய மொழிவழக்கப்படி, பார்வோனின் கலகக்குணத்தினிமித்தம்; அவனால் தேவ சத்தத்தைக் கேட்க முடியவில்லை என்று பொருள். மொழி என்னும் இந்த இடைவெளியை பூர்த்திசெய்யவேண்டுமென்றால் அம்மொழியினைக் கற்றுத்தேறுவதே முறையான தீர்வு. ஆனால் எபிரெயம், கிரேக்கம் போன்ற மொழிகளைக் கற்று தேர்ச்சி பெறுவது இன்று எல்லோராலும் சாத்தியப்படாத ஒன்றாகும்; ஆகையால் இக்குறையை நிவர்த்திச் செய்ய பல்வேறு துணை மொழிபெயர்ப்பு நூல்களின் உதவியுடன் இந்த இடைவெளியைப் பூர்த்திசெய்யமுடியும். இன்று தரமான எபிரெய மற்றும் கிரேக்க வார்த்தை அகராதிகள் எழுதப்பட்டுள்ளது. அதில் ஒரு வார்த்தையை ஆய்வு செய்தால், அந்த வார்த்தை வேதாகமத்தில் எத்தனை அர்த்தங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று அந்த வார்த்தையைக் குறித்த அனைத்து தகவல்களையும் துல்லியமாய் கொடுக்கும் அளவிற்கு தரமான வகையில் எழுதப்பட்டுள்ளது. தரமான மொழி அகராதிகளின் துணையோடு மொழி என்னும் இந்த பெரிய இடைவெளியை நம்மால் பூர்த்தி செய்யுமுடியும்.

- ## <u>கால இடை வெளி: ( A Time Gap)</u>

இன்று வேதத்தை வியாக்கியானம் செய்ய முற்படும் நாம் சந்திக்கும் இன்னொரு சவால், கால இடைவெளி. பரிசுத்த வேதாகமம் எழுதப்பட்ட காலத்திலிருந்து வெகு தொலைவில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். வேதத்தின் கடைசி எழுத்துப்பணி முடிந்ததிலிருந்து கணக்கிட்டாலும், ஏறக்குறைய 1900 ஆண்டுகளுக்கு அப்பால் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

கால இடைவெளியைக் குறித்து அறிந்துகொள்வதற்கு, யோனா தீர்க்கதரிசியின் சம்பவத்தை ஒரு நல்ல உதாரணமாய் எடுத்துக்கொள்ளலாம். யோனா தேவனுடைய குணாதிசயத்தை நன்கு அறிந்திருந்தும்(யோனா 4;2); கர்த்தருடைய வார்த்தையை மீறி

நினிவேக்கு பதிலாக தர்ஷீக்குப் போனது ஏன்? இந்த கேள்வியை நம்முடைய சரித்திர பார்வையில் பாராமல் யோனாவின் கால கட்டமாகிய கி.மு.8-ம் நூற்றாண்டு சரித்திர சூழ்நிலையில் பார்க்கும்போது நமக்கு பதில் கிடைக்கும். இக்காலகட்டத்தில் இஸ்ரவேலிலும் அதின் சுற்றுப்புற தேசங்களிலும் மன்னராட்சி ஓங்கியிருந்து. இராஜாக்களின் காலகட்டங்களில் ஆங்காங்கே யுத்தங்கள் நடப்பதை நாம் வேதத்தில் படித்து அறிந்திருக்கின்றோம், 8-ம் நூற்றாண்டில் மற்ற தேசங்களுக்கெல்லாம் சிம்மசொப்பனமாக விளங்கியவர்கள் தான் அசீரியர்கள். அசீரியரின் தலை நகரமே இந்த நினிவே பட்டணம். விக்கிரக ஆராதனைக்கு பெயர்போன இந்த நினிவேயினர், தாங்கள் கைப்பற்றிய மற்ற தேசத்து ஜனங்களுக்குக் கொடுத்த கொடூரமான தண்டனைகளை பற்றிய அகழ்வாராய்ச்சிக் குறிப்புகள் கிடைத்துள்ளன. தாங்கள் கைப்பற்றிய தேசத் தலைவர்களை விலங்குகளைப் போன்று நடத்தி அவர்களின் தலைகளைத் துண்டித்தனர். மிகுந்த வேதனை கொடுக்கக்கூடிய தண்டனைகளை அவர்களுக்குக் கொடுத்து அவர்களைக் கொன்றனர். அவர்களின் தோலை, அவர்கள் உயிருடன் இருக்கும்போதே உரித்துக் கொல்லும் அரக்க குணம் படைத்த கூட்டமாயிருந்தனர் என்பதை அக்குறிப்புகள் நமக்கு அறிவிக்கின்றனர். மேலும் அசீரியர்கள் ஒரு தேசத்தைக் கைப்பற்றும்போது அத்தேசத்தின் சிறு குழந்தைகளை கல்லில் மோதியடித்து கொன்று அடுத்த தலைமுறையினரை ஊனமாக்கும் கொடூரர்களாகவும் இருந்தனர்.

இத்தகைய கொடிய கூட்டத்தின் அடுத்த இலக்கு இஸ்ரவேல் தேசமென்பதை யோனா உட்பட அனைத்து இஸ்ரவேலரும் அறிந்திருந்தனர். இந்த சூழ்நிலையில் யோனாவுக்கு அசீரியாவின் தலை நகரான நினிவேக்கு போக மறுத்தும், நினிவேயின் அழிவை எதிர்பார்த்திருந்தும், தேவகிருபை அவர்களுக்கு செல்வதை விரும்பாததும் ஆச்சரியப்படுவதற்கில்லை. வேதத்தின் ஒவ்வொரு சம்பவத்திற்கு பின்னும் அது உருவாக காரணமாயிருந்த சரித்திர சூழல் இருக்கிறது என்பதை நம்புவதோடல்லாமல் அதனை வேதம், அகழ்வாராய்ச்சி மற்றும் தரமான சரித்திர பின்னணியை புத்தகங்களின் உதவியோடு கண்டறிந்து, கால இடைவெளியை பூர்த்திசெய்வது ஒரு வியாக்கியானியின் கடமையாகும்.

- **<u>கலாச்சார இடைவெளி (A Cultural Gap)</u>**

திருமறை எழுத்தாளர்களுக்கும் நமக்கும் இருக்கும் மற்றுமொரு பெரிய இடைவெளி. கலாச்சாரம். பரிசுத்த வேதாகமம் ஒரு குறிப்பிட்ட கலாச்சாரப் பின்னணியிலிருந்து எழுதப்பட்ட புத்தகமாகும்.

**(குறிப்பு):** பல வேற்று கலாச்சாரங்களையும் இஸ்ரவேல் மக்கள் சந்தித்த வரலாற்றையும் நாம் திருமறையில் காணலாம். ஒவ்வொரு தனிமனிதனும் அவனுடைய கலாச்சாரத்தினால் முற்றிலும் ஈர்க்கப்பட்டிருக்கிறான். அவனுடைய நடைமுறை வாழ்க்கையினை தீர்மானிப்பதும் கலாச்சாரமே.

இவை அனைத்திலும் நம்மிலிருந்து முற்றிலும் மாறுபட்ட கலாச்சாரத்தில் பரிசுத்த வேதாகமம் உருவாக்கப்பட்டதால், அவர்களின் அனைத்து கலாச்சார முறைமைகளையும் நேர்த்தியாய் அறிந்துகொள்ளுதல் வேதபகுதியின் அர்த்தம் கண்டறிவதற்கு நமக்கு மிகவும்

உறுதுணையாகயிருக்கும். இஸ்ரவேலர்களின் கலாச்சார முறைமைகள் காலத்திற்கு ஏற்றாற்போல் மாறியதும் குறிப்பிடத்தக்கது.

இஸ்ரவேலர்கள்-எகிப்திலிருந்தபோது அந்த நாட்டு கலாச்சாரத்திற்குட்பட்டிருந்தனர். மேலும் அவர்கள் கானானுக்குள் பிரவேசித்தபோது அங்கு கானானியரின் கலாச்சாரத்தினையும் சந்திதனர். மேலும், பாபிலோனிய சிறையிருப்பின் காலங்களில் அந்நாட்டு கலாச்சாரத்திற்கு உட்பட்டவர்களாகயிருந்தார்கள்.

இப்படியாக வெவ்வெறான கலாச்சாரங்களை தழுவியே இஸ்ரவேலர்களின் வாழ்க்கை கடந்துவந்திருக்கின்றன. ஆகையால் ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தின் பின்னணியைச் சார்ந்து நாம் வியாக்கியானம் செய்யமுடியாது. வியாக்கியானத்திற்கென்று நாம் தெரிந்துகொண்டுள்ள வேதபகுதியின் சம்பவம் எந்த கலாச்சாரத்தினில் நடந்தேறியது எனவும், அந்த சம்பவத்தினை எந்த கலாச்சாரத்தினின்று ஆசிரியர் பதிவு செய்திருக்கிறார் போன்ற தகவல்களை அறிந்துகொள்ளுதல் இந்த கலாச்சார இடைவெளியைப் பூர்த்திசெய்வதற்கு பெரிதும் உதவும்.

- **புவியியல் இடைவெளி (A Geographical Gap)**

பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ள சம்பவங்கள் நடந்தேறிய புவியியல் அமைப்பிலிருந்து இன்று நாம் வாழும் புவியியல் அமைப்பு பெரிதும் வித்தியாசப்படுகிறது. புவியியல் என்பதின் அடிப்படையில் அந்த தேசத்தின் எல்லைகள், கால நிலைகள், பருவ காலங்களில் விளையக்கூடிய தாவரங்கள், கடற்கரை, காடுகள், மலைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர்களின் மீட்பின் சரித்திரமானது அவர்களின் புவியியல் அமைப்போடு ஒன்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. இஸ்ரவேலர்களுக்கும் அவர்களைச் சுற்றி வாழ்ந்த மற்ற புறஜாதி தேசத்தார்களுக்கும் நிலம் என்பது புவியியல் அமைப்பிற்கு அப்பாற்ப்பட்டது. நிலத்தை அவர்களின் கடவுள் நம்பிக்கையோடு இணைத்துப் பார்த்தனர். (உ.ம்) கானானியர்கள் பாகாலை மழையின் கடவுளாக வழிபட்டனர். நிலத்தின் விளைச்சலுக்கும், தேசத்தின் செழிப்பிற்கும், பாகாலே காரணம் என்று இவர்கள் உறுதியாய் நம்பினார்கள்.

கானான் தேசத்தை சுதந்தரித்த இஸ்ரவேலர்களிடம் கர்த்தர் கானானியர்களின் விக்கிரக வழிபாடுகளை விட்டு விலகியிருக்கும்படியாக கட்டளையிட்டுள்ளதை வேதத்தில் பார்க்கிறோம். ஆனாலும் இஸ்ரவேலர்கள் அடிக்கடி கானானியர்களின் விக்கிரகாராதனை நம்பிக்கைக்குள் அதிகமாய் ஈர்க்கப்பட்டனர் என்று வேதம் நமக்கு அறிவிக்கிறது.

இஸ்ரவேலர்கள் கானானியரின் விக்கிரகாராதனையால் அடிக்கடி கவரப்பட்டதின் காரணத்தை முறையாய் அறிய அவர்களைச் சுற்றி வாழ்ந்த கானானியரின் நம்பிக்கைகளையும் அறியவேண்டும். இஸ்ரவேலர்களையும் அவர்களது நம்பிக்கைகளையும்

அறிந்துகொள்வதற்கு அவர்களின் புவியியல் அமைப்பையும், அத்துடன் தொடர்புடைய நம்பிக்கைகள் அனைத்தையும் தெளிவாய் அறிந்துகொள்ளுதல் அவசியம். இன்னும் சற்று விளக்கமாக கூறுவதாகயிருந்தால்: தாவீது-சவுலிடத்திலிருந்து தப்பித்து ஏன் என்கேதிக்கு ஓடிப்போகிறார்? (1சாமுவேல் 23:29) என்னும் கேள்விக்கு புவியியல் அமைப்பைச் சார்ந்தே பதிலளிக்கவேண்டும். என்கேதி ஒளிந்துகொள்வதற்கு வசதியாக குகைகள் நிரம்பிய ஓர் இடமென்பதால் யாரும் எளிதில் கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு அமைந்திருந்த இடம் என்பதாலும், தாவீது ஒளிந்துகொள்வதற்கு வசதியான இடமாக என்கேதியை தேர்வு செய்திருக்கிறான்.

திருமறையின் சம்பவங்கள் நடைபெற்ற புவியியல் அமைப்பைக்குறித்து நாம் நன்கு அறிந்துகொள்ளுதல் வேதவியாக்கியானத்திற்கு அவசியப்படுகிறது.

**கேள்விகள்:-**

1. பரிசுத்த வேதாகமத்தைக் குறித்து இப்பாடத்தில் அறிமுகமாக கூறப்பட்டுள்ளவைகளை தொகுத்துக் கூறுக?
2. வேதாகமத்தை சரியாக வியாக்கியானம் செய்ய வேண்டியதின் அவசியத்தை சாத்தானின் தவறான வியாக்கியானத்திலிருந்தும், பவுல் தீமோத்தேயுவுக்கு கூறும் ஆலோசனையிலிருந்தும் கூறுக?
3. ஏன் வேதத்தை வியாக்கியானம் செய்வது கடினமாய் இருக்கிறது என்பதனை கூறுக?
4. ஹெர்மெனியூடிக்ஸ் (Hermeneutics) என்றால் என்ன? இந்த வார்த்தையின் அர்த்தம் என்ன? என்பவைகளைக் கூறுக?
5. வேதாகம விளக்கவியல் ஏன் ஒரு கலை என்று அழைக்கப்படுகிறது என்பதனையும், வேதாகமத்தை விளங்கி கொள்வதற்கு இக்கலை எவ்விதத்தில் உதவியாய் இருக்கிறது என்பதனையும் கூறுக?
6. வேத விளக்கவியலை நாம் கற்றுக்கொள்ள வேண்டியது ஏன் அவசியமானதாக இருக்கின்றது என்பதனை வரிசைப்படுத்தி விளக்கமாக கூறுக?
7. வேத வியாக்கியானத்தின் நான்கு இடைவெளிகள் என்னென்ன என்பதனைக் கூறுக? (பெயர்கள் மட்டும்)
8. வேத வியாக்கியானத்தின் இடைவெளியில், மொழியியல் இடைவெளியைக் குறித்து கற்றுக்கொண்டவைகளை சற்று விளக்கமாக கூறுக?
9. வேத வியாக்கியானத்தின் இடைவெளியில் கால இடைவெளியைக் குறித்தும், கலாச்சார இடைவெளியைக் குறித்தும் விளக்கமாக கூறுக?
10. வேத வியாக்கியானத்தின் இடைவெளியில் புவியியல் இடைவெளியைக் குறித்துக் கூறுக?

## பாடம்:2

## <u>அ) வேத விளக்க கலைக்கு ஆயத்தம்</u>

வேத வசனத்தை வியாக்கியானம் செய்வது ஒரு கலை மட்டுமல்ல, அது ஒரு அறிவியல் என்றும் சொல்லுகிறோம்.

எந்தவொரு காரியத்தையும் சிறப்பாக செய்ய ஆயத்தம் என்பது தேவையாய் இருப்பது போலவே வேத வியாக்கியான கலைக்கும் ஒருசில ஆயத்தங்கள் தேவையாக இருக்கிறது.

ஒரு திருமண காரியத்தை எடுத்துக்கொண்டால், அந்த திருமணம் சிறப்பாக நடக்க வேண்டுமானால், திருமண ஏற்பாடுகள் அல்லது ஆயத்தங்கள் சிறப்பாக அமைய வேண்டும். ஒரு பயணம் சிறப்பாக அமைய வேண்டுமானால், பயண ஏற்பாடுகள் சரியாக இருக்க வேண்டும். அதுபோலவே வேத வியாக்கியான கலைக்கு ஒருசில ஆயத்தங்கள் மிகவும் அவசியமாக இருக்கிறது.

### *1) முதலாவது ஆயத்தம்: ஒரு வேதவியாக்கியானி வேத வியாக்கியானத்தில் ஈடுபடும்போது தன் வாழ்க்கையில் சில கட்டுப்பாடுகளை உடையவராக இருக்கவேண்டும்.*

*2* ***தீமோத்தேயு*** *2:15-**ல்*** "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கிறவனாயும், உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு."

ஒரு வேத வியாக்கியானிக்கு *முதல் தடையாக* இருப்பது *சோம்பேறித்தனமாகும்.* அதனால் தான் பவுல் அப்போஸ்தலன் இளம் ஊழியனாகிய தீமோத்தேயுவிடம், “ஜாக்கிரதையாகயிரு" என்கிறார்.

வேதத்தை ஆராய்ந்து பார்க்க கூடிய வேத ஆராய்ச்சியாளன், வேதத்தை ஆராய்ந்து விளக்கபடுத்துவதற்கு முன்பாக ஜாக்கிரதையாக இருக்கவேண்டியது அவசியமாகும்." ஜாக்கிரதையாகயிருப்பது" என்பது "கட்டுப்பாடுடன் இருப்பது", "விழிப்பாகயிருப்பது" போன்றவைகளை குறிக்கின்றது.

வேத விளக்க ஆய்வில் ஈடுபடும் நபர் தூக்கமயக்கத்தை, சோம்பலை உண்டாக்குகின்ற உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும். சிலருக்கு வேதத்தை படிக்கும் போதுதான் கட்டுப்படுத்த முடியாதளவுக்கு தூக்கம் வருகிறது. ஒருவர் இப்படியாகச் சொன்னார் *"வேத வாசிப்பின்போது தூக்கம் வருகிறது என்று சொல்வதைவிட, தூக்கம் அனுப்பப்படுகிறது"* என்றார்.

"சாத்தான் நம்மிடமிருக்கும் சிறந்தவைகளை திருடிக்கொண்டு போகிறவனாகயிருக்கின்றான்."

வேத விளக்ககலையில் ஈடுபட்டிருப்பவர் கடினமாக உழைக்க கூடியவராக இருப்பதும் அவசியமானதாகும்.

*1* ***கொரிந்தியர்*** *9:26-27:* ஆதலால் நான் நிச்சயம் இல்லாதவனாக ஓடேன், ஆகாயத்தை அடிக்கிறவனாய் சிலம்பம் பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு,என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.

நமது சரீரத்தை நமக்கு வேலைக்காரனாக வைக்க வேண்டுமே தவிர, நாம் நமது சரீரத்திற்கு ஊழியனாக இருந்துவிடக்கூடாது. நமது சரீரத்தை நம் கட்டுப்பாட்டுக்குள் வைத்தால் மட்டும் தான் நாம் ஒரு சரியான வேத ஆராய்ச்சியாளனாக முடியும்.

## *(2)* ***இரண்டாவதாக: "வேதத்தை வியாக்கியானம் செய்பவர் பரிசுத்த ஆவியானவரிடத்தில் சரணடைய வேண்டும்."***

வேத வியாக்கியான ஆய்வில் ஈடுபடும்போது நமக்கு பரிசுத்த ஆவியானவரின் நிறைவான உதவிகள் எப்பொழுதும் கிடைக்கும். பரிசுத்த ஆவியானவரின் துணை இல்லாமல் பரிசுத்த வேதாகமத்தை நாம் விளங்கிக் கொள்ளவோ, மற்றவர்களுக்கு விளக்கிப்போதிக்கவோ கூடாத காரியமாகயிருக்கிறது.

**சங்கீதம்** 119:18-ல்: “உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு என் கண்களைத் திறந்தருளும்.” என்று சங்கீதக்காரன் ஜெபிக்கிறான்.

திருமறையின்(வேதாகமத்தின்) பிரதம ஆசிரியர் பரிசுத்த ஆவியானவர்.அவரது ஏவுதலின்படிதான் இப்புத்தகம் பிழையின்றி, நிறைவாக எழுதப்பட்டுள்ளது. வேத வியாக்கியான கலையில் பரிசுத்த ஆவியானவரின் பங்கு பெரிதாக இருக்கிறது.

பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு ஒருபோதும் ஒரு புதிய வெளிப்பாட்டை தர போவதில்லை, மாறாக பரிசுத்த ஆவியானவர் வேத வசனத்தின்மேல் வெளிச்சத்தை *(Illumination)* தருகிறார்.

வெளிப்பாடு (*Revalation*) ஏற்கனவே கொடுத்து முடிக்கப்பட்டு ஆயிற்று. திருமறையின்(வேதாகமத்தின்) கடைசி தீர்க்கதரிசன புத்தகமான வெளிப்படுத்தின விசேஷத்தில் தேவனிடமிருந்து வருகின்ற வெளிப்பாடு கொடுக்கப்பட்டு முடிந்தது.ஆனால் இன்று நாம் வேத வசனங்களை கருத்தாய் ஆராய்ந்து படிக்கின்ற வேளைகளில் பரிசுத்த ஆவியானவர் அந்த வசனங்களின் மேல் வெளிச்சத்தை அதாவது *Illumination* (இலுமினேஷன்) தருகின்றார்.

இன்று கோடிக்கணக்கான புத்தகங்கள் திருமறையை(வேதாகமத்தை) விளங்கிக்கொள்ள எழுதப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சியான ஒன்றுதான் என்றாலும்,அவைகளை நாம் பக்குவமாகவும், கவனமாகவும் உபயோகிப்பது நல்லது.

திருமறையை(வேதாகமத்தை) வியாக்கியானம் செய்யும்போது, பிரதம ஆசிரியரான பரிசுத்த ஆவியானவரின் உதவியானது தவிர்க்க முடியாத ஒன்றாகயிருக்கிறது. அவர் மட்டுமே வேதாகமத்தை மிகச்சரியாக விளங்கிக் கொள்ள நமக்கு உதவி செய்யமுடியும்.

மனிதர்களின் எழுத்துக்கள் ஒரு எல்லைக்குட்பட்டது அல்லது வரம்பிற்குட்பட்டது என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

பரிசுத்தவான்களால் எழுதப்பட்ட வேத விளக்கவுரைகளையும், வேதஉதவி நூல்களையும், நாம் பயன்படுத்துவது தவறல்ல, என்றாலும் ஒரு வேத வியாக்கியானி முதன்மையாக பரிசுத்த ஆவியானவரையே சார்ந்து கொள்ளவேண்டும்.

## *(3)* ***மூன்றாவதாக : பரிசுத்த வேதாகமத்தின் ஆசிரியர் தன்மையை உறுதிப்படுத்துதல்.***

*1* ***கொரிந்தியர்*** *2:12-13:* நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல் தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்.அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல்,பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக்காண்பிக்கிறோம்.

*பரிசுத்த வேதாகமத்திற்கு இரண்டு தன்மைகள் இருக்கின்றன.*

***ஒன்று:*** தெய்வீகத் தன்மை (Divine Nature)
***இரண்டு:*** மனுஷீக தன்மை (Human Nature)

பரிசுத்த வேதாகமம் முழுக்க முழுக்க தேவ ஆவியானவரின் ஏவுதவினால் எழுதப்பட்ட புத்தகம், அதேவேளையில் மனித கரங்களாலும், அவர்களது தனித்துவத்தின்படியும் எழுதப்பட்டதாகும்.

## ஆ)வேத விளக்கவியலின் இரண்டு பிரிவுகள்.

1) பொதுவான வியாக்கியான அறிவியல் (General Hermeneutics)
2) விசேஷித்த வியாக்கியான அறிவியல் (Special Hermeneutics)

*முதலாவது:* பொதுவான விளக்கவியல் என்பது எல்லா மொழிகளினுடைய, எழுத்துக்களினுடைய வியாக்கியானத்திற்காக பயன்படுத்தக்கூடிய பொதுவான தத்துவங்களை நாம் பொதுவான வியாக்கியான அறிவியல் என்று அழைக்கிறோம்.

அதில் *-'பின்னணி-Background*

*-'மொழி-Language*

*-'வரலாறு-History*

*-'கலாச்சாரம்- Culture*

போன்றவைகளை ஆய்வு செயவதே பொதுவான வியாக்கியான அறிவியலாகும்.

*இரண்டாவது:* விசேஷித்த வியாக்கியான சாஸ்திரம்- இதில் கவனிக்கப்பட கூடிய விஷயங்கள் “சின்னங்கள்“(Symbols), “வார்த்தை அல்லது பதம்“(Word/Term), தீர்க்கதரிசனம்(Prophecy), இலக்கியம்(Literature) முன்னடையாளங்கள்(Typology) போன்றவைகளாகும்.

## இ) வேத விளக்க கலைக்கு சில பொதுவான கோட்பாடுகள்:

*1)* ***முதலாவது***: **"ஜெபத்துடன்** வேதாகமத்தை **அணுகவேண்டும்".**

கீழ்க்காணும் வசனமானது மனித இருதயம் எப்படிப்பட்டது என்று சொல்கிறது.

வேதத்தை விளங்கிகொள்ள நமது சுயமுயற்சியானது பலன் தராது, காரணம் "நமது இருதமோ திருக்குள்ளதும். .மகாகேடுள்ளதுமாகயிருக்கிறது."(எரேமியா17:9)

ஆகையால், பரிசுத்த வேதாகமத்தை விளங்கிக்கொள்ள, அல்லது விளங்கப்படுத்த தேவனுடைய உதவி நமக்கு தேவையாக இருக்கிறது.

*சங்கீதக்காரன்:* 119-ஆம் சங்கீதம் 5-வது வசனத்தில் " உமது பிரமாணங்களைக் கைக்கொள்ளும்படி என் நடைகள் ஸ்திரப்பட்டால் நலமாயிருக்கும்." என்று வேண்டுகிறான்.

*சங்கீதம் 119:12-ல்:* "கர்த்தாவே........ உம்முடைய பிரமாணங்களை எனக்குப் போதியும்." என்கிறார்.

"உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்." என்றும் தேவனிடம் ஜெபிக்கின்றார். (சங்கீதம் 119:18).

சீர்திருத்தவாதியான மார்டின் லூதர்.... "119-ஆம் சங்கீதம்...வேதாகமத்தை படிக்க நமக்கு உதவி செய்யும் ஒரு சங்கீதம்" என்று சொல்லியிருக்கின்றார்.

நமது திருமறையின் மகத்துவங்களை அறியத்தரும் அருமையான சங்கீதம் தான் *119-**ஆம் சங்கீதம்.*** இந்த சங்கீதத்தில் சங்கீதக்காரனின் ஜெபத்தை நாம் கவனிக்க வேண்டியது அவசியம்: "எனக்கு போதியும்!ஆண்டவரே!" என்றும்,"என்னை வழிநடத்தும்" என்றும், "என்னை உணர்த்தும்" என்றும், "எனக்கு காண்பியும்" என்றெல்லாம் தேவனிடம் ஜெபிக்கிறதை நாம் காணலாம்

*2).**இரண்டாவதாக*** **"இயேசுவை சுட்டிக்காட்டும் புத்தகமாக** வேதாகமத்தைப் **படியுங்கள்!"**

இயேசு அன்றைய வேதகால யூத மதத்தலைவர்களிடம்: "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்: அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே. அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன்

உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை." என்று கடிந்துகொண்டார்.

*(யோவான் 5:39-40)*

வேதத்தை நாம் படித்தாலோ, அல்லது போதித்தாலோ அவற்றில் எல்லாம் ஆண்டவராகிய இயேசுவை காண வேண்டும். இயேசுவையே சுட்டிக்காட்ட வேண்டும். வேதாகமத்தின் ஒவ்வொரு புத்தகமும் ஆண்டவராகிய இயேசுவானவரையே மையப்படுத்துகின்றது. பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்கள் இயேசுவானவரில் நிறைவேறியுள்ளதை நாம் புதிய எற்பாட்டை வாசிக்கும்போது கண்டுகொள்ளமுடியும்.

பரிசுத்த வேதாகமத்தின் மைய நாயகன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே.

*3)* ***மூன்றாவதாக*: வேத வசனத்தைக் கொண்டே வேத வசனத்தை வியாக்கியானம் செய்ய வேண்டும். (Let Scripture interpret Scripture)**

*அதாவது ஒரு வேதப் பகுதியை எப்பொழுதும் ஏனைய வேத பகுதிகளோடு ஒப்பிட்டு, ஆராய்ந்து பார்த்து, புரிந்துகொள்ளவேண்டும்.*

வேதத்தின் எந்த ஒரு பகுதியும் போதிக்கும் சத்தியத்தை நாம் சரியாக புரிந்து கொண்டிருக்கிறோமா? என்று அறிந்துகொள்ள, அப்பகுதியை அதேவிதமான போதனையைக் கொண்டுள்ள வேதத்தின் ஏனைய பகுதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்து,படித்து தீர்மானிக்க வேண்டும். இதன்மூலமாக வேத போதனைகளை தவறான முறையில் விளங்கிக்கொள்ளும் ஆபத்தை தவிர்த்துக் கொள்ளலாம்.

(உ.ம்) *"இரட்சிப்பு"* என்ற சத்தியத்தையுடைய ஒரு வேதபகுதியை நாம் வாசித்து வியாக்கியானம் செய்யும்போது, நமது வியாக்கியானமானது "இரட்சிப்பு" பற்றி சொல்லப்பட்டுள்ள வேதத்தின் மற்ற வேதபகுதிகளோடு நமது வியாக்கியானம் பொருந்திப்போகின்றதா? சரியாக இருக்கிறதா? என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

இதனை ஆங்கிலத்தில் "Analogy of Faith"- விசுவாசத்தின் ஒப்புமை என்று அழைக்கிறார்கள்.

*ஒரு வேதசத்தியத்தை அதே சத்தியத்தை போதிக்கும் வேதத்தின் பல பகுதிகளை ஆதாரமாகக்கொண்டு விளக்கும்போது அந்த சத்தியம் உறுதிப்படுத்தப்படுகின்றது.*

இதன்மூலம் வேதபகுதிகளுக்கு நாம் நினைத்த விதத்தில் பொருள்கூற முற்படும் ஆபத்திலிருந்து நம்மை காத்துக்கொள்ளலாம்.

*4)* ***நான்காவதாக: "வேதத்தை தியானம் செய்தல் வேண்டும்" (Meditate on the Bible).***

வேதத்தை நமது தனிப்பட்ட வாழ்வுக்காக தியானம் செய்ய வேண்டும்.ஒரு வரலாற்றையோ,கதையோ படிப்பதுபோல வேதத்தை படிப்பதல்ல, மாறாக, விருப்பத்தோடும், நமது தனிப்பட்ட வாழ்வு ஈடேறவும், தேவனோடுள்ள நமது தனிப்பட்ட ஐக்கியத்தில் வளரவும் வேதத்தை அனுதினமும் தியானம் செய்யவேண்டும்.

அனுதினமும் வேததியானம் செய்யவேண்டியது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இருக்கவேண்டிய தவிர்க்கமுடியாத ஆவிக்குரிய பயிற்சியாகும்.

*சங்கீதம் 1:2*-ல் "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாக இருக்கிற மனுஷன் பாக்கியவான்" என்றுள்ளது.

*சங்கீதம் 119:97*-ல் "உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன், நாள் முழுவதும் அது என் தியானம்."

இஸ்ரவேலர்கள் வனாந்திரத்தில் மன்னாவை அனுதினமும் சேகரித்தார்கள். அதுபோலவே அனுதினமும் வசனத்தை நாம் தியானம் செய்யவேண்டும். சரீர

மனுஷன் ஆகாரத்தால் பிழைக்கிறான், ஆனால் உள்ளான மனுஷனோ தேவவார்த்தையால் தான் பிழைக்கமுடியும்.

*மத்தேயு 4:4*ல் "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்றார் கர்த்தராகிய இயேசு.

ஆவிக்குரிய மனுஷன் பிழைக்க தேவனுடைய வார்த்தையை அனுதினமும் தியானிப்பது அவசியம். “இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக. இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக. அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்." (யோசுவா 1:8)

அனுதினமும் வேதத்தை தியானம் செய்வதற்கு நாம் தினமும் குறைந்தது அரைமணி நேரமாவது செலவிடவேண்டும். வேத தியானம் செய்ய அதிகாலை நேரம் சிறந்ததாக இருக்கிறது, காரணம், அவ்வேளையில் நமது மூளை சுறுசுறுப்பாக இருப்பது மட்டுமல்ல, காலைப்பொழுது அமைதியாகவும் இருக்கும் என்பதால் தியானம் செய்வதற்கு காலைப்பொழுதுதே சரியான நேரமாக இருக்கிறது. மட்டுமல்ல, தியானம் செய்வதற்கென்று தனி இடத்தையோ, அல்லது தனி அறையையோ தெரிந்துகொள்ளுவதும் அவசியம். ஆட்கள் நடமாட்டமுள்ள, இறைச்சல்களுள்ள இடங்களை தெரிவுச் செய்யாமலிருப்பது சிறப்பு.

தேவன் பேசுகின்ற மெல்லிய சத்தத்தைக் கேட்க ஜெபத்தோடும், திறந்த வேதத்தோடும், அமைதலுள்ள ஆவியோடும் ஆண்டவருக்காகக் காத்திருப்பது இன்றைய அவசிய தேவையாகயிருக்கிறது.

கர்த்தரின் பிரசன்னதை அதிகமாக நாடுவோம். அவர் ஒருவருக்கே சகல மகிமையும், கனமும் உண்டாகட்டும்.ஆமென்.!!!

<u>**கேள்விகள்:-**</u>

1. *பரிசுத்த வேதாகமத்திற்கான இரண்டு தன்மைகள் யாவை?*
2. *வேதாகமத்தை விளக்க முற்படும் வேதவியாக்கியானிக்கு, தேவையான ஆயத்தங்கள் என்னென்ன என்பதனை வரிசைப்படுத்தி விளக்கமாக கூறுக?*
3. *வேத விளக்கவியலின் இரண்டு பிரிவுகள் யாவை?*
4. *வேத விளக்கவியலின் இரண்டு பிரிவுகளைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?*
5. *வேத விளக்க கலைக்கான சில பொதுவான கோட்பாடுகளை வரிசைப்படுத்தி விளக்கமாக கூறுக?*
6. *எப்பொழுது சத்தியம் உறுதிப்படுத்தப்படுகின்றது?*

# <u>வேதாகம விளக்கவியல்</u>

## *பாடம் - 3*

**<u>சந்தர்ப்ப சூழமைவு (Context)</u>**

ஒரு வசனத்தையோ அல்லது ஒரு வேத பகுதியையோ வியாக்கியானம் செய்யும்போது நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் அதனுடைய சந்தர்ப்ப சூழமைவு ஆகும்.

இதனை ஆங்கிலத்தில் Context என்று அழைக்கிறோம்.

சந்தர்ப்ப சூழமைவில் ஐந்து வட்டங்கள் உண்டு.

1) The Immediate Context: *(உடனடி சந்தர்ப்ப சூழவமைவு)*

ஒரு வேத வசனத்தின் அல்லது வேதபகுதியின் மேலோ, கீழோ, அல்லது அந்த வேத வசனத்திற்குள்ளேயோ இருக்கின்ற சந்தர்ப்ப பொருளை உடனடி சந்தர்ப்ப சூழமைவு என்கிறோம்.

2) The Context of the Chapter or Passage: *(அதிகாரத்தின்(அல்லது) பத்தியின் சந்தர்ப்ப சூழமைவு)*

அந்த வசன பகுதி இடம்பெற்றுள்ள அதிகாரத்தின் அல்லது பத்தியின் சந்தர்ப்ப சூழமைவு.

3) The Context of the Book: (*புத்தகத்தின் சந்தர்ப்ப சூழமைவு)*

அந்த வேதபகுதி இருக்கும் புத்தகத்தின் சந்தர்ப்ப சூழமைவு.

4) The Context of the Parallel Passages: (*இணையான வேதபகுதிகளின் சூழமைவு)*
அவ்வேத பகுதியின் இணையான வேதபகுதிகளின் சூழமைவு.

5) The Context of Whole Bible: (*முழு வேதாகமத்தின் சூழமைவு)*

முழு வேதாகமத்தின் சூழமைவு.

ஒரு வசனம் சொல்லப்பட்ட சந்தர்ப்ப சூழமைவை விட்டு, வெளியே எடுத்து வியாக்கியானம் செய்வது வேத வசனத்தை தவறாக புரிந்து கொள்ள செய்துவிடும்.

ஒரு உதாரணத்தை பார்ப்போம்.

ஏசாயா 45:11-ல் "இஸ்ரவேலின் பரிசுத்தரும் அவனை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: வருங்காரியங்களை என்னிடத்தில் கேளுங்கள், என் பிள்ளைகளைக்குறித்தும், என் கரங்களின் கிரியைகளைக்குறித்தும் எனக்குக் கட்டளையிடுங்கள்". என்றுள்ளது.

மேற்க்கண்ட வசனத்தை வைத்து இன்று ஒரு நூதன ஜெப உபதேசத்தையே உருவாக்கியிருக்கிறார்கள்.

இந்த வசனத்தில் வரும் "எனக்குக் கட்டளையிடுங்கள்" என்ற வார்த்தையை தவறாக புரிந்துகொண்டு, "தேவனுக்கு கட்டளையிடுங்கள்" என்றும்... "ஜெபத்தின் மூலமாக தேவனுக்கு நாம் கட்டளையிடலாம்" என்றும் போதித்து வருகிறார்கள்.

இந்த வசனம் KJV மற்றும் NKJV போன்ற மொழிபெயர்ப்புகளில் தவறுதலாக மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

கீழே தமிழ் மற்றும் NKJV மொழிபெயர்ப்பு பைபிளிலிருந்தும், New International Version (NIV) மொழிபெயர்ப்பு பைபிளிலிருந்த வசனங்களை ஒப்பீடு செய்துபாருங்கள்.

தமிழிலும், NKJV-லும் "என் கரங்களின் கிரியைகளைக்குறித்தும் எனக்குக் கட்டளையிடுங்கள்.
And concerning the work of My hands, you command Me. என்றுள்ளதை கவனிக்கவும்.

ஆனால் சரியான மொழிபெயர்ப்பு NIV-யில் உள்ளது.அதில்.." give me orders about the work of my hands?" (இம்மொழிபெயர்ப்பில்" என் கரங்களின் கிரியைகளைக் குறித்தும் எனக்குக் கட்டளையிடுவீர்களோ?" என்றுள்ளது.)

ரோமன் கத்தோலிக்க தமிழ் வேதாகமத்திலும் சரியாக மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளதை கவனிக்கவும்:

திருவிவிலியம்: எசாயா 45:11
இஸ்ரயேலின் தூயவரும் அவனை உருவாக்கியவருமான ஆண்டவர் கூறுவது இதுவே; "நிகழவிருப்பன குறித்தும் என் மக்களைப்பற்றியும் என்னிடம் கேள்வி கேட்பீர்களா? என் கைவினை பற்றி எனக்கே கட்டளையிடுவீர்களா?

இன்றைக்கு ஒரு ஜெப உபதேசமாக இது உருவாகியுள்ளது.

அந்த வசனத்தின் முன்பும் பின்பும் உள்ள வசனங்களை நாம் ஆராய்ந்து பார்த்தால் இந்த வசனம் வேறு ஒரு அர்த்தத்தையே தருகிறது.

வேதாகமத்தில் ஏற்பட்டுள்ள மொழி மாற்றத்தின் காரணமாக, தவறான சில நூதன போதனைகள் உருவாகிவிடுகின்றன.

நாம் சர்வவல்லமையுள்ள, இறையாண்மையுள்ள தேவனுக்கு கட்டளையிட முடியாது. நாம் அவரது கரத்தின் கிரியைகள் மட்டுமே. களிமண் குயவனுக்கு கட்டளையிடயியலுமோ?

நாம் தேவனுடைய ஜனங்கள் தான், பிள்ளைகள் தான் என்றாலும், இந்த மேலான பாக்கியத்தைத் தேவ கிருபையால் பெற்றோம்.

ஏசாயா 45:11-யை விளங்கிக்கொள்ள மேலும் சில வசனங்களை ஒப்பிட்டுப் பார்ப்போம்.

மத்தேயு 7:11-ல் ... "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?" என்று எழுதப்பட்டிருக்கிறதே தவிர...." கட்டளையிடுங்கள்" என்று குறிப்பிடப்படவில்லை.

மத்தேயு 7:7-ல் "கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்றுள்ளதே தவிர "கட்டளையிடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்" என்று சொல்லப்படவில்லை.

சங்கீதம் 2- "மேசியா சங்கீதம்" என்றழைக்கப்படுகிறது.

இங்கு பிதாவாகிய தேவன்-குமாரனிடம் பேசுவது போன்ற விஷயங்களை நாம் காணலாம்.

சங்கீதம் 2:8-ல்

என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன், என்று சொல்லப்பட்டுள்ளதை நாம் படிக்கின்றோம்,ஆனால் "எனக்கு கட்டளையிடும்" என்று பிதா-தன் குமாரனிடம் சொன்னதாக நாம் இப்பகுதியில் வாசிப்பதில்லை.

லூக்கா 22:42-ல், இயேசு கல்வாரி சிலுவைக்கு போவதற்கு முன்பாக "பிதாவே உமக்கு சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும் ஆகிலும் என்னுடைய சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தப்படியே ஆகக்கடவது" என்று ஜெபம் பண்ணினார்.மிகவும் நெருக்கடியான நேரத்தில்கூட இயேசு தன் பிதாவை நோக்கி கட்டளையிடவில்லை....பணிவுடன் வேண்டிக்கொண்டதையே நாம் வாசிக்கின்றோம்.

எபிரெயர் 5:7-ல், அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு, என்பதாக எழுதப்பட்டுள்ளது.

ஆனால் அவர் பிதாவுக்கு "கட்டளையிட்டதாக" எழுதப்படவில்லை.

அநேக நேரங்களில் நமக்கு பிடித்த வசனங்களுக்கு நமக்கு விருப்பமான விளக்கங்கள் கொடுக்கிறோம். இது விபரீதமான செயலாகும்.

ஒரு வசனத்தின்:அது சொல்லப்பட்டுள்ள சந்தர்ப்ப சூழ்நிலையை விட்டு வெளியே எடுத்து விளக்கம் கொடுப்பதினால், மூலமொழியில் அது..எந்த சூழ்நிலையில் சொல்லப்பட்டுள்ளது என்பதையே நாம் மறந்துவிடுகிறோம்.

எடுத்துக்காட்டாக: பிலிப்பியர் 4 :13-ல்:

"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு." என்ற வசனத்தை நாம்: எப்பொழுதெல்லாம்

பெலவீனப்படுகிறோமோ, அப்போதெல்லாம், இந்த வசனத்தை உரிமைபாராட்டி அறிக்கைசெய்கின்றோம்.

மேலும்,சோர்வின் மத்தியில்,பாடுகள் மத்தியிலும் நாம் இருக்கும்போது எபிரெயர் 13:8-யை உரிமைபாராட்டுகிறோம். தவறல்ல. ஆனால், அவ்வசனத்தின் நோக்கம் அதுவல்ல; சந்தர்ப்பமும் அதுவல்ல, 8 மற்றும் 9 வசனங்களை சேர்த்து வாசித்துப் பாருங்கள்:

இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.
(எபிரேயர் 13:8)

பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள். போஜனபதார்த்தங்களினாலல்ல, கிருபையினாலே இருதயம் ஸ்திரப்படுகிறது நல்லது. போஜனபதார்த்தங்களில் முயற்சிசெய்கிறவர்கள் பலனடையவில்லையே.
(எபிரேயர் 13:9)

இந்த வசனம் ஆரோக்கியமான உபதேசத்தில் நிலைத்திருப்பதையே குறிக்கின்றது.

அவர் மாறாதவர் போலவே!, நீங்களும் பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள் என்று கூறப்பட்டுள்ளது.

இன்று அநேகர் வருடத்திற்கு ஒரு உபதேசம் என்று மாற்றிக்கொண்டே இருக்கிறார்கள். இயேசு மாறாதவராக இருப்பது போலவே, நீங்களும் அன்னிய போதனைகளால் ஈர்க்கப்பட்டு, அலையாமல், நீங்கள் கற்றுக்கொண்டவைகளில் நிலைத்திருங்கள் என்கிறார் எபிரேய ஆசிரியர்.

**வேத வியாக்கியானம்:-**

வேத வியாக்கியானம் செய்கின்ற கலையில் நாம் கவனிக்க வேண்டிய மிக மிக முக்கியமான ஒரு காரியம் இணைப்புச் சொற்களை கவனித்தலாகும்.

நாம் உடனடி சந்தர்ப்ப சூழமைவை பற்றி படித்தோம். ஒரு வசனத்தை புரிந்து கொள்ள மேலுள்ள மற்றும் கீழேயுள்ள வார்த்தைகளை அல்லது, வசனங்களை பார்க்க வேண்டும். இந்த வசனசூழமைவு: சந்தர்ப சூழமைவு எதனோடு சம்பந்தப்பட்டது போன்றவைகளை எவ்வாறு கண்டுபிடிக்க முடியும் என்றால், இணை சொற்களை (Conjunction Words) கவனிப்பதின் மூலமாக புரிந்து கொள்ள முடியும்.

சில இணைப்புச்சொற்களை காணலாம்:
"ஆகையால்"
"அப்படியே"
"அப்படியிருக்க"
"ஏனென்றால்"
"ஆனால்"
"மேலும்"
"கூட"

"அப்படி"
"இருந்தும்"
"அப்படியே"
"முடிவாக"

"கடைசியாக" போன்ற அநேக இணைப்புச்சொற்கள் வேதத்திலே உண்டு "பவுல் அப்போஸ்தலன்" அதிகமாக இணைப்புச் சொற்களை பயன்படுத்தி தன் நிருபங்களை எழுதியிருக்கிறார்.

(உ.ம்) ரோமர் நிருபத்தில் அனேக இணைப்பு சொற்களை நாம் பார்க்கிறோம்.

ரோமர் 2:1-ல் "ஆகையால்" என்று ஆரம்பிக்கிறபடியால், ரோமர் 1-ம் அதிகாரத்தின் தொடர்ச்சி தான் ரோமர் 2-ம் அதிகாரமாகும்.

அப்படியென்றால் ரோமர் 2-ம் அதிகாரம் ஒன்றாம் அதிகாரத்தோடு இணைக்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

ரோமர் 3:1"இப்படியானால்"
ரோமர் 4:1 "அப்படியானால்"
ரோமர் 5:1-ல் "இவ்விதமாக"
ரோமர் 6:1-ல் "ஆகையால்"

ரோமர் 6-ம் அதிகாரத்தை மட்டும் எடுத்து விளக்கப்படுத்த முற்பட்டால் நமக்கு ஒன்றுமே புரியாது; ஆறாவது அதிகாரத்தை முழுவதுமாய் விளங்கிக்கொள்ள ஐந்தாம் அதிகாரத்தை கொண்டு துவங்க வேண்டும். ஆனால் ஐந்தாம் அதிகாரத்தின் காரியங்கள் நான்காம் அதிகாரத்தில் துவங்குகிறது. இப்படியாக ரோமர் நிருபத்தின் ஒவ்வொரு அதிகாரங்களும் சங்கிலித்தொடர்போல....ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளதை நாம் கவனித்து வாசித்தால் வசனங்களின் விளக்கங்களை தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

ரோமர் 12-ல் "அப்படியிருக்க" (Therefore) என்ற வார்த்தையை அறியவேண்டுமென்றால் ... அதனுடைய துவக்கம் ரோமர் 11:33 முதல் 36 வரை உள்ள வசனங்களை நாம் பார்க்கவேண்டும். ரோமர் 12:1-ம் வசனமானது, ரோமர் 11 33 முதல் 36 வரையுள்ள வசனங்களில் துவங்குகிறது.

நீங்கள் ஏன் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக் கொடுக்கவேண்டும் என்பதற்கான முக்கிய காரணங்கள் ரோமர் 11-ல் ஆரம்பிக்கிறது. அதற்குப் பின்பாக உள்ள தாற்பரியத்தை நாம் புரிந்து கொள்ளாவிட்டால் ரோமர் 12:1-ம் வசனத்தை நாம் சரியாக புரிந்துகொள்ள முடியாது.

வேத வசனங்களின் சந்தர்ப்ப சூழமைவை புரிந்துகொள்ளாமல் "உங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள் என்பது அர்த்தமற்ற போதனையாக இருக்கும்.

இன்றைக்கு நமது இறையியல் தர்க்கரீதியாக (லாஜிக்காக) இல்லை. ஆகையால் தோல்வி அடைந்து விடுகிறோம். வேத புத்தகம் அதிகாரங்களாக, வசனங்களாக பிரிக்கப்பட்டுள்ளதை நாம் அறிவோம்.இது ஒரு போதகர் தனது சபை மக்களுக்காக, இந்த மகத்தான வேலையை செய்திருக்கிறார். ஆனால் ஒரு பக்கம் இது பயனுள்ளதாக இருந்தாலும், இன்னொரு பக்கம் பெரிய தடையாக இருக்கிறது.

வேத வசனத்தை படிக்கும் போது அதிகாரம் மற்றும், வசன பிரிவுகளால் நாம் ஆளபடக்கூடாது.அவைகள் நம்மை கட்டுப்படுத்தக்கூடாது. கருத்தாக்கத்தின்படி வேதத்தைப் படிக்க வேண்டும், தியானிக்க வேண்டுமே தவிர அதிகாரபிரிவு வசனபிரிவின்படி, நாம் வேத வியாக்கியான கலையை செய்யக்கூடாது. மாறாக, கருத்தின்படி வேதத்தை புரிந்து கொள்ளவேண்டும்.

**<u>கேள்விகள்:-</u>**

1. *சந்தர்ப்ப சூழமைவு எப்போது கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விஷயமாகிறது என்பதை விளக்குக?*
2. *சந்தர்ப்ப சூழமைவின் ஐந்து வட்டங்கள் என்னென்ன என்பதனைக் கூறுக? (தலைப்புகள் மட்டும்)*
3. *சந்தர்ப்ப சூழமைவின் ஐந்து வட்டங்களை உதாரணங்களோடு விளக்கமாக கூறுக?*
4. *இணைப்புச் சொற்களின் பயன்களைக் கூறுக?*
5. *வேதாகமத்திலுள்ள இணைப்புச் சொற்கள் சிலவற்றைக் கூறுக?*
6. *அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் நிருபத்தில் எவ்வாறு அனேக இணைப்பு சொற்களை பயன்படுத்தியுள்ளார் என்பதனை உதாரணங்களுடன் சற்று சுருக்கமாக கூறுக?*

# <u>வேதாகம விளக்கவியல்</u>

## *பாடம் - 4*

**வேதத்தின் வார்த்தையை எவ்விதமாய் புரிந்து கொள்ள வேண்டும்?**

வேதத்தைப் புரிந்து கொள்வதற்கு அதில் எழுதப்பட்டுள்ள வார்த்தையை நன்றாக புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். ஏனெனில் இது தேவனால் மனிதனுக்கு, மனித மொழியிலே எழுதப்பட்ட வேதாகமம் ஆகும். ஆகவே இதை நாம் புரிவதற்காகவே தேவன் நமக்கு வெளிப்படுத்தி தந்திருக்கின்றார். அதே வேளையில் வேதத்தில் உள்ள வார்த்தைகளை கவனமாய் கவனிக்க வேண்டியது அவசியம்.

**<u>சாதாரண அர்த்தம் (நேரடி அர்த்தம்)</u>**

வேதத்தில் உள்ள சாதாரண அர்த்தத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று முதலாவது நாம் சிந்திக்கிறோம். ஏனெனில் வேதப்பகுதியில் உள்ள வார்த்தைகள் இயற்கையான அர்த்தத்தை உடையதாகவும் இருக்கின்றது. இன்றையக் காலக்கட்டத்தில் அநேகர், வேதத்திலுள்ள வார்த்தைகளை சாதாரண வார்த்தைகள் அல்ல. இயற்கைக்கு அப்பாற்பட்ட வார்த்தைகள் என்று நினைக்கிறார்கள். ஆவிக்குரிய அர்த்தத்தை உடையதாய் இருக்கின்றது என்று மாத்திரம் நினைக்கிறார்கள். அதுவும் இருக்கின்றது. ஆனால் அதே வேளையில் மானிட மொழியிலேயே, மனிதர்களாகிய நமக்கு தேவன் எழுதி தந்திருக்கிறார். ஆகவே, வேதாகமத்தின் நேரடி அர்த்தத்தை முதலாவது நாம் பார்க்க வேண்டியது அவசியம். மனிதனோடு தேவன் தொடர்பு கொண்டு அவனுக்குத் தன்னை வெளிப்படுத்தி தந்தது தான் வேதாகமம். மனிதனோடு பேசிய தேவன், தாம் சொல்வதை மனிதன் நன்றாக விளங்கிக்கொள்வதற்காக அவனுடைய சொந்த மொழியிலேயே அவனோடு பேசினார் என்று பார்க்கிறோம். எபிரெய மொழி மற்றும் கிரேக்க மொழியில் வேதாகமம் காணப்பட்டாலும், இன்று அநேக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, தமிழ் மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டு, நம்முடைய மொழியில் நம்முடைய கையிலே கிடைக்க கிருபை செய்ததற்காக நாம் தேவனைத் துதிக்க வேண்டும். இருந்தாலும் வேதாகமத்தைப் புரிந்து கொள்வதற்கு இந்த வார்த்தைகள் எந்த அளவிறகு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டியது அவசியம். எபிரெய மொழி மற்றும் கிரேக்க மொழியிலிருந்து நம்முடைய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு கிடைத்தாலும் அதின் அர்த்தம் கவனிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. வேதாகமம் முதலில் எபிரெய மொழியிலே, அங்கே இருக்கிற யூதர்களுக்கு கொடுக்கப்பட்ட வேதாகமம் ஆகும். அந்த தேசத்திலுள்ள கலாச்சரம், மக்கள், நடை உடை பாவனைகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றை நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியம். அவர்கள் பயன்படுத்திய சொல்லின் அர்த்தத்தை புரிந்து கொள்ள, அந்தக் கலாச்சாரத்தின் அடிப்படையில் எவ்விதம் பயன்படுத்தினார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். நாம் வேதத்தை தமிழ் மொழியில் படிப்பதினாலே எல்லாவற்றையும் நம்முடைய கலாச்சாரத்தின் அடிப்படையிலேயே புரிந்து கொள்ளும் போதுதான் பல தவறான கருத்துக்கள் உருவாகின்றது.

ஆகவே, சொல்லின் அர்த்தத்தை கவனமாய் பார்க்க வேண்டியது அவசியம். வாசித்த வேத பகுதியின் சாதாரண அர்த்தம் என்னவென்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதாவது எந்த வார்த்தையை எடுத்துக் கொண்டாலும் அதற்கு நேரடி அர்த்தம் ஒன்று இருக்கும். அதே வேளையிலே உருவக அர்த்தம் ஒன்று இருக்கும். நேரடியாக இருப்பதை நாம் சொல் அர்த்தம் என்று அழைக்கிறோம். உருவக அர்த்தம் என்பது ஒரு குறிப்பிட்ட வார்த்தை நேரடியாக அப்படியே சொல்லப்படுகிற அர்த்தத்தில் பயன்படுத்தப்படாமல், வேறொன்றை விளக்கும் வண்ணமாக உவமானமாக உபயோகிக்கப்பட்டிருப்பதை நாம் வேதத்தில் பார்க்கிறோம். ஆகவே இரண்டு அர்த்தத்தில் வார்த்தை பயன்படுத்தப்படுகிறதாய் இருக்கிறது.

உதாரணமாக “மாமியார் உடைத்தால் மண் குடம். மருமகள் உடைத்தால் பொன் குடம்”. என்று தமிழில் ஒரு பழமொழி உள்ளது. இதற்கு அர்த்தம் புரியாவிட்டால், நமக்கு வித்தியாசமாக இரண்டு குடம் என்று நினைப்போம். ஆனால் கலாச்சாரத்தின் அடிப்படையில் அது பயன்படுத்தப்பட்ட விதத்தில் பார்க்கும்பொழுது, அது ஒரே குடத்தைத்தான் குறிக்கிறது. ஒரே குடம், மாமியார் உடைத்தால் அது சாதாரண மண் குடமாகவும், அதே வேளையில் மருமகள் உடைத்தால் பொன்னைப்போல் பெரிதுபடுத்துவமாகும்.

ஆகவே ஒரு சொல்லின் நேரடி அர்த்தம் ஒன்று இருக்கிறது. அதே வேளையிலே, அதை உருவகமாக பயன்படுத்தும்பொழுது, அதன் அர்த்தம் வேறு விதமாகவும் இருப்பதை நாம் கவனிக்க வேண்டியது அவசியம். வேதத்தை பார்க்கும் பொழுதும், அதன் பின்னனியையும், கலாச்சாரத்தையும் அதன் இலக்கிய நடையைப் பார்க்க வேண்டும். இன்றைய காலக்கடட்த்தில் பல முரண்பாடான உபதேசங்கள் வருகிறதைப் பார்க்கிறோம். குழப்பமான போதனைகள், தவறான உபதேசங்கள், சரியான புரிந்து கொள்ளாமையால், கள்ள உபதேசங்கள் புகுத்தப்படுகிறது. ஆகவே வார்த்தைகளை சொல் அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா? உருவக அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா? என்று கவனமாக பார்க்க வேண்டியது அவசியம்.

உதாரணமாக, இயேசு கண்ணீர் விட்டார் என்று வசனத்தில் பார்க்கிறோம். இதை நேரடியான அர்த்தத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இதனை உருவக அர்த்தத்தில் பார்க்கக் கூடாது. இயேசுகிறிஸ்துவின் கன்னிப்பிறப்பு, உயிர்த்தெழுதல், பரமேறுதல் எல்லாம் அப்படியே சொல் அர்த்தத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியக் காரியம். ஆனால் சிலர் அவர் கன்னியின் வயிற்றில் பிறந்ததை நேரடி நிகழ்ச்சி அல்ல. உருவக அர்த்தத்தில்தான் சொல்லப்பட்டிருக்கிறது என்றும், உயிர்த்தெழுதல், பரமேறுதல் நேரடியாய் நடந்த நிகழ்ச்சிகள் அல்ல. உருவக அர்த்தத்தில் கூறப்பட்டக் காரியம் என்று சொல்வார்கள். ஆனால் நாம் இதை நேரடி அர்த்தத்தில்தான் பார்க்க வேண்டும்.

உதாரணமாக, வெளி. *7:14*ல் “அதற்கு நான் ஆண்டவனே, அது உமக்கேத் தெரியும் என்றேன். அப்பொழுது அவன் இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள். இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்” என்று வாசிக்கின்றோம். இதை நேரடி அர்த்தத்தில் பார்த்தால், வாளியில் இரத்தத்தை வைத்து

அங்கிகளை தோய்த்து எடுத்தால் எப்படி இருக்குமென்று யோசித்துப் பாருங்கள். ஆகவே இதற்கு உருவகமான அர்த்தத்தைத்தான் நாம் பார்க்க முடியும். இப்படி நாம் வேதத்தைப் படிக்க பழக வேண்டும். ஜீவ தண்ணீர் என்ற வார்த்தை உருவக அர்த்தத்தைக் குறிக்கும்.

ஆவிக்குரிய சபைகள் என்று சொல்கிற சில சபைகள் கூட சொல் அர்த்தமாக சித்தரிக்கப்பட்டுள்ள சில காரியங்களை உருவகமாக எடுத்து, வேறு அர்த்தத்தை கற்பித்து வருவதையும், உருவக அர்த்தத்தில் சொல்லப்பட்டதை நேரடி அர்த்தமாகவும் கற்பிக்கிறதையும் நாம் பார்க்கிறோம். ஆகவே தேவன் தந்த வார்த்தையை மக்கள் தவறாக விளங்கிக்கொள்ளக் கூடாது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். வேதத்தில் சொல் அர்த்தத்தில் கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகள் எவை? உருவக அர்த்தத்தில் சொல்லபட்டுள்ள வார்த்தைகள் எவை என்பதை முதலில் பிரித்து ஆராய வேண்டும். அப்பொழுதுதான் நாம் வாசிக்கும் வேத அர்த்தத்தின் சரியான அர்த்தத்தை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒரு குறிப்பிட்ட வார்த்தையில் உள்ள அர்த்தம் அந்த வார்த்தையின் சாதாரண அர்த்தமாக இருக்கும். நாம் வாசிக்கும் வேத பகுதியின் சரியான அர்த்தத்தை அறிந்திட வேண்டுமானால் முதலில் சொல் அர்த்தத்தில் வார்த்தையில் உள்ள அதே அர்த்தத்தை நாம் கண்டுபிடிக்க வேண்டும். வேத வசனத்தை நிதானமாய் வாசிக்கும் போது, எளிதாக கண்டுபிடிக்க முடியும். பெரும்பாலும் நேரடி அர்த்தத்திலேயே உபயோகப்படுத்தப்பட்டிருக்கும். சில வார்த்தைகளின் அர்த்தம் தெரியாவிட்டால், தமிழ் அகராதியை பயன்படுத்தி அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். உதாரணமாக "தகப்பன் தன் பிள்ளையை சிட்சிக்கிறது போல" என்பதில் சிட்சை என்ற வார்த்தையை நாம் தண்டனை என்றே எடுத்துக் கொள்கிறோம். ஆனால் தமிழ் அகராதியில் 'பயிற்சி' என்று அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆங்கிலம் தெரிந்தால் ஆங்கில வேதாகமத்தில் என்ன வார்த்தை என்று பார்க்கலாம். மூல பாஷையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று ஆன்லைனில்(இணையதளத்தில்) தேடிப் பார்க்கலாம். அர்த்தம் தெரியாவிட்டால் நாமாக யூகித்து அதற்கு அர்த்தம் கொடுக்கக் கூடாது. நூறாண்டுகளுக்கு முன்பு மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமத்தைத் தான் நாம் இன்று வைத்திருக்கிறோம். அந்தக் காலத்தில் தமிழில் உபயோகிக்கப்பட்ட சில வார்த்தைகள் பொதுவாக இப்பொழுது உபயோகிப்பதில்லை. நாம் முயற்சி எடுத்து சரியான அர்த்தத்தை கண்டுபிடிக்க வேண்டும். ஆவியானவரே எல்லாவற்றையும் கற்றுத் தருவார் என்று சோம்பேறியாய் இருந்து விடக்கூடாது.

ஒருமுறை ஒருவர் எபிரெயர் *1:1*ல் "திருவுளம்பற்றினார்" என்ற வார்த்தையை பிரித்து, திரு + உள்ளம் + பற்றினார் என்று, அதாவது, பரிசுத்த உள்ளத்தை தேவன் பற்றினார் என்று தெரியாமல் ஒரு விளக்கத்தைக் கொடுத்தார். இப்படி பல வார்த்தைகள் இருக்கின்றது. அதற்கு நாமே யூகித்து ஒரு விளக்கம் கொடுத்து, நாம் வேதத்தின் அர்த்தத்தைக் கெடுக்கக் கூடாது. மக்களுக்கு தவறாக உபதேசிக்கவும் கூடாது. ஆகவே ஊழியர்கள் வேதத்தை முழுவதும் கவனமாய் புரிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம். திருவுளம்பற்றினார் என்றால், பரிசுத்த

தேவன் பேசினார் என்றுதான் அர்த்தம். ஆவியானவர் வெளிப்படுத்துவார் என்பது உண்மைதான். ஆனால் அர்த்தம் முரண்படும் வண்ணம் மாற்றிப் பேச மாட்டார். காலத்திற்கு ஏற்றபடி புதிய அர்த்தத்தைக் கொடுக்க மாட்டார். வேதாகம நியதியின் படி நாம் வேதத்தை வியாக்கியானம் பண்ண வேண்டும். வேத வல்லுநர்கள் வேத விளக்கவியலில் சொன்ன காரியம், சொல்லை கவனமாக முதலில் கவனிக்க வேண்டும்.

**வார்த்தையின் உருவக அர்த்தத்தை எவ்விதமாய் பார்ப்பது?**

வேதத்திலுள்ள வார்த்தையின் அர்த்தத்தை அறிந்து கொண்ட பிறகு, எந்தெந்த வார்த்தைகள் உருவக அர்த்தத்தோடு உபயோகிக்கப்பட்டுள்ளன என்பதைப் பார்த்து நாம் அதை குறித்துக் கொள்ள வேண்டும். வேதத்தை கவனமாக, நிதானமாக வாசிக்கும்போது, உருவக அர்த்தத்தை நாம் எளிதாக கண்டறியலாம்.

உதாரணமாக, யோவான் 3:3ல், மறுபடியும் பிறத்தல் என்ற வார்த்தையை இயேசு கிறிஸ்து பயன்படுத்துகிறதை நாம் பார்க்கிறோம். மறுபடியும் பிறத்தல் என்பதை இயேசு உருவக மொழியில் தான் சொல்லியிருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். யோவான் 4:10ல் ஜீவதண்ணீர் என்ற வார்த்தையை அவர் உருவகமாகவே சொல்லியிருக்கிறார். உருவகமாக பயன்படுத்திய வார்த்தைகள் இடம்பெற்ற வேதபகுதியை ஆராய்ந்து பார்த்து, அவற்றை சொல் அர்த்தமாக விளக்கினால், அர்த்தமானதாக இருக்குமா, இல்லாவிட்டால், உருவக அர்த்தமாக விளக்கினால், அர்த்தம் வருகிறதா? என்று வாசித்து, நிதானித்து அறிய வேண்டும். வார்த்தையின் உருவக அர்த்தத்தை சொல்லப்பட்டதின் அடிப்படையில் கண்டுபிடிக்க வேண்டியது அவசியம். இவ்விதமாக சொல் அர்த்தம் பொருத்தமில்லாததாயிருக்கும்போது, ஒரு வார்த்தை உருவகமாகவே உபயோகிக்கப்பட்டிருக்கிறது என்று கண்டுபிடித்துக் கொள்வது எளிதான காரியம். இயேசு கிறிஸ்து யோவான் 3ம் அதிகாரத்தில் நிக்கொதேமுவோடு கூட அவர் மறுபடி பிறத்தலைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறார். அவர் உருவகமாக சொல்லிக்கொண்டிருக்கிறார். ஆனால் நிக்கொதேமு சொல் அர்த்தத்தில் விளங்கிக் கொண்டார் என்று பார்க்கிறோம். அதேப்போல, சமாரியாப் பெண்ணைக் குறித்து வாசிக்கிறோம். யோவான் 4ம் அதிகாரத்தில் ஜீவதண்ணீர் பற்றி இயேசு சொல்லும்போது, அவளும் சொல் அர்த்தமாகவே எடுக்கிறாள். இப்படித்தான் நாம் சொல் அர்த்தத்தை உருவகமாகவோ, உருவக அர்த்தத்தை சொல் அர்த்தமாகவோ எடுத்தால் தவறாக வேதத்தை புரிந்து கொள்வோம்.

வேதாகமத்தில் பலவிதமான உருவகங்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றது என்பது உண்மை. இவற்றில் பொரும்பாலும் ஒன்றை விளக்குவதற்காக, அதை இன்னொன்றுடன் ஒப்பிட்டு, அல்லது இன்னொன்றை மாதிரியாகக் காட்டி, விளக்குவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

உதாரணமாக, தேவன் சூரியனாக இருக்கிறார் என்று தேவனை சூரியனுக்கு ஒப்பிடுகிறதை நாம் வேதத்தில் பார்க்கிறோம். இதை தமிழ் இலக்கணத்தில் பார்க்கும்பொழுது, பிரதிமை என்று சொல்லுவோம். தேவனுக்கு பிரதிமையாக சூரியன் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

அதாவது தேவனுக்கு உபயோகிக்கப்பட்டுள்ள உருவகத்தை மாதிரியாகக் காட்டி தேவனை விளக்கினால், அது உவமை அணி என்று சொல்லுவோம். தேவன் சூரியன் அல்ல. அதுபோல, சூரியனும் தேவன் அல்ல. ஆனால், தேவன் சூரியனைப் போல் இருக்கிறார். நமக்கு சூரியனை, பிரகாசத்தைத் தெரியும். ஆகவே பிரதிமையாக இங்கே கூறப்பட்டிருக்கிறார் என்ற அர்த்தத்தில் கவனிக்க வேண்டியது அவசியம். *2* கொரி.*5:1*ல், "மனித சரீரமானது பூமிக்குரிய கூடாரமாகிய வீட்டுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறதை நாம் பார்க்கிறோம்". *1* கொரி.*5:51*ல், மரணம் என்பது நித்திரைக்கு ஒப்பிடப்பட்டு கூறப்பட்டிருக்கிறது. சங்கீதம் *18:2*ல் கர்த்தர் கன்மலை, கோட்டை என்றெல்லாம் ஒப்பிடப்பட்டு பேசப்பட்டிருக்கிறதை பார்க்கலாம். இயேசு கிறிஸ்துவும் திராட்சை செடியாகவும், ஜீவ அப்பமாகவும், வாசலாகவும், மேய்ப்பனாகவும் இருக்கிறதாகவும் தம்மைப்பற்றி யோவானில் சொல்லியிருக்கிறதை வாசித்திருக்கிறோம். இப்படி தன்னை ஒப்பிட்டு இயேசு பேசியிருக்கிறதையும், அதிகமாக வேதத்தில் பார்க்க முடியும். ஒன்றை ஒப்பிட்டுக் காட்டுவதற்காக பல வார்த்தைகள் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதை பார்க்கிறோம். உருவகங்கள் பல சந்தர்ப்பங்களில் மாதிரியாக காட்டப்பட்டுள்ளதையும் நாம் நிதானித்துப் பார்க்க முடிகிறது. மாதிரியாகக் காட்டப்பட்டுள்ள உருவகங்கள் அநேகமாக 'போல' என்ற சொல்லோடு வருகிறதை பார்க்க முடியும். அல்லது அதற்கு இணையான வார்த்தைகள் வருகிறதை பார்க்க முடியும்.

உதாரணமாக, யோபு *41:24*ல் "அது நெஞ்சு கல்லைப் போலவும், ஏந்திரத்தின் அடிக்கல்லைப்போலவும் கெட்டியாய் இருக்கும்". என்று சொல்லப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். அதில் உருவகங்கள் போல என்ற வார்த்தையைக் கொண்டு சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதமாக மாதிரியாக இந்தப் பொருட்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மீகா. *7:4*ல் "அவர்களில் நல்லவன் முட்செடிக்கு ஒத்தவன். செம்மையானவன் நெரிஞ்சிலைப்பார்க்கிலும் கடும் கூர்மையானவன்" என்று சொல்லப்பட்டிருக்கிற வசனத்தில் ஒத்தவன், பார்க்கிலும், போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கிறதைப் பாருங்கள். அந்த சொற்கள் உருவகங்களாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இவ்விதமாக எந்த பொருளுக்கு எந்த விதமான அர்த்தத்துடன், உருவகத்துடன் வார்த்தைகள் பயன்படுத்தி சொல்லப்பட்டிருக்கிறது என்று கவனித்துப் பார்க்கலாம். வேத பகுதியை நாம் அர்த்த விளக்கம் செய்யும்போது, உருவகங்களை கண்டுபிடிக்க வேண்டும். அது எவற்றை உபயோகிக்க பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து, அதன்படி அந்த வார்த்தைகளை அர்த்த விளக்கம் செய்து படித்தால், வேதத்திற்கு விளக்கம் கொடுப்பதில் தவறு செய்ய மாட்டோம். ஒரு வார்த்தையை சொல் அர்த்தமாக எடுக்கும்போது, அது அந்த வசனத்திற்கு பொருத்தமற்றதாய் இருந்தால், அந்த வார்த்தை உருவகமாக உபயோகபடுத்தப்பட்டுள்ளதென்று அறிந்து கொள்ள வேண்டும்.

***<u>உருவக அர்த்தத்தை அறிந்து கொள்வதற்காக நாம் செய்ய வேண்டியவைகள்:-</u>***

வார்த்தையை அதின் அர்த்தத்தின்படி விளங்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுதான் வேதாகமத்தை எழுதியவர்கள் உருவகத்தின் மூலம் சொல்ல முற்படுவது என்ன என்பதை நாம் அறிந்திடலாம்.

1. **எதற்கான உருவகம் என்று அறிய முற்பட வேண்டும்:** அப்பொழுதுதான் அந்த வார்த்தைக்கு அதிகப்படியான விளக்கத்தை பெற முடியும். உதாரணமாக, சங்கீதம் 92:12ல் "நீதிமான் பனையைப் போல் செழித்து, லீபனோனில் உள்ள கேதுருவைப் போல் வளருவான்" என்ற வசனத்தைக் கவனியுங்கள். இதை வாசிக்கும்பொழுது, பனை மரமும், கேதுரு மரமும் எதற்கு உருவகமாக சொல்லப்பட்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும். இது நீதிமானின் வளர்ச்சியை விளக்கும் உருவகமாக இருப்பதை கண்டு கொள்ள முடியும். இதை எளிதாக நாம் கண்டு கொள்ளலாம்.

சில வசனங்களில் எதற்கான உருவகம் என்று கண்டுபிடிக்க கடினமாகவும் இருக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலை வரும்போது, அதற்கு முன்னும், பின்னுமுள்ள வசனங்களை வாசித்துப் பார்க்க வேண்டியது அவசியம். உதாரணமாக, யோவான் 7:38ல் "ஜீவ தண்ணீருள்ள நதிகள் என்ற உருவகம் அதற்கு அடுத்த வசனத்தின் மூலமே நாம் அறிந்து கொள்ள முடிகிறதாயிருக்கின்றது. ஜீவ தண்ணீருள்ள நதிகள் என்பது பரிசுத்த ஆவியானவருக்காண உருவகம் என்று யோவான் 7:39ல் பார்க்க முடியும். யோவான் 4:32ல் இயேசு கிறிஸ்து போஜனம் என்று சொல்கிறதை கண்டுபிடிக்க 7:34ம் வசனத்தை வாசித்தால் தான் தெரியும். "இயேசு, நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது". போஜனம் என்று எதைக் குறிப்பிடுகிறார் என்று 7:34ல் பார்க்கிறோம். போஜனம் என்ற வார்த்தை, தேவ சித்தத்தை இவர் செய்து முடிக்கிறதற்காக சொல்லப்பட்ட வார்த்தை என்று கண்டுபிடிக்கலாம்.

2. **இது எந்த அர்த்தத்துடனான உருவகம் என்று அறிய வேண்டும்:** அதற்காக நாம் அந்த உருவக விவரணத்தை சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். (வார்த்தை எந்த மாதிரியான அர்த்தம் உடையதென்று படிக்க வேண்டும்). ஏசாயா 1:30ல், "தண்ணீரில்லாத தோப்பைப்போலவும் இருப்பீர்கள்" என்று சொல்லி அங்கே ஒப்பிட்டு ஒரு காரியத்தை சொல்கிறார். தண்ணீரில்லாத தோப்பு எப்படி இருக்குமென்று அந்த விவரத்தை நாம் சேகரிக்க வேண்டும். அது பசுமையாய் இருக்காது, வறண்டு போய் இருக்கும். செடிகள் அதில் பட்டுபோய் இருக்குமென்று பார்க்க முடியும். தண்ணீரில்லாத தோப்பு என்று தேவன் யாரைக் குறித்து சொல்கிறார் என்று ஒப்பிட்டு பேச வேண்டும். இவ்விதமாக படிக்கும்போது நாம் விளக்கத்தை அறிய முடியும். இங்கே கர்த்தரை விட்டு விலகுகிறவர்கள், பாவிகள், துரோகிகள் யாவரும் தண்ணீரில்லாத தோப்பைப்போல இருக்கிறதாக வசனங்கள் தொடர்ச்சியாக சொல்லப்பட்டிருக்கிறது.

உன்னதப்பாட்டு 1:15ல் "சாலமோன் சூலேமித்தியிடம் கூறுகிறார், உன்னுடைய கண்கள், புறாக்கண்கள். போல என்ற கண்கள் குறிப்பிடப்படவில்லையென்றாலும், அந்த வார்த்தை மறைந்திருக்கிறது. புறாக்கண்கள் எப்படிப்பட்டதாயிக்கிறதென்று பார்த்தால், ஆச்சர்யமாயிருக்கிறது. அது அழகானது மட்டுமல்ல, ஒரு சமயத்தில் ஒன்றை மட்டுமே பார்க்க

முடியும் என்று அறிவியல் சொல்கிறது. மழை நேரத்தில் தட்டான் பூச்சிப் பார்த்திருப்பீர்கள். அதற்கு நிறைய கண்கள் இருக்கும். ஒரே நேரத்தில் பல இடங்களை பார்க்க முடியும். ஆனால் தன்னைப் பிடிக்க வருகிறனை பார்க்க முடியாமல் எளிதாக மாட்டிக் கொள்ளும். ஆனால் புறாக்கண்கள் ஒரு நேரத்தில் ஒன்றை மட்டுமே பார்க்க முடியும். பல காரியங்களை பார்க்கிறவர்கள் எளிதாக வீழ்ந்து போவார்கள். ஒன்றை மாத்திரமே பார்ப்பவர்கள் நிலைத்திருப்பார்கள். சூலேமித்தியின் கண்கள் நேசரை மட்டுமே காணக்கூடிய புறாக்கண்கள் போல இருக்கிறது. அதேப்போல, நாம் அவரை மட்டுமே பார்த்து வாழ அழைக்கிறார்.

ஆனால் இவ்விதமாகப் பார்க்கும்பொழுது, சில நடைமுறை பிரச்சினைகளும் இருக்கின்றது. ஏனென்றால் மொழி பெயர்ப்பாளர்கள் மூல பாஷையிலிருந்து தமிழுக்குக் கொண்டு வரும்போது, அங்குள்ள கலாச்சாரம், மிருகம், பறவை போன்றவற்றை பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், அதைப்போல மிருகங்கள் நம் நாட்டில் இல்லை. அதனால் அதற்குரிய அர்த்தத்தை புரியமுடியாமல் கஷ்டப்படுகிறோம். உதாரணமாக உன்.*1:14*ல், “என்கேதி ஊர் திராட்சைத் தோட்டத்தில் முளைக்கும், மருதோன்றி பூங்கொத்து” என்று தன் நேசரைக்குறித்து சூலேமித்தியாள் சொல்கிறாள். நாம் மருதோன்றி பூங்கொத்தை பார்த்ததில்லை. அது இஸ்ரவேல் தேசத்தில் உள்ளது. உன்.*2:3*ல் நமுட்டை என்ற பறவையைப்பற்றி வாசிக்கிறோம். இந்தப் பறவையைப் பற்றி நமக்குத் தெரியாது. இதற்காக நாம் வேதாகம அகராதியை பயன்படுத்தலாம். வேதாகம கை நூல் “Bible Hand book” மற்றும் வேதாகம கலைக் களஞ்சியத்தை “Bible Encyclopaedia” பயன்படுத்தலாம்.

## <u>கேள்விகள்:-</u>

1. வேத வார்த்தைகளின் சாதாரண அல்லது நேரடி அர்த்தத்தை நாம் எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும் என்பதனை சற்று சுருக்கமாக கூறுக?
2. வேத வார்த்தைகள் நேரடி அர்த்தத்தில் (சொல் அர்த்தம்) மற்றும் உருவக அர்த்தத்தில் பார்க்க வேண்டியதின் வேறுபாடுகளை உதாரணங்களுடன் கூறுக?
3. வார்த்தையிலுள்ள அர்த்தத்தை புரிந்துகொள்வதற்காக நாம் எவ்வாறு பிரயாசப்பட வேண்டுமென்பதனைக் கூறுக?
4. வேத வார்த்தைகளின் உருவக அர்த்தத்தை நாம் எவ்விதமாய் பார்க்க வேண்டுமென்பதனை உதாரணங்களுடன் விளக்கமாக கூறுக?
5. உருவக அர்த்தத்தை அறிந்துகொள்வதற்காக நாம் செய்ய வேண்டியவைகளைக் குறித்து விளக்கமாக கூறுக?

# வேதாகம விளக்கவியல்

## பாடம் - 5

**உருவக அர்த்தத்தை அறிந்து கொள்வதற்காக நாம் செய்யக்கூடாதவை:**

1. **உலகளாவிய அர்த்தம் கொள்ளக்கூடாது:**

உலகளாவிய அர்த்தம் கற்பிக்கும்போதுதான், பல குழப்பங்கள் வேதாகம விளக்கவியலில் வருகிறது. அதாவது ஒரு உருவகத்திற்கு ஒரு வசனத்தில் அர்த்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று வைத்துக்கொண்டால், அதுதான் எல்லா வசனங்களுக்கும் அர்த்தம் என்று நினைக்கக்கூடாது. ஒரு உருவகம் ஒரு இடத்தில் ஒரு அர்த்தத்திலும், வேறு இடத்தில் வேறு அர்த்தத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். உதாரணமாக, ஓசியா 6:4ல் "உங்கள் பக்தி காலையில் காணும் மேகத்தைப் போலவும், விடியற்காலையில் தோன்றும் பனியைப் போலவும் ஒளிந்துபோகிறது" என்று வாசிக்கிறோம். இந்த வசனத்தில் காலை நேர மேகம், விடியற்காலத்துப் பனி என்று இரண்டு வாக்கியத்தைப் பார்க்கிறோம். இது மக்களுடைய பக்திக்காண உருவகமாகத்தான் இருக்கிறது. காலை நேர மேகம், விடியற்காலத்துப் பனி என்று இரண்டும் கொஞ்ச நேரம் இருக்கும் போல, சிலருடைய பக்தியும் கொஞ்ச நேரம்தான் இருக்கிறது என்று விளக்குவதற்காக இந்த உருவகம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதே ஓசியா 14:5ல் "நான் இஸ்ரவேலுக்கு பனியைப் போல இருப்பேன்" என்று தேவன் கூறுகிறதைப் பார்க்கிறோம். இரண்டு வசனத்திலும் உள்ள பனி வேறுபடுகிறது. இரண்டு பனிக்கும் ஒரே அர்த்தம் நினைத்தால், தேவன் இஸ்ரவேலுடன் கொஞ்ச நேரம்தான் இருப்பார் என்று சொல்லி தவறான அர்த்தத்தை போதித்து விடுவோம். அந்த வசனத்தின் அடுத்த வரியையும் நாம் வாசித்துப் பார்க்க வேண்டும். "தேவன் இஸ்ரவேலுக்கு பனியைப் போல் இருப்பதினால், அவன் லீலிபுஷ்பத்தைப் போல் மலருவான். லீபனோனைப்போல வேரூன்றி நிற்பான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில் பனி என்ற உருவகம், தாவரங்களுக்கு வளர்ச்சியையும், செழிப்பையும் கொடுக்கும் பனிபோல இஸ்ரவேலுக்கு வளத்தைக் கொடுப்பவராகவும் இருக்கிறார் என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. உருவகத்திற்கு அர்த்தம் வசனத்திற்கு வசனம் வேறுபடுகிறது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. ஆகவே பனி என்றாலே கொஞ்ச நேரம் இருப்பதைப்பற்றிதான் கூறுகிறது என்று சொல்லி, முழு வேதாகமத்திலும் இதைத்தான் குறிப்பிடுகிறது என்று சொல்லி தவறாக புரிந்து கொள்ளக் கூடாது. மாற்கு 1:10ல் "இயேசு ஞானஸ்நானம் பெற்றபொழுது, ஆவியானவர் புறாவைப்போல தம்மேல் இறங்குவதைக் கண்டார்" என்று வேதத்தில் வாசிக்கிறோம். இந்த இடத்தில் ஆவியானவர் புறாவுக்கு மாதிரியாகக் காட்டப்பட்டிருக்கிறார். அதற்காக வேதாகமத்தில் எங்கெல்லாம் புறா வருகிறதோ, அங்கெல்லாம் புறா என்பது ஆவியானவரையேக் குறிக்கிறது என்று சொல்லக் கூடாது. ஓசியா 7:11ல் புறா மதியீனத்திற்கு உருவகமாக சொல்லப்பட்டிருக்கிறது. உன். 2:14, 5:2,6:9-லும் சூலேமித்தியை வர்ணிக்கும் உருவகமாக

பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எரேமியா 48:28ல் மோவாப் தேசத்தில் குடியிருப்பவர்களுக்கான உருவகமாக சொல்லப்பட்டிருக்கிறது. ஏசாயா 38:14, எசேக்கியேல் 7:16, நாகூ.ம் 2:7 போன்ற வசனங்களில், அழுது புலம்புவதற்காண உருவகமாகவும் புறா சொல்லப்பட்டிருக்கிறதை நாம் பார்க்கிறோம்.

**அக்கினி:** நாம் இதை பரிசுத்த ஆவியானவருக்கான உருவகமாக பேசுகிறோம். மத்தேயு 3:11, லூக்கா 3:16, அப். 2:3 போன்ற வசனங்களிலேயே அக்கினி என்பது பரிசுத்த ஆவியானவரின் சுத்திகரிக்கும் செயலுக்கான உருவகமாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் லூக்கா 12:49, 1 கொரிந்தியர் 3:13, 2 தெச.1:8, மத்தேயு 3:10 போன்ற வசனங்கள் அக்கினி நியாயத்தீர்ப்புக்கான உருவகமாக சொல்லப்பட்டுள்ளது. எரேமியா 23:29ல் தேவனுடைய வார்த்தையை விளக்கும் உருவகமாக அக்கினி பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. 1 பேதுரு 1:7ல் விசுவாசத்தின் சோதனைக்கான உருவகமாக சொல்லப்படுகிறது. சகரியா 13:9-ல் சிட்சைக்கான உருவகமாக சொல்லப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல, அக்கினி வேதத்தில் இன்னும் பலவற்றிற்கு உருவகமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பொதுவான உருவக அர்த்தத்தை அந்த வார்த்தை வரும் எல்லா இடங்களிலும் பயன்படுத்தி பார்க்க முடியாது.

**புளித்தமா:** புளித்தமா என்பதை பொதுவாக பாவத்திற்கும், தீமைக்குமான உருவகமாக சொல்லப்படுகிறது (1 கொரி. 5:6), பிழையான போதனைக்கான உருவகமாக கலாத்தியர், மத்தேயு, மாற்கு போன்ற புத்தகங்களில் பார்க்கிறோம். மத்தேயு 13:33, லூக்கா 13:21லும் தேவனுடைய ராஜ்யத்திற்கான உருவகமாக அங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு உருவகத்தையும் அது இடம்பெறும் வேதபகுதியும் கருத்தாய் ஆராய்ந்து, கண்ணோக்கிப் பார்த்து, அந்தந்த உருவகங்களுக்கு ஏற்ற அர்த்தத்தை அந்தந்த வசனங்களுக்கு அர்த்தத்தைக் கொடுக்க வேண்டும்.

**2. யூகத்தினால் அர்த்தம் கற்பிக்கக்கூடாது:**

ஒரு சொல்லின் உருவகத்திற்கு யூகத்தினால் அர்த்தம் கற்பிக்கக்கூடாது. ஒரு வார்த்தையில் உபயோகிக்கப்பட்டுள்ள உருவக அர்த்தத்தை புரிந்து கொள்ள முடியாமல் இருந்தால், உங்கள் யூகத்தினால் அர்த்தம் கற்பிக்கக்கூடாது. வேதத்தின் பல மொழிபெயர்ப்புகள் இருக்கின்றது. அவற்றை ஒப்பிட்டுப் பார்த்து அர்த்தத்தை கண்டுபிடிக்கலாம். தானாகவே யூகித்துப் பேசுபவர்கள் ஆவியானவர் தனக்குக் கற்றுக் கொடுத்தார் என்று சொல்கிறார்கள். ஆனால் அது பாவம். கிறிஸ்தவர்களுக்கே அநேக விளக்கங்கள் தெரியாததால், யூகித்து சிலர் சொல்வதை நம்பிவிடுகின்றனர். வேதாகமத்திற்கு சரியான அர்த்தத்தை அறிய முற்படாமல் யூகித்து சொல்வது இடையூறை உண்டுபண்ணும். உன். 2:2ல் முள்ளுகளுக்குள்ளே லீலிபுஷ்பம் எப்படியிருக்கிறதோ, அப்படியே குமாரத்திகளுக்குள்ளே எனக்குப் பிரியமானவளும் இருக்கிறாள் என்ற வசனத்திற்கு ஒருவர் கொடுத்த விளக்கம் - முள்ளுகளுக்குள்ளே லீலிபுஷ்பம், இயேசுகிறிஸ்து, இதில் சொல்லப்பட்ட முள் சிலுவையில் சூட்டப்பட்ட முள்முடி என்றும் லீலிபுஷ்பம் அவருடைய அழகிய முகம் என்றும் கூறினார். அடுத்த வசனத்தில் காட்டு மரங்களுக்குள்ளே கிச்சிலி மரம் எப்படியிருக்கிறதோ, அப்படியே

குமாரருக்குள்ளே என் நேசர் இருக்கிறார் என்பதற்கு, இயேசுவின் சிலுவை மரத்தை இது குறிக்கிறதென்றும் கூறினார். காட்டு மரங்கள் என்பது குமாரனோடு அறையப்பட்ட இரு கள்வர்களை அது குறிக்கிறதென்றும், அவர் சிலுவை மரத்தில் கள்வர்கள் மத்தியில் இருப்பதையே வசனம் கற்பிக்கிறதென்றும் விளக்கம் கொடுத்தார். இரண்டாம் வசனம் மணவாளனின் கூற்று என்றும், அடுத்த வசனம் மணவாட்டியின் கூற்று என்பதையும் அவர் கவனிக்கவில்லை. இரண்டையும் ஒருவரே சொல்வதாக அவர் கருத்தில் கொண்டு, இரண்டுக்கும் தன் யூகத்தினாலே ஒரு புதிய அர்த்தத்தைக் கற்பித்து, அந்த வேத பகுதியின் அர்த்தத்தை தாறுமாறாக்கிவிட்டார் என்பதுதான் உண்மை. இவ்விதமாக வேத வசனம் யூகத்தினால் கற்பிக்கப்படக்கூடாது. நல்ல கருத்தை சொல்கிறோம் என்று சொல்லி, உண்மையான அர்த்தத்தைப் புதைக்கக் கூடாது.

***3. உருவகமாக்கும் ஆசையில் கற்பிக்கக்கூடாது:***

வார்த்தையில் உபயோகிக்கப்பட்டுள்ள உருவக அர்த்தத்தை அறிந்திட நாம் முற்படும்போது, எல்லாவற்றையும் உருவகமாக்க வேண்டும் என்ற ஆசையில், சொல் அர்த்தமாக சொல்லப்பட்டவைகளுக்குக் கூட உருவக அர்த்தத்தை நாம் சொல்லக்கூடாது. ஒரு சொல்லுக்கு சொல் அர்த்தம் இருக்கும். மற்றொன்று அது உபயோகப்படுத்தப்பட்ட இடத்திற்கு ஏற்றபடி மாறுபடும்.

உதாரணமாக, மாற்கு *1:10*ல் பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல் இறங்கினார் என்று பார்க்கிறோம் என்பதற்காக, ஆதி.*8:8-12* வரையுள்ள புறா பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறதென்று கூறக்கூடாது. இந்த வசனங்களில் நோவா பேழைக்குள்ளிலிருந்து வெளியே விட்டது பரிசுத்த ஆவியானவரை அல்ல. மாறாக, உண்மையான புறாவை என்பதை நாம் மறுக்க முடியாது.

எண்ணெய் பரிசுத்த ஆவியானவருக்கான அடையாளம் என்று ஒருவர் பிரசங்கித்து விட்டு, எண்ணெய் என்று எங்கெல்லாம் வருகிறதோ, அது எல்லாம் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறதென்று அதை உருவகமாக்கும் ஆசையில் சொல்கிறதைப் பார்க்கிறோம். நாம் அப்படி நினைத்தால், அது சில வசனங்களுக்கு தவறான அர்த்தத்தைத் தந்துவிடும். நெகேமியா *5:11*ல் பரிசுத்த ஆவியானவரை எண்ணெய்க்கு உருவகப்படுத்தினால், பரிசுத்த ஆவியானவர் மூலமாய் வந்த வட்டியை திருப்பிக்கொடுக்க வேண்டும் என்ற அர்த்தம் வந்துவிடும். நெகேமியா *13:5*ல் பரிசுத்த ஆவியானவரில் தசமபாகம் செலுத்த வேண்டும் என்ற அர்த்தம் வந்து விடும். ஒரு வார்த்தை உருவகமாக உபயோகிக்கப்படாமல் இருக்கும்போது, அதை ஆவிக்குரியதாய் மாற்ற வேண்டும் என்று எண்ணிப் பேசினால், அது தவறாக போய்விடும்.

உருவகங்களாக உபயோகிக்கப்பட்டுள்ள வார்த்தைக்கு மட்டுமே, அந்த உருவகம் இடம்பெறும் வார்த்தைகளை ஆராய்ந்து பார்த்தபின்பு, அதற்குரிய உருவக அர்த்தம் மட்டுமே சொல்ல வேண்டியது அவசியம்.

**ஆவிக்குரிய உலகத்திலே இன்று என்ன செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது?**

உருவக அர்த்தமாக சொல்லப்பட்ட வார்த்தைகளுக்கு மட்டுமல்ல, சொல் அர்த்தமாக சொல்லப்பட்டுள்ள வார்த்தைகளுக்கும் அநேக அர்த்தத்தை சொல்கிறார்கள்.

எல்லாவற்றையும் அவர்கள் எடுத்து பயன்படுத்தி, ஆவிக்குரியதாய் மாற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு அவர்கள் போடுகிற முத்திரை, பரிசுத்த ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார் என்று கூறுவதாலே, மக்கள் குழம்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் உண்மை. மட்டுமல்ல, தேவன் வேதத்தில் என்ன சொல்லியிருக்கிறார் என்று கூட புரிய முடியாத அளவுக்கு மக்கள் திணறிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய காலக்கட்டம் அப்படிதான் இருக்கிறது.

**உதாரணமாக, நல்ல சமாரியன் உவமை:** அதில் எனக்குப் பிறன் யார் என்ற கேள்விக்கு பதில் கொடுக்கும் வண்ணமாக இயேசு சொன்ன காரியத்தை நாம் பார்க்கிறோம். லூக்கா. *10:29*-ல், "அங்கே நியாய சாஸ்திரி ஒருவன், இயேசுவிடம் இவ்விதமாகக் கேட்கிறான் - எனக்குப் பிறன் யார்? இந்தக் கேள்விக்கு பதில் கூறும் வண்ணமாகத்தான் இயேசு நல்ல சமாரியன் உவமையைக் கூறுகிறார். கடைசியில், இப்படியிருக்க கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு மூன்று பேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படி தோன்றுகிறது என்று கேட்கிறார். அதற்கு அவன், அவனுக்கு இரக்கம் செய்தவனே என்று பதில் கூறுகிறதை லூக்கா *10:36,37* வரையுள்ள வசனங்களில் பார்க்கிறோம். இந்த உவமையைக் கேட்டவன், தனக்கு பிறன் யார் என்பதை அறிந்து கொண்டான், மட்டுமல்ல அவனும் நல்ல சமாரியன் போல, தேவையோடு இருக்கும் மனிதருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற கருத்தை இயேசு கிறிஸ்து அவனுக்கு கொடுத்தக் கட்டளையாக இருக்கிறதைப் பார்க்கிறோம். நீ போய் தேவையோடு இருக்கும் மனிதனுக்கு உதவி செய். அவன் தான் உனக்குப்பிறன் என்று பதில் கூறுகிறார். அதுதான் இந்த உவமையின் உண்மையான அர்த்தம். ஆனால், இன்று இயேசுகிறிஸ்து எதற்காக இதைச் சொன்னார் என்று அறிய முடியாதவாறு, ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு அர்த்தம் கொண்டு வருகிறார்கள். இதனால் வேதம் மக்களுக்கு புரியாத இடத்தில் இருக்கிறது. அதை தவிர்க்க வேண்டுமென்றே வேதாகமவியல் சொல்லித் தருகிறது. இதனால் பலதரபட்ட கள்ள உபதேசங்கள் இன்று காணப்படுகிறது.

<u>வரலாற்று இலக்கண முறை:-</u>

வரலாற்று இலக்கண முறை என்ற அடிப்படையில் வேதத்தை தியானிக்கும்பொழுது, அதன் ஆசிரியர் என்ன நோக்கத்தோடு இந்தக் கருத்துக்களை கூறியிருக்கிறார் என்பதை பெறுவதற்காக இந்த முறையை நாம் பின்பற்றி, செயல்பட்டு, கண்டுகொள்ள இருக்கிறோம்.

**ஒரு சில ஆலோசனைகள்:**

பரிசுத்த ஆவியானவர் தீர்க்கதரிசியைக் கொண்டு சொல்லியிருக்கிறாரே, அவர் எந்த நோக்கத்தோடு அதை சொல்ல விரும்புகிறார் அதனுடைய உண்மையான அர்த்தம் எவ்விதமாய் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக நாம் இந்த முறையை பின்பற்றுகிறோம். நாம் இந்த முறையில் தியானிக்கும்போது, நம் சிந்தையில் ஒரு

காரியத்தை முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டும். ஒரு பகுதி, ஒரே ஒரு அர்த்தத்தை உடையதாகத்தான் இருக்கும் என்ற நோக்கத்தோடு படிக்க வேண்டும். அந்த சொற்றொடர் அல்லது அந்த பகுதி ஒரு காரியத்தை வலியுறுத்திக் கூறுகிற முக்கியமான எண்ணத்தோடு பார்க்க வேண்டும். ***மில்டன்.எஸ்.டெரி*** என்பவர் சொல்லும்போது, இந்த முறையில் நீங்கள் வேதத்தை வாசிக்கும்பொழுது, ஒரு முக்கியமான அர்த்தத்தை உடையதாகவும், ஒரு தொடர்புடைய அர்த்தத்தை உடையதாகவும் இருக்கும் என்று புரிந்து கொள்ள வேண்டும். அதுதான் அடிப்படையான ஒரு கோட்பாடு என்று கூறுகிறார். இந்தக் கோட்பாடை நீங்கள் எப்பொழுது மறுக்கின்றீர்களோ, அப்பொழுது பலதரப்பட்ட கருத்துக்கள் அந்த ஒரு பகுதியில் இருப்பதாக உணர்கிறது மாத்திரமல்ல, ஒரு தெளிவற்ற நிலையை நீங்கள் அடைவீர்கள் என்ற அர்த்தத்தில் கூறுகின்றார். ஆகவே ஒரு வேத பகுதியில் ஒரு அர்த்தத்தையும், ஒரு தொடர்புடைய அர்த்தத்தையும் உள்ளடக்கியதாய் இருக்கிறது என்ற கண்ணோட்டத்தோடு படிப்பதுதான் நாம் இந்த வேதாகம விளக்கவியலில் பார்க்கின்ற வரலாற்று இலக்கண முறை என்று நாம் சொல்ல வேண்டும்.

**மூன்று விதமான முறைகளில் படிக்கலாம்:**

இதனை பொதுவாக வேதத்தை ஆழமாக படிக்கும் முறை என்று பார்க்கிறோம். இந்த மூன்று முறைகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. முதல் அடிக்கு சென்றால்தான் அடுத்தடுத்த படிகளுக்கு செல்ல முடியும்.

1. கூர்ந்து கவனிக்க வேண்டும் (Observation)
2. விளக்கப்படுத்த வேண்டும் (Interepretation)
3. நடைமுறைப்படுத்த வேண்டும் (Application)

**கூர்ந்து கவனிக்க வேண்டும் (Observation):**

முதலாவது நாம் வார்த்தையை சோதித்து அறிய வேண்டும். அதனுடைய சொல் அர்த்தம், உருவக அர்த்தம், உபயோக அர்த்தம், உவமையாக சொல்லப்பட்ட அர்த்தம், எதன் அர்த்தத்தை இது வெளிப்படுத்துகிறது, இது எதற்கான உருவகம் என்றெல்லாம் படித்தோம். அவ்விதமாக வசனங்களை சோதித்துப் பார்க்க வேண்டும். ஆழ்ந்து படிக்க வேண்டும். வேதத்தை வாசிக்கும்போது, கூர்ந்து கவனிக்க வேண்டியது அவசியம். அதை கூர்ந்து கவனிக்காமல், மேற்கொண்டு எதையும் விளக்கப்படுத்த முடியாது என்பதை புரிந்து கொள்ளுங்கள். நம் வாழ்வில் வேதம் எவ்விதமாய் செயல்படுகிறது என்பதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். ஒரு வேத பகுதியை வாசிக்கும்பொழுது, இதில் யாரெல்லாம் வருகிறார்கள். இதில் இயேசு இருக்கிறார், சீஷர்கள் இருக்கிறார்கள், குணமாக்கப்பட்ட மனுஷன் இருக்கிறார். இதில் இருப்பவர்கள் ஒருவருக்கொருவர் இடையே உள்ள தொடர்பு என்ன? அவர்கள் பயன்படுத்துகிற வார்த்தைகள் என்ன என்பதை அவர்களுடைய சூழ்நிலையில் இருந்து பார்க்கும்பொழுது, நிறைய அர்த்தத்தை பெற முடியும். உதாரணமாக, குருடன் பார்வையடைகிற சம்பவம் என்று

வைத்துக்கொண்டால், அதில் நாம் இருந்தால் என்ன உணர்வடைவோம் என்று ஒவ்வொரு பாத்திரத்திலும் நம்மை இணைத்து பார்க்க வேண்டும். அந்த சம்பவம் நடந்த இடம், அதன் பின்னனி என்ன என்று கவனிக்கலாம். ஒவ்வொரு முறை வேதத்தை வாசிக்கும்பொழுதும் இப்பொழுதுதான் முதலாவது முறை வாசிப்பதுபோல் வாசிக்க வேண்டும். ஏற்கனவே படித்ததுதானே என்ற எண்ணத்தோடு படித்தால்தான், புதிதாக எதையும் கற்றுக்கொள்ள முடியாது. அதில் வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிற காரியம் என்ன? மீண்டும் மீண்டும் சொல்லப்பட்ட காரியம் என்ன? தொடர்புபடுத்தி கூறப்பட்ட காரியங்கள் என்ன? நம்முடைய வாழ்விற்கு எது சாத்தியமாயிருக்கிறது? நம்முடைய வாழ்வில் எது விரும்பப்படக் கூடியதாய் இருக்கிறது? எது வெறுக்கப்படக் கூடியதாய் இருக்கிறது? என்றெல்லாம் வசனத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

முதலாவது ஆழமாக சிந்தித்துக்கொண்டு, கூர்ந்து கவனிக்கலாம். ஏதோ ஒன்றைக் கண்டுபிடிக்கிறவர் போல கூர்ந்து கவனிக்க வேண்டும்.

இரண்டாவது, வேதத்தை வாசிக்கும்போது, தொடர்ச்சியாக வாசியுங்கள். சிறிய புத்தகமாயிருந்தால் முழு புத்தகத்தையும் வாசியுங்கள். ஒரு சம்பவத்தையாவது, ஆரம்பத்திலிருந்து முடிவுவரை தொடர்ச்சியாக வாசிக்க வேண்டும்.

பொறுமையாக கூர்ந்து கவனிக்க வேண்டும். ஒவ்வொரு புத்தகத்திற்கும், ஒவ்வொரு அதிகாரத்திற்கும் கூட அதிகமான நேரங்கள் கொடுத்து கூர்ந்து கவனித்து படிக்கலாம்.

ஜெபத்தோடு வாசியுங்கள். கர்த்தாவே புதிய காரியத்தை சொல்லி தாரும் என்று சொல்லி, படியுங்கள்.

கற்பனையோடு படியுங்கள். இந்த வசனத்தை நீங்கள் எப்படி எடுத்துக் கொள்வீர்கள். நீங்கள் அந்த இடத்திலிருந்தால், என்ன பேசுவோம் என்று சொல்லிப் பாருங்கள்.

அந்த வசனங்களை உங்கள் வாழ்க்கையில் பிரதிபலிக்க முயற்சிக்க வேண்டும்.

வசனங்களை உள்ளத்தில் மனனம் செய்து படிக்கலாம்.

வேதாகமம் கூறுகிற அர்த்தத்தோடு அதை படிக்க வேண்டும். அதை தனிப்பட்ட கருத்தாகவோ, தனிப்பட்ட பகுதியாகவோ பார்க்கக் கூடாது. வேதாகமத்தின் வெளிச்சத்தில் பார்க்க வேண்டும்.

**<u>கேள்விகள்:-</u>**

1. உருவக அர்த்தத்தை அறிந்து கொள்வதற்காக நாம் செய்யக்கூடாதவைகளில் உலகளாவிய அர்த்தம் கொள்ளக்கூடாது என்பதனைக் குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
2. உருவக அர்த்தத்தை அறிந்து கொள்வதற்காக நாம் செய்யக்கூடாதவைகளில் யூகத்தினால் அர்த்தம் கற்பிக்ககூடாது என்பதனைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக.
3. உருவக அர்த்தத்தை அறிந்துகொள்வதற்காக நாம் செய்யக்கூடாதவைகளில் உருவகமாக்கும் ஆசையில் கற்பிக்கக்கூடாது என்பதனைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
4. ஆவிக்குரிய உலகத்திலே இன்று வார்த்தைகள் என்ன செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதனைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
5. வரலாற்று இலக்கண முறை குறித்து கூறுக?
6. வேதத்தை ஆழமாக படிப்பதற்கான மூன்று விதமான முறைகளை கூறுக? (பெயர்கள் மட்டும்)
7. வேதத்தை ஆழமாக படிப்பதற்கான மூன்று விதமான முறைகளில் கூர்ந்து கவனிக்க வேண்டும் (Observation) என்பதனைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?

# <u>வேதாகம விளக்கவியல்</u>

## பாடம் - 6

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பாடத்திலும், நாம் தொடர்ந்து வேதத்தை ஆழமாக படிக்கும் முறையின் இரண்டாம் படியினைப் பற்றி கற்றுக்கொள்ளப்போகிறோம்.

2. **விளக்கப்படுத்த வேண்டும்:** வேதத்தில் ஒரு பகுதி, எந்த அளவிற்கு அதிலே சொல்லப்பட்ட வரலாற்றிற்கு, கலாச்சாரத்திற்கு, இலக்கிய நடையிலே பொருந்துகிறது என்று சொல்லி நாம் கவனிக்க வேண்டியது அவசியம். மட்டுமல்ல அந்தப் பகுதியில் இருப்பவர்கள், குறிப்பாக, அந்த வேத பகுதியை எழுதியவருக்கும் தேவனுக்கும் உள்ள உறவு, அந்த வேத பகுதியை எழுதியவருக்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பு போன்றவற்றை நாம் பார்க்க ஆரம்பிக்கின்றோம். அந்த குறிப்பிட்ட பகுதியில் இருக்கிறவர்கள் எவ்விதமாக செயல்படுகிறார்கள் என்றும் உன்னிப்பாக கவனிக்கின்றோம். இதற்கு பின்பதாக நாம் வார்த்தைகளை ஒப்பிட்டுப் பார்க்கிறோம். அதின் மையக்கருத்துகளை மற்ற வேதபகுதியிலுள்ள வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறோம். அதன் வாக்கியநடை, அழகு போன்றவற்றை மற்ற வேத பகுதியோடு ஒப்பிட்டுப் பார்க்க ஆரம்பிக்கின்றோம். இதைத் தொடர்ந்து அந்த குறிப்பிட்ட வேதபகுதி அல்லது ஒரு புத்தகத்தின் கலாச்சாரப் பின்னனியைப் பற்றி சிந்திக்க ஆரம்பிக்கின்றோம். இவ்விதமாய் சிந்திக்க ஆரம்பிக்கும்போது, அந்த காலக்கட்டத்திலுள்ள கலாச்சாரத்தை உணர்ந்து படிக்கும்போது, நாம் ஒரு தெளிவான விளக்கத்தை அந்த குறிப்பிட்ட வேதபகுதிக்கு கொடுக்க முடியும் என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்விதமாக வேதத்தை கூர்ந்து கவனித்து பின்பதாக வேதத்தை விளக்கப்படுத்த ஆரம்பிக்கின்றோம்.

3. **நடைமுறைப்படுத்த வேண்டும்:** வேதாகமம் என்ன நோக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, பரிசுத்த ஆவியானவர் மனிதனைக் கொண்டு எழுதினாரே, அதற்கு சரியான அர்த்தம் என்ன? அந்த சரியான அர்த்தம் எவ்வாறு என் வாழ்விற்கு பொருந்துகிறது? என்று பார்க்கிற இடம்தான் நடைமுறை படுத்துகிற பகுதி. ஒரு குறிப்பிட்ட பகுதியை நம் வாழ்வில் நடைமுறைப்படுத்துமுன்னர் ஒவ்வொருவரும் அந்த வேத பகுதியை நன்கு கூர்ந்து கவனித்து அதை விளக்கப்படுத்தி பின்பதாக நம் வாழ்வோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். வாழ்வின் சூழ்நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அதன் அர்த்தத்தின் மீது நம்முடைய தியானத்தை வைக்க வேண்டும். பிறகு நடைமுறையில் செயல்படுத்திக் காண்பிக்க வேண்டும்.

**ஒன்பது கேள்விகளோடு நாம் இதை சிந்திக்க முடியும்:**

1. நான் பின்பற்ற வேண்டிய ஏதாவது மாதிரி இதில் சொல்லப்பட்டிருக்கிறதா?
2. நான் விட வேண்டிய பாவம் இதிலே சொல்லப்பட்டிருக்கிறதா?
3. நான் சுதந்தரித்துக்கொள்ள வேண்டிய வாக்குத்தத்தம் இதில் இருக்கிறதா?

4. நான் சொல்லவேண்டிய ஜெபக் குறிப்பு இதில் இருக்கிறதா?
5. நான் கீழ்படிய வேண்டிய கட்டளை இதிலே சொல்லப்பட்டிருக்கிறதா?
6. நிபந்தனை ஏதும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா?
7. நான் மனப்பாடம் செய்யவேண்டிய வார்த்தைகள் இருக்கிறதா?
8. என்னுடைய தவறு ஏதும் இதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதா?
9. நான் சந்திக்க வேண்டிய சவால் ஏதும் இதிலே சொல்லப்பட்டிருக்கிறதா?

இவ்விதமாக நாம் வேதத்தின் அர்த்தத்தைப் பார்த்து அதை நம் வாழ்விற்குக் கொண்டு வருகிற இடத்தைப் பற்றி இந்த முறை சொல்லுகிறது.

**வேதத்தை விளக்கப்படுத்தும்போது நாம் செய்யவேண்டிய சில முக்கியமான காரியங்கள்:**

நீங்கள் தேவனுடைய வார்த்தையை சரியாக புரிந்து கொள்ள விரும்புகிறீர்களா? அதை சரியாக விளக்கப்படுத்தி மற்றவர்களுக்கு புரிய வைக்க விரும்புகிறீர்களா? அப்படியானால் கீழ்கண்ட காரியங்களை கவனித்து உங்கள் வாழ்க்கையில் வேதத்தை வாசிக்கும்போது பயன்படுத்த வேண்டும். மற்றவர்களுக்கு விளக்கப்படுத்தும்போதும் பயன்படுத்த வேண்டியது அவசியம்.

1. **வேதமே வேதத்தை விளக்கும்படி விட்டுவிட வேண்டும்:**

வேத வசனத்தைக் கொண்டு வேதத்தை விளக்கம் கொள்ள வேண்டும். வேத வசனத்தில் சில பகுதிகள் புரிவதற்கு சற்று கடினமானதுதான். 2 பேதுரு 3:16ல் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின நிருபங்களைக் குறித்து பேதுரு இவ்விதமாய் கூறுகிறார் “எல்லா நிருபங்களிலும் இவைகளைக் குறித்துப்பேசியிருக்கிறான். அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது. கல்லாதவர்களும், உறுதியில்லாதவர்களும் மற்ற வேத வாக்கியங்களைப் புரட்டுகிறது போல, தங்களுக்குக் கேடு வரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள் என்று கூறுகிறார். ஒரு வேத பகுதியை புரிந்து கொள்வதற்கு மற்ற வேதபகுதியை பார்க்கும்பொழுது புரிந்து கொள்ள முடியும். வேதத்திற்கு ஜோடு வசனம் இல்லாமல் இருக்காது என்று வேதமே சொல்கிறது. ஒரு வசனத்திற்கு இணையான வசனம் வேதத்தில் இருக்கும். அதை அர்த்தம்பட விளக்கமாக கூறுகிற வேதபகுதி இருக்கும் என்பதுதான் வேதவல்லுநர்களின் கருத்து. ஆகவே நாம் வேதபகுதியைப் பார்க்கும்பொழுது, ஒரு பகுதி புரியாவிட்டால் அதன் இன்னொரு பகுதியை கண்டுபிடித்து அதை வைத்து விளக்க வேண்டும்.

**உதாரணமாக,** யோவான் 10:15 “நான் என்னுடையவைகளை அறிந்தும், என்னுடையவைகளால் அறியப்பட்டும் இருக்கிறேன். ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்” என்று கூறுகின்றார். இந்தப் பகுதியைப் பார்க்கும்பொழுது நமக்குத்தோன்றும், அவர் தன்னுடைய ஆடுகளுக்காக மாத்திரமே மரிக்க வந்தார். அவர் குறிப்பிட்டவர்களுக்காக அதாவது கிறிஸ்தவர்களுக்காக மட்டுமே மரிக்க வந்திருக்கிறார் என்று சிலர் நினைக்கலாம். அப்படிப்பட்ட போதனைகளை வரையறுக்கப்பட்ட பரிசுத்தம் என்று சொல்கின்றனர். ஆனால் அப்படி அல்ல. தன் ஆடுகளுக்காக மட்டும் அவர் மரிக்க

வரவில்லை. இதை விளக்கப்படுத்துவதற்கு *1 யோவான் 2:2* "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல. சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாய் இருக்கிறார்" என்று வாசிக்கிறோம். இந்த இடத்தில் நமக்கு ஒரு கேள்வி வரலாம். எல்லாருக்காகவும் பலியானாரென்றால், ஏன் எல்லாரும் இரட்சிக்கப்படவில்லை? இந்த கேள்விக்கு இன்னொரு வேதபகுதியை நாம் பாக்க வேண்டும். *1 யோவான் 5:11, 12* "தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவர் குமாரனில் இருக்கிறதென்பதே அந்த சாட்சியாகும். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன். குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்". யோவான் *1:12* "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய், அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்" என்று வாசிக்கிறோம். ஆகவே அவரை ஏற்றுக்கொணடால்தான் இரட்சிக்கப்படுவோம். அவருடைய பிள்ளைகளாவோம். இந்த வசனத்தை புரிந்து கொள்வதற்கு ஒரு குறிப்பிட்ட வேத வசனத்தை மட்டும் நாம் பார்க்காமல், முழு வேதாகமத்தையும் பார்க்கிறோம். மற்ற வசனங்களையும் இணைத்துப் பார்க்கிறோம். ஜோடு வசனத்தை கண்டுபிடித்து இணைத்துப் பார்த்தோம். ஆகவே வேதத்தை வியாக்கியானம் செய்யும் முறை இப்படியாக இருக்க வேண்டும். ஒரு வசனத்தை இன்னொரு வசனம் விளக்கப்படுத்தும், அதிக விளக்கத்தைக் கொடுக்கும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

2. **சந்தர்ப்ப, சூழலைப் பார்க்க வேண்டும்:**

ஒரு வேத வசனத்தை பார்க்கும்போது, அதற்கு முன்னும் பின்னும் உள்ள வசனங்களைப் பார்க்க வேண்டும். அது எந்த சந்தர்ப்பத்தில், எந்த சூழலில் காணப்படுகிறது. அதனுடைய முழு பகுதியும் எந்த சூழலை மையப்படுத்தி சொல்லிக்கொண்டிருக்கிறது, அதற்கு மத்தியில் வருகிற வசனம் அதற்கு ஏற்றதாகத்தானே இருக்கும் என்ற அர்த்தத்ததிலே புரிந்து கொண்டு நாம் அதற்கு விளக்கம் கொடுக்க வேண்டியது அவசியம். இன்றைக்கு அநேகர் இதை செய்யாததால்தான் நிறைய தவறுகள் நடக்கின்றது.

உதாரணமாக, எனக்கும் என் சகோரனுக்கும் இடையே ஒரு சில கருத்து வேறுபாடுகள் இருக்கிறதென்று வைத்துக்கொள்ளுங்கள். அப்படியிருக்கும்போது, யாராவது ஒரு நபர் என் சகோதரனிடமிருந்து வந்து என்னிடத்தில், உங்கள் தம்பி வேலைக்கு செல்வதில்லை என்றால், என் சகோதரன் வேலைக்கு செல்ல வேண்டும், இல்லாவிட்டால் அடி கொடுத்தாவது அனுப்ப வேண்டும் என்று சொல்கிறேன். இதை நான் எந்த சூழலில் சொன்னேன் என்பதை கவனிக்க வேண்டும். நான் சொன்ன வார்த்தையை மட்டும் வைத்துக்கொண்டு, உங்கள் அண்ணன் உன்னை அடிப்பதற்காக சுற்றித் திரிகிறார் என்று என்னிடம் கேட்ட நபர் என் தம்பியிடம் சொன்னால் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். முழு அர்த்தமும் அடிபட்டு பகையை உண்டாக்குவதற்கு வாய்ப்பிருக்கிறது. நான் சொன்ன பதிலை, அந்த சந்தர்ப்பத்தோடு

இணைத்துப் பார்க்கும்போதுதான் சரியான அர்த்தமும் வரும். தேவையற்ற பிரச்சினையும் வராமல் இருக்கும்.

ஒவ்வொரு வார்த்தையும் வேதவசனத்தின் ஒரு பகுதி. அந்த வேத வசனம் அந்த குறிப்பிட்ட பகுதியினுடைய ஒரு பகுதியாயிருக்கிறது. அந்த குறிப்பிட்ட வேதபகுதி வேதாகமத்திலுள்ள குறிப்பிட்ட புத்தகத்தின் ஒரு பகுதியாயிருக்கிறது. அந்த குறிப்பிட்ட வேதாகம புத்தகம், முழு வேதாகமத்தின் ஒரு பகுதியாயிருக்கிறது என்ற தொடர்ச்சியை நீங்கள் கவனிக்க வேண்டும். முழு வேதாகமத்தின் ஒரு பகுதிதான் வேதாதகமத்திலுள்ள ஒரு புத்தகம். ஒரு புத்தகத்தின் ஒரு பகுதியைத்தான் நாம் படித்துக்கொண்டிருக்கிறோம். அந்த பகுதியின் ஒரு வசனத்தில் இருக்கின்ற ஒரு வார்த்தையைதான் நாம் படித்துக் கொண்டிருக்கிறோம். இப்படி தொடர்புபடுத்தி பார்த்தால், முழு வேதாகமத்தையும் பார்க்க வேண்டும் என்ற கருத்தை பெறுகிறோம். ஆகவே முழு வேதாகமத்தையும் பார்க்க வேண்டும். அதற்குரிய பின்னனியையும் பார்க்க வேண்டும். அந்த பகுதியின் சந்தர்ப்ப சூழலைப் பார்க்க வேண்டும். வசனத்தின் முன்னும் பின்னும் உள்ள பகுதி என்ன சொல்கிறதென்றும் பார்க்க வேண்டும். இப்படி எல்லாவற்றையும் பார்த்து நாம் படிக்கும்போது, வேதத்தை மிக மிக சரியாக புரிந்து கொள்ள முடியும்.

உதாரணமாக, கொலோசெயர் *3:15* "தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது. இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள். நன்றியறிதலுள்ளவர்களுமாய் இருங்கள்" என்று வாசிக்கிறோம். இந்த வசனத்தைப் பொதுவாக தேவ சித்தத்தை அறிவது எப்படியென்று சொல்லி, இருதயத்தில் சமாதானம் இருந்ததென்றால், அதில் தேவ சித்தம் இருக்கிறதென்று அர்த்தம். ஒருவேளை கலக்கமாயிருக்குமென்றால், அது தேவ சித்தம் அல்ல என்று விளக்கப்படுத்துவார்கள். கொஞ்சம் இந்தப் பகுதியை நாம் உற்று கவனித்தால், அதைப்பற்றி அவர் சொல்லவில்லை. அதற்கு முன்னே உள்ள பகுதியைப் பார்க்க வேண்டும். அதில் குறிப்பாக கொலோசெயர் *3:12 – 15* வரையுள்ள வசனங்களை பார்க்க வேண்டும். "ஆகையால் நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும், பிரியருமாய் உருக்கமான இரக்கத்தையும் தயவையும் மனத்தாழ்மையையும் சாந்தத்தையும் நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு ஒருவரையொருவர் தாங்கி ஒருவர்பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவையெல்லாவற்றிலும் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்" இதை சொல்லிவிட்டு பவுல், தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது என்கிறார். தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆண்டுகொண்டு இருந்தால்தான் நீங்கள் மற்றவர்களோடும் சமாதானமாய் இருக்க முடியும் என்ற அர்த்தத்தில் பவுல் எழுதுகிறார். இந்த அர்த்தத்தில் சொல்லப்பட்ட வசனத்தை, தனியாய் நாம் ஒரு அர்த்தத்தை சொல்கிவோமானால், அது தவறு. ஆகவே இருதயத்தில் சமாதானமிருந்தால், அது தேவ சித்தம், இல்லையென்றால் அது தேவ சித்தமல்ல என்பது ஒரு தவறான போதனையாக மாறிவிடுகிறது.

**உங்கள் சிந்தனைக்கு ஒரு கேள்வி:**

*யாத்திராகமம் 3 முதல் 9 வரையுள்ள அதிகாரத்தில் மோசேயின் சூழ்நிலையில், உங்களை வைத்துப் பாருங்கள். என் ஜனங்களை அனுப்பிவிடு என்று பார்வோனிடத்தில் போய் சொல்லு என்று கர்த்தர் அனுப்பும்போது, மோசேக்கு இருதயத்திலே சமாதானமாயிருந்ததா? பயமாக இருந்ததா?*

யோசித்துப் பாருங்கள். மோசே பயத்தோடு இருந்தான், வேறே யாரையாவது அனுப்புங்கள் என்று சொல்கிற இடத்தில் இருந்தான். அவன் இருதயத்தில் சமாதானம் ஆளவில்லை. அவனுக்கு பயமும், கலக்கமும் இருந்தது. அப்படியானால், மோசே சென்று பார்வோனிடம் பேசுவது தேவசித்தம் இல்லையா? தேவதிட்டம்தான். யோசுவா வாழ்க்கையை சிந்தித்துப் பார்த்தால், தேவன் அவனைப் பார்த்து தெளிவாக சொல்ல வேண்டி இருந்தது. திகையாதே, கலங்காதே, நான் உன்னோடு கூட இருப்பேன். மோசேயோடு இருந்தது போல உன்னோடும் இருப்பேன் என்று சொல்லக் காரணம், யோசுவாவிற்கு பயமும், திகிலும் இருந்தது. அதற்காக மோசேக்கு அடுத்ததாக யோசுவா ஜனங்களை நடத்த வேண்டும் என்பது தேவ சித்தம் இல்லையா?

இன்றைய காலகட்டத்தில் அநேகர் ஒரு குறிப்பிட்ட பகுதியை எடுத்து விளக்குவதால்தான் தவறான உபதேசங்கள் வருகிறது. மாற்கு 4:35ல் "அக்கரைக்கு போவோம் வாருங்கள்" என்று சொல்லி இயேசு சொல்கிறதை பார்க்கிறோம். தேவ சித்தப்படிதான் அவர்கள் கலிலேயா கடலுக்குப் போகிறார்கள். மாற்கு 4:37ம் வசனத்தில் "பலத்த சுழல் காற்று உண்டாகி, படகு நிரம்பத்தக்கதாக அலைகள் அதின் மேல் மோதிற்று" என்று பார்க்கிறோம். அதற்கு பிறகு, இயேசு கேட்கிறார், ஏன் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமல் போயிற்று? தேவ சித்தத்தின் படி தான் அவர்கள் பயணம் புறப்பட்டார்கள். ஏன் பயப்பட்டார்கள்? ஒரு வசனத்தை வைத்துக்கொண்டு வேதாகமத்தின் முழு அர்த்தத்தையும் புரட்டி விடக்கூடாது. பயமும், திகிலும் நம் இருதயத்தில் இருப்பது இயற்கை. அதற்காக தேவ சித்தம் இல்லை என்று சொல்லக்கூடாது. சிலர் சொல்வார்கள், தேவ சித்தம் என்றால், எல்லாம் சரியாக நடக்கும். தேவ சித்தம் இல்லாவிட்டால் அதில் குழப்பம், தடைகள் வந்துவிடும் சாத்தான் தடை பண்ணி விடுவான் என்பார்கள். நாம் வேத வசனத்தை அப்படியே நம்ப வேண்டும். பிசாசுக்கே அதிக வலிமை உண்டு என்று சொல்கிற இடத்தில் இன்று கிறிஸ்தவம் இருக்கிறது. ஆகவே, வேத வசனத்தின் முழு பகுதிக்கும் உள்ள சந்தர்ப்பத்தை பார்க்க வேண்டும்.

3. **நம் கருத்து ஆழமானதாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் வேதத்தை வியாக்கியானம் பண்ணக் கூடாது:**

நாம் வேத வசனத்தை விளக்கம் கொள்ளதான் விரும்புகிறோமே ஒழிய, அதிலே எப்படியாவது ஆழமானக் கருத்தை கண்டுபிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நாம் வியாக்கியானம் பண்ணுவது அநேக தவறான விளக்கத்திற்கு கொண்டுபோய் விடுகிறதை நாம் பார்க்க முடியும். புதிய கருத்தை வித்தியாசமாய் கூறும்போது, கேட்கிறவர்களுக்கு

நன்றாய் இருக்கலாம். ஆனால் தவறாக விளக்கம் கொடுக்கிறோம். வேதத்தை வியாக்கியானம் பண்ணுவதை குறிக்கோள் அறிந்து செய்ய வேண்டும். யாருக்கும் புரியாமல் இருக்கவோ, அதை மறைக்கவோ கர்த்தர் நமக்கு தரவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதை தெரியப்படுத்ததான் கர்த்தர் விரும்புகிறார். கர்த்தர் நமக்கு எளிமையாக புரிந்து கொள்ளும் விதத்தில் தான் வேதத்தைத் தந்திருக்கிறார். வேதம் ஒரு மந்திரப் புத்தகம் அல்ல. தானாகவே அதன் அர்த்தம் வெளிப்படும் விதத்தில் பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட புத்தகம். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள் என்று சொல்கிற தேவன் நமக்கு தெளிவாகத்தானே வேதத்தை விளக்குவார். குழப்பமான, தெளிவற்ற நிலையில் வேதத்தைக் கொடுக்க தேவன் விரும்பமாட்டார். எல்லாரும் புரிந்து கொண்டு அதன்படி நடக்க வேண்டும் என்று தான் பரிசுத்த ஆவியானவர் தேவ மனிதர்களைக் கொண்டு வெளிப்படுத்திக் காண்பித்திருக்கிறார். வாசிக்கும்போதே புரியக் கூடிய விதத்தில்தான் பரிசுத்த ஆவியானவர் அப்படிப்பட்ட வார்த்தைகளை பயன்படுத்தியிருக்கிறார். வேதத்தை ஆராய்ந்து படிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் அதனை விளங்கப்பண்ணுகிறார். அந்த வசனத்தினால் விசுவாசத்தைத் தூண்ட விரும்புகிறார். விசுவாசத்தினாலே இரட்சிக்கவும் விரும்புகிறார். ஆகவே வேதத்தில் சாதாரண அர்த்தத்தைத் தாண்டி வித்தியாசம், ஆழம் என்று நாம் பார்க்கக் கூடாது. பிறகு நேரடியாக கர்த்தர் கொடுத்த அர்த்தத்தை விட்டு விடுவோம்.

சில வார்த்தைகளுக்கு சொல் அர்த்தம் பார்க்க வேண்டும். சில வார்த்தைகளுக்கு உருவக அர்த்தம் இருக்கிறது. ஆகவே உருவக அர்த்தம் கொடுக்க வேண்டிய இடத்தில் உருவக அர்த்தத்தைப் பார்க்க வேண்டும். சாதாரணமாக பார்க்க வேண்டிய வார்த்தைகளுக்கு சொல் அர்த்தம் பார்க்க வேண்டும்.

ஒரு நல்ல வேதாகம ஆசிரியர், வேதத்தை ஆழம், விநோதம் என்ற அர்த்தத்தில் சொல்லித் தர மாட்டார். சரியான வேதாகம ஆசிரியராய் இல்லாதவர்கள், தங்கள் இஷ்டம் போல விளக்கம் கொடுத்து ஆழம், வித்தியாசம் என்ற அர்த்தத்தில் கொடுத்து மக்களைக் குழப்புகிறார்கள். சிலர் அவ்விதமாய் கேட்பதற்கு விரும்புகிறார்கள். எந்த ஊழியரும் கொடுக்காத, புது பிரசங்கத்தை நான் கொடுக்கப் போகிறேன் என்ற ஆவலில் செய்கிறார்கள். இவ்விதமாய் செய்கிறவர்கள், பரிசுத்த ஆவியானவர் தீர்க்கதரிசிகளைக் கொண்டு, வேதாகம ஆசிரியர்களைக் கொண்டு என்ன நோக்கத்தோடு கொடுத்தாரோ, அந்த நோக்கத்தை தவற விட்டு விடுவார்கள். வித்தியாசமாக கொடுக்கப்படும் விளக்கங்கள் எல்லாமே தவறானதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சரியான விளக்கத்தோடு வேதாகமத்தைப் படித்து, சரியாய் மற்றவர்களுக்கு விளக்கப்படுத்துவதே ஆசீர்வாதம்.

ஒருவர் முதல்முறையாக ஒரு சத்தியத்தைக் கேட்பார்கள். அது அவர்களுக்கு புதியதாகத்தான் இருக்கும். ஒவ்வொன்றையும் வேதாகம விளக்கவியலின் அடிப்படையில் விளக்கப்படுத்தும்போது சில காரியங்கள் புதிதாகத் தோன்றலாம். அது சரிதான். அதே வேளையில், நான் வித்தியாசமாகவும், ஆழமாகவுமே பேசவேண்டும் என்பதற்காக

வேதத்தை வியாக்கியானம் பண்ணினால், அநேக இடங்களில் தவறு செய்ய வாய்ப்பிருக்கிறது.

வேதாகம விளக்கவியலை படிக்கிற நாம் தெரிந்துகொள்ள வேண்டியது, வேதாகமம் சொல்கிற அர்த்தத்தை நாம் புரிந்து கொண்டு, அதை நாம் பின்பற்றி, அந்த வேதாகம பகுதியை எழுதிய ஆவியானவர், வேதாகம ஆசிரியரைக் கொண்டு என்ன நோக்கத்தோடு கூறினாரோ, அதே அர்த்தத்தை சரியாக புரிந்து, மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். குறிப்பாக, வேதாகம கல்லூரியில் படிக்க விரும்பாதவர்களே தங்கள் இஷ்டம்போல விளக்கப்படுத்த விரும்புகிறார்கள்.

## <u>கேள்விகள்:-</u>

1. வேதத்தை ஆழமாக படிப்பதற்கான மூன்று விதமான முறைகளில் விளக்கப்படுத்த வேண்டியதைக் குறித்துக் கூறுக?
2. வேதத்தை ஆழமாக படிப்பதற்கான மூன்றுவிதமான முறைகளில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதனைக்குறித்து சற்று விளக்கமாக கூறுக?
3. வேதத்தின் அர்த்தத்தை புரிந்துகொள்வதற்கு நாம் கேட்கவேண்டிய ஒன்பது கேள்விகளை வரிசைப்படுத்திக் கூறுக?
4. வேதத்தை விளக்கப்படுத்தும்போது, வேதமே வேதத்தை விளக்கும்படி விட்டுவிட வேண்டியதைக் குறித்து விளக்கமாக கூறுக?
5. வேதத்தை விளக்கப்படுத்தும்போது சந்தர்ப்ப சூழலைப்பார்க்க வேண்டியதின் அவசியத்தை உதாரணத்துடன் விளக்கமாக கூறுக?
6. வேதத்தை விளக்கப்படுத்தும்போது, நம் கருத்து ஆழமானதாக இருக்கவேண்டும் என்ற நோக்கில் விளக்கப்படுத்தக்கூடாது என்பதனைக் குறித்து விளக்கமாக கூறுக?

# <u>வேதாகம விளக்கவியல்</u>

## பாடம் - 7

***4. வேதத்தை வியாக்கியானம் பண்ணும்போது நேரடி அர்த்தத்தை அப்படியே எடுத்துப் பழக வேண்டும்:***

உருவக அர்த்தமாய் சொல்லப்பட்டாலொழிய, அதை உருவக அர்த்தத்திற்கு கொண்டுபோகாமல், நேரடியாக அந்த வாக்கியம் என்ன சொல்கிறதோ, அதை அப்படியே விளக்கப்படுத்திப் பார்க்க வேண்டும். அதுதான் நியதி. நம் சபை வரலாற்றைப் பார்க்கும்பொழுது, பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அநேகர் விசுவாசிக்கிற ஒரு காரியம், வேதம் ஒரு மறைபொருளாக, இரகசியமானதாக, ஆச்சரியமான விளக்கங்களை உள்ளடக்கியதாக இருக்கிற ஒரு புத்தகம் என்று நம்பப்பட்டு வருகிறது. நாமும் அதை விசுவாசிக்கிறோம். ஆனால் சொல் அர்த்தமாய் சொல்லப்பட்டதையும், ஆவிக்குரிய அர்த்தமாய் எடுக்கும்பொழுது எத்தனை தவறுகள் வருகிறது. உருவக அர்த்தத்தில் தேவன் சொன்ன வார்த்தைகள் இருக்கின்றது. ஆனால் நேரடி அர்த்தத்தில் தேவன் சொன்ன வார்த்தைகளும் இருக்கின்றது. வேத வரலாற்றைப் பார்க்கும்பொழுது, இரகசிய அர்த்தம் இருக்கிறதாக பார்க்கிறதே வழக்கமாகிப் போய்விட்டது. குறிப்பாக, கிளமெந்த், ஆரிஜன், அகஸ்டின், ஜெரோம் போன்ற நம்முடைய முற்பிதாக்கள் அவ்விதமாகவே பார்க்கப் பழகியிருந்தார்கள். இந்த சபை முற்பிதாக்கள் ஒரே வேத வசனத்திற்கு இரண்டு முதல் ஐந்து வரை அர்த்தங்கள் இருப்பதாக நம்பினார்கள். ஆகவே மத்திய காலக் கட்டத்தில் ஒவ்வொரு வேத வசனமும் பல அர்த்தமுடையதாகவே பார்க்கப்பட்டது. இன்றையக் காலக்கட்டத்திலும் இது அதிகமாகவே பரவி வருகிறது. அநேகர் தங்கள் விருப்பம்போல, விளக்கம் கொடுக்கிற காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வசனத்தில் சொல்லப்படாத சொல் அர்த்தம் மற்றும் உருவக அர்த்தம் கூட சொல்லாத காரியத்தை சொல்லி வருகிறார்கள். சபை முற்பிதாக்கள் கிரேக்க தத்துவ ஞானிகளால், இவிவிதமான பாதிப்புக்குள்ளானார்கள் என்று வரலாறு சொல்கிறது. கிரேக்க தத்துவ ஞானிகள்தான் வார்த்தைகளில் இவ்வித அர்த்தம் இருக்கிறது, மறைபொருள் இருக்கின்றது என்று சொல்லி ஒரு வார்த்தையை எடுத்துக் கொண்டு, பல அர்த்தத்தை கற்பித்து, கற்பித்து செய்த காரியங்கள் நம் சபையின் முற்பிதாக்களையும் பாதித்திருக்கிறது என்று இறையியல் வல்லுநர்கள் கருதி பதிவிடுகிறார்கள். இவ்விதமாக வேதத்தை வியாக்கியானம் பண்ணுகிற இந்தக் கண்ணோட்டம் உருவகமாக்கும் முறை என்று அழைக்கப்படுகிறது. இந்த உருவகமாக்கும் முறையில் அவர்கள் எவ்விதமாய் போதிக்கிறார்கள் என்றால், இந்த வேதப் பகுதி இந்தக் காரியத்தை சொல்கிறது. ஆனால் இதன் முழு அர்த்தமும் இப்படிப்பட்ட ஒரு சம்பவத்தை உருவகமாக, ஆவிக்குரிய அர்த்தத்தில் கூறுகிறதென்று சொல்வார்கள்.

**உதாரணமாக**, ஆதியாகமம் 29ம் அதிகாரத்தில் யாக்கோபின் மனைவியாகிய லேயாள், யூதர்களைக் குறிக்கின்றது. ராகேல் சபையைக் குறிக்கின்றது. யாக்கோபு இயேசுவுக்கு உருவகமாக சொல்லப்படுகிறார். யாக்கோபு எப்படி இருவருக்கும் சேவை செய்தாரோ, அதேப்போல இயேசுவும் சபைக்கும், யூதருக்கும் சேவை செய்தார் என்று விளக்கப்படுத்துகிறார்கள். இது எப்படியிருக்கிறதென்று கவனித்துப் பாருங்கள்.

யாத்திராகமம் 17ம் அதிகாரத்தில், மோசேயின் கைகள் அசந்து போகும்போது ஆரோனும், ஊரும் ஒரு கல்லைக் கொண்டுவந்து அவனுக்குக் கீழே வைத்தார்கள். ஆரோனும், ஊரும் ஒருவன் ஒரு பக்கத்திலும் ஒருவன் மறு பக்கத்திலும் இருந்து அவன் கைகளைத் தாங்கினார்கள் என்று பார்க்கிறோம். வேதாகமத்தை வியாக்கியானம் செய்கிறவர்கள் இதை எப்படி சொல்கிறார்கள் என்றால், இது பழைய ஏற்பாட்டு ஓவியம், இயேசு கிறிஸ்துவானவர் சிலுவையில் தொங்கியதைப் பற்றிய ஒரு ஓவியம் என்று கூறுகிறார்கள்.

அதுபோல, யோர்தான் நதியிலிருந்து எடுக்கப்பட்ட 12 கற்கள், 12 அப்போஸ்தலர்களைக் குறிக்கிறது என்று சொல்கிறவர்கள் உண்டு.

ரூத் புத்தகத்தில் வயல்வெளி வேதாகமத்தைக் குறிக்கின்றது. ரூத் என்பவள் மாணவர்களைக் குறிக்கிறாள். அதில் அறுவடை செய்தவர்கள் ஆசிரியர்கள் என்று உருவக அர்த்தமாக சிலர் சொல்கிறார்கள்.

செங்கடல் என்பது இயேசுவின் இரத்தத்திற்கு அடையாளமாயிருக்கிறதென்று கூறுகிறார்கள்.

யோசுவா 10ம் அதிகாரத்தில் கிபியோனை தாக்கிய ஐந்து அரசர்கள், ஐந்து விதமான உணர்வுகளைக் குறிக்கிறார்கள். அது பார்த்தல், கேட்டல், சுவைத்தல், தொடுதல், நுகர்தல் போன்ற உணர்வுகளை குறிக்கிறதாக சொல்கிறார்கள்.

இப்படி நேரடியாக கூறிய காரியங்களைக் கூட, உருவக அர்த்தம் என்று சொல்லி வேதத்தை போதிக்கிறார்கள்.

இவ்விதமாக உருவகமாக்கும் முறை ஆபத்தானது. எப்படியென்றால், இவ்விதமாக உருவகமாக்கி சொல்லிக்கொண்டே போகும்பொழுது, அதற்கு எந்த அடிப்படையும் இல்லை, ஆதாரமும் இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஏதோ ஒரு காரணத்தை ஏற்றிப் பேசுவதால், அதில் ஒரு நோக்கமும் இல்லை. தங்களை வல்லமையான ஊழியர்கள் என்று சொல்ல விரும்பி இந்தக் காரியத்தை செய்கிறார்கள். இவ்விதமாய் சொல்லப்பட்ட விளக்கங்களுக்கு நாம் ஒத்த வாக்கியத்தைப் பார்க்க முடியாது. அந்த பிரசங்கியார் என்ன சொல்ல விரும்புகிறாரோ, எதை வெறுக்கிறாரோ அதை குறிப்பிட்ட நிகழ்ச்சியின் மீது ஏற்றிப் பேசுகிறதுதான் இந்த உருவகமாக்கும் முறையின் முக்கியமான நோக்கமாக இருக்கின்றது. இதே வேத பகுதியை

இன்னொருத்தர் எடுத்து விளக்கும்போது அவர் இன்னொரு காரியத்தை சொல்ல வாய்ப்பிருக்கிறது. தாங்கள் விரும்பினதெல்லாம் ஏற்றிப் பேசுவதால் கள்ள உபதேசத்திற்கு கொண்டு போய் விடுகிறது. இவ்விதமாய் வேத வாக்கியத்தை அவர்கள் ஆவிக்குரிய விதமாய் மாற்றிப் பேசுவதால், அதில் எந்த அதிகாரமும் இல்லாமல் போய்விட வாய்ப்பிருக்கிறது.

உதாரணமாக, ஒருவர் வேதபகுதியை உருவகமாக்கி பேசும்போது, இதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்று நாம் கேட்டால், இது போல் வேறு பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறதா என்று கேட்டால், அவரால் சொல்ல முடியவில்லையென்றால், ஒரு அதிகாரம் இல்லாமல் போய்விடும். வேத வசனத்தை உறுதியோடு, அதிகாரத்தோடு சொல்லவேண்டும். இல்லாவிட்டால், தோற்றுப்போய்விடும் நிலை வரும். ஆவியானவர் எனக்குக் கற்று கொடுத்தது இவ்வளவுதான் என்று அதற்கு பதில் சொல்வார்கள். வேறு எதுவும் தெரியாது என்று வேத வசனத்தின் அதிகாரத்தைத் தாண்டி, பரிசுத்த ஆவியானவரின் அதிகாரத்தை எடுத்துக் கொள்கிறார்கள். ஆவியானவர் சொல்லாததை, ஆவியானவர் சொன்னாரென்று உருவகமாக்கும் முறையில் பேசுகிறவர்கள் இன்றைய காலக் கட்டத்தில் நிறைய பேர் இருக்கிறார்கள் என்பதை நாம் அறிய முடியும். இன்றைய ஆவிக்குரிய வட்டாரத்தை இந்த உருவகமாக்கும் முறைதான் ஆண்டுகொண்டிருக்கிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன். இந்த நிலை கி.பி *1600* வரை நீடித்ததென்று சொல்லலாம். உருவகமாக்கும் முறை அதிகமாகக் காணப்பட்டது. அதற்கு பின்பதாக வேதத்தை வியாக்கியானம் செய்வதில் சற்று மாற்றம் நிகழ ஆரம்பித்தது. குறிப்பாக, ஜான் விக்ளிப், மார்டின் லூதர், ஜான் கல்வின், வில்லியம் டின்டேல், ஜான் மார்க்ஸ் போன்ற தேவ மனிதர்கள் இந்த உருவகமாக்கும் முறையின் ஆபத்தை உணர்ந்து, தவறு என்று சுட்டிக்காட்டிப் பேசினார்கள். வேதத்திற்கு நேரடி அர்த்தத்தை கொடுக்க வேண்டும் என்று இவர்கள் மிகத் தெளிவாக பேசியிருக்கிறார்கள்.

ஜான் கல்வின் சொல்லும்போது, உருவகமாக்கும் முறையானது அற்பமான விளையாட்டாய் இருக்கிறது. இவ்விதமாய் வேதத்தை வியாக்கியானம் பண்ணும்பொழுது, அது வேத வசனத்தை சித்ரவதை செய்கிற முறையாய் இருக்கிறதென்று சொல்கின்றார்.

மார்டின் லூதர் சொல்லும்போது, நான் துறவியாக இருந்தபொழுது நான் உருவகமாக்கிப் பேசுவதில் வல்லவன். நான் எல்லாவற்றையுமே உருவகமாக்கிதான் பேசுவேன். ஆனால் இவ்விதமாக வேத வசனத்திற்கு பலவிதமான அர்த்தத்தைக் கொடுக்கும்பொழுது, பலதரப்பட்ட அர்த்தத்தை அது உள்ளடக்கியதாக இருப்பதாக கருதி பேசும்பொழுது அது ஆபத்தானது மட்டுமல்ல. பிரயோஜனமற்ற போதனையாகவும் இருக்கிறது. அது வேதத்தின் அதிகாரத்தை இல்லாமல் ஆக்கிவிடுகிறது. ஏனென்றால் வேத வசனத்திற்கு ஒரே ஒரு அர்த்தம் மட்டுமே இருக்க முடியும். அதை இந்த உருவகமாக்கும் முறையில் அர்த்தமற்றதாக்கி விடுகிறார்கள். மட்டுமல்ல, இது வேத

வசனத்திற்கு அழுக்கைக் கொண்டு வருகிறது என்று உருவகமாக்கும் முறையை மிகக் கண்டனப்படுத்திப் பேசுகின்றார்.

ஒரு எழுத்தாகிலும், எழுத்தின் உறுப்பாகிலும் அழிந்து போகாது என்று இயேசு கூறுகிறார். அழிந்து போகாதென்றால், அதின் அர்த்தம் பற்றிய விஷயம். தேவன் என்ன நோக்கத்தோடு வார்த்தையைக் கொடுத்தாரோ, பரிசுத்த ஆவியானவர் என்ன நோக்கத்தோடு மனிதர்களைக் கொண்டு எழுதினாரோ அதை விடுத்து, சிலர் உருவகமாக்கும் ஆசையில் போதித்து உண்மையான அர்த்தத்தை வெளியே வர விடாமல் தடுத்து விடுகிறார்கள் என்பதே உண்மையான நிலை.

**எ.கா.** - நான் ஒரு கருத்தை கடிதத்தில் எழுதி அனுப்புகிறேனென்றால், என்னுடைய பின்னனியைப் பார்க்காமல், என்ன நோக்கத்தோடு எழுதியிருக்கிறேன் என்று பார்க்காமல், இதற்கு வேறொரு விளக்கத்தைக் கொடுத்தால் என்ன ஆகும் என்று யோசித்துப் பாருங்கள். நான் சொல்ல வந்தக் கருத்தை இல்லாமல் ஆக்கிவிட்டார்கள் என்றுதான் அர்த்தம். ஒருவேளை என் கடிதம் என் பகைவனுடைய கையில் கிடைத்து, என் வீட்டாருக்கு அந்தக் கடிதத்தைப் படித்து விளக்குகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள், நான் எழுதியதை அப்படியே சொல்லாமல், அவர் கருத்தை ஏற்றி சொன்னால், நான் சொல்ல வந்த கருத்து நோக்கம் எல்லாம் அடிபட்டு போய்விடும்.

அன்றைய காலத்திலிருந்து இன்று வரை வேதத்தில் புகுத்துதல் என்பது நடந்து கொண்டுதான் இருக்கின்றது. இதற்கு எதிராக நாம் செயல்பட வேண்டும். நாம் மக்களுக்கு இதனை தெளிவாக உபதேசித்தால்தான் அவர்கள் சரியாய் வளருவார்கள்.

ஜான் விக்ளிப், மார்டின் லூதர், ஜான் கல்வின், வில்லியம் டின்டேல், ஜான் மார்க்ஸ் போன்ற தேவ மனிதர்களுடைய புரட்சிகரமான செயல்பாட்டினால்தான் அநேக சபைகள் இன்று வேதத்தை அப்படியே எடுக்க முயற்சி எடுத்து செயல்படுகிறார்கள். வேத வசனத்தை அப்படியே நேரடி அர்த்தம் எடுப்பதைத்தான் தேவன் விரும்புகிறார்.

**தேவன் ஏன் நேரடி அர்த்தம் கொடுப்பதை விரும்புகிறார்?**

1. **இயேசுகிறிஸ்து வேதத்தை நேரடியாகவே விளக்கம் பண்ணினார்:**

பழைய ஏற்பாட்டு காரியமாயிருந்தாலும் இயேசு அதை நேரடி அர்த்தம் கொடுத்து விளக்கப்படுத்தினார். உருவகமாய் சொல்லப்படாத காரியங்களை அவர் உருவகமாக்கி பேசவில்லை. *மத்.13:35, 25:34, மாற்.10:6* போன்ற வசனங்களைப் பார்த்தால், ஆதாம் ஏவாளை படைத்த வரலாற்றை அப்படியே இயேசு சொல்கிறதைப் பார்க்கலாம். *மத்.24:38,39, லூக். 17:26-27* போன்ற வசனங்களில் நோவாவின் பேழையைப் பற்றியும், வெள்ளத்தைப் பற்றியும் நேரடி அர்த்தத்தோடு விளக்கப்படுத்துகிறதை பார்க்கலாம். *மத்.12:39-41* வரையுள்ள வசனங்களில் யோனா மீனின் வயிற்றில் இருந்த சம்பவத்தை அப்படியே நேரடி அர்த்தத்தோடு விளக்குகிறதை பார்க்கலாம். *மத்.10:15*, சோதோம் கொமோரா காரியத்தைக் குறித்து நேரடி அர்த்தத்தை அப்படியே சொல்கின்றார்.

லூக்.*17:28,29* போன்ற வசனங்களில் லோத்து அவருடைய மனைவி பற்றி நேரடி அர்த்தத்தில் கூறுகிறார். இயேசு கிறிஸ்துவை புதிய ஏற்பாட்டில் சொல்கிறதை நாம் எடுத்துக்காட்டாய் கொள்ள வேண்டியது அவசியம். நம்முடைய போதகரே இவ்விதமாய் பேசினால், நாம் எப்படி பேச வேண்டும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இதில் இயேசு எந்த புதைபொருளை வைத்தும் பேசவில்லை. உருவகமாக்கிப் பேசவில்லை. ஒரு நல்ல போதகராகிய இயேசு எப்படி வேதத்தை வியாக்கியானப் படுத்தினாரோ, நாமும் அப்படித்தான் வியாக்கியானப்படுத்த வேண்டும் என்பதை இயேசுகிறிஸ்துவிடம் இருந்து கற்றுக்கொள்கிறோம்.

ஒரு காரியத்தை நாம் ஒத்துக்கொண்டுதான் ஆக வேண்டும். வேத வசனமானது, நேரடி அர்த்தத்தில் அநேக காரியங்களை சொல்லியிருந்தாலும், சில காரியங்களை உருவகமாக்கி வேதமே சொல்லியிருக்கின்றது. வேதாகமத்தில் சொல்லப்பட்ட இலக்கணத்தின் அடிப்படையில் பார்க்க வேண்டியது அவசியம். அந்த இலக்கணம் சில சமயம் உருவகமாக்கும் அமைப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. சில காரியங்கள் அடையாள மொழியாய் கூறப்பட்டிருக்கிறது. சில காரியங்கள் ஏற்றிக் கூறப்பட்ட தற்குறிப்பேற்றணியில் சொல்லப்பட்டிருக்கிறதை நாம் பார்க்க முடியும். சில உருவகங்கள், சில உயிர் உருவகஅணி, வஞ்சப்புகழ்ச்சி அணி என்றெல்லாம் பயன்படுத்தப்பட்டிக்கிறதை நாம் படிக்க இருக்கிறோம். ஆனால் இலக்கண முறைப்படி வராத வார்த்தைகளைப் பிடித்துக்கொண்டு, அதற்கு ஒரு அர்த்தத்தை ஏற்றிப் பேசுகிறதுதான் தவறு என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

**உதாரணமாக,** *1* பேதுரு *5:8*ல், தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள். விழித்திருங்கள். ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ஜித்து சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித்திரிகிறான் என்று உருவகமாக்கி பேதுரு எழுதுகிறார். உருவக அணியில், பிசாசை சிங்கத்திற்கு ஒப்பிட்டு பேசுகிறார். இப்படி உருவகமாக்கி பேசுகிறதிலிருந்தும் பார்க்க முடியும். சிங்கம் கெர்ஜித்து சுற்றித் திரிகிறதுபோல பிசாசானவனும் இருக்கிறான் என்று அதனுடைய நோக்கத்தையும், சுபாவத்தையும் வைத்து சாத்தானுடைய தன்மைகளை எடுத்து இந்த வசனத்தில் சொல்கிறார்.

யோவான் *15:3*ம் வசனத்தில், நான் மெய்யான திராட்சைசெடி, என் பிதா திராட்சை தோட்டக்காரர் என்றும் அதில் நிலைத்திருக்கிற கொடிகளை சீஷர்கள் என்று அழைக்கிறார். அதில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அது அறுத்துப் போடப்படும் என்றெல்லாம் உருவகமாக பேசிக்கொண்டிருக்கிறார். இதை நாம் உருவக அர்த்தத்தில் பார்த்து அதற்கான அர்த்தத்தைக் கொண்டு வர வேண்டியது அவசியம். இவ்விதமாய் உருவகமாய் சொல்லப்பட்ட காரியங்களை எளிதாகக் கண்டுபிடித்துவிடலாம். நாம் ஒரு கருத்தை மனதில் பதிய வைக்கவேண்டியது அவசியம். புத்தகத்தை எழுதியவர் எந்த நோக்கத்தோடு எழுதினாரோ, அந்த உண்மையான அர்த்தத்தை நாம் பெற வேண்டும். அந்த வசனம் நம்மோடு பேச இடம் கொடுக்க வேண்டும். நாமாக அதில் ஏதும் ஏற்றி பேசாதபடி நம்மை கவனமாகக் காத்துக் கொள்ள வேண்டும். வேத வசனத்தின்

அர்த்தத்தை ஆசிரியர் முடிவு பண்ணி எழுதி வைத்திருக்கிறார். அது என்னவென்று கண்டுபிடிப்பதுதான் வேதாகம வியாக்கியான கலையைப் பயில்கிற உங்களுடைய வேலை. அதைத்தான் நீங்கள் செய்து முடிக்க வேண்டும்.

நாம் குழுவாக கூடும்போதும் கூட, இந்த வேத வசனம் உங்களுக்கு எவ்விதமாய் புரிந்தது என்று கேட்போம். ஆனால் அது சரியான கேள்வி அல்ல. இந்த வேத வசனம் என்ன அர்த்தம் தருகிறது என்றுக் கேட்கலாம். இந்த வேத வசனம் எப்படி உங்கள் வாழ்விற்கு கொருந்துகிறதாயிருக்கிறது, உங்கள் வாழ்வில் இதன் மூலம் பயின்ற பாடம் என்று கேட்கலாம். ஆகவே வேத வசனத்திற்கு அர்த்தம் ஒன்றே ஒன்றுதான். உங்கள் வாழ்க்கைக்கு வரும்போது வேண்டுமானால், அது சொல்ல வருகிற காரியம், உங்கள் வாழ்வின் நடைமுறைக்கு வரும்பொழுது, சொல்லித் தருகிற பாடம் வேண்டுமானால் வித்தியாசப்படலாம். என்னுடைய சூழ்நிலைக்கு ஏற்றபடி அது என்னைத் திருத்தக் கூடும். உணர்த்தக் கூடும்.

**<u>கேள்விகள்:-</u>**

1. வேதத்தை வியாக்கியானம் பண்ணும்போது, நேரடி அர்த்தத்தை அப்படியே எடுத்து பழகவேண்டியதின் முக்கியத்துவத்தினை உதாரணங்களுடன் விளக்கமாக கூறுக?
2. வேதாகமத்தின் எந்தெந்த பகுதிகளெல்லாம் உருவகமாக்கப்பட்டு தவறாகப் போதிக்கப்படுகிறது என்பதனைக் கூறுக?
3. உருவகமாக்கும் முறையைக் குறித்து ஜான் கால்வின் மற்றும் மார்ட்டின் லூதர் ஆகியோர் கூறும் கூற்றுகளைக் கூறுக?
4. சபைகள் வேதத்தை அப்படியே எடுத்து செயல்படுத்துவதற்கு புரட்சிகரமான செயல்பாட்டினை செய்த தேவ மனிதர்களின் பெயர்களைக் குறிப்பிடுக?
5. இயேசுகிறிஸ்து எவ்வாறு வேதத்தை நேரடியாகவே விளக்கம் செய்தார் என்பதனை உதாரணங்களுடனும், வேதவசன ஆதாரங்களோடும் சற்று விளக்கமாக கூறுக?
6. இலக்கணத்தின் அடிப்படையில் வேதவசனம் எந்தெந்த நிலைகளிலெல்லாம் கூறப்பட்டிருக்கின்றது என்பதனைக் கூறுக? (மூன்று நிலைகள்)
7. புதிய ஏற்பாட்டில் உருவகமாக கூறப்பட்டுள்ள சில வேத வசனங்களைக் குறித்து சற்று சுருக்கமாக கூறுக?
8. வேதவசன புரிதலைக் குறித்து கேட்கக்கூடாத கேள்வி ஒன்றினையும், கேட்கவேண்டிய கேள்வி ஒன்றினையும் கூறுக?

# வேதாகம விளக்கவியல்

## பாடம் - 8

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பாடத்தில், சென்ற பாடத்தின் தொடர்சியாக ஒருசில காரியங்களைக் கற்றுக்கொள்ளப்போகிறோம்.

**வேதத்தை வியாக்கியானம் செய்யும்போது, நம்முடைய அனுபவத்தை முக்கியப்படுத்தாமல் இருக்க வேண்டும்:-**

நாம் வேதத்தை விளக்கம் செய்யும்போது, நம்முடைய சொந்த அனுபவத்தையல்ல, வேத வசனத்தின் அடிப்படையில் நம்முடைய அனுபவத்தை விளக்கப்படுத்தலாம், அல்லது வேத வசனத்தை, நம் அனுபவத்தைக் கொண்டு விளக்கப்படுத்தக்கூடாது. ஆனால் வேத வசனத்தின் வெளிச்சத்திலே நம்முடைய அனுபவத்தை விளக்கப்படுத்தலாம். இல்லாவிட்டால் விளங்கவைக்கலாம். இதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். இன்றைக்கு அநேகர் அனுபவத்தை மாத்திரமே சொல்கிறார்கள். பிரசங்கமேடையிலே, அதிகமாக அவர்களுடைய சொந்த அனுபவம், தேவனோடு அவர்கள் கற்றுக்கொண்ட காரியம், அந்த அனுபவங்களை மாத்திரம் பேசுகிறார்களேயொழிய, வேத வசனங்களை முக்கியப்படுத்தி பேசக்கூடாத காலங்களாக, இந்த நாட்கள் காணப்படுகிறது.

ஒரு பிரசங்க மேடையில் இவ்விதமாக எழுதியிருந்தார்கள்: ஐயா நாங்கள் இயேசுவைக் காண விரும்புகிறோம் என்று எழுதிய வாசகம் அடங்கிய பேப்பர் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. இதன் அர்த்தம் என்னவெனில், நீங்கள் தயவுசெய்து இயேசுவை பிரசங்கியுங்கள். வேத வசனத்தை பிரசங்கியுங்கள் என்பதாகும். இதை விட்டு விட்டு முழுவதும் உங்களுடைய அனுபவத்தையே பேசிக்கொண்டிருக்காதீர்கள், அதையே விளக்கப்படுத்தக்கூடாது. சிலர் ½ மணிநேரம் அல்லது ½ - ¾ மணி நேரங்கள் தங்களுடைய சொந்த அனுபவத்தையே பேசுகிறார்கள். நான் சிங்கப்பூர் சென்றிருந்தபோது, அங்கே சென்றிருந்தபோது என்று பேச ஆரம்பித்து, நேரத்தை வீணடிக்கிறதைப் பார்க்கிறோம். இதுவொரு தவறான காரியம். தங்களுடைய அனுபவத்தைச் சொல்லி, என்னுடைய அனுபவம் இவ்வாறு இருக்கிறதினால், வேதவசனம் சொல்லுகிறது சரியாக இருக்கிறது என்று சொல்லி, சிலர் பிரசங்கிக்கிறார்கள் அல்லது பேசுகிறார்கள். அதாவது இவர் பேசுகிற வேத வசனத்திற்கு முதலாவது அவர் கொடுக்கிற விளக்கமானது அவருடைய அனுபவத்தை தெரிவிக்கிறார், என் அனுபவம் இவ்வாறு இருக்கிறது. வேதமும் இப்படித்தான் சொல்கிறது என்கிறார்கள். இப்படிப்பட்ட பிரசங்கம் அல்லது விளக்கம் சரிதான் என்பதல்ல. வேத வசனம் எப்படிச் சொல்லுகிறது, அதற்கேற்றாற்போல் என் அனுபவம் இருக்கிறது. ஆகவே, நான் தேவனைத் துதிக்கிறேன் என்று சொல்லவேண்டும். அதுதான் வேதாகம விளக்கவியலில் சரியான விளக்கமாக இருக்க முடியும்.

ஒரு எடுத்துக்காட்டைப் பார்க்கலாம், இன்று அநேகர் அந்நியபாஷை பேசுகிற அடையாளத்தை பெற வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதற்கு ஏன் அவ்வாறு விரும்புகிறீர்கள் என்று கேட்டால் பதில் சொல்லத் தெரியவில்லை. ஆவிக்குரிய அனுபவங்களில் இன்றைக்கு அநேகர் அவ்வாறுதான் இருக்கிறார்கள். மான்கால்களைத்தாரும் என்று ஜெபம் செய்கிறார்கள். ஏன் மான்கால்கள் வேண்டுமென்று அவர்களிடம் கேட்டால், அது சும்மாதான், நல்லதுதானே என்று பதிலளிக்கிறார்கள். இதைப்போல அநேக அர்த்தமற்ற காரியங்களை ஜெபத்தில் தேவனிடம் மக்கள் கேட்கிறார்கள். ஆவியின் அபிஷேகம் என்றாலே, அந்நிய பாஷை பேசுவேண்டுமென்று மக்கள் பொதுவாக கருதுகிறார்கள். ஏனெனில் வேதத்தில் அவ்வாறு சொல்லியிருக்கிறது. இவ்வாறு ஒருபுறம் இருந்தாலும், அது அனுபவத்தில் பொதுவான ஒன்றாக இன்று மாறிவிட்டது. அது பெந்தேகொஸ்தே கூட்டமாக இருந்தாலும் சரி, சி.எஸ்.ஐ. போன்ற பிரதான சபைகளாக இருந்தாலும் சரி, அநேக சபைகளில் ஆவியின் அபிஷேகம் முக்கியப்படுத்தப்படுகிறது. அதைப்போல அந்நிய பாஷையில் பேசுகிறதும் முக்கியப்படுத்தப்படுகிறது. ஆனால், அவர்களிடம், நீங்கள் எதற்கு அந்நிய பாஷையை எதிர்பார்க்கிறீர்கள் என்று கேட்டால், நான் அநேக நாட்களாக அந்நிய பாஷையில் பேசி ஜெபிக்காமல் இருந்தேன், ஆனால் நான் கர்த்தரிடத்தில் ஜெபித்தேன். ஆச்சரியமாக அவர் என்னை நிரப்பினார். ஆகவே, நான் இப்பொழுது பேசுகிறேன். மட்டுமல்ல நானும் என்னுடைய நண்பனுக்காக ஜெபித்தேன். அவனும் ஜெபித்தான். இப்போது அவனும் அந்நிய பாஷையில் நிரம்பியிருக்கிறான் என்று சொல்லுகிற அநேகருடைய அனுபவங்களை பதிலாகப் பெறுகிறோம்.

இதனுடைய அடிப்படை எவ்வாறு இருக்கிறது என்றால், அவரது அனுபவத்திலிருந்து வேத வசனம் விளக்கப்பட்டிருக்கிறது. அவனுடைய அனுபவத்தைச் சொல்லுகிறாரேயொழிய, வேத வசனத்தை முக்கியப்படுத்தாதபடி அவர் காணப்படுகிறார். அவர் எவ்வாறு சொல்லியிருக்க வேண்டுமென்றால், *1* கொரிந்தியர் *12* மற்றும் *14*ம் அதிகாரங்களைப் பார்த்து, நன்றாகப் படித்து, கற்றுக்கொண்டு, அதனடிப்படையில், அந்த வசனத்தை அல்லது அந்தக்காரியத்தை விளக்கப்படுத்தியிருக்க வேண்டும். *1* கொரிந்தியர் *12:10*, "***வேறொருவனுக்கு அற்புதங்களைச்செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப்பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.***" என்று வேதம் சொல்லுகிறதை நாம் வாசிக்கிறோம். அந்நிய பாஷைகள் பேசுகிறது என்பது, இந்த வசனத்தில் கட்டாயமாக சொல்லப்படுகிற ஒன்றல்ல. அந்த ஆவியானவர், அவருடைய சித்தத்தின்படியே, அவனவனுக்கு பகிர்ந்து கொடுக்கிறார். ஆகவே, அன்னியபாஷையை அனைவரும் பேசுவார்களோ? இல்லை, அது கட்டாயம் வேண்டுமா? இதைக்குறித்து இன்னொரு வசனம் கூறுகிறது, *1*கொரிந்தியர் *12:30*, "***எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவர்களா? எல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும்***

*வியாக்கியானம் பண்ணுகிறார்களா?'* எனவே வேதவசனம் சொல்வதுதான் மிக முக்கியம். எல்லோரும் அந்நிய பாஷை பேசவில்லை. ஆகவே, ஆவியின் அபிஷேகம் பெற்றிருந்தால், கட்டாயம் அந்நியபாஷை பேசுவேண்டும் என்பதில்லை. பேசவும் செய்யலாம், பேசாமலிருக்கவும் செய்யலாம். அவ்வாறுதான் வசனம் சொல்லுகிறது இல்லையா? ஆக, ஆவியின் அபிஷேகம் பெற்றவர்களில், அந்நிய பாஷை பேசாதவர்கள் இருக்கிறார்கள் என்று அர்த்தம்.

எனவே, நாம் புரிந்துகொள்ளவேண்டும், வேதம் என்ன சொல்லுகிறதோ, அதைத்தான் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் இன்றைய நிலை என்ன? அநேகர் ஆவியில் நிரம்பி அந்நிய பாஷையில் ஜெபிக்கிறார்கள். நானும் அதை விரும்புகிறேன். அது இருந்தால்தான் ஆவியின் அபிஷேகம் இருக்கிறது என்று சிலரின் அனுபவத்தை முக்கியப்படுத்தி வேத வசனத்தை விட்டுவிடுகிறார்கள். இப்படிப்பட்ட அநேக எடுத்துக்காட்டுகளை நாம் வேதத்தில் பார்க்க முடியும். இந்த வசனத்தின் அடிப்படையில், அவர்கள் வசனத்தை முக்கியப்படுத்தவில்லை. அவர்களின் சொந்த அனுபவத்தை முக்கியப்படுத்துகிறார்கள்.

ஒருவேளை, நாம் அப்படிப்பட்ட சிந்தையோடு வாழ்ந்து கொண்டிருப்போமானால், இந்தப்பாடத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாயிருக்கிறது. வேதம் சொல்வதுதான் முதலாவதான முக்கியத்துவம் பெறுகிறது. நமது அனுபவம் இரண்டாமிடம்தான். உங்களுடைய அனுபவம் ஆவிக்குரிய ரீதியாக நிச்சயமாக இருந்தது என்றால், அதை நீங்கள் இரண்டாவது அடையாளமாக, அல்லது வேதத்திற்கு உறுதியான சான்றாக பயன்படுத்தலாமேயொழிய, முதலாவது உங்களுடைய அனுபவத்தை வைக்க கூடாது என்பதை நீங்கள் புரிந்துகொள்ளுங்கள்.

<u>**வேதத்தை வியாக்கியானம் செய்யும்போது, மூலபாஷையில் வார்த்தையின் அர்த்தத்தையும் பார்க்கவேண்டும்:-**</u>

நாம் வேதத்தை வியாக்கியானம் செய்யும்போது, மூலபாஷையில் வார்த்தையின் அர்த்தத்தையும் பார்க்கவேண்டும். ஏனெனில் பழைய ஏற்பாடு என்றால், எபிரெய மொழியில் பார்க்க வேண்டும். சில சந்தேகமான வார்த்தைகள் இருக்குமானால், பழைய ஏற்பாடு என்றால், எபிரெய மொழியில் பார்க்கவேண்டும். அதற்கு நிறைய புத்தகங்கள் ஆன்லைனில் இருக்கிறது. நேரடியாக நீங்கள் புத்தக கடையிலும் புத்தகங்களை வாங்கிக்கொள்ளலாம். புதிய ஏற்பாடு என்றால், கிரேக்க வார்த்தைக்கான மூல அர்த்தத்தைப்பார்த்து தெரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், தமிழில் மொழியாக்கம் செய்யும்போது, கொஞ்சம் அர்த்தம் வித்தியாசம் எழுவதற்கு வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கிறது. அந்த வார்த்தையின் தெளிவு இல்லாவிட்டல், அதற்கு இணையான வார்த்தைகள் தெளிவாக இருக்கிறதைப் பார்க்க முடியும். ஆங்கிலத்தில் நிறைய மொழியாக்கங்கள் இருக்கிறது. ஆனாலும், நாம் தமிழில் புரியாததை ஆங்கிலத்தில் படிக்கலாம். ஆங்கிலம் உங்களுக்கு தெரியும் என்றால், ஆங்கில வேதாகமத்தை நீங்கள் படிக்கலாம். இதற்கும் மேலே உங்களுக்கு சந்தேகமிருந்தால், அந்த மூல வார்த்தையை

பார்த்து படிக்க பழகவேண்டும். அதுதான் வேதாகமக் கல்லூரியின் சிறப்பு. அவ்வாறு படிக்கும்போது, ஒவ்வொரு வார்த்தைக்கும் சரியான அர்த்தத்தைப் பெறுவதற்கு அது வழிநடத்துகிறது என்பதுதான் உண்மை.

*1* கொரிந்தியர் *2:14*ம் வசனத்தைப் பார்ப்பீர்களானால், "***ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான், அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும், அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்.***" என்று வாசிக்கிறோம் ஏற்றுக்கொள்ளான் என்று சொல்லப்பட்டிருப்பதை கொஞ்சம் கவனியுங்கள். இந்த வார்த்தையைப் பற்றி நாம் சில ஆங்கில வேதாகமத்தில் பார்க்கும்போது, 'does not receive' என்றும் வேறுசில மொழிபெயர்ப்புகளில் 'does not accept' என்றும் சொல்லப்பட்டுள்ளது, அதாவது ஏற்றுக்கொள்ளான் என்பதற்குப் பதில் 'ஒப்புக்கொள்ளான்' என்று இருக்கிறதை மூல பாஷையில் நாம் பார்க்கிறோம். 'Does not accept' இது கொஞ்சம் வித்தியாசமாகத் தெரிகிறது. ஆனால் இதை நாம் சரியாக விளக்கப்படுத்தும்போது, தெளிவாக இதன் அர்த்தம் புரியும். அதைப்போல 'Nor can he know them' அவைகளை அறியவும் மாட்டான் என்கிற அர்த்தத்தில் *14*ம் வசனம் முடிவுறுகிறது. ஆனால் அதை மற்றொரு மொழிபெயர்ப்பில் 'understand them' என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அவன் புரிந்துகொள்ளவுமாட்டான் என்று மூலபாஷையில் அதன் அர்த்தம் வருகிறது.

ஒரு வசனத்தில் *2* வார்த்தையை எடுத்து விளக்கப்படுத்தியிருக்கிறோம். 'Receive' மற்றும் 'accept' மற்றும் 'know' என்பதற்கு 'understand' என்று வருகிறது. புரிந்துகொள்ளமாட்டான் என்றும், அறியவும் மாட்டான் என்றும் நாம் சொல்லவேண்டியிருக்கிறது. 'ஏற்றுக்கொள்ளமாட்டான்' என்பதற்கு மற்றொரு வார்த்தை 'ஒப்புக்கொள்ளவுமாட்டான்' என்று ஒரு ஆழமான அர்த்தத்தைப் பார்க்கிறோம். ஆக, இவற்றை நாம் எங்கிருந்து பயிலுகிறோம்? அந்த கிரேக்க வார்த்தையைப் பார்க்கும்போது, இந்த அர்த்தத்தைக் கொண்டுவருகிறது. இதற்கான விளக்கத்தை ஆங்கில வேதாகமத்திலிருந்து சொன்னாலும், அதனுடைய கிரேக்க வார்த்தையின் அர்த்தம்தான் மாற்றம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. 'Receive' என்ற கிரேக்க வார்த்தைக்கு 'accept' என்ற வார்த்தை இருக்கிறது என்று பார்த்தோம் அல்லவா? அதாவது, அந்த கிரேக்க வார்த்தைக்கு 'welcome' வரவேற்க, ஒப்புக்கொள்ள மாட்டான் என்ற அர்த்தமானது, அந்த வசனத்திற்கான சரியான அர்த்தத்தை நமக்குத் தருகிறது.

ஜென்ம சுபாவமுள்ள மனுஷனோ, தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஒப்புக்கொள்ளமாட்டான்' மற்றொரு விதத்தில் சொல்வோமானால், அவன் வரவேற்க மாட்டான். ஏனெனில் அவனுக்குள் பரிசுத்த ஆவியானவர் இல்லாததினால், அவனுக்கு

வேதம் சொல்லுகிறது புரிந்தாலும், அவன் அவருடைய செய்தியை வரவேற்க மாட்டான். அந்த செய்தியை ஒப்புக்கொள்ள மாட்டான். ஒப்புக்கொண்டு அதன்படி செயல்பட மாட்டான். இதுதான் ஜென்ம சுபாவமுள்ள மனிதனுடைய அல்லது இரட்சிக்கப்படாத மனிதனுடைய செயல்பாடாய் இருக்கிறது. 'ஏற்றுக் கொள்ளவுமாட்டான்' என்ற அர்த்தத்துக்கு பதிலாக, நாம் பார்த்த மூல பாஷை சொல்கிற பிரகாரம், அவன் வரவேற்கமாட்டான், இல்லாவிட்டால் ஒப்புக்கொள்ளவும் மாட்டான் என்ற அர்த்தம் எவ்வளவு மாற்றத்தைக்கொண்டு வருகிறது பாருங்கள். அதைப்போல, அதே வசனத்தில் கடைசிப்பகுதி அவைகளையும் அறியவும் மாட்டான் என்ற வார்த்தைக்கு, ஏற்கனவே நாம் பார்த்ததுபோல, அவன் அதைப் புரிந்துகொள்ளவும் மாட்டான் என்ற அர்த்தத்தில், மூல பாஷையில் வார்த்தை காணப்படுகிறது. இதற்கு நாம் ஏற்கனவே சிந்தித்ததுபோல அவன் வேத வசனத்தின் காரியங்களை ஒப்புக்கொள்ளாததினால், அது அவனுக்கு அனுகூலமாக இல்லாமல் போய்விடும், அதாவது ஆவிக்குரிய அனுபவம் இல்லாமல் போய்விடும். ஆவிக்குரிய அனுபவம் இல்லாததினால், அவனுக்கு அதைப் புரிந்துகொள்ளவும் முடியாது. புரியவுமாட்டான் என்று சொல்வதைவிட அது அவனுக்கு புரியப்படவும் மாட்டாது என்பது ஆகும்.

பிரியமானவர்களே, அவன் ஆவிக்குரிய ரீதியில் அதை நிதானித்து புரிந்து கொள்ளமுடியாத நிலையில் இருக்கிறான். ஏனெனில், ஆவிக்குரிய வாழ்வின் துவக்கம் ஜென்ம சுபாவமான மனிதனுக்கு கிடையாது. இரட்சிக்கப்பட்டவனுக்குத்தான் ஆவிக்குரிய வாழ்வின் ஆரம்பம் இருக்கும். அவனுக்குத்தான் தேவனோடு நடக்கிற அனுபவம் இருக்கும். அவன்தான் எல்லாவற்றையும் புரிந்துகொள்வான். ஆக, அறியமாட்டான் என்பதைவிட ஆழமான அர்த்தத்தை புரிந்து கொள்ளமாட்டான் என்று சொல்லும்போது, அது அதிக அர்த்தத்தை உடையதாக இருக்கிறது.

இதுபோன்ற அனேக எடுத்துக்காட்டுகளை நாம் கூற முடியும். அதனுடைய மூலபாஷையின் அர்த்தத்தைப் பார்க்கும்போது, அது பழைய ஏற்பாடாக இருந்தால், எபிரெய மொழியில் பார்க்கவேண்டும், புதிய ஏற்பாடாக இருந்தால் கிரேக்க மொழியில் பார்க்க வேண்டும். அவ்வாறு பார்க்கும்போது, அதனுடைய சரியான அர்த்தத்தை கண்டுகொள்ள முடியும். அப்படிப்படிக்கிற அனுபவம் உங்களுக்கு உண்டானால், நீங்கள் இன்னும் அதிகமாய் வேதத்தை வியாக்கியானம் செய்ய உங்களால் கூடும். அதைவிடுத்து இன்று அநேகர் என்ன சொல்லுகிறார்கள் என்றால், ஆவியானவர் தவறு செய்து இருக்கிறாரா? தமிழில் உள்ளவை தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளதா? என்று கருதி, வாதிடத்தான் வருகிறார்களேயொழிய அதைப் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள். நடைமுறையான பிரச்சனைகள் இருக்கிறது. நீங்கள் அதைப்புரிந்து கொள்ள வேண்டும். அங்கே இருக்கிற அனைத்து காரியங்களும் நம் தமிழகத்தில் கிடையாது.

அந்தக் காலத்தில் காணப்பட்ட பறவைகள், மரங்கள், செடிகொடிகள் போன்றவற்றின் கலாச்சாரப்பின்னணியம் வித்தியாசப்படுகிறது, சில வார்த்தைகளின்

அர்த்தம், நம்முடைய நடைமுறை வாழ்வில் இருக்கிறது இல்லை. இவ்வாறு பல பிரச்சனைகள் இருக்கிறது. மட்டுமல்ல, இந்த வேதத்தை மொழிபெயர்த்தவர்கள் இறையியல் வல்லுநர்கள் அல்ல. மொழிபெயர்த்தவர்கள் சாதாரணமாக படித்தவர்கள், ஆனால் இறையியல் வல்லுநர்கள் கிடையாது. இறையியல் வல்லுநர்கள் என்று கூறும்போது வேதத்தை நன்றாக கற்றுத் தேர்ந்தவர்கள். ஆனால் மொழிபெயர்ப்பாளர்கள், கொடுக்கப்பட்ட அந்த நிபந்தனையின் அடிப்படையில் சரியான அர்த்தத்தை கொண்டுவர முயற்சி எடுத்தவர்கள். அவ்வாறுதான் எழுதியிருக்கிறார்கள். அதற்காக, தமிழ் வேதாகமம் தவறு என்று கூறவில்லை. இந்த இடத்தில் நீங்கள் தவறாக புரிந்துகொள்ளக்கூடாது. ஆனால் சிறிய அளவிலான அர்த்தங்கள் மூல பாஷையில் பார்க்கிறபடி, வேறுபடத்தான் செய்கிறது. நீங்கள் அதிலுள்ள வேறுபாடுகளை, வேதத்தை ஆழமாக படிக்கும்போதுதான் கற்றுக்கொள்ள முடியும் என்பதை புரிந்துகொள்ளுங்கள். அதற்கு நீங்கள் ஆன்லைனில் அநேக புத்தகங்களை கண்டுகொள்ள முடியும். சில புத்தகங்களின் பெயரைக் காணலாம்.

- 🕮 **Vine's Complete Expository Dictionary of Old Testament & New Testament Words**.

இந்த டிக்ஷ்னரியின் மூலம் பழைய மற்றும் புதிய ஏற்ப்பாட்டிலுள்ள பல வார்த்தைகளை பிரித்து, பிரித்து அதன் அர்த்தங்களை தெளிவாக விளங்கிக்கொள்ள முடியும். இதுபோன்ற மற்றொரு புத்தகம்:

🕮 **Word Study in the Greek New Testament** by Kenneth Oost என்பவருடைய புத்தகமும் இருக்கிறது. இவைகளெல்லாம் மிகவும் ஆரோக்கியமான புத்தகங்கள். இவைகளை நீங்கள் பயன்படுத்தி நன்றாக கற்றுக்கொள்ளலாம்.

இவைகளின் விலை மிகவும் அதிகம். ஆனால் ஆன்லைனில் இலவசமாக வேதாகம வார்த்தைகளின் மூலபாஷையின் அர்த்தம் என்பதை அறிந்து கற்றுக்கொள்ள முடியும். மேலும் ஆங்கிலத்திலும் அதற்காக தெளிவான அர்த்தங்கள் கொடுக்கப்பட்டு இருக்கும். இதுபோன்ற புத்தகங்களை வைத்து, படித்து, புரிந்துகொள்ள முடியும்.

<u>வேத வசனங்கள் குறிப்பிட்ட நபருக்கு பொருந்தும் என்றதொரு கண்ணோட்டத்தோடு, வேதவசனங்களை வியாக்கியானம் செய்யவேண்டும்:-</u>

சில குறிப்பிட்ட வசனங்கள், வேதபகுதி, குறிப்பிட்ட நபருக்கு பொருந்தும் என்றதொரு கண்ணோட்டத்தோடு நீங்கள் வேதத்தை வியாக்கியானம் செய்ய வேண்டுமென்பதை கற்றுக்கொள்ளுங்கள். அதாவது எல்லா கட்டளைகள், கர்த்தர் சொல்லியிருக்கிறவைகள் எல்லோருக்கும், எப்பொழுதும் பொருந்தும் என்று நீங்கள் நினைக்கக் கூடாது. இதைக்கொஞ்சம் எடுத்துக்காட்டோடு கூறும்போது, நீங்கள் அழகாக புரிந்துகொள்ள முடியும். வேதம் என்பது பலதரப்பட்ட மக்களுக்கு பலதரப்பட்ட சூழ்நிலையில் எழுதப்பட்ட காரியம். இஸ்ரவேல் ஜனங்களுக்காக, வணங்கா

கழுத்துள்ள அந்த ஜனங்களுக்காக கொடுக்கப்பட்ட சில காரியங்களை நாம் வாசிக்க முடியும். இன்னும் சில குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்டதொரு நபருக்கு பொருந்துகிறதாக அது இருக்கும். ஆனால், அது எல்லோருக்கும் பொருந்துகிற விஷயமாக இருக்க முடியும் என்று கூறுகிறது சரியானதாக இருக்காது. இதைக்கவனம் கொண்டு, வேதாகமத்தை விளக்கம் கொள்ளவேண்டியது அவசியம்.

உதாரணமாக, ஒரு வீட்டின் வரவேற்பு அறையில் உள்ள பலகையில், 'உள்ளே வாருங்கள், வந்து கொஞ்சம் காத்திருங்கள்' என்று எழுதப்பட்டிருக்கிறதாக கற்பனை செய்துகொள்ளுங்கள். இந்த வார்த்தைகளைப் பார்த்தவுடன், நீங்கள் இது எனக்குத்தான் சொல்கிறதா? இல்லாவிட்டால் வேறு யாருக்கும் சொல்லுகிற வாசகமா? என்று நீங்கள் யோசிக்கலாம். ஏனெனில், வீட்டைத் திறந்து உள்ளே வரும்படி அந்த வாசகம் சொல்கிறது. புதிதாய் வருகிற என்னையும் பார்த்து இந்த வாசகம் சொல்கிறதா? அல்லது சிலருக்கு மட்டும் பொருந்தும் வண்ணம் இந்த வாசகம் கொடுக்கப்பட்டு இருக்கிறதா? என்றதொரு குழப்பம் அல்லது கேள்வி எழும். அதைப்போலத்தான் வேத வசனத்தின் சில பகுதிகள் நமக்கு பொருந்துகிறதாய், அல்லது குறிப்பிட்டதொரு நபருக்கு சொல்லப்பட்டதாய் இருக்கும். சில காரியங்கள் எல்லோருக்கும் அப்படியே பொருந்தும் என்று சொல்ல முடியாது.

உதாரணமாக, மத்தேயு *19:21*-ம் வசனம், "***அதற்கு இயேசு: நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும். பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார்.***" என்று வாசிக்கிறோம். அந்த வாலிபன், கட்டளைகளைக் கைக்கொண்ட வாலிபன்தான். ஆனால், பூரண சற்குணனாய் இருக்க வேண்டுமென்றால், இதைச் செய் என்று இயேசு அவனிடம் கூறினார். ஏனெனில் அந்த வாலிபனின் இருதயம், அவனிடமிருந்த செல்வத்தின் மீது, மிகுந்த ஆஸ்தியின் மீது இருந்தபடியினால், கர்த்தர் இந்த கட்டளையை அவனுக்குக் கொடுத்தார். உன் இருதயம் உன் செல்வத்தின் மீது அல்ல, தேவன் மீது இருக்கவேண்டுமென்பதற்காகக் கொடுத்தார் என்று பார்க்கிறோம். ஆனால் சிலர் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? அந்த வாலிபனுக்கு சொன்ன இந்த வசனத்தை எடுத்து, பொதுவான காரியமாய் விளக்கப்படுத்துகிறார்கள். அவ்வாறு விளக்கப்படுத்துவது தவறாக முடிந்துவிடும் என்பதில் சந்தேகமேயில்லை. நாம் பூரண சற்குணராக இருக்கவேண்டுமென்றால், நமக்குண்டான எல்லாவற்றையும் விற்று தரித்திரருக்கு கொடுக்க வேண்டும். அப்பொழுது பூரண சற்குணனாய் நாம் இருக்க முடியும் என்று சிலர் உபதேசிக்கிறதை நாம் பார்க்க முடிகிறது. ஆனால், இது அந்த வாலிபனுக்கு, ஆஸ்தியுள்ள பணக்கார வாலிபனுக்கு கொடுக்கப்பட்ட வார்த்தை. ஏனெனில் அவனிடமிருந்த தவறு அது. அவனுடைய இருதயம், அவன் வைத்திருந்த ஆஸ்தியின் மீது இருந்தபடியால், இயேசு அவ்விதம் பதிலளித்தார் என்பதை புரிந்துகொள்ள

வேண்டும். அதற்காக எல்லாரும், அவர்களுக்கு இருக்கிறதை விற்றுக்கொடுக்க வேண்டும். ஏழைகளுக்கு கொடுத்துவிட்டு வரவேண்டும் என்று இயேசு சொல்லவில்லை என்பதை தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், இதற்கு ஈடான, இணையான வசனத்தை நாம் வேதத்தில் வேறு ஒரு இடத்தில் பார்க்க முடியாது. பவுல் போன்ற அப்போஸ்தலர்கள் எழுதும்போது கூட, இவ்விதமாக விற்றுக்கொடுங்கள் என்று கட்டளையிடவில்லை. உதாரணமாக இந்த ஐசுவரியவானைக்குறித்து சொல்லப்பட்ட மற்றொரு வேதபகுதியைப் படிக்கலாம்.

1 தீமோத்தேயு 6:17-19 வசனங்கள், "***இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுகிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுகிறவர்களும், உதாரணகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு.***" என்று பவுல் எழுதுகிறதைப் பார்க்கிறோம். தாராளமானவர்களாக, உதாரகுணமுள்ளவர்களாக இருங்கள் என்று சொல்லுகிறாரேயொழிய, பணவிஷயத்தைப்பற்றி சொல்லும்போது, எல்லாவற்றையும் விற்று தரித்திரருக்கு கொடுங்கள் என்று அவர் சொல்லவில்லை. ஆக, என்ன அர்த்தம் என்றால், அந்த குறிப்பிட்ட பணக்கார வாலிபனிடம் இயேசு கூறியிருக்கிறார் என்றால், அவனுக்கு அவனுடைய ஆஸ்தியைக் குறித்து இருதயத்தில் பிரச்சனை இருந்ததால், கர்த்தர் அதைச் சுட்டிக்காட்டி பேசினார். அதைப்போல, இன்னும் புதிய ஏற்பாட்டில் நாம் அப்.2:44-45 வசனங்களை பார்க்கலாம்.

44. விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்.
45. காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்.

இது அந்த சூழ்நிலையில் நடைபெற்ற காரியம். ஏனெனில், அநேகர் ஆவியில் அபிஷேகம் பெற்று எல்லோரும் ஒன்றாக தங்கியிருந்தார்கள். உலகத்தின் பல பகுதிகளில் இருந்தவர்கள் இரட்சிக்கப்பட்டு ஒரே சபையாக கூடியிருந்தார்கள். அவர்களுக்காக தொடர் போதனை நடத்தப்பட்டுக்கொண்டேயிருந்தது. தொடர்ந்து இரட்சிப்பு பற்றிய உபதேசம் பேதுரு கொடுக்கிறதை நாம் அப். 2:38ம் வசனத்தில் படிக்க முடிகிறது. தொடர்ந்த உபதேசம், அந்நியோன்யம், அப்பம்பிட்குதல், ஜெபம் செய்தல் போன்றவை நடைபெற்றுக்கொண்டேயிருந்தது. ஆகவே ஜனங்களுக்கு உணவு கொடுக்க வேண்டிய கட்டாயம் சபைக்கு உண்டாயிற்று. அதனால், அங்கேயிருந்த விசுவாசிகள் எல்லோரும், தங்கள் தங்கள் காணியாட்சிகளை, ஆஸ்திகளை விற்று, உலகின் பல

பாகங்களில் இருந்த யூத மக்களுக்கு கொடுக்கவேண்டிய கட்டாயத்தில் இருந்தார்கள். ஆகையால் அவர்கள் தங்களுடைய ஆஸ்திகளை விற்றுக்கொண்டுவந்து, போதனை நடைபெறுகிற காலங்களில், அனைவரின் உணவு காரியங்களுக்காக செலவழித்தார்கள் என்று நாம் பார்க்கிறோம். ஆகவே, அவர்கள் இவ்விதமாக செய்தார்கள் என்பதற்காக, எல்லோரும் இயேசுவிடம் வந்தவுடன் சொத்து, ஆஸ்திகள் எல்லாவற்றையும் விற்று, அதை அப்படியே கொடுத்துவிடவேண்டுமென்று அர்த்தமல்ல. அதுவொரு போதனையாக கொடுக்கப்படவில்லை என்பதை நீங்கள் தெளிவாகப் பார்க்கமுடியும். இவ்விதமாக நாம் வேத வசனங்களை விளக்கம் செய்யும்போது ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். சில காரியங்கள் அந்த சூழ்நிலைகளுக்குப் பொருந்தும். சில காரியங்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு மாத்திரம் கொடுக்கப்பட்ட காரியம். அது சில விதங்களில் நமக்கு பொருந்துகிறதாக இருந்தாலும்கூட, முற்றிலும், முழுவதும் பொருந்துகிறது இஸ்ரவேல் ஜனங்களுக்குத்தான். ஆகவே, பிரியமானவர்களே, வேதத்தை நீங்கள் விளக்கம் செய்யும்போது, ஒரு வசனத்தின் முன், பின் இருக்கிற வசனங்களை படித்து கவனம் கொள்ள வேண்டும், பகுதியைப் பார்க்க வேண்டும், சூழ்நிலையைப் பார்க்கவேண்டும். யாருக்கு இது கொடுக்கப்பட்டது என்று பார்க்கவேண்டும். அது எந்தளவுக்கு எனக்கு பொருந்தும் என்று ஒவ்வொருவரும் கேட்டு, ஆவியானவர் உதவியோடு கற்றுக்கொள்ளவேண்டுமென்று நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அதற்குத்தான் இந்த வேதவிளக்கவியல் பாடத்தை நாம் படித்துக் கொண்டிருக்கிறோம்.

இவ்வாறாக நீங்கள் புரிந்து படித்தீர்களானால், கள்ள உபதேசத்துக்கு இடமில்லை. அவ்வாறு கள்ள உபதேசம் செய்பவர்களையும் கண்டுகொள்ள முடியும். நீங்களும் தப்பித்தவறி கள்ள உபதேசம் செய்துவிட மாட்டீர்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட வசன பகுதி யாருக்கு சொல்லப்பட்டது? அதன் மையக்கருத்து என்ன? என்றெல்லாம் நீங்கள் பார்க்க வேண்டும். வேத வசனங்கள் ஒரு குறிப்பிட்ட நபருக்கோ அல்லது சமுதாயத்திற்கோ கொடுக்கப்பட்ட ஒன்றாக இருக்கும். அதை கவனமாக கவனிக்க வேண்டும் என்ற கருத்தை மனதில் கொண்டு வியாக்கியானம் செய்யுங்கள். வேதத்தை நீங்கள் விளக்கம் செய்யும்போது, இவைகளையெல்லாம் கவனத்தில் கொண்டு வேதத்தை விளக்கப்படுத்துங்கள் என்றுதான் படித்துக்கொண்டிருக்கிறோம். இதுவும் ஒரு முக்கியமான கருத்து.

<u>வேத எடுத்துக்காட்டுகள் எல்லாவற்றையும் நாம் போதனைகளாக மாற்றக்கூடாது:-</u>

வேதத்தை வியாக்கியானம் செய்யும்போது, இன்னொரு காரியத்தையும் நாம் மனதில்கொண்டு செய்யவேண்டும். அதாவது வேத எடுத்துக்காட்டுகள் எல்லாவற்றையும் நாம் போதனைகளாய் மாற்றக்கூடாது. எப்பொழுது வேத எடுத்துக்காட்டுகள் அதிகாரமுடையதாய் மாறுமென்றால், வேதவசனத்தை அல்லது வேதத்திலுள்ள கட்டளை அதிகாரமுள்ளதாய் மாற்றும். ஒரு உவமையையோ, எடுத்துக்காட்டுகளையோ, நீங்கள்

வேதத்தில் வாசிக்கிறீர்கள் என்றால், அதை அதிகாரமுள்ளதாய் பிரசங்கிக்க கூடாது. எப்போது நீங்கள் அதிகாரமுள்ளதாய் பிரசங்கிக்க வேண்டுமென்றால், அதற்கு கட்டளை வேதவசனத்தில் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அந்த உவமை, உருவகம் அல்லது எடுத்துக்காட்டுக்கு முன்னோ, பின்னோ, இயேசு சொல்கிற கட்டளை, அதற்கு உதவியாக இருந்தால் மட்டும்தான், அந்த எடுத்துக்காட்டு அதிகாரமுடையதாய் மாறும். உதாரணமாக, வேதத்தில் வருகின்ற எடுத்துக்காட்டுகளை அப்படியே நாம் பின்பற்ற முடியாது. அநேக எடுத்துக்காட்டுகளை நாம் வேதத்தில் பார்க்கிறோம். வேதத்தில் காணப்படுகிற அநேக பாத்திரங்கள், கதாபாத்திரங்கள், அவர்களுடைய வாழ்வைப் பார்க்கிறீர்கள். உதாரணமாக, சிம்சோனின் வாழ்வைப் பார்க்கிறோம். சிம்சோன், தெலீலாள் ஆகியோரின் காரியங்களைப் பார்க்கிறோம். தாவீது, உரியாவைக் கொலை செய்த காரியம், பத்சேபாளோடு செய்த தவறான காரியம், பேதுரு இயேசுகிறிஸ்துவை மறுதலித்த காரியம், இவைகள் எல்லாம் வேதத்தில் எடுத்துக்காட்டாய் காணப்படுவது உண்மை. எடுத்துக்காட்டாய் காணப்படுகிறது என்பதை விட, சம்பவம் அங்கே சொல்லப்பட்டு இருக்கிறது.

ஆகவே, இவற்றையெல்லாம் நாம் அப்படியே பின்பற்ற வேண்டுமென்பது அல்ல. நீங்கள் சாதாரணமாக எல்லா விஷயங்களையும் சரியாகப் புரிந்துகொள்வீர்கள். ஆனால் சில விஷயங்களைப் பார்க்கும்போது, இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது அல்லவா? ஆக, நானும் அதைச் செய்யலாம் என்று நினைத்து, அதைச் செய்வதற்கு முன்வரலாம். தாவீதுக்கு அநேக மனைவிகள் இருந்தனர், அதனால் சிலபேர், ஆசையுள்ளவர்களாய் இருக்கிறவர்கள், தாவீதுக்கு மட்டும் கர்த்தர் அனுமதித்தார் அல்லவா? ஆகவே எனக்கும் அனுமதிப்பார் என்று சொல்லி சிலர் சொல்கிறதை நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட எடுத்துக்காட்டுகளையெல்லாம் நாம் அதிகாரப்பூர்வமான போதனைகளாக எடுக்கக் கூடாது, வேத வசனம் அதற்கு என்ன சொல்லுகிறது என்று பார்க்க வேண்டும். வேதத்தில் என்ன கட்டளை உள்ளது? என்று கவனமாகப் பார்க்க வேண்டும். உதாரணமாக தாவீது, அநேக மனைவியுடையவர்களாக இருக்கிறதையும், இன்னும் வேண்டுமென்றால் என்னிடம் கேட்டிருக்கலாம், என்று எழுதப்பட்டிருப்பதை படித்துவிட்டு, தேவன் இவ்வாறு சொல்கிறார் அல்லவா? நாமும் கேட்கலாம் என்று துணிந்து விடக்கூடாது. புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது என்னவெனில், ஒரே மனைவியையுடைய புருஷனாக இருக்கவேண்டும் என்று அங்கே கட்டளையாக சொல்லப்பட்டிருக்கிறது. அதனடிப்படையில் அதிகாரமுடையவர்களாய் போதிக்க முடியுமே தவிர, வேத கற்பனை அல்லது கட்டளை இல்லாத பட்சத்தில், நாம் எடுத்துக்காட்டுகளை முக்கியப்படுத்தக் கூடாது. அதை அப்படியே பின்பற்ற துணியக்கூடாது.

தாவீது வாழ்வில் காணப்பட்ட குற்றங்கள், குறைவுகள், பேதுரு மறுதலித்த காரியங்களையெல்லாம் செய்ய துணியக் கூடாது. யூதாஸ் ஸ்காரியோத் நமக்கு எடுத்துக்காட்டாய் மாற முடியாது. ஆக, இதையெல்லாம் நாம் பின்பற்ற வேண்டுமென்று

கர்த்தர் ஒருபோதும் விரும்பியது கிடையாது. ஆகவே நீங்கள் கேட்கலாம், எந்த எடுத்துக்காட்டுகளை பின்பற்றுவது? அதற்கு வேதத்தில் கட்டளை இருக்கவேண்டும் இல்லாவிட்டால், வேத வசனம் அதை உறுதிப்படுத்த வேண்டும், அதைச் செய்யுங்கள் என்று அதை உறுதிப்படுத்தினால் தான், நாம் பின்பற்ற ஆரம்பிக்க வேண்டும். இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். வேதத்தில் உள்ள எல்லா எடுத்துக்காட்டுகள் எல்லாம் நாம் பின்பற்றத்தக்கவை அல்ல.

இன்னும், நாம் இயேசுகிறிஸ்துவை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். அவர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு, நாம் பின்பற்றுவதற்கு அநேக காரியங்களை முன்னுதாரணமாக கொண்டவர்தான். ஆனால் அதற்காக, அவரைப்போலவே, எல்லாம் நாம் செய்ய வேண்டுமென்று சொல்லக்கூடாது. உதாரணமாக, அவர் திருமணம் செய்யவில்லை. ஆகவே, நாமும் திருமணம் செய்யக்கூடாது. அவர் நடந்தே சென்றார், ஆகவே, நானும் நடந்தே செல்வேன், அவர் நீண்ட அங்கியை அணிந்திருந்தார், ஆகவே நானும் அவரைப்போல நீண்ட அங்கியை அணிவேன் என்று சொல்லக்கூடாது. அவர் கழுதையில் பவனி சென்றார், அதைப்போல நானும் செல்வேன் என்பதாகச் சொல்லக்கூடாது. இதைப்போல பல காரியங்களை நாம் சொல்லலாம்.

ஆகவே, வேத வசனம் இப்படிப்பட்ட எடுத்துக்காட்டுகளை அப்படியே பின்பற்றச் சொல்லவில்லை. அதற்கு எங்கே, ஒரு கட்டளையோ அல்லது வேத வழிகாட்டுதல் இருக்கிறதோ, அதைச்செய்ய நாம் முன்வரவேண்டும். உதாரணமாக, நாம் திருமணம் செய்வதைப்பற்றி எபிரெயர் 13:4 சொல்கிறது. மேலும் எபேசியர் 5:25ன் பின்பகுதியிலும் திருமணம் செய்வதைப் பற்றியும், திருமண உறவைப் பற்றியும் சொல்லுகிறதைப் பார்க்கலாம். ஆகவே, எல்லா கிறிஸ்தவர்களும், திருமணம் செய்யாமலேதான் இருக்கவேண்டுமென்று வேதம் சொல்லவில்லை. இயேசுகிறிஸ்து திருமணம் செய்யாமல் இருந்தது, ஒருவேளை சிலர் திருமணம் செய்யாமல் இருப்பதற்கான தூண்டுதலாக இருக்குமேயொழிய, அது கட்டளையாக இருக்கவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். அதைக்கொண்டு, நாம் கட்டளையாக போதிக்க கூடாது. சிலர் கேட்பார்கள், இயேசு வேதாகமகல்லூரிக்கு சென்று படித்தாரா? நாம் ஏன் படிக்கவேண்டும் என்று கேட்பார்கள். அப்படிக் கேட்கிற மக்களும் உண்டு. இப்டியாக, நம் வாழ்வில் எதை அர்த்தப்படுத்தி படிக்கவேண்டும் என்பதை, நாம் இந்த வேதாகம விளக்கவியல் பாடத்தில்தான் கற்றுக்கொள்ள வேண்டும். அதை நன்றாக தெரிந்துகொண்டு, வேத வசனத்தை விளக்கப்படுத்த வேண்டும். அப்போது நீங்கள் நன்றாக போதிப்பீர்கள். அதைப்போல, இயேசுகிறிஸ்துவின் வாழ்விலிருந்து நாம் பின்பற்றவேண்டிய காரியங்கள் அநேகம் உண்டு. அதை எவ்வாறு நாம் முடிவு செய்ய முடியும்? பின்பற்றவேண்டியவைகளை உறுதிசெய்கிற வேதவசனம் இருக்குமேயானால், நாம் கண்டிப்பாக கீழ்ப்படிந்து செயலாற்ற வேண்டும். அது இயேசுகிறிஸ்துவின் வாழ்வாக இருந்தாலும்கூட, காரியங்கள் அப்படியாக இருக்கிறது என்பதை நாம் நன்றாக கவனிக்க வேண்டும். அவரைப்போல நாம் பரிசுத்தமாக இருக்கவேண்டும்.

அவரைப்போல மனதுருக்கம் உள்ளவர்களாக நாம் இருக்கவேண்டும். அவரைப்போல நாம் ஊழியம் செய்கிறவர்களாக இருக்கவேண்டும். இவற்றையெல்லாம் வேதவசனங்கள் உறுதிசெய்கிறது.

*1* பேதுரு *1:15*ஐ பார்க்கும்போது, "***உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்.***" என்று கூறுகிறது. இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த வாழ்வை முக்கியப்படுத்தி நாமும் அவ்வாறு செய்யவேண்டும் என்று நமக்கு வலியுறுத்துகிறது. இந்த வசனம் கட்டளையாக நமக்கு நேராய் வருகிறது. அவர் பரிசுத்தராக இருந்தார், நீங்களும் பரிசுத்தராய் இருங்கள், என்று சொல்லுகிறதை நாம் பார்க்கிறோம். அதைப்போல, இயேசுவைப்போல அன்பாயிருக்க வேண்டுமென்பதற்கு கட்டளையிருக்கிறது. யோவான் *13:34-35*, "***நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள், நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவரர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்.***" ஆக, இயேசுவைப்போல அன்பாயிருக்கவேண்டுமென்று அவரே நமக்கு கட்டளை கொடுக்கிறார். இதைப்போல அநேக எடுத்துக்காட்டுகளை நாம் வேதத்தில் படிக்கமுடியும், அதைப் புரிந்துகொள்ளுங்கள். வேதத்திலுள்ள அனைத்து எடுத்துக்காட்டுகளையும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நினைக்க கூடாது. அதற்கு, நிச்சயமாய் உறுதிதப்படுத்தும் விதமாய் வேதவசனங்கள் இருக்கும் அல்லது கட்டளையொன்று இருக்கும். அதை வைத்து, அந்த எடுத்துக்காட்டை அதிகாரமுடையதாய்ச் சொல்லி, நாம் பின்பற்ற வேண்டும். மற்றவர்களை பின்பற்றச்செய்ய அறிவுறுத்த வேண்டும். இவ்விதமாக விளக்கம் செய்ய உங்களை அர்ப்பணியுங்கள். வேதவசனத்தை நாம் அவ்வாறுதான் விளக்கம் செய்யவேண்டும். இதைவிடுத்து, வேதத்திலிருந்து எடுத்துக்காட்டுகளை எடுத்துக்கொண்டு, அப்படியே கூறி, இப்படியெல்லாம் இயேசு வாழ்ந்தார் அல்லவா? இப்படியெல்லாம் சீஷர்கள் வாழ்ந்தார்கள் அல்லவா? அதையெல்லாம் நீங்களும் செய்யவேண்டுமென்று சொல்லி, போதிப்பது மிக எளிதான விஷயம். ஆனால் அது தவறான காரியங்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளுங்கள்.

<u>வேதத்தை விளக்கும்போது, நாம் இப்போது புதிய உடன்படிக்கையின் காலத்தில் இருக்கிறோம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்:-</u>

இறுதியாக, வேதத்தை விளக்கம்கொள்ளும்போது, நாம் இப்போது புது உடன்படிக்கையின் காலத்தில் இருக்கிறோம் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். பழைய ஏற்பாட்டில் அநேக கட்டளைகள் கொடுக்கப்பட்டிருப்பது உண்மைதான், அதை நாம் மதிக்கிறோம். ஆனால் அந்த பழைய ஏற்பாட்டு கட்டளைகளை, புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்திலே வெளிச்சம் கொடுக்கவேண்டியது அவசியம். நமக்கு புதிய ஏற்பாடுதான்

வெளிச்சம் தருகிற ஒன்றாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டில் அநேக காரியங்கள், மறைபொருளாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் புதிய ஏற்பாட்டில் அவைகளெல்லாம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. முன்பு அதாவது, பழைய ஏற்பாட்டில் அவைகள் விதைகளாய் காணப்பட்டது, இப்போது அது செடியாய் வளர்ந்து, பூவாய் மலர்ந்து விட்டது என்று கூறலாம். ஆகவே அங்கே மறைவாய் சொல்லப்பட்டது எல்லாம், புதிய ஏற்பாட்டில் வெளிப்படையாய் கூறப்பட்டுவிட்டபடியால், நாம் பின்பற்ற வேண்டிய, சொல்லவேண்டிய, போதிக்கவேண்டிய காரியம் புதிய உடன்படிக்கை. ஆகவே இயேசுகிறிஸ்துவால் நமக்கு கொடுக்கப்பட்ட இந்த உடன்படிக்கை அல்லது புதிய ஏற்பாட்டின் அடிப்படையில், பழைய ஏற்பாட்டை விளக்கப்படுத்த வேண்டியது அவசியம்.

அவ்விதமான கண்ணோட்டத்தில் நீங்கள் போதிக்கவேண்டியது, விளக்கம் செய்யவேண்டியது அவசியம். பழைய ஏற்பாட்டில் அநேக காரியங்கள் கொடுக்கப்பட்டிருப்பது நமக்குத் தெரியும். சில மிருகங்களை நாம் உண்ணலாம், சில மிருகங்களை உண்ணக்கூடாது என்று சொல்லப்பட்டிருப்பதையெல்லாம் நாம் வாசித்துப் பார்க்கிறோம். லேவியராகமம் 11ம் அதிகாரத்தில் நாம் அவ்விதமாக வாசித்துப் பார்க்கிறோம். அது பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த இஸ்ரவேல் மக்களுக்கு கொடுக்கப்பட்டது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். நீங்கள் லேவியராகமம் 11:1-2 வசனங்களை படிக்கும்போது, "***கர்த்தர் மோசேயையும், ஆரோனையும் நோக்கி: நீங்கள் இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால், பூமியிலிருக்கிற சகல மிருகங்களிலும் நீங்கள் புசிக்கத்தக்க ஜீவ ஜந்துக்கள் யாதெனில்:***" என்று அறிய முடியும். இதில் இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தர் சொன்னார் என்று வாசிக்கிறோம். அடுத்து புதிய ஏற்பாட்டுக்கு வரும்போது, மாற்கு 7:10, அப்.10:15 போன்ற வசனங்களைப் பார்க்கும்போது, எந்த போஜனமும் தீட்டுள்ளது அல்ல என்று சொல்லப்பட்டிருப்பதை நாம் பார்க்கலாம். மாற்கு 7:18-ல் இயேசு இவ்விதமாய் கூறுகிறார், "***அதற்கு அவர்: நீங்களும் இவ்வளவு உணர்வில்லாதவர்களா? புறம்பேயிருந்து மனுஷனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தமாட்டாதென்று நீங்கள் அறிந்துகொள்ளவில்லையா?***" என்றும், அதைப்போல அப்.10:15, "***அப்பொழுது: தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று.***" என்றும் வாசிக்கிறோம். பேதுரு ஆண்டவரைப்பார்த்து அசுத்தமும், தீட்டுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்தது இல்லை என்று மறுக்கிறதை நாம் அப்.10:14ம் வசனத்தில் பார்க்கிறோம். அங்கே தீட்டான மிருகங்கள், பறவைகளை முன்னே சாப்பிடக்கூடாது என்று சொன்னபோது, அந்த மிருகங்கள், அந்த கூட்டிலே வைக்கப்பட்டிருக்கிறதை பேதுரு பார்க்கிறார். அதற்குத்தான் அவர் சொல்கிறார், நான் தீட்டும், அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் ஒருக்காலும் புசித்தது இல்லை என்று கூறுகிறார். அப்போதுதான் கர்த்தர் சொல்லுகிறதை நாம் அப். 10:15ம் வசனத்தில் படிக்கிறோம், "***அப்பொழுது:***

*தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று.*''

பழைய ஏற்பாட்டில் புசிக்ககூடாது என்று சொன்னதை, புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்து மாற்றியமைக்கின்றார். எல்லாவற்றையும், நாம் விசுவாசத்தோடு சாப்பிடலாம். 1 தீமோத்தேயு 4ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டபடி, நாம் ஸ்தோத்திரத்தோடே சாப்பிட்டால் எதுவும் அசுத்தமானது அல்ல என்று அப். பவுல் சொல்லுகிறதை நாம் வாசிக்க முடியும். ஆக, இவ்விதமாக பழைய ஏற்பாட்டு உபதேசம், புதிய ஏற்பாட்டில் மாற்றப்பட்டிருக்கிறதை கவனிக்க வேண்டும். புதிய ஏற்பாட்டில் தெளிவாக கூறப்பட்ட இத்தனை காரியங்களைப் படித்த பின்பும், நீங்கள் பழைய ஏற்பாட்டில் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது என்று எடுத்து போதித்தால், தவறாய் உபதேசிக்கிறீர்கள் என்று அர்த்தம். முன்பு அது சொல்லப்பட்டது என்பதும் உண்மைதான். ஆனால் இயேசுகிறிஸ்துவினால் இப்போது மாற்றப்பட்டிருக்கிறது. இன்னும்கூட, பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டது என்று சொல்லிவிட்டு, ஆனால் நான் உங்களுக்கு சொல்லுகிறேன் என்று இயேசுகிறிஸ்து சொல்கிற அநேக உபதேசங்களை புதிய ஏற்பாட்டில் பார்க்க முடியும். இன்னும்கூட பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட பலி முறைகள், எவ்விதமாக பலி செலுத்த வேண்டும், தேவாலயத்து தொழுகைமுறை ஆசாரிய முறைமை, எல்லாவற்றையும் நாம் பார்க்கிறோம். இவை எல்லாவற்றையும் புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்து மாற்றியமைத்து இருக்கிறார். இதை நாம் உணர்ந்து, நாம் புதிய ஏற்பாட்டு காலத்திலிருக்கிறோம், புதிய உடன்படிக்கையின் காலத்தில் இருக்கிறோம். நாம் பழைய ஏற்பாட்டை எடுத்து இப்பொழுது, அதைச் செய்ய வேண்டுமென்று போதித்தோமானால், தவறு செய்கிறோம் என்பதை புரிந்து கொள்ளவேண்டும். பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் நாம் சரிசமமாய் மதிக்கவேண்டிய ஒன்றுதான். ஆனால் அதேவேளையில் புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்து மாற்றியமைத்த காரியங்களை அப்படியே ஏற்றுக்கொள்வது என்பது நம்மேல் விழுந்த கடமை. அதைப்புரிந்துகொள்ள வேண்டும். ஆக, புதிய ஏற்பாடு என்ன சொல்லுகிறது? என்பதை நீங்கள் கவனமாக கவனித்து, தெளிவாக தெளிவுபட, உபதேசிக்க நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள், வேதத்தை விளக்கம் கொள்ள அழைக்கப்படுகிறீர்கள்.

பிரியமானவர்களே, அதைப்போல பழைய ஏற்பாட்டில் உபாகமம் *13:1-5* வசனங்களில், கள்ளத்தீர்க்கதரிசிகள், அதாவது பொய்யான தீர்க்கதரிசிகள், கொல்லப்படவேண்டுமென்று பார்க்கிறோம். இப்போது புதிய ஏற்பாட்டு காலத்தில் வாழ்கிற நாம், கள்ளத்தீர்க்கதரிசிகள் பெருகிவிட்ட இந்த காலகட்டத்தில், நாம் அவர்களைக் கொலை செய்யவேண்டுமென்றா? இதற்கு அர்த்தம். இல்லையல்லவா? நாம் அதைச் செய்வதும் சட்டப்படி குற்றம். மட்டுமல்ல, இயேசுகிறிஸ்து அதற்கு புதிய ஏற்பாட்டில் விதிவிலக்கெல்லாம் கொடுத்திருக்கிறார். நாம் மத்தேயு *13:24-30* வசனங்கள் வரை பார்க்கும்போது, களைகளைப் பற்றிய உவமையை இயேசுகிறிஸ்து கூறும்போது,

அவற்றை வளரவிடச் சொல்வதைப் பார்க்கிறோம். களையும் வளரட்டும், பயிரும் வளரட்டும், கடைசி நாளில், நியாயத்தீர்ப்பு நாளில் களைகளைப் பிடுங்கி, அதை நெருப்பில் போடுகிறதைப் பற்றி போதிக்கிறார். ஆகவே, மத சுதந்திரத்தை இயேசுவே தருகிறார். களைகளை விடுங்கள். அதுபாட்டுக்கு வளரட்டும் என்கிறார். தவறான காரியங்கள், தவறான உபதேசங்கள், தவறான மதப்போதனைகள் இருக்கட்டும், களைகள் வளரட்டும், நியாயத்தீர்ப்பு நாளில் அதைச் சுட்டெரிக்கலாம் என்றுதான் சொல்கிறார்.

தேவன் இந்த பொய்யான தீர்க்கதரிசிகளை பார்த்துக்கொள்வார் என்ற அர்த்தம் நமக்கு புரிகிறது. நாம் அதைப்புரிந்துகொள்ள வேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். மட்டுமல்ல, புதிய ஏற்பாட்டை அப்போஸ்தலர்கள் எவ்விதமாய் கையாண்டார்கள் தெரியுமா? இந்த வேத வசனங்களை தவறாகப் போதிக்கிறவர்களோடு தொடர்பு கொள்ளாதீர்கள் என்றுதான் யோவான் எழுதுகிறார். அந்தக் கள்ளப்போதகர்களை சபைக்குள்ளும் அனுமதிக்கக் கூடாது, கள்ளப் போதகங்கள் உள்ளே வராதபடி செய்யவேண்டுமே தவிர, கள்ளப்போதகர்களை, பொய்யான தீர்க்கதரிசிகளை கொல்லுவதற்கு உபதேசிக்க நீங்களும், நானும் அழைக்கப்படவில்லை.

இவ்விதமாக நாம் அநேக காரியங்களை சொல்லிக்கொண்டே இருக்கலாம். இதைப்போன்ற பல விஷயங்கள் நாம் கற்றுக்கொள்வதற்கு இருக்கிறது. அடுத்த பாடத்திலும் நாம் தொடர்ந்து கற்றுக்கொள்வோம். இதுவரை நீங்கள் கற்றுக்கொண்டவைகளை கவனத்தில் கொண்டு, வேதவசனங்களை விளக்கம் செய்யுங்கள். பழைய ஏற்பாட்டு காலத்தில் நாம் வாழவில்லை. புதிய ஏற்பாட்டு கிருபையின் காலகட்டத்தில் இயேசுகிறிஸ்து அநேக காரியங்களை மாற்றியிருக்கிறார். அதை மாற்றி நமக்கு போதித்திருக்கிறார். அந்த வெளிச்சத்திலேயே பழைய ஏற்பாட்டைப் பார்ப்போம். வேத வசனத்தை எந்தளவுக்கு கவனம் செய்து புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது என்பதை சற்று புரிந்துகொள்ளுங்கள், இது மிகவும் கடினமான காரியம் அல்ல. இதை நீங்கள் வாசித்து புரிந்துகொண்டாலே தெரியும். உங்களுக்கு, உங்களுடைய சிந்தையிலே ஆவியானவர் நினைவுபடுத்துவார். வேதத்தை வாசிக்கும்போது, நீங்கள் சரியான ஒரு அர்த்தத்தை பெற்றுக்கொள்வீர்கள். தவறான உபதேசங்கள் அகற்றப்படும், நீங்களும் சரியான உபதேசத்தை மற்றவர்களுக்கு கொடுப்பீர்கள். நீங்களும் சரியான உபதேசத்தை பின்பற்ற உங்களுக்கு உதவியாக இருக்கும் என்பது இந்த பாடத்தைக் கேட்கும்போதே நீங்கள் கற்றுக்கொண்டிருப்பீர்கள். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! தொடர்ந்து அடுத்து வருகிற பாடங்களையும் கேளுங்கள். கர்த்தர் இன்னும் உங்களுக்கு ஆவிக்குரிய வளர்ச்சியை தருவார்.

**<u>கேள்விகள்:-</u>**

1. *வேதாகமத்தை வியாக்கியானம் பண்ணும்போது, நம்முடைய அனுபவத்தை முக்கியப்படுத்தாதிருக்க வேண்டியதின் அவசியத்தை உதாரணங்களுடன் விளக்கமாக கூறுக?*

2. வேதத்தை வியாக்கியானம் செய்யும்போது மூலபாஷையில் வார்த்தையின் அர்த்தத்தை பார்க்கவேண்டியதின் முக்கியத்துவத்தினை உதாரணங்களுடன் விளக்கமாக கூறுக?
3. வேத வசனங்களின் மூலபாஷையினுடைய அர்த்தத்தை அறிந்துகொள்ள என்ன செய்ய வேண்டுமென்பதைக் கூறுக?
4. ஏன் வேத எடுத்துக்காட்டுகள் எல்லாவற்றையும் நாம் போதனைகளாக மாற்றக்கூடாது என்பதனை சற்று விளக்கமாக கூறுக?
5. வேதாகமத்தின் எடுத்துக்காட்டுகள் எப்பொழுது அதிகாரமுடையதாய் மாறுகின்றது என்பதனைக் கூறுக?
6. வேதத்தை விளக்கும்போது, நாம் இப்போது புதிய உடன்படிக்கையின் காலத்தில் இருக்கின்றோம் என்பதை கவனத்தில்கொள்ள வேண்டியதின் முக்கியத்துவத்தை உதாரணங்களுடன் விளக்கமாக கூறுக?

# <u>வேதாகம விளக்கவியல்</u>

## பாடம் - 9

**உருவக அர்த்தத்தை கற்பிக்கும் முறை எவ்வாறு உருவானது?**

இந்தமுறை கிரேக்கர்கள் மத்தியில் தோன்றியது என்று வேதவரலாற்றில் பார்க்க முடியும். சொல் அர்த்தமாக சொல்லப்பட்ட போதனைகளுக்கு உருவக அர்த்தம் கற்பிக்க ஆரம்பித்தார்கள். ஏனென்றால் கிரேக்கர்கள் தத்துவத்திற்கு மிகவும் பேர்பெற்றவர்கள் என்பதை நாம் அறிவோம். அதனால் அவர்கள் தெய்வங்களுடைய காரியங்களெல்லாம் அவர்களுக்கு மூடத்தனமாகத் தோன்றியது. அதனால் அவர்கள் தெய்வங்களுடைய போதனைகளுக்கு மதிப்பு குறையத் தொடங்கினது. ஆகவே தங்கள் மார்க்கங்களில் சொல்லப்பட்ட காரியங்களுக்கு மறைமுக அர்த்தம் இருக்கிறது என்று சொல்லி அர்த்தத்தையும், உருவகமாக பேச ஆரம்பித்தார்கள். அவர்களுடைய புராணக் கதைகள், கவிதைகளுக்கு வேறு அர்த்தம் இருப்பதாக போதிக்க ஆரம்பித்தனர். புராணக் கதைகள் மீது அதிக நம்பிக்கை கொண்ட அந்த மக்கள் மத்தியில் மீண்டும் மதிப்பு கூட தொடங்கியது. அதனால் நல்ல வரவேற்பை இந்த புராணக் கதைகள் பெற ஆரம்பித்தன. ஆகவே கிரேக்க தத்துவ ஞானிகளோடுகூட, இன்னும் அநேகர் இந்த சொல் அர்த்தமாய் சொல்லப்பட்ட காரியங்களுக்கு உருவக அர்த்தத்தை போதிக்க ஆரம்பித்தார்கள். இவ்விதமாய் சொல் அர்த்தமாய் சொல்லப்பட்ட காரியத்தைக் கூட கிரேக்கர்கள் உருவக அர்த்தமாய் போதிக்க ஆரம்பித்தார்கள் என்று வரலாற்றில் பார்க்க முடிகிறது.

கிரேக்கர்கள் மத்தியில் உருவான இந்த விஷயம், நாளடைவில் பரவி எகிப்திலுள்ள அலெக்சந்திரியா பட்டணத்தில் வாழ்ந்த யூதர்கள் மத்தியிலும் பரவ ஆரம்பித்தது. ஆகவே யூதர்கள் தங்கள் பழைய ஏற்பாட்டு புத்தகத்திற்கு கிரேக்கர்களைப் போலவே மறைமுக அர்த்தம் இருக்கிறது. ஒவ்வொரு சொல்லுக்கும் உருவக அர்த்தம் இருக்கிறது என்ற அடிப்படையில் போதிக்க ஆரம்பித்தார்கள். அதில் குறிப்பாக, அரிஸ்டோ போலஸ் என்பவர் ஆரம்பத்தில் பழைய ஏற்பாட்டை உருவக முறையில் விளக்கியவராக கருதப்படுகிறார். அதற்கு பிறகு, யூத தத்துவ ஞானியான பைடோ என்பவர் இதை இன்னும் அதிகமாக பிரபல்யப்படுத்தினார் என்று பார்க்கிறோம். இவர் வேதத்தை கிரேக்க முறைமையின்படியே உருவக அர்த்தப்படுத்தி பேச ஆரம்பித்தவுடன், அது மக்கள் மத்தியில் நல்ல மதிப்பைப் பெற்றது. பிளேட்டோ, பிதாகரஸ் என்ற கிரேக்க தத்துவ ஞானிகளுடைய போதனைகளையெல்லாம் பைலோ என்பவர் மிகவும் விரும்பினார். அதன் அடிப்படையிலேயே பழைய ஏற்பாட்டு வேத பகுதிகளுக்கும் கிரேக்கர் எப்படி தமது மத நூல்களுக்கு அர்த்தம் சொன்னார்களோ, அதே மாதிரி இவர் பழைய ஏற்பாட்டிற்கு அர்த்தம் கூற ஆரம்பித்தார். இவ்விதமாக அந்த முறைமை வளர ஆரம்பித்தது. இன்றைய காலத்திலும் இவ்விதமாக உருவகமாக பேசுபவர்கள் ஆவியானவரிடமிருந்து அல்ல, கிரேக்க மற்றும் யூதர்களிடமிருந்துதான் இந்த அர்த்த விளக்க முறைமையை பின்பற்றுகிறார்கள். ஆவியானவர் சொல்கிறார் என்று சொல்லி

உருவக அர்த்தத்தை உள்ளேக் கொண்டு வந்தவர்கள் கிரேக்கர்கள், அதைத் தொடர்ந்து யூதர்கள், அதிலும் குறிப்பாக பைலோ என்பவர். அதிலிருந்து கிறிஸ்தவர்களிடம் இந்த ஆவிக்குரிய அர்த்தம் இருக்கிறதென்ற முறைமை புகுந்தது. எவ்விதமான ஒரு துவக்கத்தை இது உடையதாய் இருக்கிறதென்று கவனித்துப் பாருங்கள். அந்தத் துவக்கம் இன்று ஒரு மாபெரும் பாதிப்பை உண்டாக்கியுள்ளது.

மறைவான போதனைகள் வேதத்தில் இல்லை என்று வேத வல்லுவர்களோ, இறையியலோ நமக்குப் போதிக்கவில்லை. உருவக அர்த்தமுள்ளதும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், அதை எப்படி கண்டுபிடிக்க வேண்டுமென்று கடந்த வகுப்புகளில் பார்த்தோம். ஆனால் உருவக அர்த்தம் சொல்லாததையும் அது உருவக அர்த்தமாய் இருக்கிறதென்று, சொல் அர்த்தமாய் சொல்லப்பட்ட வார்த்தைகளுக்கும் கூட உருவக அர்த்தத்தை கொடுப்பதுதான் தவறு.

**இது எவ்விதமாய் கிறிஸ்தவத்தில் வந்து வளர ஆரம்பித்தது?**

அலெக்சந்திரியாவில் வாழ்ந்த யூதர்கள், அந்த உருவக அர்த்தத்தைப் போதிக்க ஆரம்பித்தார்கள். அதைத் தொடர்ந்து கிறிஸ்தவ சபைகளுக்குள்ளாய் அது புக ஆரம்பித்தது. ஆரம்பத்தில் கிறிஸ்தவர்கள் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட பழைய ஏற்பாட்டைதான் பயன்படுத்தினார்கள். ஆனால் யூதர்கள் இதனை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். அதனால் எபிரெய மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமத்தைதான் தேவனுடைய வார்த்தையாக யூதர்கள் பயன்படுத்தினார்கள். ஆகவே இந்த பழைய ஏற்பாடு கிறிஸ்தவர்களுடைய வேதாகமம் அல்ல என்ற கருத்துடையவர்களாக யூதர்கள் இருந்தார்கள். அது தங்களுடைய நூல். கிறிஸ்தவர்களுக்கு சம்மந்தமில்லை என்று கருதினார்கள். கிறிஸ்தவர்களும், பழைய ஏற்பாட்டை தங்களுடைய புனித நூல் என்று நிரூபிப்பதற்காக, பழைய ஏற்பாட்டிலுள்ள எல்லா சம்பவங்களையும் இயேசு கிறிஸ்துவுக்கு சம்பந்தப்படுத்தி உருவகப்படுத்தி சொல்ல ஆரம்பித்தார்கள். பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனங்கள் எல்லாமே இயேசுவைப் பற்றியே சொல்கிறது என்பதை எடுத்துரைக்க ஆரம்பித்தார்கள். உண்மையிலேயே இயேசுகிறிஸ்துவைப் பற்றின தீர்க்கதரிசனங்கள், முன்னடையாளங்கள் ஏற்கனவே பழைய ஏற்பாட்டில் இருக்கிறது என்பது நாம் ஏற்றுக்கொண்ட விஷயம்தான். ஆனால் கிறிஸ்தவர்கள் எல்லாவற்றையுமே உருவக அர்த்தத்திற்கு கொண்டு வந்து விட்டார்கள். பழைய ஏற்பாட்டில் எந்த சம்பவங்களானாலும் எல்லாவற்றிற்கும் உருவக அர்த்தத்தைக் கொடுத்து விட்டார்கள்.

**உதாரணமாக,** *1* இராஜா.*17:12*ல், சாறிபாத் விதவை பொறுக்கிய இரண்டு விறகைக் குறித்து வாசிக்கிறோம். இது இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரத்தைக் குறிக்கிறதென்று கிறிஸ்தவர்கள் அன்று சொல்ல ஆரம்பித்தார்கள். உன். *1:13*ல், சூலேமித்தியின் ஸ்தனங்கள், இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட இரண்டு கள்வர்களைக் குறிக்கிறதென்று சொல்ல ஆரம்பித்தார்கள். அதன் நடுவில் இருக்கும்

வெள்ளைப் போளச்செண்டு இயேசுகிறிஸ்து என்றும் சொன்னார்கள். அதுபோல, மாராவின் தண்ணீரில் போடப்பட்ட மரத்தை, இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரத்தைக் குறிக்கிறதென்று போதித்தார்கள். யாத். 7ம் அதிகாரத்தில், எகிப்தில் தண்ணீர் இரத்தமாகிய சம்பவத்தை, இயேசுகிறிஸ்துவின் இரத்தம் என்றும் எல்லாவற்றிலும் இயேசுகிறிஸ்துவையே கண்டார்கள் என்பதை இறையியல் புத்தகத்தில் பார்க்கிறோம்.

இந்த உருவக அர்த்தம் போதிக்கும் முறை கி.பி. 11ம் நூற்றாண்டுவரை முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது என்று நாம் வரலாற்றில் பார்க்கிறோம். சபையில் சீர்திருத்த காலம் வரும்வரை, உருவக அர்த்தம் போதிக்கும் முறை முக்கிய இடத்திலிருந்தது. சீரியாவிலுள்ள அந்தியோகியா சபையோடு தொடர்புடைய மக்கள் மட்டுமல்ல, மத்திய காலத்தை சார்ந்த விக்டோரினஸ் என்று அழைக்கப்படும் மக்களைத் தவிர மற்ற எல்லோரும் மறைமுக அர்த்தத்தை முக்கியப்படுத்தி வாழ்ந்தார்கள். இந்த இரண்டு பிரிவினர்தான் சொல் அர்த்தத்தை சொல் அர்த்தமாய் எடுத்தார்கள். மற்றவர்கள் எல்லாரும் ஒவ்வொரு சொல்லுக்கும் மறைமுக அர்த்தம் இருக்கிறது என்று பழைய ஏற்பாட்டு வசனங்களுக்கு விளக்கம் கொடுத்து வந்தனர். இவர்கள் இவ்விதமாக வியாக்கியானம் பண்ணக் காரணம், பழைய ஏற்பாடு கிறிஸ்தவ வேத நூல் என்று நிரூபிப்பதற்காக. எல்லாம் இயேசுவைப் பற்றிதான் போதிக்கிறது. ஆகவே இது எங்களுடைய வேதம் என்று சொல்வதற்காகவே இந்த முற்பிதாக்கள் (ஆதி சபை பிதாக்கள்) உருவக அர்த்தத்தை அதிகமாக முக்கியப்படுத்தி பேசினார்கள். இவர்கள் பழைய ஏற்பாட்டு சம்பவங்களை எல்லாமே உருவகமாகத்தான் கருதுகிறார்கள். அந்த உருவகமாக சொல்லப்பட்ட ஆத்தத்தை வெளியே கொண்டு வந்தால்தான் முழுமையான அர்த்தத்தை வேதத்திலிருந்து கற்றுக்கொள்ள முடியும் என்ற ஒரு உறுதியான எண்ணம் இருந்தது. பழைய ஏற்பாட்டில் இயேசுவுக்கு முன் அடையாளமாக இருந்த சம்பவங்கள் என்னென்ன? சொல் அர்த்தமாக சொல்லப்பட்ட சம்பவங்கள் என்னென்ன? என்று கண்டுகொள்ள இயலாத இடத்தில் தான் இருந்தார்கள். ஆகவே எல்லாவற்றையும் இயேசுவுக்கு முன்னடையாளங்களாக கருத்தில் கொண்டு விளக்கம் கொடுத்தார்கள். எல்லா பழைய ஏற்பாட்டு வசனங்களுக்கும் வேறு அர்த்தம் இருக்கிறது என்று சொல்லி, கிரேக்கர்கள் விளக்கம் கொடுத்தது போலவே (தங்களுடைய புராணங்களை வியாக்கியானம் பண்ணுதல்) யூதர்கள், சபை பிதாக்கள் ஆகியோர்களும் அவ்விதமாகவே வியாக்கியானம் செய்தார்கள். இப்படியான ஒரு பாதிப்பு சபைக்கு கிரேக்கர்களிடமிருந்து வந்தது.

உருவக அர்த்தம் கற்பிக்கும் முறை கி.பி 2ம் நூற்றாண்டிலேயே கிறிஸ்தவர்களிடம் புகுந்துவிட்டது. அதனுடைய தாக்கம் மிக அதிகமாக 16ம் நூற்றாண்டு வரை இருந்தது. ஆதி சபை பிதாக்களில் ஒருவரான அலெக்சந்திரியாவைச் சேர்ந்த கிளமென்ட் என்பவர் "ஒரு வேதபகுதிக்கு ஐந்து அர்த்தங்கள் இருக்கிறது" என்று போதிக்க ஆரம்பித்தார். இவர் வாழ்ந்த அலெக்சந்திரியா பட்டணத்திலேயே யூதர்கள், கிரேக்க புராண வியாக்கியான முறையை பின்பற்றி பழைய ஏற்பாட்டுக்கு வேறு

அர்த்தங்கள் கற்பித்துக் கொண்டு இருந்தனர். இவரும் அலெக்சந்திரியாப் பட்டணத்திலே வாழ்ந்ததினாலே யூத முறையைக் கற்றுக் கொண்டு, ஆதி சபை பிதாவான **கிளமென்ட்** ஐந்து அர்த்தங்கள் இருப்பதாகக் கூறினார். அது என்னவென்றால்,

*1. சரித்திர அர்த்தம் 2. உபதேச அர்த்தம் 3. தீர்க்கதரிசன அர்த்தம் 4. தத்துவ அர்த்தம் 5. ஆழமான அர்த்தம்.*

மற்றொரு முற்பிதா, **ஓரிகன்** என்பவர், இவரும் அலெக்சந்திரியாவைச் சார்ந்தவர். இவர் அலெக்சந்திரியாவில் பிரபல யூத தத்துவ ஞானியான பைலோவின் முறையை மிகவும் அடிப்படையாகக் கொண்டு வேத வாக்கியங்களுக்கு அர்த்தம் கற்பிக்க ஆரம்பித்தார். இவர்தான் நல்ல சமாரியன் உவமைக்கு வேறு அர்த்தங்களை முதன்முதலில் கொடுத்தவர் என்று வரலாற்றில் பார்க்கிறோம். வேதாகமத்தை சொல் அர்த்தமாக விளக்குவது ஆரமம்பநிலை. ஆகவே அது யூத மார்க்கத்திற்கே பொருத்தமானது என்று சொல்லி ஓரிகன் வாதிட்டார். ஆவிக்குரிய மனிதன் சொல் அர்த்தங்களுக்கு அப்பால் சென்று அதில் மறைந்திருக்கும் ஆழமான சத்தியங்களை வெளியே கொண்டுவர பிரயாசமெடுக்க வேண்டும் என்று சொல்லி போதித்தார்.

வட ஆப்பிரிக்காவிலுள்ள ஹிப்போ என்ற இடத்திலிருந்த சபையில் கிபி 395 முதல் 430 வரை இருந்த **பிஷப் அகஸ்டின்** என்பவர் ஆதி சபை பிதாக்களுள் ஒருவர். இவர் 2 கொரி.3:6ஐ அடிப்படையாகக் கொண்டு வேத வசனத்திற்கு மறைமுக அர்த்தம் இருக்கிறதென்று கற்பித்தார். இந்த வசனத்தில் "எழுத்து கொல்லுகிறது. ஆவியோ உயிர்ப்பிக்கிறது" என்பதை, எழுத்து என்பது சொல் அர்த்தத்தைக் குறிக்கின்றது. ஆவி என்பது ஆவிக்குரிய அர்த்தத்தைக் குறிக்கின்றது என்று கருதி வேதாகமத்தில் சொல் அர்த்த பகுதிகளுக்கும் ஆவிக்குரிய அர்த்தத்தைக் கற்பிக்க ஆரம்பித்தார். சில பகுதிகளை இவர் சொல் அர்த்தமாகவும் குறிபிபடுகிறார். ஆனால் அதிகமான சொல் அர்த்த பகுதிகளையும் உருவக அர்த்தமாய் மாற்றி விட்டார். ஒவ்வொரு வேத வசனத்திற்கும் ஒன்றுக்கும் மேற்பட்ட அர்த்தம் இருக்கிறதென்பது இவருடைய கருத்து. மறைந்திருக்கும் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற கருத்துடையவராகக் காணப்பட்டார். ஓரிகனைப் போல இவரும் நல்ல சமாரியன் உவமையைப் பின்வருமாறு வியாக்கியானம் செய்தார். "எருசலேமிலிருந்து எரிகோவிற்கு போன மனிதன் ஆதாம். எருசலேம் என்பது பரலோகம். எரிகோ என்பது நரகத்தைக் குறிக்கிறது. கள்வர்கள், பிசாசு மற்றும் அவனுடைய தூதர்கள் அவர்கள் அடித்து அவனை, அவனுடைய அழியாமையை எடுத்துப் பிடுங்கிக் குற்றுயிராய் விட்டுவிட்டார்கள். குற்றுயிராய் கிடப்பது சரீரப் பிரகாரமாய் வாழ்ந்தும், ஆவிக்குரிய பிரகாரமாய் மரணத்தோடு வாழ்வதையும் குறிக்கிறது. ஆசாரியனும், லேவியனும் பழைய ஏற்பாட்டு வழிபாட்டு முறையை குறிக்கிறது. சமாரியன் இயேசு கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாக இருக்கிறார். காயங்கட்டுதல் என்பது பாவ காயங்களைக் கட்டுவதைக் குறிக்கின்றது. எண்ணெய் என்பது நல்நம்பிக்கையியன் ஆறுதலாயிருக்கிறது. இரசம் என்பது ஊக்கமாக

செயல்படும்படியான எச்சரிக்கையாயிருக்கிறது. வாகனம் (கழுதை) இயேசுவின் மாம்சத்தைக் குறிக்கிறது. சத்திரம் சபையைக் குறிக்கிறது. மறுநாள், இயேசுவின் உயிர்த்தெழுதல் என்பதையும் குறிக்கின்றது. இரு காசு, இவ்வுலக மற்றும் இனிவருகிற வாழ்வு பற்றிய வாக்குத்தத்தைக் குறிக்கிறது. சத்திரக்காரன் என்பவன் பவுலை முன்னடையாளமாக கொண்டுள்ளான் என்று வியாக்கியானம் செய்தார். இன்றும் கூட அநேகர் இப்படியே முழுமையாக கூறாவிட்டாலும், எண்ணெய் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது. இரத்தம் இயேசுவின் இரத்தத்தைக் குறிக்கிறது. கழுதை பரிசுத்த வேதாகமத்தைக் குறிக்கிறது. அதன் நான்கு கால்கள் நான்கு சுவிசேஷத்தைக் குறிக்கின்றது. கழுதையின் வால் அப்போஸ்தல நடபடிகளைக் குறிக்கிறது. அதன் தலை நிருபங்களைக் குறிக்கின்றது. மற்ற பகுதிகள் பழைய ஏற்பாடு என புதுப்புது அர்த்தங்களை சொல்லிக்கொண்டு போய்க்கொண்டிருக்கிறார்கள். அதற்காக எல்லாருமே மறைமுக அர்த்தத்தை சொல்கிறார்கள் என்றும் சொல்ல முடியாது. அலெக்சந்திரியாவில் இருந்த யூதர்கள்தான் அதிகமாக செய்ய ஆரம்பித்தார்கள்.

ஆனால் பாலஸ்தீனாவிலிருந்த யூதர்கள் பெரும்பாலும் சொல் அர்த்தப் பகுதிகளை, சொல் அர்த்தமாகவே விளக்கினார்கள். உருவக பகுதிகளுக்கு மட்டும் உருவக அர்த்தத்தைக் கொடுத்தார்கள்.

***எ.கா: வேதபாரகனாகிய எஸ்றா***. கி.மு. 586ல், பாபிலோனுக்கு சிறைபட்டுப் போய், இஸ்ரவேல் தேசத்திற்கு திரும்பி வந்த போது, அவர்கள் தாய்மொழியை கொஞ்சம் கொஞ்சமாக மறந்து போய், அரேபிய மொழியைத்தான் பேசத் தொடங்கினார்கள். பாபிலோனின் சிறையிருப்பில் அவர்களுக்கு எபிரெய மொழி மறந்து விட்டது. வேதவாக்கியம் எபிரேய மொழியில் இருந்தபடியினால், எஸ்றாவும் அவனைச் சேர்ந்தவர்களும் அதை வாசித்து அதன் அர்த்தத்தை அரமேயு மொழியில் யூதர்களுக்கு விளங்கப்பண்ணினார்கள். இதை நாம் நெகேமியா 8ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். இதற்கு பின்பு பாலஸ்தீனாவைச் சேர்ந்த ஹெலல், இஷெமெல், எலியேசர் போன்ற யூத போதகர்கள் வேத வாக்கியங்களை எவ்வாறு வியாக்கியானம் செய்ய வேண்டும் என்கிற முறைமைகளையும் அவர்கள் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார்கள். சொல் அர்த்தப் பகுதிகளை, வார்த்தையில் உள்ள அர்த்த படியே விளக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தார்கள். ஆனாலும் உருவக அர்த்தம் கற்பிக்கும் முறை இவர்களையும் பாதித்தது என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். பாலஸ்தீனாவில் வாழ்ந்த யூதர்களும் இந்த வேத வசனங்களின் மறைபொருள்களை கண்டுபிடிக்க, உருவக அர்த்தத்தை போதிக்க ஆரம்பித்தார்கள் என்பது உண்மை.

அந்தியோகியாவில் வாழ்ந்த சபை பிதாக்கள், சொல் அர்த்தத்தை சொல் அர்த்தமாகவும், உருவக அர்த்தத்தை உருவக அர்த்தமாகவும் பார்த்தவர்கள். இந்த அந்தியோகியா சுற்றியுள்ள பகுதிகளில், சபை பிதாக்கள் போதித்த இடங்களில் அவர்கள் வார்த்தையிலுள்ள அர்த்தத்தின்படியே போதித்தார்கள். முக்கியமான சபை பிதாக்கள் -

லூசியன், துரோத்தியஸ், டயோடோரஸ், தியோடர், கிறிஸ் சொஸ்தோன் என்பவர்கள். இவர்கள் யாவரும் சொல் அர்த்தமாக வேதத்தை விளக்கம் செய்தவர்கள். இவர்கள் பழைய ஏற்பாட்டு சம்பவங்களைப் பற்றி, அவை உண்மையாகவே நடைபெற்றவை என்று ஒத்துக்கொண்டு விளக்கினார்கள். அதனால் அவைகளை ஒப்புவமைக் கதைகளாக கருதி ஒவ்வொன்றிற்கும் வேறு அர்த்தம் கற்பிப்பது எந்த அளவிற்குத் தவறானது என்றும் சுட்டிக்காட்டினார்கள். பழைய ஏற்பாடு அனைத்துமே இயேசுவை அடையாளப்படுத்துகிறது என்று சொல்லக்கூடாது என்றும், அதே வேளையில் இயேசுவுக்கு முன்னடையாளமான சம்பவங்கள், மேசியாவைப் பற்றிய பகுதிகளாக பழைய ஏற்பாட்டில் இருக்கிறது உண்மைதான் என்றும் ஒத்துக்கொண்டார்கள். அதை மட்டும் சொன்னார்கள். பலிகள், பண்டிகைகள் போன்ற சடங்காச்சார செய்கைகள் எல்லாம் இயேசுகிறிஸ்துவை முன்னடையாளமாகக் காட்டுகிறது என்று போதித்தார்கள்.

***<u>மத்திய காலகட்டம்:-</u>***

சபை சரித்திரத்தின் மத்திய காலக்கட்டத்தை நாம் பார்க்கும்போது, பெரும்பாலான மக்கள் சொல் அர்த்த பகுதிகளுக்கு வேறு அர்த்தம் கற்பிக்கிறவர்களாகவே இருந்தார்கள். அப்படி இருந்தபோதும் பாலஸ்தீனாவிலுள்ள தூய விக்டோரியா குழு மடத்தில் இருந்தவர்கள், வேதத்தை சொல் அர்த்தமாகவே வியாக்கியானம் செய்தார்கள் என்று வரலாற்றில் பார்க்கிறோம். இவர்களில் ஹியுகோ, ரிச்சர்டு, ஆன்ட்ரு போன்றவர்கள் முக்கியமான தலைவர்கள். இதைத் தவிர சில ரோம கத்தோலிக்கத் தலைவர்களும் சொல் அர்த்த விளக்கமுறைக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தார்கள். கி.பி 16ம் நூற்றாண்டுக்குப் பிறகு மார்டின் லூத்தர், (சபையில் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தவர்) சொல் அர்த்தத்தை உருவகமாக கற்பிக்கும் முறையை முற்றிலுமாய் எதிர்த்தார். வன்மையாகக் கண்டித்தார். என்னுடைய பிரசங்கம் சொல் அர்த்த வார்த்தையையே அடிப்படையாகக் கொண்டுள்ளது என்று சொன்னார். அதுவரையில் மறைமுக அர்த்தத்தை சொல் அர்த்தத்திற்கு போதித்தார்களே, அதை இவர் அழுக்கு, குப்பை என்று கூறினார். இந்த முறை விபச்சாரிக்கு இணையாய் இருக்கிறது. குரங்கு விளையாட்டுக்கு ஒப்பாயிருக்கிறது என்றெல்லாம் மார்டின் லூதர் பேசினார். அதேப்போல ஜான் கல்வின் வேறு அர்த்தம் கற்பிக்கும் முறையை பிசாசின் முறை என்று கடுமையாக சாடினார். வேத பகுதிக்கு வேறு அர்த்தம் கற்பிப்பதினால், மக்கள் வேதத்தின் உண்மையான செய்தியை அறிய முடியாத ஒரு இடத்திற்கு நீங்கள் கொண்டுபோய் விடுகிறீர்கள். ஆகவே இது ஒரு பிசாசின் வஞ்சகம் என்று கூறினார்.

***கிறிஸ்தவ வட்டாரத்தை எந்த அளவிற்கு தாக்கியுள்ளது:***

இன்று வரை மிக அதிகமாக தாக்கத்தை உண்டாக்கிக் கொண்டு இருக்கிறது என்பது தான் உண்மை. கி.பி. 2ம் நூற்றாண்டிலிருந்து 16ம் நூற்றாண்டு வரை பெரும்பாலான இடத்திலே வேத வாக்கியத்திற்கு வேறு அர்த்தம் கற்பிக்கும் முறைதான் இருந்து வந்தது என்று சற்று முன்னர் பார்த்தோம். அதற்கு பிறகு ஜான் கால்வின்,

மார்டின் லூதர் போன்றவர்களுடைய முயற்சியினாலே அது மாற்றத்தை அடைந்திருக்கிறது என்பது உண்மை. இன்றைக்கும் புராட்டஸ்டன்ட் (சீர்திருத்த) சபைகளிலே இவ்விதமாய் சொல் அர்த்தம், சொல் அர்த்தமாகவே போதிக்கப்படுகிறதை நாம் பார்க்க முடியும். ஆனால் அநேக சபைகளில் மறைமுக அர்த்தத்தை சொல்ல விரும்புகிறேன் என்று சொல்லி போதிக்கிறவர்களும் அதிகமாக இருக்கத்தான் செய்கிறார்கள். ரோமன் கத்தோலிக்க சபைகளில் கூட இன்றைக்கும் சொல் அர்த்தம் கற்பிக்கும் பகுதிகளுக்கு வேறு அர்த்தம் கற்பிக்கும் முறை அதிகமாகவே இருக்கிறதென்று நாம் சொல்ல முடியும். ஆனால் இன்று வேதாகம சம்பவங்களை புராணக் கதைகள் போல் கருதி புதிய வியாக்கியானம் செய்கின்ற முறையும் வந்திருக்கிறது என்ற எச்சரிப்பும் தேவை. கர்த்தர் சொல்லாததை சொன்னார் என்றும், தேவன் இப்படி எனக்கு புதிய வெளிப்பாட்டைத் தந்தார் என்றும் கூறுகிறக் கூட்டத்தை நாம் கண்ணெதிரே பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். இவற்றையெல்லாம் உணர்ந்து நாம் வேதத்தைப் படிக்க வேண்டும். அதற்கு இந்த வேதாகம விளக்கவியல் மிகவும் உதவி செய்கின்றது. உருவகமாக சொல்லப்பட்ட வார்த்தைகளில், இது எதற்கான உருவகம் என்று முதலாவது கண்டுபிடிக்க வேண்டும். அது எந்த அர்த்தத்துடனான உருவகம் என்று இரண்டாவது கண்டுபிடிக்க வேண்டும். அதை திரும்ப அந்த இடத்தில் பொருத்தி சரியான அர்த்தத்தை காண வேண்டும். அவற்றை நாம் ஜெபத்துடன் கண்டுபிடிக்க ஆவியானவர் உதவி செய்வார். ஒரு மொழிபெயர்ப்பு தவிர, ஆங்கில மொழி பெயர்ப்பு, எபிரெய மொழியில் பழைய ஏற்பாடு, கிரேக்க மொழியில் புதிய ஏற்பாடு வசனங்களைப் பார்க்கலாம். வசனத்தில் அதிகமாக காரியங்களை ஏற்றிப்பேசுதல் என்பது, வேத வசனத்தை கூட்டுகிற செய்கையாயிருக்கிறது. நாம் வேத வசனத்தில் எதையாகிலும் கூட்டினால், இந்த புஸ்தகத்திலுள்ள வாதைகளை தேவன் அவன் மேல் கூட்டுவார் என்று வெளி.22:19ல் வாசிக்கிறோம். ஆகவே நாம் கவனமாக இருக்க வேண்டும். வேறு அர்த்தங்களை கூட்டிச் சொல்வதால், நம்மீது இவ்விதமான வாதைகளை கூட்டிக் கொள்ளாதிருப்போமாக. நீதி.30:6 “அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே. கூட்டினால் அவர் உன்னை கடிந்து கொள்வார். நீ பொய்யனாவாய்” என்று வேதம் நம்மை எச்சரிக்கிறது. ஆகவே வேத வார்த்தைகளில் இந்த இரு தன்மைகளையும் கருத்தில் கொண்டுதான் நாம் செயல்பட வேண்டும். சரியான அர்த்தத்தை அறிய வேண்டும், சரியான அர்த்தத்தைப் போதிக்க வேண்டும் என்ற உறுதிப்பாடு நமக்கு தேவை. வேத வசனத்தோடு ஒன்றைக் கூட்டுகிற பாவத்திற்கு நாம் ஆளாகக் கூடாது மற்றும் பொய்யராகிவிடவும் கூடாது. கர்த்தர் எச்சரித்த பாவங்களை செய்து வேதனைகளை சம்பாதித்து விடக்கூடாது என்பதிலே நாம் எச்சரிக்கையாயிருப்போம்.

ஆரோக்கியமாய் நாம் உபதேசிப்பது மிகவும் பாக்கியமான காரியம். சொல் அர்த்தத்தை சொல் அர்த்தமாகவும், உருவக அர்த்தத்தை உருவக அர்த்தமாகவும் போதித்து மக்களை ஆரோக்கியமான உபதேசத்தில் வளர்ப்பதே பாக்கியமான

காரியம். அதற்கு இந்த பாடம் உங்கள் அனைவருக்கும் பிரயோஜனமாக இருக்கும் என்று இப்பொழுது நீங்கள் கற்றுக்கொண்டிருக்கிறீர்கள். இதைப்போன்று இன்னும் அடுத்த பாடத்தில் நாம் விரிவாகக் கற்றுக்கொள்வோம். தொடர்ந்து தேவகிருபை உங்கள் அனைவரையும் தாங்கி நடத்துவதாக! கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

**<u>கேள்விகள்:-</u>**

1. உருவக அர்த்தத்தை கற்பிக்கும் முறை எவ்வாறு உருவானது என்பதனை சற்று விளக்கமாக கூறுக?
2. உருவக அர்த்தத்தை கற்பிக்கும் முறை கிறிஸ்தவத்தில் எவ்வாறு வளர ஆரம்பித்தது என்பதனை உதாரணங்களுடன் விளக்கமாக கூறுக?
3. கிறிஸ்தவத்தில் உருவக அர்த்தத்திற்காக தவறாகப் பயன்படுத்தப்பட்ட சில வேத வசன இருப்பிடங்களுடன் கூறுக?
4. ஆதி சபை பிதாவான கிளமெண்ட், ஒரு வேதபகுதிக்கு எத்தனை உருவ அர்த்தங்கள் இருப்பதாக கூறினார்? அவைகள் யாவை?
5. பிஷப் அகஸ்டின் என்பவர் நல்ல சமாரியன் உவமையை எவ்வாறு வியாக்கியானம் செய்தார் என்பதனைச் சற்று விளக்கமாக கூறுக?
6. பாலஸ்தீனாவிலிருந்த யூதர்கள் வேதபகுதியை எவ்வாறு விளக்கப்படுத்தினார் என்பதனை உதாரணங்களுடன் சற்று விளக்கமாக கூறுக?
7. வேதத்தை சொல் அர்த்தமாக விளக்கம் செய்த முக்கியமான சபை பிதாக்கள் யார்? யார்? என்பதனைக் கூறுக?
8. அந்தியோகியாவில் வாழ்ந்த சபை பிதாக்களின் வேதபோதனை எவ்வாறு காணப்பட்டது என்பதனை சற்று விளக்கமாக கூறுக?
9. சபை சரித்திரத்தின் மத்திய காலகட்டத்தைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
10. வேதபகுதிகள் அனைத்திற்கும் உருவ அர்த்தம் கூற விளைவது எவ்வாறு கிறிஸ்தவ வட்டாரத்தை தாக்கக்கூடியதாக இருக்கின்றது என்பதனை சற்று விளக்கமாக விவரி?

# <u>வேதாகம விளக்கவியல்</u>

## பாடம் - *10*

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே இயேசுகிறிஸ்துவின் அன்பின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த பாடத்திலும், வேத வசனங்களை வியாக்கியானம் செய்யும்போது நாம் கவனிக்கவேண்டிய காரியங்களைக் குறித்து தொடர்ந்து கற்றுக்கொள்ளப்போகிறோம்.

### <u>சந்தர்ப்ப சூழ்நிலையைக் கவனிக்க வேண்டும்:-</u>

நாம் வேதாகமத்தை விளக்கம் கொள்ளும்போது, அதன் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பார்க்க வேண்டும். அதன் முக்கியத்துவம் என்ன? என்றெல்லாம் நாம் இந்தப் பாடத்தில் சிந்திக்க இருக்கின்றோம். வேத பகுதியின் சந்தர்ப்ப நிலையை அறிந்திட வேண்டியது மிக மிக அவசியம். ஏனெனில், சிலர் அதனுடைய சந்தர்ப்ப சூழ்நிலையைப் பார்க்கிறது இல்லை. முன்னும், பின்னுமுள்ள வசனத்தைப் பார்க்கிறது இல்லை. முன்னும், பின்னும் உள்ள அதிகாரங்களைப் பார்க்கிறது இல்லை. அவ்விதமாக ஒரு குறிப்பிட்ட வசனத்தை எடுத்து, அந்த அதிகாரத்திலிருந்து தூர எடுத்து, அதற்கு தனி விளக்கம் கொடுக்கப்பட்டதாய் மாறிவிடுகிறது. கள்ள உபதேசத்தை உங்களை அறியாமலே செய்துவிடுகிறவர்களாய் மாறிவிடுவீர்கள் என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன், எச்சரிக்கவும் விரும்புகிறேன்.

சந்தர்ப்ப சூழ்நிலையை கவனிக்க வேண்டியது அவசியம். Context-ஐ பார்க்கவேண்டியது அவசியம். அதைப் பார்க்காமல் செய்கிற விளக்கம் தவறாகப்போய்விடும். அதனால், அர்த்தவிளக்கம் செய்யும் முன்னர், ஒரு பகுதியை, ஒரு வேத வசனத்தை, நீங்கள் விளக்கப்படுத்தும் முன்னர், அதற்கு முன்னும், பின்னுமுள்ள வசனங்களை வாசித்து பார்க்கவேண்டியது அவசியம். ஒருமுறை, இரண்டுமுறை, அல்லது அது புரியும்வரை திரும்ப, திரும்ப வாசித்துப்பார்க்க வேண்டும். அது எந்த சந்தர்ப்பத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது? என்பதை முதலாவது அறிந்துகொள்ள முயற்சி எடுக்க வேண்டும். ஏனெனில், இந்த வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் வேதாகமம் அதிகாரப்பிரிவுகளையும், வசனப் பிரிவுகளையும் கொண்டிருக்கவில்லை என்பதை, நாம் முதலாவது அறியவேண்டியது அவசியம். அன்றைய காலகட்டத்தில், தொடர்ச்சியாக, பத்திபத்தியாக, அதாவது Paragraph போல் மொத்தமாக, தொடர்ந்து எழுதப்பட்ட ஒரு புத்தகம்தான் வேதாகமம். ஏனெனில், ஆரம்பத்தில், வேதாகமத்தில் அதிகார வசன பிரிவுகள் இருந்திருக்கவில்லை. அந்த அதிகார வசன பிரிவு வந்தபிறகு, அதைப்படிப்பதற்கு எளிதாக மாறிவிட்டிருக்கிறது. உதாரணமாக யோவான் *3:16* என்று சொல்லும்போது, அதன் இருப்பிடத்தை எளிதாக நாம் கண்டுகொள்ள முடியும். ஆனால் அதைச் சொல்லாதபடி வசனத்தை மட்டும் நாம் சொல்வோமானால், முழு வசனமும் தெரிந்திருக்க வேண்டும் அல்லது முழு வேதாகமும் தெரிந்தால்தான் அந்த வசனம் எங்கேயிருக்கிறது என்று நீங்கள் தேடிக்கண்டுபிடிக்க முடியும்.

ஆகவே இவ்விதமாக வேத வசனங்கள் வரிசையாக, மொத்தமாக எழுதப்பட்ட அந்த வசனத்தொகுப்பு, பிறகு நம்முடைய வசதிக்காக அதிகாரமாக, வசனங்களாக பிரிக்கப்பட்டது. நாம் இப்பொழுது பார்க்கிற அதிகார வசனப்பிரிவுகள், Stephen Langton என்பவரால் கொண்டுவரப்பட்டது என்று வரலாற்றில் பார்க்கிறோம். இவர் Conterbury-ல் ஆர்ச் பிஷப்பாக இருந்தார். இந்த Langton என்பவர் கி.பி.1227-ல் இவ்விதமான பிரிவுகளைச் செய்தார் என்று பார்க்கிறோம். கி.பி.1382-ல் விக்ளிப் ஆங்கில வேதாகமம் இந்த அதிகார வசன பிரிவுகளை எடுத்து பயன்படுத்த ஆரம்பித்தது. இதற்கு பின்பதாக இந்த Langton என்பவருடைய, அதிகார வசனப்பிரிவுகள் எல்லா வேதாகமத்திலும் பயன்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டது என்று வரலாற்றில் நாம் பார்க்கிறோம்.

இவ்விதமாக கி.பி.1382 வரை வேதாகமத்தில், இன்றைக்கு இருப்பதுபோன்ற அதிகார, வசன பிரிவுகள் இருந்திருக்கவில்லை. அதற்குப்பின்பதாகவே அதிகார, வசன பிரிவுகள், நம்முடைய வசதிக்காக கொண்டுவரப்பட்டது. ஆனால், அவ்வாறு கொண்டுவரப்பட்டதினால், அநேக நன்மைகள் உண்டானது என்பது உண்மைதான். ஆனாலும், அதில் சில குறைபாடுகள் இருக்கிறது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். என்ன குறைபாடுகள் இருக்கிறது? வசனம், வசனமாக பிரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டபின்பு, இந்த தனியான வசனங்கள் எல்லாம் தனியான நிலைக்கு வந்துவிட்டது போன்ற ஒரு சிந்தனைக்கு நாம் வந்துவிட்டோம். ஒரு குறிப்பிட்ட அதிகார பகிர்வுக்கு வந்த பின்பு இந்த அதிகாரத்திற்கும், முந்தின அதிகாரத்திற்கும் சம்பந்தமில்லை என்று சொல்லி, நாம் நினைக்கின்ற இடத்திற்கு வந்துவிட்டோம். ஆனால் அது சரியான விஷயம் அல்ல, சிந்தனை அல்ல. முந்தின அதிகாரத்தின் தொடர்ச்சி, அடுத்த அதிகாரத்தின் முதல் வசனத்தில்கூட இருக்கும். மட்டுமல்ல முந்தின வசனத்தினுடைய கருத்தின் உயிரோட்டம் அடுத்த வசனத்திலோ, அல்லது வசனத்தின் ஒரு பகுதியிலோ அல்லது ஒரு அதிகாரத்தின் பகுதிகளிலோ, அல்லது அந்த புத்தகம் முழுவதிலும் கூட தொடர்ந்து இருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இன்னும் சொல்லவேண்டுமென்றால், வேதத்திலுள்ள ஒவ்வொரு புத்தகத்தின் கருத்துக்களும் ஒன்றோடொன்று, பின்னிப் பிணைந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

முதலாவது வேதவசனத்தைப் பார்க்க வேண்டும். அதற்கு முன்னும், பின்னுமுள்ள வசனங்களைப் பார்க்கவேண்டும். அதின் அதிகாரத்தைப்பார்க்க வேண்டும். அது எந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது? அடுத்து, முந்தின அதிகாரத்தில் இந்த கருத்து துவக்கி வருகிறதா? என்பதைப் பார்க்கவேண்டும். அடுத்து அந்த புத்தகம் முழுவதும் என்ன சொல்கிறது? எதைப்பற்றி எழுத ஆரம்பித்து, அவர் சொல்ல ஆரம்பித்து இருக்கிறார்? என்பதைப் பார்க்கவேண்டும். இதற்குபின்பு, இந்த வசனத்தின் கருத்து முழு வேதாகமத்திலும் எந்த அர்த்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்ற கண்ணோட்டத்தோடு நீங்கள் சிந்தித்து பார்க்கும்போது, ஆரோக்கியமான ஒரு கருத்தை நீங்கள் வேதத்தில் பெற்றுக்கொள்ள முடியும். மாறாக ஒரு குறிப்பிட்ட வேத வசனத்தை

எடுத்துக்கொண்டு வேதம் இதைத்தான் போதிக்கிறது என்று சொல்வது கள்ளப்போதகம், அது தவறான உபதேசம் என்பதை நீங்கள் புரிந்து, இதற்கு உங்களை ஒப்புக்கொடுக்க வேண்டியது அவசியம். நல்ல உபதேசத்தை சரியான கருத்தை, வேதாகமத்தில் பெற்று, மற்றவர்களுக்கு கொடுக்கவேண்டும் என்ற அவசியத்தின் உணர்வை நீங்கள் பெற வேண்டியது மிகவும் மிகவும் அவசியம் என்பதை நீங்கள் முதலாவது கற்றுக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக, பிலிப்பியர் *3:13-14* வசனங்களைப் பார்க்கலாம். இதை வாசித்து, தொடர்ந்து அதிலுள்ள அர்த்தத்தை நாம் எவ்விதமாக எடுக்கிறோம் என்ற விபரத்தை விளக்கமாக கற்றுக்கொள்வோம்.

*13.* ***சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி,***
*14.* ***கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.***

என்று படிக்கிறோம். இந்த இரண்டு வசனத்தை மட்டும் கவனித்துப் பாருங்கள். இதை உற்று கவனித்து பார்ப்பீர்களானால், யார் சொல்கிறார்? என்ற கேள்வியைக் கேட்டுப்பாருங்கள். நீங்கள் உடனே கண்டுபிடிக்க முடியும். யார் சொல்லுகிறது? யாரைப்பற்றி இந்தப்பகுதி சொல்கிறது? பின்னானவைகளை மறந்து - என்று சொல்லியிருக்கிறவை, எந்தப் பின்னானவைகளை அவர் மறந்தார்? முன்னானவைகளை நாடுகிறார் என்று சொல்லுகிறார் இதை எழுதியவர். எந்த முன்னானவைகளை அவர் நாடிச் செல்கிறார்? இலக்கை நோக்கி தொடருகிறதாகச் சொல்கிறாரே. அவர் கூறுகிற இலக்கு என்ன? என்று இந்த வசனங்களை வைத்து, நீங்கள் கேள்வி கேட்டுப் பார்ப்பீர்களானால், உங்களுக்கு ஒன்றும் புரிகிறது இல்லை. ஏனெனில், இந்த இரண்டு வசனத்திலும், அதற்குரிய பதில் சொல்லப்படவில்லை. ஆக, இந்த இரண்டு வசனத்திலிருந்தும் நீங்கள் அர்த்தம் கண்டுபிடிக்க முடியாது. இப்போது, நீங்கள் ஒன்று செய்யவேண்டும். இதற்கு முன்பும், பின்பும் உள்ள வசனங்களைப் பார்க்கவேண்டும். உடனடியாக இருக்கிற வசனங்களைப் பார்ப்பீர்களானால், அதிலிருந்து நீங்கள் கேட்ட கேள்விகளுக்கான பதில் மற்ற வசனங்களிலிருந்து கிடைக்கிறதாக இருக்கிறது.

நீங்கள் இப்போது, இந்த புத்தகத்தின் துவக்கத்திற்கு போங்கள். இந்த பிலிப்பியருக்கு எழுதின நிருபம், பெரியதொரு புத்தகம் அல்ல. நான்கு அதிகாரங்கள் தான் இருக்கிறது என்பதை நாம் அறிவோம். நீங்கள் வேதத்தை அறிந்துகொள்ள விரும்பினால், இந்த மாதிரி சிறிய புத்தகத்தையாவது முழுவதும் ஒரே நேரத்தில் வாசித்து பழகவேண்டும். இப்போது பிலிப்பியர் *1:1*ம் வசனத்தைப் படிக்கும்போது, ***"இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலும் தீமோத்தேயும், பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது:"*** என்று துவங்குகிறதைப் பார்க்கலாம். ஆக, நாம் சற்று முன்னர் 3ம் அதிகாரத்தில் 13-14ம் வசனத்திற்கு கேட்ட கேள்விகளுக்கு பதில்

எங்கேயிருக்கிறது என்றால், 1:1ம் வசனத்தில் இருக்கிறது. இதை யார் சொல்கிறார் என்றால், பவுல் என்பவர் சொல்கிறார். யாருக்கு எழுதுகிறார்? பிலிப்பி பட்டணத்தில் வாழ்ந்த கிறிஸ்து இயேசுவுக்குள்ளான விசுவாசிகளுக்கு எழுதுகிறார். எனவே, யார் எழுதுகிறார்? யாருக்கு எழுதுகிறார்? என்பதற்கான பதிலை இப்போது கண்டுபிடிக்க முடிகிறது.

அடுத்து பிலிப்பியர் 3:10-ம் வசனத்தை படிப்பீர்களானால், அவருடைய குறிக்கோளைப்பற்றி சில காரியங்களைப் பார்க்கலாம். பிலி.3:10-11,

***10. இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்,***
***11. அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்.***

என்று எழுதுகிறார். இந்த வசனங்களில் அவர் தன்னுடைய குறிக்கோள்களை தெரிவிக்கிறார். அவருடைய உயிர்த்தெழுந்த வல்லமையை நான் அறியவேண்டும். அவருடைய பாடுகளின் ஐக்கியத்தை அறியவேண்டும். அவருடைய மரணத்துக்கு ஒப்பான மரணத்துக்குள்ளாகி, எப்படியாகிலும், நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருக்கிற தகுதியைப்பெற வேண்டும் என்பதுதான் அவருடைய முக்கியமான குறிக்கோளாக இருக்கிறது. இந்த குறிக்கோளை அடைவதற்காகவே, அவர் முன்னோக்கி நாடி செல்வதாக சொல்கிறார். பிலி.3:13-14-ம் வசனங்களுக்குரிய பதில் பிலி.3:10-11 ஆகிய இரண்டு வசனங்களிலிருந்து நாம் பெறுகிறோம். இவ்விதமாக வேதத்தின் ஒரு பகுதியின் வசனத்தை எடுத்துக்கொண்டு, விளக்கம் செய்யக்கூடாது என்பதை இப்போது புரிந்து கொண்டிருப்பீர்கள். முழு புத்தகத்தையும் பார்க்கவேண்டியிருக்கிறது. முழு அதிகாரத்தையும் பார்க்க வேண்டியிருக்கிறது.

வசனத்தின் முன்னே, பின்னேயுள்ள வசனங்களைப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான், நாம் சரியான அர்த்தத்தைக்கொடுக்க முடிகிறது என்பதைப் பார்க்க முடிகிறது. இதைப்போல, ஒரு பிரசங்கம் செய்யவேண்டுமானால், இதே முறையைத்தான் நாம் பின்பற்றவேண்டும். முன்னும், பின்னும் இருக்கிற பகுதிகளைப் பார்க்க வேண்டியிருக்கிறது. இது அவசியம். ஆகவே, நீங்கள் வேதத்தின் எந்தவொரு வசனத்தையும் எடுத்து தனியாகப் பிரசங்கியாதீர்கள். ஒரு குறிப்பிட்ட வசனத்தில் ஆரம்பிக்கலாம், அது தவறல்ல. ஆனால் அந்த வசனத்திற்கு முன், பின் இருக்கிற வசனங்களையும் ஆராய்ந்து பாருங்கள். இவைகளெல்லாம், அந்த வசனத்தை விளக்கப்படுத்துவதற்கு உதவிசெய்யும். அதுதான் சரியான விளக்கமாக இருக்கமுடியும். இனிமேல் அவ்வாறு விளக்கம் செய்ய முற்படுங்கள்.

## கவிதை நடை புத்தகங்களை வியாக்கியானம் செய்தல்:-

இதைத்தொடர்ந்து, கவிதை நடையிலிருக்கிற புத்தகங்களை, நாம் எவ்விதமாக வியாக்கியானம் செய்யவேண்டுமென்று சற்று சிந்திப்போம். நம்முடைய வேதாகமத்தில்

அநேக புத்தகங்கள் கவிதை நடையில் இருக்கிறதை நீங்கள் அறிந்துவைத்திருக்க வேண்டியது அவசியம். வேதாகமத்தில் அநேக வேத பகுதிகள் கவிதை நடையில் காணப்படுகிறது. உதாரணமாக, சங்கீதம், நீதிமொழிகள், உன்னதப்பாட்டு, புலம்பல் போன்ற புத்தகங்கள் கவிதை நடையில் இருக்கிறதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். யோபு புஸ்தகத்தில் 1ம் அதிகாரம் மற்றும் கடைசி அதிகாரத்திலுள்ள 1-7 வசனங்கள் தவிர, மற்ற பகுதிகள் அனைத்தும் கவிதை நடையிலேயே உள்ளன என்பதையும் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். தீர்க்கதரிசன புத்தகங்களை நீங்கள் எடுத்துக்கொண்டால், ஏசாயா, எரேமியா, ஓசியா போன்ற புத்தகங்களில் பெரும்பாலானவைகள் கவிதை நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. இதுபோக, எசேக்கியேல், யோனா, சகரியா போன்ற புத்தகங்களின் சில பகுதிகள் கவிதை நடையில்தான் உள்ளன. இவற்றைத்தவிர, வேதத்தின் ஏனைய பகுதிகளிலும், கவிதை நடையில் எழுதப்பட்டிருக்கிறதை நாம் ஆங்காங்கே நிதானித்து அறிய முடியும். எனவே, இந்த பகுதிகளை நாம் அர்த்த விளக்கம் செய்யும்போது, அந்த காலகட்டத்தில் அதாவது, வேதாகம காலகட்டத்தில் வாழ்ந்த மக்களின் கவிதைகளின் சிறப்பம்சங்கள் எவ்வாறு இருந்தது என்பதை நீங்கள் அறிந்து விளக்கப்படுத்த வேண்டியது அவசியம். கவிதை என்றாலே, அது அதிகப்படுத்தி சொல்லப்படுகிற காரியமாகத்தான் இருக்கும், இல்லையா? உதாரணமாக, மீன்போன்ற கண்ணுடையாள் என்று தமிழ் கவிதையொன்றில் சொல்லப்பட்டுள்ளது. இதனுடைய அர்த்தத்தை நாம், அவளுடைய கண், மீன் கண் போன்றுதான் இருக்கிறது என்று சொல்லலாமே தவிர, அவளுடைய கண், மீனின் கண் தான் என்று சொல்ல முடியாது. அவளின் கண் அந்தளவுக்கு மீன் கண் போன்று இருக்கிறது என்று அர்த்தப்படுத்துவதற்காக, கவிதையில் சொல்லப்படுகிறது இயற்கைதான். நாம் இதை உயர் நவிற்சி அணி என்று சொல்வோம், அதாவது, Hyperpole என்று அழைக்கப்படுகிறது. இவ்விதமாக உயர்த்திப் பேசுதல் போன்ற காரியங்கள் இந்த புத்தகங்களின் எழுத்து நடைகளில் உள்ளது. பொதுவாக, நாம் வேதத்தைப் படிக்கும்போது, இப்படிப்பட்ட பகுதிகள் கவிதை நடையில் இருக்கிறது என்பது எளிதாகத் தெரியாது. ஒருவேளை இந்த புத்தகங்கள் எல்லாம் கவிதை போன்று இல்லையே என்று நீங்கள் சொல்வீர்கள். ஏனெனில், அது மொழிபெயர்க்கப்பட்டு, நம்முடைய மொழிக்கு வரும்போது, இந்த வகையில் அது காணப்படுகிறது. ஆனால் மூல மொழியில் இந்த புத்தகங்கள் எல்லாம் கவிதை நடையில்தான் எழுதப்பட்டிருக்கிறது. நாம் அந்த இடத்திற்கு சென்று பார்க்கவேண்டும். மூல பாஷையில் பார்க்கவேண்டும், மட்டுமல்ல, அந்த கவிதைகளின் தன்மைகளை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அன்றைய காலகட்டத்தில் கவிதைகள் எவ்விதம் எழுதப்பட்டது? எந்தளவுக்கு அதில் கருத்துக்கள் உயர்த்திப் பேசப்பட்டிருக்கிறது? எப்படியெல்லாம் அவர்கள் சொல்வார்கள் என்பதை நாம் புரிந்தால்தான், சரியான அர்த்த விளக்கத்தை, அந்தக் குறிப்பிட்ட பகுதிக்கு, குறிப்பிட்ட வேத வசனத்திற்கு நீங்களும், நானும் கொடுக்க முடியும். ஆக, அதற்கு நாம் அந்த கால கட்டத்திலிருந்த கவிதை நிலை, இலக்கண நிலை போன்றவற்றைப் பார்க்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இவற்றையெல்லாம் கவனிக்காமல், நீதிமொழிகள் புத்தகத்தில் உள்ள வசனங்களில்

உயர்த்திச் சொல்லப்பட்ட காரியத்தை, நீங்கள் சாதாரணமான அர்த்தத்தில் எடுப்பீர்களானால், கருத்து தவறாகப்போய்விடும். உதாரணமாக, இயேசுகிறிஸ்து கூறுகிற வசனத்தைப் பாருங்கள். அவர் சில இடங்களில் மிக, மிக உயர்த்திப் பேசியிருக்கிறார். உன் கண் இடறல் உண்டாக்கினால், அதைப்பிடுங்கி எறிந்துவிடு என்கிறார். இதை அவர் எவ்வளவுதூரம் உயர்த்தி சொல்லியிருக்கிறார் என்பதைக் கவனியுங்கள். இதேமாதிரிதான், கவிதைப்புத்தகத்தில் சில காரியங்கள், Hyperpole, உயர்வு நவிற்சி அணி வகையில் வந்து இருக்கிறதைப் பார்க்க முடியும். ஆகவே, அங்கே உயர்த்தி கூறப்பட்டுள்ள அர்த்தத்தை நாம் கொஞ்சம் தாழ்த்திக்கொண்டு வந்து, நமக்கு ஏற்ற அர்த்தத்தைக் கொண்டு வருவதுதான் உங்களுடைய வியாக்கியான கலையின் திறமை ஆகும். இவற்றையெல்லாம் நாம் கருத்தில் கொள்ள, வேதாகம விளக்கவியல் என்ற பாடம் நமக்கு கற்றுத்தருகிறது மிகுந்த உதவியாக இருக்கிறது.

கவிதைப்புத்தகத்தை நாம் எவ்விதமாக விளக்கம் கொள்ளப்போகிறோம்? என்பதை சற்று சிந்திக்கலாம். இப்பொழுது நீங்கள், பழைய ஏற்பாட்டில் உள்ள அநேக பகுதிகள் கவிதை நடையில் இருக்கிறது என்பதை கற்றிருக்கிறீர்கள். நாம் இதை சிறிய தீர்க்கதரிசனம் மற்றும் பெரிய தீர்க்கதரிசன புத்தகங்களை கவனித்துப் பார்த்து, ஒரு கணக்கெடுப்பை எடுக்கும்போது, பழைய ஏற்பாட்டில் உள்ள புத்தகங்களில், பாதியளவு வேத வசனங்கள் கவிதை நடையிலேயே உள்ளது என்ற ஒரு முடிவுக்கு வரமுடியும். மட்டுமல்ல, கிறிஸ்தவ வேதாகமத்தில் மூன்றில் இரண்டு பகுதி *(2/3)* கவிதைப் புத்தகமாக உள்ளது என்று சொல்ல வேண்டும். அதைப்போல புதிய ஏற்பாட்டில், லூக்கா *1:41-46, 68-79*, பிலிப்பியர் *6:11* வரையுள்ள பகுதிகள் எல்லாம் கவிதைப் பகுதியாகவே இருக்கிறது. இதை மிகவும் தெளிவாகப்புரிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம். ஏனெனில் மூன்றில் இரண்டு பகுதி கவிதை நடையில் இருக்குமானால், நாம் அதை சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும். அந்த கவிதை நடை, அதன் முக்கியத்துவம் ஆகியவற்றை கற்றுக்கொண்டால்தான், நாம் நன்றாக, சரியான விளக்கத்தைக்கொண்டு வர முடியும். கவிதை என்றாலே, அழகான, வல்லமையான ஒரு தாக்கத்தை உண்டாக்கக் கூடிய நடை, கவிதை நடை அவ்வாறாகத்தான் இருக்கும், இல்லையா? மட்டுமல்லாமல், மிகவும் மனதைக் கவரக்கூடிய நிலையில் உள்ளதுதான் கவிதை நடை. அதை எழுதுகிறவர்கள், கற்பனையோடு எழுதுவார்கள். நீங்களும், நானும் அப்படிப்பட்ட புத்தகங்களை வாசிக்கும்போது, தனிப்பட்ட வகையில் நமக்கு கற்பனைத்திறன் அவசியமாக வேண்டியிருக்கிறது. அதை ஒரு சில எடுத்துக்காட்டுகளோடு கற்றுக்கொள்ளும்போது, நாம் அதை எளிதில் புரிந்துகொள்ளலாம்.

நாம் தொடர்ந்து கவிதைப் புத்தகங்களை எவ்விதமாக விளக்கப்படுத்தப்போகின்றோம் என்பதைக் குறித்து சிந்திக்க இருக்கின்றோம். அதில் இலக்கணம் இடம்பெறும் என்பதை கவனம் கொள்ள வேண்டும். சிறிது கவனம் செலுத்தினால், அழகாக கற்றுக்கொள்வது மட்டுமல்ல, வேதத்தையும் ஆழமாக கற்றுக்கொள்ள இது உதவி செய்யும். கவிதைப்புத்தகத்தில் முக்கியமாக விளங்கக்கூடிய ஒன்று என்னவெனில், உருவகமொழி அதிகமாக பயன்படுத்தப்பட்டு இருக்கும். அதை நாம் எல்லோரும் அறிவோம். கவிதைகள் பொதுவாக, உருவக

மொழிகளை அதிகம் பயன்படுத்துகிற ஒன்றாக இருக்கிறது. அதில் உவமானம் காணப்படும், உவமேயங்கள் காணப்படும். உவமானம் என்பது ஒப்பிடப் பயன்படும் பொருள் ஆகும். ஒப்பிடப்படும் பொருள் உவமேயம் என்று அழைக்கப்படுகிறது. அதாவது, 'பால் போன்ற நிலா' என்று சொல்லும்போது, இதில் 'பால்' என்பது உவமானம். ஏனெனில் ஒப்பிடப்பயன்படும் பொருள் 'பால்' ஆகும். ஆனால், எதற்கு ஒப்பிடப்பட்டு இந்த பால் சொல்லப்பட்டிருக்கிறது என்றால், அது 'நிலா'-வாக இருக்கிறது. ஆக, ஒப்பிடப்படும் பொருளான 'நிலா' என்பது உவமேயம் ஆகும். இவ்விதமாக, உவமானமும், உவமேயமும் கவிதை நடையிலான எழுத்துக்களில் அதிகமான இடத்தைப் பிடித்திருக்கும். இதுவொரு பொதுவான கருத்தாக இருந்தாலும், வேதாகமத்திலுள்ள கவிதை நடை எழுத்துக்களும், அதற்கு விதிவிலக்கல்ல.

ஆகவே, கவிதை நடையில் உள்ள வேத வசனங்களில் காணப்படுகிற உவமானம், மற்றும் உவமேயங்களை கருத்தில் கொள்ளாமல், அர்த்த விளக்கம் செய்ய முற்பட்டால், நாம் தவறான வியாக்கியானம் செய்து முடிப்போம். அதாவது நாம் பிரசங்கிக்கிற வேத வசனம் அல்லது விளக்கம் தவறானதாக இருக்கும். வேதத்தில் உள்ள உரைநடைப் பகுதியில் உருவக மொழிகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று நாம் ஏற்க்கனவே கற்றோம். ஆனாலும், உரைநடைப்பகுதியை விட கவிதைப்பகுதிகளில் மிக, மிக அதிகமாக இவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கும், அதாவது, உவருவகமொழி அதிகமாக பயன்படுத்தப்பட்டிருக்கும். இந்த உருவகங்களை சரியான விதத்தில் அர்த்த விளக்கம் செய்வதற்கு, நாம் இதிலுள்ள இலக்கணத்தை மீண்டும் திருப்பி பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். நாம் ஏற்கனவே பள்ளிப்படிப்பில் கற்று இருப்போம். ஆனாலும், நாம் அப்போது பரீட்சைக்காக மட்டும்தான் படித்திருப்போமேயொழிய வாழ்வுக்கு பயன்படுத்துகிறது அல்ல. ஆனால் இப்போது வேதம் வாசிப்பதற்கு இலக்கணம் பயன்படுகிறது என்பதை, இந்தப் பாடத்தில் நீங்கள் கற்க வேண்டியது அவசியமாக இருக்கிறது, சுருக்கமாகவே அதைக் கற்றுக் கொள்ளலாம்.

பொதுவாக, இந்த உருவக மொழியில், உயிர் உருவக அணி சொல்லப் பயன்படுத்தப்பட்டிருக்கும். உயர்வு நவிற்சி அணி, ஆகுபெயர் அணி, இன்சொல் அணி, முரண்தொடை அணி, வஞ்சப்புகழ்ச்சி அணி, மனுவுரு அணி போன்றவை பயன்படுத்தப்பட்டிருக்கும். இவை வேதாகம கவிதைப் புத்தகங்களில் அதிகமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறதை நாம் காணலாம். இதோடுகூட மனுவுருவகம் என்றதொரு இலக்கணமும் காணப்படுகிறது. இது வேதாகம மொழி நடையின் சிறப்பம்சமாகும். அது என்னவென்று தொடர்ந்து பார்க்கலாம். மனுவுருவகம் என்பது சிறிது வித்தியாசமாக தெரிவதால், முதலில் சற்று சுருக்கமாக கற்றுக்கொள்வோம்.

அதாவது, நாம் ஆவியான தேவனை வணங்குகிறோம். இந்த ஆவியான தேவனை நாம் மானிட உருவில் வர்ணித்து, அதற்கு மானிட அவயவங்கள் கொடுத்து வேதத்தில் சொல்லப்பட்டு இருக்கிறதை வேதத்தில் பார்க்க முடியும். ஆவியான தேவனுக்கு கைகள் இல்லை, கால்கள் இல்லை, கண்களால் காணமுடியாது என்பதுதான்

உண்மை. ஆனால், மனிதர்களாகிய நமக்கு புரிய வைக்கவேண்டுமென்பதற்காக, மனு உருவகத்தில் தேவனைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறதை, மனுவுருவக அணி என்று விசேஷமாகப் படிக்கிறோம்.

உயிர் உருவக அணி என்பது, உயிரற்ற ஜடப்பொருட்களும், பண்புப் பெயரால் குறிப்பிடப்படுகிறதை நாம் வேதத்தில் பார்க்கிறோம். உயிருள்ள ஜீவியாக இந்த உயிரற்ற ஜடப்பொருட்கள் வர்ணிக்கப்படுகிறதைத்தான் உயிர் உருவக அணி என்று பார்க்கிறோம். நீங்கள் சில வேத வசனங்களைப் பார்க்கும்போது, இயற்கை சார்ந்த காரியங்கள், அதாவது உயிரற்ற பொருட்களை உயிருள்ள பொருட்களைப் போன்று நினைத்து, பயன்படுத்தப்பட்டு, சொல்லப்பட்டிருக்கிறதைப் பார்க்க முடியும். உதாரணமாக, சங்கீதம் *114:5-6*,

*5.* ***கடலே, நீ விலகியோடுகிறதற்கும்; யோர்தானே, நீ பின்னிட்டுத் திரும்புகிறதற்கும்;***
*6.* ***மலைகளே, நீங்கள் ஆட்டுக்கடாக்களைப்போலவும்; குன்றுகளே, நீங்கள் ஆட்டுக்குட்டிகளைப்போலவும் துள்ளுகிறதற்கும், உங்களுக்கு என்ன வந்தது?***

என்று கேட்கப்படுகிறதை நாம் பார்க்கிறோம். கடல், மலைகள், குன்றுகள், இவைகளெல்லாம், உயிருள்ள பொருட்களைப்போல உருவகப்படுத்தி சொல்லப்பட்டிருக்கிறதைப் பாருங்கள். இவ்விதமாக சொல்லப்படுவதுதான் உயிர் உருவக அணி என்றழைக்கப்படுகிறது.

<u>வஞ்சப் புகழ்ச்சி அணி:-</u>

வஞ்சப் புகழ்ச்சி அணியானது, நமக்கு பொதுவாக தெரிந்த விஷயம்தான். ஒன்றைப் புகழ்வதுபோலக் கூறி இகழ்வதுதான் வஞ்சப் புகழ்ச்சி அணி. கேட்பதற்கு புகழ்கிறது மாதிரி தான் தெரியும். ஆனால், இகழ்ச்சியாக சொல்லப்படும் இந்த வகையை நாம் வஞ்சப்புகழ்ச்சி அணி என்று படிக்கிறோம். இதை பேச்சு வழக்கில், வார்த்தையை உச்சரிக்கப்படுகிற முறையைக் கொண்டுதான் இனம்கண்டு கொள்ள முடியுமே தவிர, மற்றபடி வாசிக்கும்போது, அடையாளம் கண்டுகொள்வது மிகவும் கஷ்டமான ஒன்றாக இருக்கும். உதாரணமாக, பொய்பேசுகிற ஒருவனைப் பார்த்து, இவன் மிகவும் நீதிமான், இவன் நீதிமான் பரம்பரையில் பிறந்தவன் என்று சொல்லுகிற வார்த்தையைப் பார்க்கும்போது, இவன் உண்மையில் நீதிமான்போல் தோன்றும். ஆனால் சொல்கிற தொனியைக் கொண்டு பார்க்கும்போது, இவர் நீதிமானுடைய பரம்பரையில் வந்தவர் என்று சொல்லும்போது, ஓ! இவர் பரிகசித்து சொல்கிறார் என்பதைப் புரிந்து, இந்த வஞ்சப்புகழ்ச்சி அணியைக் கண்டுகொள்ள வேண்டும். புகழ்வதுபோல, இகழ்வதுதான் இந்த அணியின் சிறப்பு.

வேதத்திலும், சில வசனங்கள் வஞ்சப்புகழ்ச்சி அணியில் சொல்லப்பட்டு இருக்கிறதை நாம் அறிந்துகொள்வோம். 2 சாமுவேல் 6:20ம் வசனம், ***"தாவீது தன் வீட்டாரை ஆசீர்வதிக்கிறதற்குத் திரும்பும்போது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் தாவீதுக்கு எதிர்கொண்டு வந்து, அற்பமனுஷரில் ஒருவன் தன் வஸ்திரங்களைக்***

*கழற்றிப்போடுகிறதுபோல, இன்று தம்முடைய ஊழியக்காரருடைய பெண்களின் கண்களுக்கு முன்பாகத் தம்முடைய வஸ்திரங்களை உரிந்துபோட்டிருந்த இஸ்ரவேலின் ராஜா இன்று எத்தனை மகிமைப்பட்டிருந்தார் என்றாள்.''* என்று சொல்கிறது. இந்த வசனத்தில் சொல்லப்படுகிற வார்த்தை 'மகிமைப்பட்டிருந்தார்' என்று மீகாள் சொன்னாலும், அவள் சொல்கிற தொனியில் நாம் புரிந்து கொள்ளலாம். அவள், உண்மையிலேயே புகழவில்லை. தாவீது ராஜாவை இகழ்கிறாள் என்பதைக் கண்டுகொள்ள முடிகிறது. அதைப்போல, 1 கொரிந்தியர் 4:8ம் வசனம், ''*இப்பொழுது திருப்தியடைந்திருக்கிறீர்களே, இப்பொழுது ஐசுவரியவான்களாயிருக்கிறீர்களே, எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே, நீங்கள் ஆளுகிறவர்களானால் நலமாயிருக்கும், அப்பொழுது உங்களுடனேகூட நாங்களும் ஆளுவோமே.''* என்று பவுல் கூறுகிறதைப் பாருங்கள். புகழ்ந்து பேசுகிறார் போல இருக்கிறது. ஆனால் இகழ்ந்து பேசுகிறார். இகழ்ந்து பேசுகிறார் என்பதைவிட, கடிந்துகொண்டு அவர்களைச் சுட்டிக்காட்டிப் பேசுகிறதை நாம் பார்க்கிறோம். இப்படி அநேக வசனங்களைப் பார்க்க முடியும். 2 கொரிந்தியர் 11:19ம் வசனம், ''*நீங்கள் புத்தியுள்ளவர்களாயிருந்து புத்தியில்லாதவர்களைச் சந்தோஷமாய்ச் சகித்திருக்கிறீர்களே.''* என்று சொல்கிறது. இவ்விதமாக புகழ்வதுபோல, கடிந்துகொண்டு சொல்லப்படுகிற வார்த்தைகள் அடங்கிய அணியைத்தான் நாம் வஞ்சப்புகழ்ச்சி அணி என்றழைக்கிறோம். இப்படிப்பட்ட அநேக வார்த்தைகள் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதை நாம் கவனித்துதான் வேதாகமத்தை விளக்கம் கொள்ளவேண்டும். கவிதை நடையில் அநேகம் புத்தகங்கள் காணப்படுகிறது. அநேக வசனங்கள் காணப்படுகிறது. ஆகவே, அதற்கு இந்த நியதிகளைப் பயன்படுத்தி, அதைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

**புனையுருவ அணி:-**

இந்த புனையுருவ அணியானது, இல்லாததை இருப்பதாக தொடர்புபடுத்தி, அதோடு பேசுவதற்காக உபயோகிக்கப்படுவதே புனையுருவ அணி என்றழைக்கப்படுகிறது. சில சமயங்களில் உயிரற்ற ஜடப்பொருள்களைப் பார்த்து பேசுகிறதற்காக, இவ்வுருவகம் பயன்படுத்தப்பட்டிருக்கிறதை வேதத்தில் பார்க்கலாம். சில உதாரணங்களை பார்க்கலாம். எசேக்கியேல் 37:4ம் வசனம், ''*அப்பொழுது அவர்: நீ இந்த எலும்புகளைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்து, அவைகளைப் பார்த்துச் சொல்லவேண்டியது என்னவென்றால்: உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.''* என்று சொல்லப்படுகிறதை நாம் வாசிக்கிறோம். எலும்புகள் உயிரற்ற ஒன்று, அதற்கு உயிர் இருக்கிறது போன்று நினைத்து, அதோடு பேசுகிற ஒரு காரியத்தை நாம் பார்க்கிறோம். உயிரற்ற ஜடப்பொருளோடு, பேசுகிறதற்கு இந்த புனை உருவ அணி பயன்படுத்தப்படுகிறதைப் பாருங்கள். அந்த எலும்புகளோடு பேசு என்று சொல்லி, இங்கே சொல்லப்படுகிற வார்த்தையைக் கவனியுங்கள். அதைப்போல, எரேமியா 47:6, ''*ஆ கர்த்தரின் பட்டயமே, எந்த மட்டும் அமராதிருப்பாய்? உன் உறைக்குள் திரும்பிவந்து, ஓய்ந்து அமர்ந்திரு.''* என்று

வாசிக்கிறோம். ஆக, இந்த பட்டயத்திற்கு உயிரில்லை, ஆனால் இந்த உயிரற்ற ஜடப்பொருளோடு பேசுகிறதைப் போல புனையுருவ அணி பயன்படுத்தப்பட்டிருக்கிறதைக் கவனியுங்கள். இவ்வாறு பல எடுத்துக்காட்டுகளை நாம் வேதத்தில் பார்க்க முடியும்.

## ஆகுபெயரணி:-

ஆகுபெயரணி என்றால் என்ன என்பதைக் கற்றுக்கொள்வோம். ஒரு வார்த்தைக்குப் பதிலாக, அதனோடு தொடர்புடைய இன்னொரு வார்த்தையை உபயோகிக்கும்போது, அது ஆகுபெயரணியாகிறது என்று இலக்கணத்தில் படிக்கிறோம். ஒரு வார்த்தைக்கு பதிலாக, அதற்கு ஏதோ ஒரு வகையில் தொடர்புடைய இன்னொரு வார்த்தையை எடுத்து பயன்படுத்துகிறதின் பெயர்தான் ஆகுபெயரணி. லேவியராகம் *19:32*, ***"நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம்பண்ணி, உன் தேவனுக்குப் பயப்படுவாயாக, நான் கர்த்தர்."*** என்று வாசிக்கிறோம். இங்கே நரைத்த முடியைக் குறித்து வசனம் சொல்கிறது. இது எதைக்குறிக்கிறது? ஒரு மனிதனுக்கு வயதான நிலையைக் குறிக்கிறது. வயதானவன் என்று நேரிடையாகச் சொல்லாமல், நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, என்று சொல்கிற இந்த வார்த்தையைக் கவனியுங்கள். இது முதிர்வயதுள்ளவன் என்ற வார்த்தைக்குப் பதிலாக பயன்படுத்தப்பட்ட ஏதோவொரு வகையில் தொடர்புடைய வார்த்தையாக இருக்கிறது. நரைத்தமுடி வயதான காலத்தில்தான் வரும். அவ்விதமாக தொடர்புடைய வார்த்தை பயன்படுத்தப்பட்டு இருக்கிறதை நாம் புரிந்துகொள்கிறோம். இங்கே ஆகுபெயரணி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதைப்போல நீதிமொழிகள் *12:19*, ***"சத்திய உதடு என்றும் நிலைத்திருக்கும், பொய் நாவோ ஒரு நிமிஷமாத்திரம் இருக்கும்."*** என்று கூறுகிறது. இங்கே பாருங்கள் 'உதடுகள்' அதைப்போல 'நாவு', இந்த இரண்டைப்பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் சத்திய உதடுகள் என்று நாம் எங்கேயும் பார்க்க முடியாது. ஆனால், 'சத்திய' என்ற வார்த்தை இந்த உதடுகளின் தன்மையை உயர்த்தி, அதற்கு ஒரு மெருகூட்டுகிறது. ஏதோவொரு வகையில் தொடர்புடையதாக அது இருக்கிறது. உதடுகள் மூலமாக சத்திய வார்த்தைகள் பேசப்படுவதனால், இங்கே அந்த தொடர்புடைய வார்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதைப்போல 'பொய் பேசுகிற நாவு' 'பொய் நாவு' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 'நாவு'க்கு தொடர்புடைய ஒன்றாக 'பொய்' என்ற வார்த்தையை ஆகுபெயர் அணியாய் நீங்கள் பயன்படுத்தும்போது அது பொய் நாவாக சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு அநேக காரியங்களை நாம் பார்க்க முடியும். இதுதான் ஆகுபெயரணி என்றழைக்கப்படுகிறது.

## இன்சொல் அணி:-

இன்சொல் அணி என்பது, கேட்பதற்கு கூச்சமாய், சங்கடமாக இருக்கிற விஷயங்களை இனிமையாகச் சொல்கிற ஒரு முறைக்குப் பெயர்தான், இன்சொல் அணி. இனிமையாகச் சொல்வது என்று அர்த்தம். குறிப்பாக, வேதத்தில் பாலியியல்

சம்பந்தமான விஷயங்களை நேரடியாகச் சொல்வது, அது கூச்சமானதாக, சங்கடமான விஷயமாக இருக்கிறது. வேதத்தை வாசிக்கிறவர்களுக்கு அது நிச்சயமாய் சங்கடமாக இருக்கும். அதுமட்டுமல்ல, குடும்பத்தோடு வாசிக்கின்ற ஒரு சூழ்நிலையில் அல்லது பொதுமக்கள் மத்தியில் வாசிக்கும் போது, அந்தக்காரியங்களை நேரடியாக தெரிவிக்கும்போது சங்கடத்தை உண்டாக்ககூடிய விஷயமாக இருக்கின்றபடியால், வேதாகமத்தில், இந்த உருவகம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதுதான் இன்சொல் அணி. பாலூறவு சம்பந்தமான நிகழ்ச்சிகளை அல்லது சம்பவங்களை சொல்லுவதற்கு 'இன்சொல் அணி' பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆதியாகமம் 4:1, ***"ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான், அவள் கர்ப்பவதியாகி, காயீனைப்பெற்று, கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் என்றாள்."*** என்று வாசிக்கின்றோம். ஆக, பாலுறவு சம்பந்தமான விஷயத்தை 'அறிந்தான்' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டு சொல்லப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். 1 கொரிந்தியர் 7:1, ***"நீங்கள் எனக்கு எழுதின காரியங்களைக்குறித்து நான் எழுதுகிறதென்னவென்றால், ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது."*** என்று சொல்கிறது. நேரடியான அர்த்தம் 'தொடாமலிருப்பது', ஆனால் இதில் பொதிந்திருக்கும் உள்ளர்த்தமானது, ஒரு பெண்ணோடு பாலுறவு கொள்ளாமலிருப்பதை காட்டுகிறது. இதுதான் இன்சொல் அணியாகும்.

<u>பிரதியீட்டு அணி:-</u>

பிரதியீட்டு அணி என்பது, ஒன்றின் பகுதிக்குப் பதிலாக முழுமையான காரியத்தைப் பயன்படுத்துவது அல்லது முழுவதற்கும் பதிலாக அதன் ஒரு பகுதி உபயோகிக்கப்பட்டு சொல்லப்பட்டிருக்குமென்பதாகும். உதாரணமாக யோசுவா 7:11, ***"இஸ்ரவேலர் பாவஞ்செய்தார்கள், நான் அவர்களுக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையை மீறினார்கள், சாபத்தீடானதில் எடுத்துக்கொண்டதும், களவுசெய்ததும் வஞ்சித்ததும், தங்கள் பண்டம்பாடிகளுக்குள்ளே வைத்ததும் உண்டே."*** என்று கர்த்தர் சொல்கிறதை வாசிக்கிறோம். இதில் ஒரு பகுதிதான் சொல்லப்பட்டு இருக்கிறது. முழுமையாகச் சொல்லப்படவில்லை. எந்த சாபத்தீடானதை எடுத்துக்கொண்டார்கள்? எதில் வஞ்சனை செய்தார்கள் என்று சொல்லப்படாமல், அதன் ஒரு பகுதி மட்டும் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். இது பிரதியீட்டு அணி என்று அறிந்து கவனத்தில் கொள்ள வேண்டும். மத்தேயு 12:40, ***"யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்."*** என்பதைக் கவனியுங்கள். இந்த வசனத்திலும் பாதிப்பகுதி சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக ஒரு பகுதிக்கப் பதிலாக, மற்றொரு பகுதியில் முழுப்பகுதி அல்லது பாதிப்பகுதி சொல்லப்பட்டிருக்கலாம். இவ்விதமாய் சொல்லப்படுவதை பிரதியீட்டு அணி என்கிறோம்.

மனுவுருவக அணியைப்பற்றி மறுபடியும் சிறிது அதிகமாக கற்றுக்கொள்ளலாம். கண்களால் காணமுடியாத தேவனை, மானிட உருவத்தில் வர்ணித்து, அவருக்கு மானிட

அவயவங்களையெல்லாம் கொடுத்து பேசுகிறோமே, அது மனுவுருவக அணி என்றழைக்கப்படுகிறது. தேவனைப்பற்றி மனிதர்கள் அறிந்துகொள்வதற்காகவே இத்தகைய உருவகங்கள் வேதத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. இதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அவருடைய கரம் என்று சொல்லும்போது நம்முடைய கரத்தை வைத்து நாம் அதைப்புரிந்து கொள்கிறோம். ஆனால் ஆவியாக இருக்கிற தேவனுக்கு கரம் என்று ஒன்றில்லை. அவர் ஆவியாய் அல்லவா இருக்கிறார். கரம், கண்கள், இருதயம், சிந்தை போன்றவை நம்மைப்போலவே அவருக்கு இருக்கிறதாக நாம் கருதுகிறோம். இவ்விதமாக மனுவுரு அணி வேதத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு இருக்கிறதை நாம் அதிகமாக கவனத்தில் கொள்ள வேண்டும். சங்கீதம் 10:11, ***"தேவன் அதை மறந்தார் என்றும், அவர் தம்முடைய முகத்தை மறைத்து, ஒருக்காலும் அதைக்காணமாட்டார் என்றும், தன் இருதயத்திலே சொல்லிக்கொள்கிறான்."*** என்று வாசிக்கிறோம். இங்கே தேவன் தம்முடைய முகத்தை மறைத்துக் கொண்டதைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறதைக் காண்கிறோம். ஆனால் அவருக்கு முகம், கண்கள் எல்லாம் இல்லை. இவைகள் எல்லாம் நாம் புரிந்து கொள்வதற்காக சொல்லப்பட்டவைகள் என்பதை அறியவேண்டும். இவ்வாறு அநேக வசனங்கள் வேதத்தில் உள்ளது. இது மனுவுருவக அணி என்றழைக்கப்படுகிறது.

பிரியமானவர்களே, அடுத்த பாடத்தில் இதுபோன்ற அநேக விஷயங்களை கற்றுக்கொள்ளப்போகிறோம். நீங்கள் ஆர்வமுடன் கற்று, வேதத்தை விளக்கம் செய்ய ஆரம்பிக்கும்போது, சரியான விளக்கத்தை மக்களுக்கு கொடுப்பீர்கள். நீங்களும் வேதத்தை தெளிவாகப் புரிந்து கொள்வீர்கள். தொடர்ந்து ஜெபத்தோடு நம்முடைய பாடங்களைக் கேளுங்கள். நிச்சயமாய் நீங்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்வீர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆரோக்கியமான சத்தியத்தில் வளர்வீர்கள். ஆரோக்கியமான சத்தியத்தை மற்றவர்களுக்கும் போதிப்பீர்கள். இதனால் நம் தேசத்தில் நல்லதொரு ஆரோக்கியமான விசுவாச மக்களை உருவாக்கி, தம்முடைய ஊழியத்தை செய்ய தேவன் கிருபை பாராட்டுவாராக!

## <u>கேள்விகள்:-</u>

1. வேதாகமத்தை விளக்கப்படுத்தும்போது, சந்தர்ப்ப சூழ்நிலைகளை கவனிக்க வேண்டியதின் அவசியத்தைக் குறித்து உதாரணங்களுடன் விளக்கமாக கூறுக?
2. யாரால், எதற்காக வேதாகமம் அதிகாரம் மற்றும் வசன பிரிவுகளாக பிரிக்கப்பட்டது என்பதனைக் கூறுக?
3. கவிதை நடையில் எழுதப்பட்ட புத்தகங்களையும், கவிதை நடையில் எழுதப்பட்ட வேதாகமத்தின் மற்ற பகுதிகளையும் குறிப்பிடுக?
4. கவிதை நடையில் காணப்படுகிற வசன பகுதிகளை விளக்கப்படுத்த நாம் அடிப்படையாக அறிந்துகொள்ள வேண்டியவைகள் குறித்து விவரிக்கவும்?

5. கவிதை நடை புத்தகங்கள் மற்றும் வேதபகுதிகளின் அமைப்பையும், அவைகளின் தன்மைகளையும் கூறுக?
6. கவிதை நடை புத்தகங்களை நாம் எவ்வாறு விளக்கப்படுத்த வேண்டும் என்பதனைக் குறித்து விளக்கமாக கூறுக?
7. கவிதை நடையில் இடம் பெற்றிருக்கும் உவமானம் மற்றும் உவமேயங்கள் குறித்துக் கூறுக?
8. மனுவுருவகம் குறித்து கூறுக?
9. உயிர் உருவக அணி குறித்து வசன உதாரணத்துடன் சற்று விளக்கமாக கூறுக?
10. வஞ்சப்புகழ்ச்சி அணியை வசன உதாரணங்களுடன் சற்று விளக்கமாக கூறுக?
11. புனையுருவ அணியைக் குறித்து வசன உதாரணங்களுடன் சற்று விளக்கமாக கூறுக?
12. ஆகுபெயரணியைக் குறித்து வசன உதாரணங்களுடன் சற்று விளக்கமாக கூறுக?
13. இன்சொல் அணி குறித்து வசன உதாரணங்களுடன் சற்று விளக்கமாக கூறுக?
14. பிரதியீட்டு அணி குறித்து வசன உதாரணங்களுடன் சற்று விளக்கமாக கூறுக?

# <u>வேதாகம விளக்கவியல்</u>

## பாடம் - *11*

*கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, இந்தப் பாடத்தில் அணிகளைப் பற்றிய தொடர்ச்சியான விஷயங்களைக் கற்றுக்கொண்ட பின்பு, நாம் இன்னும் அனேக காரியங்களை எவ்விதமாக அர்த்த விளக்கம் செய்யப்போகிறோம் என்பதைப் பற்றிய விளக்கங்களை கற்றுக்கொள்ளப்போகிறோம்.*

*இரண்டு அணிகளை மாத்திரம் கற்றுக்கொண்ட பின்பு, நாம் அடுத்த பாடத்திற்கு செல்லலாம். மனுவுருவக அணியைப்பற்றி கடந்த பாடத்தின் இறுதியில் கற்றுக்கொண்டோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்த அணிகள் எல்லாம் கவிதைப் புத்தகங்களில் வரக்கூடியது என்று நாம் ஏற்கனவே கற்று இருக்கிறோம். ஆகவே, வேதத்தில் நாம் கற்றுக்கொண்டதுபோல, அநேக புத்தகங்களில் சில பகுதிகளாவது கவிதைகளாக உள்ளது. அதை எவ்விதம் விளக்கம் கொள்ளப்போகிறோம்? அந்த கவிதைகளை விளக்கம் கொள்ளும்போது, அணிகளையெல்லாம் கவனிக்கவேண்டும் என்று கற்று, அவற்றை விளக்கம் செய்வதில் அவைகளைப் பயன்படுத்தவேண்டுமென்று தெரிந்து இருக்கிறோம்.*

### <u>*மிருக உருவக அணி*</u>

*மனுவுருகவ அணியைப்போலவே, தேவனுடைய தன்மையை அல்லது செயலை விளக்க வேதத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது என்பதைப் பார்க்க முடியும், அதாவது தேவன் ஆவியாக இருக்கிறார். அந்த தேவனுடைய தன்மைகளை விளங்க வைப்பதற்காக, மனுவுருவக அணி பயன்படுத்தப்பட்டு, மனிதனைப்போன்று கைகள், கால்கள், இருதயம், முகம் போன்றவை தேவனுக்கு இருப்பதாக உருவகப்படுத்தி, பேசப்பட்டிருக்கிறது என்று கடந்த வகுப்பில் பார்த்ததுபோல, இந்த மிருக உருவக அணியிலே, தேவனுடைய செயல்கள், அவருடைய தன்மைகள் போன்றவற்றை விளக்குவதற்காக, இந்த மிருக உருவ அணி பயன்படுத்தப்பட்டு இருக்கிறதை நாம் பார்க்க முடிகிறது. உதாரணமாக, இந்த அணியில் மானிட அவயவங்களுக்குப் பதிலாக, மிருக அவயவங்கள் அல்லது ஒரு சில குறிப்பிட்ட மிருகங்கள் உருவகமாக சொல்லப்பட்டிருக்கிறதை நீங்கள் பார்க்க முடியும். இதனைக்கொண்டு தேவனைப்பற்றி, சில தன்மைகளை நமக்கு விளங்க வைப்பதற்காக, இந்த ஆசிரியர்கள் பயன்படுத்தியிருக்கிறதை நீங்கள் பார்க்க முடியும். உதாரணமாக சங்கீதம் 36:7-ல் இவ்விதமாய் வாசிக்கிறோம், "**தேவனே, உம்முடைய கிருபை எவ்வளவு அருமையானது! அதினால் மனுபுத்திரர் உமது செட்டைகளின் நிழலிலே வந்தடைகிறார்கள்.**" என்று பார்க்கிறோம். செட்டைகள் பறவைகளுக்குத்தான் உண்டு. ஆனால் இங்கே தேவனுடைய செட்டைகள் என்று சொல்லப்படுகிறதை கவனித்துப்பாருங்கள். ஆகவே, இது மிருகஉருவக அணி. தேவனுடைய தன்மையை விளக்குவதற்கு இங்கே*

பறவைகளின் செட்டைகள் சொல்லப்பட்டிருக்கிறதை சற்று கவனித்துப் பாருங்கள். அதைப்போல சங்கீதம் 57:1ஐ பார்ப்போம், ***"எனக்கு இரங்கும், தேவனே, எனக்கு இரங்கும், உம்மை என் ஆத்துமா அண்டிக்கொள்ளுகிறது, விக்கினங்கள் கடந்துபோகுமட்டும் உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடைவேன்."*** என்பதைக் கவனியுங்கள். ஓசியா 5:14, ***"நான் எப்பிராயீமுக்குச் சிங்கம்போலவும், யூதாவின் வம்சத்தாருக்குப் பாலசிங்கம்போலவும் இருப்பேன், நான் நானே பீறிவிட்டுப் போய்விடுவேன், தப்புவிப்பார் இல்லாமையால் எடுத்துக்கொண்டு போவேன்."*** என்று கர்த்தர் சொல்லுகிறதைப் பார்க்கிறோம். இங்கே தேவன் தன்னுடைய தன்மையை சிங்கம்போல, பாலசிங்கம் போல இருந்து பீறிவிட்டு, போய்விடுகிற சிங்கம்போல இருப்பேன் என்றெல்லாம் கர்த்தருடைய தன்மை சொல்லப்படுகிறதை கொஞ்சம் கவனித்துப்பாருங்கள்.

வெளிப்படுத்தல் விசேஷம் புத்தகத்திலும், தேவனுடைய தன்மையை இவ்விதமாக மிருகத்தோடு இணைத்து பேசப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். இவ்வாறாக அநேக வசனங்கள் வேதத்தில் உள்ளது. மிருக உருவக அணியானது, இவ்விதமாக தேவனுடைய தன்மைகளை, காரியங்களை விளக்குவதற்கு, மிருகத்தை அங்கே உருவகமாகப் பயன்படுத்தி சொல்லப்படுகிறதைப் பார்க்கிறோம்.

**<u>உயர்வு நவிற்சி அணி</u>**

உயர்வு நவிற்சி அணியானது வேதத்தில் அதிகமாகச் சொல்லப்பட்டிருக்கிறதை நாம் பார்க்கிறோம். வேதத்தில், பழைய ஏற்பாட்டு மூலபாஷையாகிய எபிரெயம் மற்றும் புதிய ஏற்பாட்டு மொழியாகிய கிரேக்க மொழிகளில் நாம் பார்க்கும்போது, அநேக காரியங்கள் மிகவும் அதிகமாக வலியுறுத்தி சொல்லப்படுவதற்காக, சில காரியங்கள், சில உருவகங்கள், பயன்படுத்தப்பட்டு இருக்கிறதை நீங்கள் பார்க்க முடியும். நாம் அதை அப்படியே சொல் அர்த்தமாக எடுக்க முடியாது. அவ்வாறு நீங்கள் எடுப்பீர்களானால், அது மிகைப்படுத்தப்பட்ட விபரமாகவே காணப்படுகிறதை நீங்கள் பார்க்க முடியும். ஆனால் இந்த உயர்வு நவிற்சி அணி எதற்கு பயன்படுத்தப்பட்டு இருக்கிறதென்றால், ஒன்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி சொல்வதற்காக, பயன்படுத்தப்படுகின்ற உருவகம் இது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அப்படியே சொல்லர்த்தமாக எடுக்கக் கூடாது. ஒவ்வொரு வார்த்தையின் அர்த்தத்தையும் நீங்கள் அவ்வாறு எடுப்பீர்கள் என்றால், தவறான விளக்கத்தை கொடுத்துவிடுவீர்கள். ஒரு எடுத்துக்காட்டை கூறும்போது, தெளிவாகப் புரிந்துகொள்வீர்கள். ஆகவே, இது மிகைப்படுத்தப்பட்ட விபரமாக இருக்கும். ஆனால் அதற்காக, இது போலியான, மிகைப்படுத்தல் அல்ல, பொய்யாக சொல்கிறார்கள் அல்லது வெறுமனே உயர்த்தி சொல்கிறார்கள் என்கிற அர்த்தத்தில் இருக்காது. இது உருவகமாக உபயோகிக்கப்பட்டு இருக்கிறது. அதனால், அந்த குறிப்பிட்ட காரியத்தை

வலியுறுத்துவதற்காக, அதை முக்கியப்படுத்துவதற்காக இந்த உயர்வு நவிற்சி அணி பயன்படுத்தப்படுகிறது.

சில வசனங்களை பார்க்கலாம். மத்தேயு 23:24, "***குருடரான வழிகாட்டிகளே, கொசுகில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள்.***" என்று இயேசு சொல்லியிருக்கிறதைப் பார்க்கும்போது, ஒட்டகத்தை யாரும் விழுங்குவது கிடையாது. கொசுவை யாரும் வடிகட்டி அதைச் சாப்பிடப்போகிறதும் இல்லை. ஆக, இது மிகைப்படுத்தப்பட்டு, அந்த காரியத்தை வலியுறுத்தி கூறுவதற்காக இயேசு அவ்விதமாக சொல்கின்றார். குருடரான வழிகாட்டிகள் எவ்வாறு இருப்பார்கள்? அவர்களே குருடர்கள், பிறகு எவ்வாறு வழிகாட்டுவார்கள். அவர்களே போகத்தெரியாமல் இருப்பார்கள். இவ்விதமாக இந்த காரியத்தை வலியுறுத்தி சொல்வதற்காக, இந்த வேதபாரகர், பரிசேயர் போன்றவர்கள், இவ்விதமாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் குருடரான வழிகாட்டிகளாக இருக்கிறார்கள். அவர்கள் கொசுவில்லாதபடி வடிகட்டி, அதாவது மிகவும் நுணுக்கமானதையெல்லாம் வடிகட்டிவிடுவார்கள், ஆனால் ஒட்டகத்தை விழுங்கிவிடுவார்கள் என்கிற அர்த்தத்தில் கூறியிருக்கிறதைப் பாருங்கள். இவ்விதமாக, அவர்களுடைய போதனை இருக்கிறது என்பதை வலியுறுத்தி காண்பிப்பதற்காக இயேசு இப்படிப்பட்ட வாக்கியத்தை, வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்.

இன்னுமொரு எடுத்துக்காட்டைக் கவனியுங்கள். மத்தேயு 5:29, "***உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப்பிடுங்கி எறிந்துபோடு, உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்.***" என்பதைப் பாருங்கள். இதுவும் உயர்வு நவிற்சி அணியாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. வலது கண் இடறல் உண்டாக்கினால், அதைப்பிடுங்கி போடு என்பதாகச் சொல்கிறார். அதாவது, அது எவ்வளவு தூரம் முக்கியத்துவம் வாய்ந்தது என்று இயேசு கூறுகிறார். உன் கண் உன்னுடைய ஆவிக்குரிய வாழ்வுக்கு இடையூறாக இருந்தால், அதை நீ பிடுங்கி கூட போட்டுவிடலாம். ஒரு நொண்டியாக கூட பரலோகம் வந்துவிடலாம். அதுவொரு பிரச்சனை இல்லை. ஆனால், இரண்டு கண் உடையவனாக நீ, நரகத்திற்கு போகிறது மிகவும் பரிதாபமான காரியம் என்று வலியுறுத்துவதற்காக, நீ கண்ணினால் சரியாக பார்க்கவேண்டியது மிகவும் முக்கியம் என்று சொல்வதற்காக இவ்வாறு இயேசு கூறுகிறதைப் பார்க்கிறோம். இவ்விதமாக அநேக எடுத்துக்காட்டுகளை நாம் கூற முடியும். இவ்வாறான விஷயங்களை வேதத்தில் தேடிப்பாருங்கள். அதுதான் உங்களுக்கு பயிற்சி. உயர்வு நவிற்சி அணி என்பது இதுதான். குறிப்பிட்ட காரியத்தை வலியுறுத்துவதற்காக இந்த உருவகம் பயன்படுத்தப்படுகிறது.

## <u>முரண்தொடை அணி</u>

இந்த முரண்தொடை அணி என்பது சற்று வித்தியாசமானது, அதாவது ஒரு வசனத்தில் இரண்டு வார்த்தைகள் வரும்போது, அது ஒன்றுக்கொன்று முரணான அர்த்தமுடைய வார்த்தைகளாக இருக்கும். இதை விளக்கும் ஒரு வசனம் 2 சாமுவேல் 24:24, ***"ராஜா அர்வனாவைப் பார்த்து: அப்படியல்ல, நான் இலவசமாய் வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தாமல், அதை உன் கையிலே விலைக்கிரயமாய் வாங்குவேன் என்று சொல்லி, தாவீது அந்தக் களத்தையும், மாடுகளையும் ஐம்பது சேக்கல் நிறை வெள்ளிக்குக் கொண்டான்."*** இங்கே, முரண்பாடான அர்த்தமுள்ள காரியத்தைப் பார்க்கிறோம். அதாவது, ஆங்கிலத்தில் pretty ugly என்பார்களே, எவ்வாறெனில் **அழகான அசிங்கம்** என்று அதற்கு அர்த்தம். அதைப்போல **அறிவாளியான முட்டாள்** என்று சொல்வோம் என்று வைத்துக்கொண்டால் எவ்வாறு இருக்கும்? இரண்டும் பொருந்தாது. ஆனால் இரண்டும் வேறுபட்ட, முரண்பட்ட வார்த்தைகளை ஒன்றுசேர்த்து எவ்வாறு கொண்டுவருகிறது எவ்வாறு இருக்குமோ, அதைப்போலத்தான், இங்கே சொல்லப்பட்டிருக்கிறதை நீங்கள் பார்க்கவேண்டும். அதாவது, தாவீது பாவம் செய்தபடியினால், அவன் பலிசெலுத்த தேவனால் கட்டளை பெறுகிறான். அவன் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்தின காரியம் தேவனுடைய பார்வையில் பாவமாய் காணப்பட்டது. ஆகவே வார்த்தை வந்தது. மூன்று நாட்கள் வாதைக்குப் பின்பதாக, அந்த கொள்ளை நோய்க்குப் பின்பதாக தேவதூதன், எருசலேமை அழிக்க தன் கையை நீட்டினபோது, கர்த்தர் அந்த தீங்குக்கு மனஸ்தாபப்பட்டு, ஜனங்களை அங்கீகரிக்கிற தூதனை நோக்கி, போதும் இப்போது உன் கையை நிறுத்து என்று சொல்கிறதை நாம் 16ம் வசனத்தில் பார்க்கிறோம். அந்த வேளையில் கர்த்தருடைய தூதன் எபூசியனாகிய அர்வனாவின் போரடிக்கிற களத்திற்கு நேரே இருந்தான் என்று அங்கே பார்க்கிறோம். ஆக, இவ்விதமாக, அந்தக்களத்திலே, பலிபீடம் ஒன்றைக்கட்டி, அங்கே பலிசெலுத்த காத் என்ற தீர்க்கதரிசியை தேவன் அனுப்புகிறார். ஆகவே, அர்வனாவிடம் தாவீது செல்கிறான், சென்று பலிபீடம் கட்டுவதற்கு, பலிசெலுத்துவதற்கு அந்த இடத்தை வாங்குவதற்கு முயற்சி எடுக்கிறார். அதைப்பார்த்தவுடன் அர்வனா மிகவும் பணிந்துகொண்டான் என்று பார்க்கிறோம். அந்தக் காரியத்தைக் கேட்டுவிட்டுத்தான் இலவசமாகவே இதைத் தருவதாக அவன் கூறுகிறான். தகனபலிக்கு மாடுகளும், விறகுக்கு உருளைகளின் நுகத்தடிகளும் இங்கேயிருக்கிறது. ஆகவே, நீங்கள் இதை இலவசமாக எடுத்து பயன்படுத்துங்கள் என்று சொல்லும்போதுதான, அங்கே, தாவீது கூறுகிறார், அது அப்படியல்ல, நான் இலவசமாக வாங்கி செலுத்துகிற அந்த காரியமானது பலியல்ல. பலி செலுத்த வேண்டுமென்றால், என்னை அது பாதிக்கவேண்டும். நான் தியாகமாக சில காரியங்களை செய்தால்தான், அதற்கு பேர் பலி. உன் பணத்தை வாங்கி, உன்னிடத்தில் இலவசமாக வாங்கி செலுத்துகிறதற்கு பேர், அது பலியல்ல. ஆகவே, கிரையத்திற்கு வாங்குவேன் என்று சொல்லி

கிரையத்திற்கு வாங்கி, பலிசெலுத்துகிறதைப் பார்க்கிறோம். இவ்விதமாக முரண்தொடை அணி இங்கே பயன்படுத்தப்படுகிறது. இலவசமாக வாங்கி செலுத்துகிறது அல்ல, அதற்கு மாறாக சொல்கிறார், பணம் செலுத்தி அதற்குரிய கிரையத்தை வாங்கி, என்னை அது பாதித்து, அது மூலமாக பலியைச் செய்யும்போதுதான், அது உண்மையான பலியாக இருக்கும் என்ற அர்த்தத்தில் கூறுகிறதைப் பார்க்கிறோம்.

மற்றொரு எடுத்துக்காட்டை நாம் மத்தேயு 6:23-ல் இயேசு கூறுகிற காரியத்திலிருந்து பார்ப்போம். ***"உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும், இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!"*** உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால் என்ற வார்த்தையைக் கவனியுங்கள். வெளிச்சம் எவ்வாறு இருளாயிருக்க முடியும் என்பதை சிந்தித்துப் பாருங்கள். ஆனால் முரண்பட்ட இந்த இரண்டு வார்த்தைகளை கர்த்தர் இணைத்துப் பேசுகிறதைப் பாருங்கள். வெளிச்சம் இருளாக இருக்காது. அது அவ்வாறு இருந்தால் எவ்வளவு அதிகமாக இருக்கும் என்று இயேசு அர்த்தம்படக் கூறுகிறார். ஆனால், இங்கே முரண்தொடை அணியும் இருக்கிறதைக் கவனித்துப்பாருங்கள்.

## புனைஉருவ அணி

இந்த அணியானது, ஒரு நபரைப்பார்த்து பேசிக்கொண்டிருக்கிற ஒருவர் அதை அப்படியே நிறுத்திவிட்டு, மற்றொரு நபரைப்பார்த்து அல்லது தேவனைப்பார்த்து, அல்லது ஒரு ஜடப்பொருளைப்பார்த்து பேசுவது போல, உடனே மாறுகிற அந்த வாக்கியத்திற்குப் பெயர் புனைஉருவ அணி என்று சொல்லப்படுகிறது. வேதத்தில் சொல்லப்பட்டுள்ள ஒரு எடுத்துக்காட்டைப் பார்க்கலாம். நெகேமியா 6:9, **"அந்த வேலை நடந்தேறாதபடிக்கு எங்கள் கை சலித்துப்போம் என்று சொல்லி, அவர்கள் எல்லாரும் எங்களைப் பயமுறுத்தப்பார்த்தார்கள். ஆதலால் தேவனே நீர் என் கைகளைத் திடப்படுத்தியருளும்."** என்று மனிதனைப் பார்த்து பேசிக்கொண்டிருந்த நெகேமியா, தேவனை நோக்கி ஜெபிக்கிறதை வாசிக்கிறோம். ஆக, இவ்விதமாக, ஒரு குறிப்பிட்ட காரியத்திலிருந்து முற்றிலுமாய், கவனத்தைத் திருப்பி வேறொரு காரியத்தை தொடர்புபடுத்துகிற ஒரு காரியம் புனைஉருவ அணி. மனிதனோடு பேசிக்கொண்டு இருந்த இவர், தேவனோடு பேசுகிறவராக மாறிவிடுகிறார். இன்னும் சில சங்கீதங்களில் பார்க்கும்போது, அந்த மலைகள், ஆறுகளோடு பேசுகிறதைப்போல, சங்கீதக்காரன் பேசுகிறதைப் பார்க்க முடியும். வேறொரு கருத்தைக் கூறிக்கொண்டிருப்பார். திடீரென்று, மற்றொரு காரியமான ஜடப்பொருளை நோக்கி சங்கீதக்காரன் பேசுகிறதைப் பார்க்க முடிகிறது. இவ்வாறு பல காரியங்களை நாம் கவிதைகளில் பார்க்கிறோம். பாடல்களில் பார்க்கிறோம். வேத புத்தகத்தில் நாம் அதிகமான பகுதி கவிதையாகவே இருக்கிறது என்று கற்றுக்கொண்டிருக்கிறோம். வேத வல்லுநர்கள் கூறிய கருத்துக்கள்தான் அவைகள் எல்லாம். ஆகவே, வேதத்தை விளக்கம் கொள்ளும்போது,

எவ்வாறு கவனமாய் இருக்கவேண்டுமென்று இதுவரை கற்றுக்கொண்ட காரியங்கள் உங்களுக்கு விளக்கமளிப்பதாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இன்னும் அநேக இலக்கணங்கள் வரக்கூடியதாகவே இருக்கிறது. நமக்கு எவ்வளவு தூரம் முக்கியமானதும், அவசியமானதுமாயிருக்கிறதோ, அவைகளை மாத்திரம் நாம் கற்றுக்கொண்டிருக்கிறோம். நன்றாக இவைகளைப் புரிந்துகொண்டு, இன்னும் அதிகமான காரியங்களை ஆன்லைனில், நூலகங்களில், மற்றும் வேதாகம கல்லூரிகளில் கற்றுக்கொள்ளுங்கள். இன்னும் புத்தக கடைகளில், வேதாகம வியாக்கியானம் எவ்வாறு செய்யவேண்டும் என்பதற்கு அநேக புத்தகங்கள் கிடைக்கிறது. நீங்கள் அவைகளையும் வாங்கி, வாசித்து அறிந்துகொள்ளும்போது, வேதத்தை நன்றாக விளக்க செய்ய முடியும். அதில் கவனம் செலுத்தி வியாக்கியானம் செய்ய வேண்டிய பொறுப்பு அதிகமிருப்பதை நமக்கு நன்றாக கற்றுத்தருகிறது. மேலும் கூடுதலாக கற்றுக்கொள்ளுங்கள், புரிந்துகொள்ளுங்கள். சிறந்த ஆசிரியராக விளங்குங்கள் என்று உங்களை வாழத்துக்கிறேன்.

<u>சம்பவங்களை விளக்கப்படுத்துதல்:-</u>

அடுத்து, சம்பவங்களை நாம் எவ்விதமாக அர்த்த விளக்கம் கொள்ளப்போகிறோம் என்று சற்று கற்றுக்கொள்வோம். வேதத்தில் அநேக சம்பவங்கள் காணப்படுகிறது. இல்லையா? அவற்றை நாம் எவ்விதமாக விளக்கம் செய்ய வேண்டும்? மற்றவர்களுக்கு எவ்வாறு விளங்கச் செய்யவேண்டும்? நாம் சம்பவங்களைப் படிக்கும்போது, என்னென்ன காரியங்களை கவனம் கொள்ளவேண்டுமென்று கற்றுக்கொள்ளும்போது, வேதத்தை வாசிப்பதில் இன்னும் அதிமான அர்த்தத்தை பெற்றுக்கொள்ள முடியும், தெளிவான அர்த்தங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அதுதான் முக்கியம்.

வேதத்திலுள்ள சம்பவங்களை நாம் படிக்கும்போது, நாம் என்னென்ன காரியங்களை அறிந்திருக்க வேண்டும், தெரியுமா?

1. இந்த சம்பவம், உபதேசங்களை நேரிடையாகப் போதிக்கவில்லை என்ற கண்ணோட்டத்தோடு படிக்க வேண்டும், அதாவது வேதத்திலுள்ள சம்பவங்கள் உபதேசங்களை நேரிடையாகப் போதிக்கிற சம்பவங்கள் அல்ல. நடைபெற்ற சம்பவங்களை வேதம் நமக்கு சொல்லுகிறது. அதிலே உபதேசத்திற்கான விபரம் இருக்கிறது. ஆனால், அது உபதேசத்தை நேரிடையாக உடையது அல்ல என்றதொரு அர்த்தத்தோடு நீங்கள் விளக்கம் செய்யவேண்டும். அதுவொரு சம்பவம்தான். இதைப்போன்று வேதத்தில் அநேக சம்பவங்கள் கூறப்பட்டுள்ளது. அந்த சம்பவங்கள், உபதேசத்திற்கு உதவியான விபரத்தை உடையதாய் இருக்கிறது. ஆனால் அது, உபதேசத்தை நேரிடையாகக் கொண்ட ஒரு காரியமல்ல என்பதைப் புரிய வேண்டும். 1 பேதுரு 3:6-ஐ வாசிக்கலாம், “***அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள், நீங்கள் நன்மைசெய்து ஒரு ஆபத்துக்கும்***

*பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்.''* இது சம்பவம். அதை வைத்து எவ்வாறு விளக்குகிறார் என்பதைக் கவனியுங்கள். நீங்கள் நன்மைசெய்து, ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால், அவளுக்கு பிள்ளைகளாயிருப்பீர்கள் என்று அதிலிருந்து உபதேசத்தை எடுத்துக்கொடுக்கிறார். ஒரு சம்பவம் இருக்கிறது. அந்த சம்பவத்திலிருந்து நாம் அதற்குரிய விளக்கத்தை எடுக்கலாம், விபரத்தை எடுக்கலாம். அந்தச்சம்பவத்தை அப்படியே போதனையாகச் சொல்லக்கூடாது. அவ்விதமாக விளக்கம் கொள்ளக்கூடாது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

இன்னொரு எடுத்துக்காட்டைப் பார்க்கலாம். வேதத்திலே நாம் யெப்தாவின் பலியைக்குறித்து பார்க்கிறோம். தன் மகளைப் பலிசெலுத்துகிறதைக்குறித்து, நாம் வாசிக்கிறோம். அதைக்குறித்து அநேக வேத வல்லுநர்களின் கருத்து நமக்கு இருந்தாலும், அதுவொரு சரியானதொரு பலியல்ல என்பதை நாம் அறிகிறோம். சில வேதவல்லுநர்கள், உண்மையிலேயே, தன் மகளை பலிசெலுத்தினான் என்று சொல்லுகிறார்கள். வேறுசில வேத வல்லுநர்கள் அவள் அதற்குப் பின்பதாக தன்னுடைய வாழ்வை, திருமணம் எதுவும் செய்யாமல், தனிமையில் செலவழித்து பலியாக செலுத்தினாள், அதாவது தனிமையில் வாழ்ந்தாள் என்ற அர்த்தத்திலே சொல்கின்றார்கள். ஆனாலும் எது, எப்படியிருந்தாலும், யெப்தா அவ்விதமாக முடிவு செய்த காரியம், அந்த சம்பவம் சரியானதொரு எடுத்துக்காட்டு அல்ல. அதைப்போல தாவீது, பத்சேபாள் சம்பவத்தைப் பார்க்கின்றோம். இந்த சம்பவத்திலிருந்து நாம் நல்ல பாடங்களைக் கற்றுக்கொடுக்கிறது இல்லை. ஒருவேளை, இப்படிப்பட்ட சூழ்நிலையில், தாவீது வீழ்ச்சியுறுகிறான் என்பதை பெற்றுக்கொள்கிறோம்.

அடுத்து, நாம் அறிந்திருக்க வேண்டிய விஷயம், சம்பவங்களை வைத்து விளக்கம் செய்யும்போது, நாம் இன்னொரு காரியத்தையும் கவனம் கொள்ள வேண்டும்.

2. இது உலகெங்கும் நடைபெறும் சம்பவங்கள் அல்ல, அதாவது இந்த வேதத்தில் நடைபெற்ற சம்பவங்கள் எல்லாம் எல்லோருக்கும், அதே மாதிரி நடக்குமென்று சொல்லக்கூடாது. அது நபருக்கு நபர் வித்தியாசப்படும். ஒருவருக்கு ஒருவிதமாய் வேதத்தில் நடைபெற்றிருக்கும். அதே மாதிரி எனக்கும் நடைபெற வேண்டியது அவசியமில்லை. உதாரணமாக, ஆதியாகமம் 24ம் அதிகாரத்தில் ஈசாக்குக்கு எலெயாசர் பெண் பார்க்கச் சென்ற சம்பவத்தை வாசிக்கின்றோம். ஆதியாகமம் 24ம் அதிகாரத்தில் விளக்கமாக அதை நாம் படிக்கிறோம். அங்கே, எலெயாசர் பொருத்தனை செய்கிறதைப் பார்க்கிறோம். நேர்வழியாய் என் தேவன் என்னை நடத்தி வந்தார் என்று சொல்லுகிறதைப் பார்க்கிறோம். இதைப்போலத்தான் எனக்கும் நடக்கும் அல்லது எலெயாசரைப்போல இவ்விதமாகப் போகும்போது இந்தெந்த காரியங்கள் எல்லாம் நடக்கும் என்பதைப்போல, நாம் அதைவைத்து அப்படியே எதிர்பார்க்க வேண்டும் என்று சொல்லக்கூடாது. அது ஒரு சிலருக்கு ஒருவிதமாய் நடைபெறுகிற விஷயம், அல்லது சவுலாய் இருந்து, பவுலாய் மாறியதுபோலவே

என்னுடைய வாழ்க்கையில் நடந்தால்தான் இரட்சிப்பு நடந்திருக்கிறது என்று சொல்லக்கூடாது. அதுபோல், எலியாவுக்கு தேவன் போஷித்த விதத்தை வைத்து, என்னையும் தேவன் காகத்தைக்கொண்டுதான் போஷிப்பார் என்று சொல்லக்கூடாது. இவ்விதமாக அநேக காரியங்களை நாம் சிந்தித்துப் பார்க்கலாம். மத்தேயுவை கர்த்தர் அழைத்த விதம், அப்போஸ்தலர்களுக்கு ஆவியானவர் அருளப்பட்ட விதம் போன்றவற்றையெல்லாம் நாம் படிக்கிறோமே, இந்த நிகழ்ச்சிகள் அப்படியே சபையில் இன்றும் நடக்கவேண்டும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டியிதில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அனுபவத்தைக் கொடுப்பார்.

ஆகவே, நடந்த நிகழ்வுகளை வியாக்கியானம் செய்யும்போது, இவற்றையெல்லாம் கவனம் செய்ய வேண்டும். அதிலுள்ள மாதிரியே எனக்கும் நடக்கும், உங்களுக்கும் நடக்கும் என்று சொல்கிற ஒரு போதனையை நீங்கள் செய்வீர்களானால், தவறாய் நீங்கள் மக்களை நடத்தி விடுவீர்கள். அதற்கு கட்டளையை வேதத்திலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டும். மற்றொரு ஒத்த வசனத்தை எடுத்து அப்படி சொல்லியிருக்கிறபடியினால், இந்த சம்பவத்தில் நடைபெற்றிருக்கிற சம்பவமும் சரிதான். ஆகவே அதைப்போல, உங்கள் வாழ்க்கையில் நடக்க வாய்ப்பு இருக்கிறது என்று கட்டளையின் அடிப்படையில் ஆராய்ந்து விளக்கம் சொல்ல பழக வேண்டும் என்பதை கற்றுக்கொள்ளுங்கள். இந்த சம்பவங்கள் எல்லாம் உள்ளர்த்தங்கள் பொதிந்துள்ள கதைகள் அல்ல என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இதுவரை இரண்டு காரியங்களை நாம் கற்று இருக்கிறோம். மூன்றாவது காரியத்தை இப்போது தொடர்ந்து கற்கிறோம்.

3. இந்த சம்பவங்கள் உள்ளர்த்தங்கள் கொண்ட கதைகள் அல்ல. இந்த சம்பவங்கள் எல்லாம் சரித்திரம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இது உவமைகள் அல்ல. உவமைகள் என்றால், தேவன் அதற்காக விளக்கப்படுத்தி ஏதோவொரு விஷயத்தை உள்ளே உருவகமாகப் பேசியிருப்பார். ஆனால் சம்பவங்கள் எல்லாமே சரித்திரமாக இருக்கிறது. அதிலே உள்ளர்த்தங்கள் பொதிந்து இருக்கும், என்ற அர்த்தத்திலே நீங்கள் பார்க்க கூடாது. அவ்வாறு நீங்கள் விளக்கம் சொல்லவோ, விளக்கப்படுத்தவோ கூடாது. இது நாம் வேதாகம விளக்கவியல் பாடத்திலிருந்து தெரிந்துகொள்ள வேண்டிய பாடமாக இருக்கிறது. வேதத்தில் நடைபெற்ற சம்பவங்களை வாசிக்கும்போது, அதில் ஏதோ உவமைகள் இருக்கிறது என்று படிக்கக்கூடாது. அதில் ஏதோ உள்ளர்த்தங்கள் இருப்பதாக நினைத்து விளக்கம் சொல்லக்கூடாது. உதாரணமாக, சகேயு, அந்த காட்டத்தி மரத்தில் ஏறியிருந்த நிகழ்வை, அதில் ஏதோ உள்ளர்த்தம் இருப்பதுபோல நினைத்து விளக்கம் சொல்லக்கூடாது. காட்டத்திமரம் என்பது இதைக்குறிக்கிறது, அதிலே அவன் ஏறியிருந்தது, இப்படிப்பட்ட ஒரு சம்பவத்தைக் குறிக்கிறது என்ற விளக்கங்களை நீங்கள் புதிதாகக்

கொடுப்பீர்களானால், கேட்பதற்கு வேண்டுமானால் நலமாக இருக்கும். ஆனால், வேதத்தை நீங்கள் திரித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

அதற்கு கட்டளை இருந்தால் மட்டுமே அல்லது வேறொரு வசனம் அதற்கு விளக்கமாக இருந்தால் மாத்திரமே சம்பவங்களுக்கு அதை விளக்கமாக நீங்கள் கூறவேண்டுமேயொழிய, அதில் ஏதோ உள்ளான அர்த்தம் இருக்கிறது என்று சொல்லி, ஒவ்வொரு சம்பவத்திற்கும் விளக்கம் சொல்ல முயலக்கூடாது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

4. அதைப்போல அறிமுகம் அற்ற செயல்பாடுகள் காணப்படும் என்று நினைவில் கொண்டு, இந்த பகுதிகளை அல்லது சம்பவங்களை விளக்கப்படுத்த வேண்டியது அவசியம். ஏனெனில் வேதத்திலுள்ள சில செயல்பாடுகள், நமக்கு அறிமுகமற்ற செயல்பாடுகளாய் இருக்கிறதை நீங்கள் பார்க்கலாம். உதாரணமாக, யூத கலாச்சாரத்தின் அடிப்படையில் சில செயல்பாடுகள், வேதத்தின் சம்பவங்களில் செய்யப்பட்டதைப் பார்க்கிறோம். அவை கட்டளையாய் சொல்லப்படவில்லை. ஆனால் அவர்களின் கலாச்சாரத்தின் அடிப்படையில் சில காரியங்களைச் செய்திருப்பார்கள். சில சம்பவங்களில் பார்க்கும்போது, அவர்கள் 'வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு' என்று நாம் வாசிக்கிறோம். இல்லையா? நம்முடைய கலாச்சாரத்தில் அது பொதுவாய் காணப்படுகிற விஷயமல்ல, ஆனால் யூத கலாச்சாரத்தில் அது பொதுவாக காணப்படுகிற விஷயம். ஆனால் அது கட்டளையாய் ஒன்றும் சொல்லப்படவில்லை. இந்த மாதிரி துக்ககரமான சம்பவங்களாய் நடக்கும்போது, இப்படி வேதனையான நிகழ்வுகள் நடக்கும்போது, இவ்வாறு நீங்கள் உங்கள் வஸ்திரத்தைக் கிழிக்கவேண்டும் என்றெல்லாம், வேத கட்டளை ஒன்றும் இல்லை. ஆனால் அவர்களின் கலாச்சாரத்தில் செய்யப்பட்ட சில காரியங்கள் இருந்திருக்கிறது.

இன்னும்கூட 1 இராஜாக்கள் 19:19-ல் இவ்வாறு வாசிக்கிறோம், ***"அப்படியே அவன் அவ்விடம் விட்டு புறப்பட்டுப்போய், பன்னிரண்டு ஏர்பூட்டி உழுத சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவைக் கண்டான், அவன் பன்னிரண்டாம் ஏரை ஓட்டிக்கொண்டிருந்தான், எலியா அவன் இருக்கும் இடமட்டும்போய், அவன்மேல் தன் சால்வையைப் போட்டான்."*** எலியா, எலிசாவின் மீது சால்வையைப் போட்டான் என்பது கலாச்சாரத்தில் செய்யப்பட்ட காரியமே தவிர, கட்டளையாய் சொல்லப்பட்ட காரியம் அல்ல. ஆகவே, இவ்விதமாக, நீங்கள் ஒரு சம்பவத்தை விளக்கப்படுத்தும்போது, அது கலாச்சாரத்தினால் செய்யப்பட்டதொரு காரியமா? என்பதை நீங்கள் நிதானித்து அறிந்து விளக்கம் செய்ய வேண்டியது அவசியம்.

5. அறிமுகமற்ற சொல் உபயோகங்கள் சிலவேளைகளில் வேதத்தில் உள்ள சம்பவங்களில் இடம்பெறுகிறதை நாம் பார்க்கிறோம். அது நமக்கு ஒருவேளை பழக்கமற்ற சொல் உபயோகமாக இருக்கலாம். அது அந்தந்த பிரதேச நம்பிக்கையைப் பொறுத்து இருக்கலாம். அதை நாம் பின்பற்ற வேண்டுமென்ற அவசியமும் இல்லை.

அதை நாம் விளக்கம் செய்யும்போது, அறிமுகமற்ற சொல்பிரயோகங்கள் இருந்தால், அது அந்த பிரதேச நம்பிக்கையாக இருந்திருந்தால், அதை நாம் பின்பற்ற வேண்டுமென்ற அவசியமில்லை. அதை நீங்கள் பின்பற்றவேண்டுமென்று உபதேசிக்க கூடாது, விளக்கப்படுத்திவிடக் கூடாது. நாம் சற்று முன்னர் பார்த்ததுபோல அது கலாச்சாரத்தில் செய்யப்பட்ட காரியம். அது கட்டளையாய் சொல்லப்படாத காரியமாக இருக்கிறது. ரூத் 1:16, ***"அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம், நீர்போகும் இடத்திற்கு நானும் வருவேன், நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன், உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம், உம்முடைய தேவன் என்னுடைய தேவன்."*** என்று ரூத் சொல்கிறதை நாம் வாசிக்கிறோம். இது அந்த பிரதேச நம்பிக்கை சார்ந்த விஷயம். ரூத் தன்னுடைய மாமியாரைவிட்டு பின்வாங்காமல், முழுவதும் பின்பற்றுகிறதை இந்த வசனத்தில் நாம் பார்க்கிறோம். அதற்கு அவர் சொன்ன வார்த்தைகள் நான் உம்மைப் பின்பற்றாமல், உம்மைவிட்டு திரும்பி போவதைக்குறித்து என்னோடே பேச வேண்டாம். நீர் போகுமிடத்திற்கு நானும் வருவேன், நீர் தங்குமிடத்தில் நானும் தங்குவேன். உம்முடைய தேவன், என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து அங்கே அடக்கம் பண்ணப்படுவேன். மரணமேயல்லாமல், வேறொன்று என்னைப்பிரித்தால் கர்த்தர் அதற்கு சரியாய் செய்யக்கடவர் என்று சொன்னாள் என்று பார்க்கிறோம். இது அந்த பிரதேச நம்பிக்கை. பின்பற்றுவேன், பின்பற்றுவேன் என்று அவள் சொல்கிறது அவளுடைய நம்பிக்கை. மாமியாரை நீங்கள் இவ்விதமாக பின்பற்றிப்போக வேண்டும், விடாமல் பின்பற்றிப்போக வேண்டுமென்று சொல்லி, நாம் அதிலிருந்து ஒரு போதனையை எடுத்துக் கொடுக்க கூடாது. அது சரியாக இருக்கும் என்று நமக்கு தோன்றவில்லை. அது சரியாக இருக்கவும் இருக்காது. ஏனெனில், அது அங்குள்ள கலாச்சாரம். இங்கே அதை நம்முடைய கலாச்சாரத்திற்கு கொண்டுவரும்போது, அது பின்பற்றத்தகாத சூழ்நிலைக்கு உள்ளாகிவிடும். ஆகவே ஏற்கனவே கூறியதுபோல, நிகழ்ச்சி அல்லது சம்பவங்களிலிருந்து நாம் போதனைகளை எடுக்கக் கூடாது. கட்டளையிருந்தால் மாத்திரமே அதை எடுக்க வேண்டும். அதை விளக்கம் செய்வது அவசியமாயிருக்கும். இவ்விதமாக அறிமுகமற்ற சொல்பிரயோகங்கள், அந்த பிரதேச நம்பிக்கை வரும்போது, நாம் அதைக் கவனம் செய்து, அதை விளக்கப்படுத்த வேண்டியது அவசியம். இன்னும் சில சம்பவங்களில் பார்க்கும்போது, அங்கே புறஜாதிகள் வணங்கின தெய்வங்களின் பெயரை அவர்களுக்கு வைக்கிறதை நாம் பார்க்கிறோம். இந்த சொல் பிரயோகங்கள், அதாவது இந்த பெயர்கள் வேதத்தில் காணப்படுகிறது என்பதற்காக நாம் அந்தப் பெயரை வைக்கிறது தவறு. சாத்ராக் என்று ஒருவருக்கு பெயர் வைக்கிறார்கள் என்றால், அது வேதத்தில்தான் இருக்கிறது என்பதற்காக வைக்கக்கூடாது. சாத்ராக் என்பது நம்முடைய தேவனின் நாமம் அல்ல. அங்கே பாபிலோனில் காணப்பட்ட தெய்வத்தின் பெயராய் அது காணப்படுகிறது. அதனுடைய அர்த்தத்தையும், பின்னணியத்தையும் பார்க்க வேண்டும். பெயர்களைச் சூட்டுவதில் கவனம் கொள்ளவேண்டுமென்பதை இப்போது

நாம் கற்றுக்கொண்டிருக்கிறோம். இவ்விதமாக பிரதேச நம்பிக்கை, சொல்பிரயோகங்கள் காணப்படும். அதை நாம் எவ்விதமாகப் பின்பற்றுகிறோம், பயன்படுத்துகிறோம், விளக்கப்படுத்துகிறோம் என்பதை, நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயமாக இருக்கிறது.

சில சம்பவங்கள் அனைவருக்குமாக சொல்லப்பட்ட விஷயமாக இருக்கும். சில காரியங்கள், சில சம்பவங்களில் வருகிற நபர்களுக்கு மட்டும் சொல்லப்பட்ட காரியங்களாக இருக்கும். அதையும் நாம் கவனம் செய்து விளக்கப்படுத்த வேண்டும். இது அனைவருக்காகவும் சொல்லப்பட்டவைகள் அல்ல. சிலருக்கு மாத்திரமே சொல்லப்பட்ட காரியங்கள் இருக்கின்றது. சில காரியங்கள் அனைவருக்கும் சொல்லப்பட்டதுமாயும் இருக்கிறது என்பதை நீங்கள் கவனத்தில் கொண்டு, விளக்கம் கொள்ள வேண்டும். உதாரணமாக, நாகமானைக்குறித்து யோர்தானில் ஏழுதடவை மூழ்கும்படி சொல்லப்பட்ட காரியமானது, நாகமானுக்கு மட்டுமே சொல்லப்பட்ட காரியமே தவிர, எல்லோருக்கும் சொல்லப்பட்ட காரியம் அல்ல. அதற்காக, நாகமானைப்போல, நாம் அனைவரும் யோர்தானுக்குப்போய் ஏழு தரம் மூழ்க கர்த்தர் சொல்கிறார் என்று நாம் சொல்ல முடியாது. அந்த காரியம் ஒரு குறிப்பிட்ட நபருக்கு மாத்திரமே பொருந்தும். அதைப்போல, பணக்கார, ஆஸ்தியுள்ள வாலிபனுக்கு சொல்லப்பட்ட காரியம் எல்லோருக்கும் சொல்லப்பட்ட காரியம் அல்ல. அந்த குறிப்பிட்ட நபருக்கு மட்டும் சொல்லப்பட்டது என்ற கண்ணோட்டத்திலே நாம் அதை விளக்க வேண்டும்.

அடுத்து, சகலவிதமான மக்களுக்கும் சொல்லப்பட்ட காரியங்களும் வேதத்தில் இருக்கின்றன. நானும், என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்று வேதத்தில் சொல்லப்பட்ட காரியமானது, எல்லோரும் அல்லது ஒவ்வொருவரும் அறிக்கையிடக்கூடிய காரியமாக இருக்கிறது. இவ்விதமாக நாம் சம்பவங்களை விளக்கப்படுத்தும்போது, வேதத்திலே சொல்லப்பட்ட சம்பவங்களுக்கு விளக்கம் கொடுக்கும்போது, அதை பிரசங்கிக்கும்போது, மற்றவர்களுக்கு விளங்க வைக்கும்போது, அல்லது நீங்கள் படித்து புரிந்துகொள்ளும்போது, இவற்றையெல்லாம் கவனத்தில்கொள்ள வேண்டியது அவசியம். நீங்கள் ஒருவேளை இவற்றில் சிலவற்றை பின்பற்றிக் கொண்டிருக்கலாம். சில காரியங்கள், அதாவது இப்போது கற்றுக்கொண்டிருக்கிற காரியங்கள் புதிதாக தோன்றுகிற இடங்களும் உண்டு. ஆகவே, அவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு வேதத்தை வாசித்துப் பாருங்கள். இதுவரை செய்த தவறுகளிலிருந்து, நீங்கள் வெளியே வந்து, ஆழமான, அருமையான, ஆரோக்கியமான வேதவாசிப்பையுடைய அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இவற்றையெல்லாம், நீங்கள் அறிந்துகொண்டிருக்க வேண்டும். வேதத்திலுள்ள சம்பவங்களுக்கான விளக்கத்தை கொடுக்க முனையும்போது இவற்றையெல்லாம் அறிந்து, விளக்கப்படுத்த வேண்டியது அவசியம். அவ்வாறு செய்யும்போதுதான், ஆரோக்கியமான உபதேசத்தை நீங்களும் கற்றுக்கொள்ள முடியும், ஆரோக்கியமாக

தேவனை பின்பற்ற முடியும், மற்றவர்களுக்கும் ஆரோக்கியமான உபதேசத்தை கொடுக்க முடியும்.

<u>நிதானித்து கவனிக்க வேண்டியவைகள்:-</u>

அடுத்து, நீங்கள் வேதத்திலுள்ள இப்படிப்பட்ட சம்பவங்களைப் படிக்கும்போது, சில காரியங்களை நீங்கள் நிதானித்து அறியவேண்டும். இப்பொழுது நீங்கள் நிதானமாக கவனிக்கவேண்டிய ஒருசில காரியங்களைப் பார்க்கலாம். நீங்கள் சம்பவங்களை விளக்கம் கொள்ளும்போது, அதில் நீங்கள் நிதானித்து கவனிக்கவேண்டிய விஷயங்கள் உண்டு. **அது சம்பந்தமான மூன்று காரியங்களைப் பார்ப்போம்.**

1) சம்பவத்தை விவாதிக்கும் வசனங்களை நீங்கள் நன்றாகப் படிக்கவேண்டும். எதையெல்லாம் நீங்கள் நிதானித்து அறியவேண்டுமென்றால், முதலில் சம்பவத்தை விவரிக்கும் வசனங்களை மீண்டும், மீண்டும் நன்றாக வாசிக்க வேண்டும். ஏனெனில், அவ்வாறு செய்யும்போது, நடைபெற்ற சம்பவங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். நீங்கள் நடைபெற்ற விஷயத்தையே அறியாமல், அதற்கு விளக்கம் கொடுப்பீர்களானால், அது எவ்வாறு இருக்குமென்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். சம்பவமே தெரியவில்லை. ஏதோ ஆங்காங்கே உள்ள காரியங்களை மட்டும் படித்து, நீங்கள் அறிந்துகொண்டு, அதற்கு இப்படியிருக்கலாம் அல்லது அப்படியிருக்கலாம் என்று சொல்வீர்களானால், மிகப்பெரிய தவறைச் செய்து விடுவீர்கள். அதனால் சம்பவத்தை விவரிக்கும் வசனங்கள் முழுமையையும், நீங்கள் முற்றிலுமாக வாசித்து, நிதானித்து அறியவேண்டும்.
2) சம்பவத்திலுள்ள நபர்களின் வசனத்தை நன்றாக வாசித்துப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு நபரும் என்ன பேசியிருக்கிறார்கள்? அவர் கூறிய வார்த்தையின் அர்த்தம் என்ன? ஏன் இந்த இடத்தில் இவர் இவ்வாறு சொல்லியிருக்கிறார்? பிலிப்புவை எடுத்துக்கொள்வோமானால், ஏன் பிலிப்பு இவ்வாறு கூறினார்? அந்த நபர் சொன்ன வசனங்களையும் சிறிது தெளிவாகப் புரிந்துகொண்டு, அந்த மனிதனுடைய பின்னணியை கொஞ்சம் அறிந்து, அவருடைய தன்மையை, குணநலன்களை அறிந்துகொண்டு, அவர் பேசுகிற விதத்தையும் கற்பனையில் சிந்தித்து பார்த்தோமானால், நாம் அந்த சம்பவத்திற்கு நல்ல விளக்கத்தை அறிந்துகொண்டு மற்றவர்களுக்கு சொல்ல முடியும். ஏனெனில், காரணங்களை நாம் அறியாமல், அதன் விளக்கத்தை சொல்ல முடியாது. யோபு பற்றி நீங்கள் படிக்கிறீர்கள் என்றால், யோபு ஏன் அவ்வாறு சொன்னார்? என்ன சொன்னார்? என்றெல்லாம் அவர் சொன்ன வசனங்களை நாம் செவிகொடுத்து புரிந்துகொண்டால்தான் அவர் சொன்னதின் காரணம் புரியும். ஆகவே ஒரு சம்பவத்தை எடுத்து விளக்கம் கொடுக்கும்போது, அந்த சம்பவத்தில் வருகிற நபர்களின் வார்த்தைகள், வசனங்கள் போன்ற அனைத்தையும் நன்றாகப் படியுங்கள். இயேசுகிறிஸ்து ஒரு குருடனை சுகமாக்குகிறார் என்றால், அந்த சம்பவத்தில் யாரெல்லம் இருக்கிறார்கள்?

இயேசுகிறிஸ்து இருக்கிறார், சம்பந்தப்பட்ட குருடன் இருக்கிறார். சீஷர்கள் இருக்கிறார்கள், பொதுமக்கள் இருக்கிறார்கள், இன்னும் வேறே யார் யாரெல்லாம் இருந்தார்கள்? அவர்கள் என்ன சொன்னார்கள் என்று சொல்லி நாம் அறிந்து, புரிந்து அந்த வசனங்களைக் கற்று விளக்கம் கொடுக்க வேண்டியது அவசியம்.

3) அந்த சம்பவத்திற்கு மூல காரணமாய் இருக்கிறவர் யார்? என்பதைப் பார்க்க வேண்டும். உதாரணமாக, யோபுவின் புத்தகத்தை நீங்கள் வாசிக்கிறீர்கள் என்றால், அந்த சம்பவத்திற்கு காரணமாய் இருக்கிறவன் சாத்தான். ஆகவே, யார் அந்த சம்பவத்தில் முக்கியமாக இருக்கிறார்கள்? யார் அந்த காரியத்தைச் செய்கிறார்? என்று காரியத்தின் மூலகாரணத்தை, மூல காரணமாயிருக்கிறவரை நாம் முதலாவது நிதானித்து, அறிந்து கண்டுபிடிக்க வேண்டும். குருடனைச் சுகமாக்குகிற சம்பவத்தில், குருடன் முக்கியமான இடத்தில் இருக்கிறார். ஆகவே, அதைச் சுற்றி நடக்கிற சம்பவங்கள், அதற்கு இயேசு கூறுகிற பதில்கள், சீஷர்கள் தருகிற பதில், இவ்வாறு எல்லாவற்றையும் பார்த்து, நீங்கள் விபரங்களை சேகரித்து, நிதானித்து அறிய வேண்டியது அவசியம்.

பிரியமானவர்களே, இதுவரை கற்றுக்கொண்ட காரியங்களை நினைவில்கொண்டு வேதத்தை வாசியுங்கள். குறிப்பாக, இந்த நிகழ்ச்சியில் நாம் சம்பவத்தை, ஒரு நிகழ்ச்சியை எவ்விதமாக வியாக்கியானம் செய்ய வேண்டும்? மற்றவர்களுக்கு அதை எவ்வாறு விளங்கப்பண்ணவேண்டும்? நாம் எவ்விதமாய் விளங்கிக் கொள்ளவேண்டும்? என்பதைப் பற்றி கற்றுக்கொண்டோம். இதற்கு நாம் எவ்வளவு கவனமாய் இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது என்றெல்லாம் நீங்கள் கற்றுக்கொண்டீர்கள். வேதத்தை ஏனோ, தானோவென்று வாசித்தால் புரிந்து விடாது. ஒரு சிரத்தையோடு, கவனத்தோடு, ஜெபத்தோடு படிக்கவேண்டியது வேதாகமம். வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும் என்று சொல்லி, ஜெபத்தோடு கூட வேதத்தை நீங்கள் வாசிக்க வேண்டும். அதில் இத்தனை அம்சங்களையும் கவனிக்க வேண்டும். அப்பொழுதுதான் நீங்கள் வேதத்தை சரியானபடி, தோண்டி எடுத்து ஆழமான அர்த்தங்களை வெளியே கொண்டுவர முடியும். ஆரோக்கியமான கருத்துக்களை நீங்களும் கற்றுக்கொள்ள முடியும், மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுக்க முடியும். அது நல்லது, அது ஆசீர்வாதமான விஷயம். வேதத்தை உபதேசிக்கிறதுபோல ஆசீர்வாதமான காரியம் வேறொன்றுமில்லை. அந்த பாக்கியத்தை சரியாக, நிதானமாக நீங்கள் படித்து, புரிந்து பயன்படுத்துவீர்கள் என்று விசுவாசிக்கிறேன். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

<u>**கேள்விகள்:**</u>

1. மிருக உருவக அணி குறித்து வசன ஆதாரங்களுடன் சற்று விளக்கமாக கூறுக?

2. உயர்வு நவிற்சி அணி குறித்து வசன ஆதாரங்களுடன் சற்று விளக்கமாக கூறுக?
3. முரண்தொடை அணி குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
4. புனை உருவ அணி என்றால் என்ன? வசன உதாரணத்தைக் கூறுக?
5. சம்பவங்களை நாம் விளக்கப்படுத்தும்போது, எவைகளிலெல்லாம் கவனம் செலுத்தவேண்டும் என்பதனைக் கூறுக? (தலைப்புகள் மட்டும்)
6. சம்பவங்களை நாம் விளக்கப்படுத்தும்போது, நாம் கவனம் செலுத்த வேண்டிய காரியங்களைக் குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
7. சம்பவங்களைப் படிக்கும்போது, நாம் நிதானித்து கவனிக்க வேண்டிய மூன்று காரியங்களைக் கூறுக?
8. சம்பவங்களைப் படிக்கும்போது, நாம் நிதானித்து கவனிக்க வேண்டிய மூன்று காரியங்களைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?

# <u>வேதாகம விளக்கவியல்</u>

## பாடம் - *12*

**<u>உவமைகளை அர்த்த விளக்கம் செய்தல்:-</u>**

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, நாம் இந்தப்பாடத்தில் வேதாகமத்திலுள்ள உவமைகளை எவ்வாறு அர்த்தவிளக்கம் செய்வது என்று கற்றுக்கொள்ளப்போகிறோம். வேதத்தில் அநேக உவமைகளை இயேசுகிறிஸ்து கூறியிருக்கிறதை நாம் பார்க்க முடிகிறது. மேலும் இதைப்போல அநேக உவமைகளை பழைய ஏற்பாட்டிலும் பார்க்கிறோம். இந்த உவமைகளைப் பொதுவாக விசுவாசிகள் எவ்வாறு பார்க்கிறார்கள் என்றால், மறைபொருள் அதிலே நிறைந்திருக்கிறது என்றே பார்க்கிறார்கள். அதிலுள்ள அனைத்து காரியங்களுக்கும் ஏதோவொரு அர்த்தமிருக்கிறது என்ற கண்ணோட்டத்தோடுதான் அநேகர் அர்த்த விளக்கம் கொடுக்கிறார்கள் என்ற ஒரு நிலையைத்தான் இன்றுவரை பார்க்கிறோம். உதாரணமாக, மாற்கு *4:10-12*, மத்தேயு *13:10-13*, லூக்கா *8:9-10* வசனங்களில் இயேசுகிறிஸ்து கூறிய காரியங்களைப் பார்க்கிறோம். உதாரணமாக விதைப்பவனைப் பற்றிய உவமையைக் கூறிவிட்டு, அதற்கு விளக்கத்தையும் கூறுகிறதைப் பார்க்கிறோம். ஆகவே, இந்த உவமையைக் கூறிவிட்டு அதிலே மறைவான ஒரு பொருள் இருப்பதாக இயேசு விளக்கினதைக்கொண்டு மக்கள் என்ன நினைக்கிறார்கள் தெரியுமா? உவமை என்றாலே, அதிலே எல்லாமே மறைபொருளாய் இருக்கும் என்ற அர்த்தத்திற்கு மக்கள் வந்துவிட்டார்கள்.

ஆனால், அது உண்மையிலேயே சரியான அணுகுமுறையல்ல, ஏன் அவ்வாறென்றால், சில வசனங்களை நாம் பார்க்கும்போது, அது உவமையாகக் காணப்படுகிறது. ஆனால், மறைமுகமான அர்த்தமுடையதாக அது இல்லை. மக்கள் அதை நேரடியாக அதைப்புரிந்து கொண்டார்கள் என்று நாம் நிதானித்து அறிய முடிகிறது. உதாரணமாக லூக்கா *15:3*-ம் வசனத்திலிருந்து சொல்லப்படுகிறதை காணாமல்போன ஆட்டை கண்டுபிடிக்கிற அந்த உவமை, அதைப்போல, ஒரு ஸ்திரி *10* வெள்ளிக்காசை உடையவளாகயிருந்து ஒரு வெள்ளிக்காசு காணாமல்போனதைத் தேடிக் கண்டுபிடிக்கிறதைக் குறித்து *8*-வது வசனத்திலிருந்து காணப்படுகிற அந்த உவமை எல்லாமே தெளிவுபட இருக்கிறதை நாம் பார்க்கிறோம். அதில் மனந்திரும்புகிற பாவியினிமித்தம், தேவனுடைய தூதருக்கு முன்பாக சந்தோஷமுண்டாயிருப்பதற்கு, எடுத்துக்காட்டாக சொல்லப்பட்டிருக்கிற காரியத்தை நாம் பார்க்கிறோம். எப்படி காணாமல்போல ஆட்டைக் கண்டுபிடித்தவுடன், மேய்ப்பன் மனம் மகிழ்வானோ, காணாமல்போல அந்த வெள்ளிக்காசை கண்டுபிடித்த அவள் மகிழ்கிறாளோ, அதைப்போல தேவனுக்கு முன்பாக மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று சொல்கிற அந்த அர்த்தம் தெளிவுபட கூறியிருக்கிறதை நாம் பார்க்கிறோம். ஆக, இதில் மறைபொருள் ஒன்றும் காணப்படவில்லை. இயேசு தெளிவாகவே இதை விளக்கப்படுத்துகிறார்.

இன்னும்கூட லூக்கா *10ம்* அதிகாரம் *25-37* வரையுள்ள வசனங்களைப் பார்க்கும்போது, அங்கே கள்ளர் கையில் அகப்பட்ட ஒரு மனிதனைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். எருசலேமிலிருந்து எரிகோவுக்குப்போன அந்த மனுஷனுடைய நிலையைக் குறித்து சொல்லப்படுகிற அந்த உவமையிலே தெளிவாக இயேசுகிறிஸ்து விளக்கம் கொடுத்துவிடுகிறார். எவன் பிறனாயிருக்கிறான்? என்ற கேள்விக்கு பதில் தரும் வண்ணமாய், இந்த உவமையை இயேசுகிறிஸ்து கூறிவிட்டு, அதற்கு அவர்கள் தந்த பதிலைக்கொண்டு, அதாவது இரக்கம் செய்தவனே என்று அவர்கள் சொன்ன பதிலிலிருந்து இயேசு நீயும்போய் அப்படியே செய் என்று வசனம் *37-ல்* கூறியிருக்கிறதைப் பார்க்கிறோம். ஆக, இந்த உவமையை வைத்துப்பார்க்கும்போது, மக்கள் தெளிவாக கருத்தைப் புரிந்துகொண்டு பதில் தருகிறதைப் பார்க்கிறோம். அதைப்போல, மத்தேயு *21:45ம்* வசனம், "***பிரதான ஆசாரியரும், பரிசேயரும் அவருடைய உவமைகளைக்கேட்டு, தங்களைக்குறித்துச் சொல்லுகிறார் என்று அறிந்து,***" என்பதில், தங்களைக்குறித்து சொல்லுகிறார் என்று அறிந்து என்று வாசிக்கிறோம். இந்த உவமையை அவர்கள் அறிந்துகொண்டார்கள். இவ்விதமாக இயேசுகிறிஸ்து கூறிய வசனங்களை, குறிப்பாக உவமைகளை, மக்கள் விளங்கிக் கொண்டதை நாம் இந்த வேத வசனங்களிலிருந்து பார்க்கிறோம். எல்லாமே மறைபொருளான உவமைகளாக இருக்கிறது என்று சொல்லக்கூடாது என்பதற்கு இந்த எடுத்துக்காட்டுகளை வேதவல்லுநர்கள் நமக்குத் தந்து இருக்கிறார்கள்.

பிரியமானவர்களே, சில உவமைகள் உள்ளர்த்தம், அல்லது மறைமுகமான அர்த்தம் உடையவைகள்தான், ஆனால் இயேசு அதற்கு நிச்சயமாக விளக்கம் தந்திருப்பார். நாம் அதை எவ்விதமான விளக்கப்படுத்தப்போகிறோம் என்றுதான் இந்த பாடத்தில் சிந்தித்து, வேதத்தில் வருகிற உவமைகளை சரியாக அர்த்தம் கண்டுபிடிக்கப்போகிறோம். மாற்கு *4:10-12*,

10. அவர் தனித்திருக்கிறபோது, பன்னிருவரோடுங்கூட அவரைச் சூழ்ந்திருந்தவர்கள் இந்த உவமையைக் குறித்து அவரிடத்தில் கேட்டார்கள்.
11. அதற்கு அவர்: தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது. புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகிறது.
12. அவர்கள் குணப்படாதபடிக்கும், பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதபடிக்கும், அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி, இப்படிச் சொல்லப்படுகிறது என்றார்.

என்று வாசிக்கிறோம். இதில், *11-ம்* வசனத்தை குறிப்பாக கவனியுங்கள். புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகள் எல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகிறது என்ற வார்த்தையைக் கொஞ்சம் கவனியுங்கள். இந்த உவமைக்கு பயன்படுத்தப்பட்ட வார்த்தை '*parabole*' என்ற கிரேக்க வார்த்தையாகும். அதைத்தான் நாம் ஆங்கிலத்தில் '*parables*' என்று உவமையாக சொல்லப்படுகிறது. ஆனால் இயேசுகிறிஸ்து அரேமிய

மொழியில்தான் அவர் பேசினார் என்பதை மறந்துபோக முடியாது. இங்கே உவமை என்று சொன்ன அரேமிய மொழியின் வார்த்தை '*methol*' என்பதாகும். இந்த வார்த்தைக்கு 'பழமொழி' 'மரபுத்தொடர்' 'ஒப்புவமை' 'விடுகதை' 'புதிர்' போன்ற அர்த்தங்கள் உள்ளன. ஆனால் கிரேக்க வார்த்தையான 'parabole' என்பதற்கு எல்லாவற்றையும் உவமைகளாகவே கருதிவிடுகிறது. 'Parabole' என்ற வார்த்தை கிரேக்க மொழியில் எல்லாவற்றையும் உவமையாகவே கருதுகிறது.

புதிய ஏற்பாட்டை எடுத்துக்கொண்டால், பலதரப்பட்ட காரியங்கள் உவமைகளாக சொல்லப்பட்டு இருக்கிறது. உவமைகள் எத்தனை வகைகளில் சொல்லப்பட்டு இருக்கிறது என்று வேதாகமத்தைப் பார்க்கிறபோது, நான்கு முக்கியமான உவமைகள் காணப்படுகிறது.

1) ***உவமைக்கதை:***

இதை இயேசுகிறிஸ்து பயன்படுத்தியிருக்கிறார். இதில் என்ன விசேஷம் என்றால், இதில் ஒரு கதையிருக்கும். இந்த கதையின் மூலம், ஒரு சத்தியத்தைக் கற்பிக்க, இந்த உவமைக் கதைகள் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. நல்ல சமாரியன் கதை, கெட்டகுமாரன் அல்லது மனந்திருந்திய மைந்தன் என்று சொல்லப்படுகிற அந்த கதை போன்றவையெல்லாம், ஆரம்பமும், முடிவுமுள்ள கதைகள். இதில் இயேசு என்ன செய்தார்? இந்த உவமைக் கதைகளைக் கொண்டு, அவர் சத்தியத்தைக் கற்பித்தார். நல்ல சமாரியன் கதையின் மூலமாக தெளிவாக எனக்கு பிறன் யார்? என்ற அந்த கேள்விக்கான பதில் இயேசு தெளிவாகக் கொடுக்கிறார். அடுத்து, மனந்திருந்திய இளைய குமாரன் உவமைக் கதையில், மனந்திரும்புதலைப் பற்றிய அநேக சத்தியங்களை இயேசுகிறிஸ்து அங்கே தெளிவுபடுத்தியிருக்கிறதைப் பார்க்கிறோம். இவ்விதமாக உவமைக் கதைகளைக்கொண்டு, இயேசு சத்தியத்தைக் கற்பித்து இருக்கிறார். இதுவொரு வகை.

2) ***ஒப்புவமை:***

ஒப்புவமையானது புதிய ஏற்பாட்டில் எவ்விதமாக காணப்படுகிறது என்றால், ஒரு விஷயத்தை விளக்க, இன்னுமொன்றை ஒப்பிட்டுக் காட்டுவது ஒப்புவமை என்ற உவமையாகும். ஆக, இதுவும் உவமைதான். ஆனால் இது என்ன செய்யப்படும் என்றால், ஒரு விஷயத்தை விளக்க இன்னொரு காரியத்தை ஒப்பிட்டுக் காட்டுவார்கள். உதாரணமாக, கடுகு விதையை இயேசு ஒப்பிட்டு காட்டியிருக்கிறார். புளித்தமாவு போன்றவற்றை, இயேசு ஒப்பிட்டுக்காட்டி விளக்கியிருக்கிறார். இது ஒப்புவமை என்ற உவமை வகையாக இருக்கிறது.

3) ***உருவகங்கள்:***

இவை ஒரு உவமை மாதிரியாகத்தான் பயன்படுத்தப்பட்டிருக்கும். ஆனால் இதை நாம் பார்க்கும்போது, இதனுடைய பயன்பாடு வித்தியாசப்படுகிறது. இந்த

உருவகங்களில் உருவகித்து பேசுகிற ஒரு நிகழ்வு நடைபெறுகிறது. உதாரணமாக நீங்கள் உலகத்துக்கு உப்பாக இருக்கிறீர்கள் என்று இயேசு சொல்லுகிறாரே? இதில் உருவகித்துப் பேசுகிறார். இதில் நீங்கள் உலகத்திற்கு உப்புபோல இருக்கிறீர்கள் என்ற உருவகத்தில் இயேசுவானவர் பேசியிருக்கிறதைப் பார்க்கிறோம்.

4) ***மறைபொருள் கதைகள்:***

இதுவும் உவமை போலத்தான் இருக்கிறது. இதில் அநேக காரியங்களை கர்த்தர் வித்தியாசப்படுத்தி காண்பிக்கிறார். இதில் உவமைக்கதையின் விபரங்கள் எப்படியிருக்குமென்றால், மறைபொருள்களைக் கொண்டிருக்கிற ஒரு விஷயமாக இருக்கும். உதாரணமாக, விதைப்பவன் என்பதைப் பற்றிய உவமையில், தானியமும், களைகளும் என்பவைகள், மறைபொருள் கொண்ட கதைகளாக இருக்கின்றன. அதில் மறைவாக சத்தியத்தை உள்ளடக்கி, இயேசுகிறிஸ்து பேசுகிறார். பிறகு சீஷர்கள் பேசும்போது, இயேசுகிறிஸ்து அதற்கு விளக்கத்தையும் கொடுக்கிறார். இது மறைபொருள் கதைகள் என்று அழைக்கப்படுகிறது. இதுவும் உவமை வகைகளில் ஒன்றுதான். ஆனால், இதைப்போலத்தான் எல்லாம் இருக்கும் என்று மக்கள் நினைக்கிறதுதான் தவறு. இதில் உவமைக் கதைகள் வேறுபடுத்திக் காண்பிக்கப்பட்டுள்ளது, ஒப்புவமை, உருவகங்கள் போன்றவற்றை சுட்டிக்காட்டி சொல்லப்பட்டுள்ளது. ஆகவே, எல்லாமே மறைபொருள் உவமைகள் அல்ல, மறைபொருள் கதைகள் அல்ல, மறைபொருளாக ஏதோவொரு அர்த்தத்தை வைத்து இயேசுவானவர் சொல்லியிருக்கிறார் என்று நீங்கள் பார்க்கக் கூடாது. இயேசுகிறிஸ்துவானவர் கேட்கிற மக்களுடைய நிலையைக் கொண்டு, அவர் உவமைகளை எடுத்து பயன்படுத்தியிருக்கிறார். அதில் இயேசுவுக்கு இருந்த கரிசனை என்னவென்றால், மக்கள் தங்களுடைய நிலையை நன்றாக அறிந்து, புரிந்துவாழ வேண்டும் என்பதுதான் அவருடைய நோக்கமாக இருந்திருக்கிறது. ஆகவே, உவமைகள் எவர்களுக்கு எப்படிப்பட்ட சூழ்நிலையில் சொல்லப்பட்டது என்பதை முதலில் நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். யாருக்கு சொல்லப்பட்டது? எந்த சூழ்நிலையில் சொல்லப்பட்டது? என்பதை கருத்தில் கொண்டு நீங்கள் இந்த உவமைகளைப் படிக்கவேண்டும். அதேசமயம், மக்கள் அந்த கேள்விகளுக்கு அளித்த பதிலையும் நாம் கருத்தில்கொண்டு படித்தோமானால், நல்லதொரு அர்த்தத்தைப் பெற்றுக்கொள்ள அது உதவியாக இருக்கும். உவமைகளில் செவிமடுத்து கேட்கிற அந்த ஜனங்கள், நம்மை இனங்கண்டுகொள்வதையும், நாம் நிதானித்துப் பார்த்து, அந்த உவமையின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியும். இவற்றையெல்லாம் உவமைகளைப் படிக்கும்போது, கருத்தில்கொண்டு படிப்பீர்களானால், வேதத்தை நீங்கள் தவறாக விளக்கம் செய்ய மாட்டீர்கள் என்பதை புரிந்துகொள்ளுங்கள். நீங்கள் பெரும்பாலும், உவமையின் இறுதியில் கவனித்துப்பார்ப்பீர்களானால், அது எதற்காக சொல்லப்பட்டது? அதனுடைய செய்தி என்ன? என்பதைப் பற்றி இயேசுவானவர் சொல்லியிருப்பார். உதாரணமாக மத்தேயு *22:1-14* வரையுள்ள வசனங்களை வாசித்துப் பாருங்கள். அதில்

இயேசுவானவர் உவமைகளாகப்பேசி சொன்னது என்று 1-ம் வசனத்தில் ஆரம்பித்து, அதில் ஒரு குமாரனுடைய கல்யாணத்தை செய்து வைத்த ராஜாவைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அந்த உவமையை கூறின பின்பு, 14-ம் வசனத்தில், ஏன் இந்த உவமையைக் கூறினார் என்று இயேசுவே பதில் கூறியிருக்கிறார். ***"அந்தப்படியே அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்."*** என்று விளக்கம் கொடுக்கிறார். இந்த உவமையின் முக்கிய நோக்கம், அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சிலர் என்ற கருத்தை மையப்படுத்தி சொல்வதற்காகவே, இந்த உவமை கூறப்பட்டிருக்கிறது. இதை முக்கியப்படுத்தி நாம் புரிந்துகொள்ள வேண்டும், விளக்கப்படுத்த வேண்டும், அதைவிட்டுவிட்டு, மீதி எல்லாவற்றையும், முக்கியப்படுத்தி பேசினால், இந்த முக்கிய கருத்து அடிபட்டுப்போகும், மற்ற கருத்துகளெல்லாம் முக்கிய இடத்திற்கு வந்துவிடும். இவ்வாறுதான் வேதவசனங்கள் கலப்படமுள்ளதாக மாற்றப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். ஒவ்வொன்றுக்கும் விளக்கம் சொல்லக்கூடாது. எப்படி இயேசு முக்கிய கருத்தை உவமையில் கூறியிருக்கிறாரோ, அவ்வாறே நாமும் விளக்கப்படுத்த வேண்டும். அதுதான் அவசியமாக இருக்கிறது. அதைப்போல லூக்கா 16:1-9 வரையுள்ள வசனத்தை நீங்கள் பார்த்தீர்களானால், அதின் 9ம் வசனத்தில் இந்த உவமையை இயேசு எதற்காக சொன்னார் என்று விளக்கப்படுத்துகிறார் பாருங்கள், ***"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வாருண்டாகும்படி, அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்."*** என்று இயேசு சொல்கிறார். இதுதான் இந்த உவமையின் முக்கிய நோக்கம், அர்த்தம், முழுவதும் கவனம் செலுத்தப்பட்டு, சொல்லப்பட்ட உவமை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். உவமையின் முக்கிய கருத்து இதுதான். இதை மையப்படுத்தி நாம் அந்தப் பகுதியைப் படிக்க வேண்டும். இவ்வாறு அநேக காரியங்களை நீங்கள் உவமையைப் படிக்கும்போது, விளக்கப்படுத்தும்போது, கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியம். இவ்விதமாக கடைசியில் சொல்லப்பட்டு இருக்கலாம். சில உவமைகளை ஆரம்பத்திலேயே, அந்த உவமையின் முக்கிய நோக்கம் சொல்லப்பட்டிருப்பதை கவனியுங்கள். மத்தேயு 16:21-22 வசனங்களைப் பார்க்கும்போது, 21-ம் வசனம், ***"அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பலபாடுகள்பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத்தொடங்கினார்."*** மேலும் 23-ம் வசனம், ***"அவரோ திரும்பிப் பேதுருவைப்பார்த்து: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய், தேவனுக்கேற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்."*** 21-ம் வசனத்தை சொல்லிவிட்ட பின்புதான், வசனம் 23-லிருந்து இயேசு உவமையையே ஆரம்பிக்கிறார். மன்னிக்கிற தன்மையைக் குறித்து தொடர்ந்து பேசுகிறதை நீங்கள் படிக்க முடியும். இந்த உவமையின்

துவக்கத்திலேயே இயேசுவானவர் அதன் கருத்தைக் கூறிவிட்டார். ஆக, இவ்விதமாக, ஒன்று துவக்கத்தில் அல்லது முடிவில் அந்த உவமையின் முக்கிய நோக்கத்தை இயேசு கூறியிருப்பார். அதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இயேசுவானவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை நீங்கள் புரிந்துகொண்டு, உவமைகளை நீங்கள் தெளிவாகப் படிக்க வேண்டும். அது ஒரே நோக்கத்தில்தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, கற்றுக்கொண்டதுபோல, இந்த மறைபொருள் கதைகளில் மட்டுமே, உள்ளர்த்தங்கள், ஒவ்வொன்றுக்கும் அர்த்தங்கள், மறைவான அர்த்தங்கள் இருக்கிறதேயொழிய, மற்ற உவமைகள் அனைத்தும் நேரடியாக அர்த்தம்கொள்கிற அளவிலேயே இருக்கும். இல்லாவிட்டால் இயேசுகிறிஸ்து அதற்கு அர்த்தம் சொல்லியிருப்பார் என்பதை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். இந்த மறைபொருள் கதைகளுக்கும், இயேசுவானவர் விளக்கம் கொடுத்திருக்கிறார். அதையும் நீங்கள் கவனம் கொள்ளுங்கள். ஆக, நீங்கள் இயேசு சொல்லாத காரியத்தை விளக்கப்படுத்தக்கூடாது. மறைபொருளான சில அர்த்தங்கள் இருக்கிறது என்று நாம் சொல்லும்போது, அல்லது கேட்கும்போது, கேட்பதற்கு நன்றாக இருக்கும். ஆனால் அது நம்முடைய விசுவாச வாழ்வை திசைதிருப்பிவிடும் என்பதை நீங்கள் புரிந்துகொண்டு உங்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் கவனமாக வேதத்தை வாசித்துப் பழகவேண்டுமென்று தீர்மானியுங்கள்.

உவமைகள் ஒரு செய்தியைக் கொண்ட கதைகளாய் இருக்கிறது என்பதை கருத்தில் வைத்துக்கொள்ளுங்கள். ஒரு செய்திக்காக இயேசுகிறிஸ்து அந்த உவமைகளை எடுத்துச் சொல்ல ஆரம்பிக்கின்றார். அது அந்த உவமையின் துவக்கத்தில், அந்த கருத்து சொல்லப்பட்டிருக்கலாம் அல்லது முடிவில் சொல்லப்பட்டிருக்கலாம். அதை நீங்கள் வாசித்து புரிந்துகொள்ளுங்கள். அந்தவிதமாக நீங்கள் வாசிக்கும்போது, இன்னொருமுறை தவறைச்செய்யக் கூடாது, கதையின் ஒவ்வொரு அம்சத்தையும், உபதேச விஷயமாக மாற்றக் கூடாது. அந்தக் கதையில் வருகிற ஒவ்வொரு காரியத்திற்கும் புதுப்புது விளக்கத்தைக் கொடுத்து, அதை உபதேசமாக நீங்கள் போதிப்பீர்களானால், இயேசுவானவர் கூறிய முக்கிய நோக்கம் அடிபட்டுப்போகும். நீங்கள் சொன்ன புதிய கருத்துதான் மக்கள் மனதில் பதிகிறதாய் இருக்கும். இது மாபெரும் தவறான விஷயமாகும் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். உதாரணமாக, லாசரு மற்றும் செல்வந்தன் பற்றின உவமையைப் படிக்கிறோம். இதில் பரிசுத்தவான்களிடம் மன்றாடுவதற்கான ஒரு காரியம் இதில் இருக்கிறதைப்போன்று போதிக்கிறார்கள். ஏனெனில், அந்த செல்வந்தன் ஆபிரகாமிடம் சொல்லுகிறான் அல்லவா? அதை வைத்துக்கொண்டு சிலர் உபதேசிப்பது என்னவெனில், எப்படி இந்த செல்வந்தன் ஆபிரகாமிடம் மன்றாடுகிறானோ, அதைப்போல பரிசுத்தவான்களிடம் நாமும் மன்றாடி, மரித்த பிறகு கேட்கலாம் என்று சொல்கிற விளக்கங்களை சிலர் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறார்கள். இது எவ்வளவு பெரிய தவறு என்பதை கவனித்துப் பாருங்கள். அதைப்போல, *10* கன்னிகைகளைக் குறித்த உவமையில் *50* சதவீதம்தான் இரட்சிக்கப்படுவார்கள் என்று கணக்குச் சொல்ல முடியாது. இது உவமையிலிருந்து

மக்கள் போதிக்கிற போதனை தவறாகப் போய்விடுகிற விஷயம், ஏனெனில் ஆதாரமாய் வேறு வசனங்கள் இல்லை. ஆகவே உவமையை கருத்தில்கொண்டு நாம் விளக்கப்படுத்த வேண்டும் என்பதை தெளிவுபடுத்தவே இந்த உதாரணங்களைப் பார்க்கிறோம்.

நாம் ஏற்கனவே கற்றுக்கொண்டதுபோல, மறைபொருள் கதைகளில்தான் உவமையின் விபரங்கள் ஒவ்வொன்றிற்கும் அர்த்தங்கள் இருக்கிறது. ஆனாலும் அந்த அர்த்தங்களுக்கும் இயேசுவானவர் விளக்கப்படுத்தியிருக்கிறதை நாம் பார்க்க முடியும். ஆகவே உவமைகள் எல்லாம் அநேக உள்ளர்த்தங்கள் அடங்கிய விஷயமாக இருக்கிறது என்ற கண்ணோட்டத்தோடு பார்க்காதிருங்கள். அதிலுள்ள ஒவ்வொரு அர்த்தத்திற்கும், ஒவ்வொரு சொல்லுக்கும், ஒவ்வொரு உவமைக்கும், நீங்கள் அர்த்தம் கற்பிக்கக் கூடாது. அத்திமரத்தைப்பற்றிய உவமை என்றால், அதனுடைய தண்டு இதைக்குறிக்கிறது, அதனுடைய வேர் இதைக்குறிக்கிறது, அதனுடைய பூக்கள் இதைக்குறிக்கிறது என்று நாம் அந்த செடி முழுவதையும் வெட்டி, தாறுமாறாக பிடுங்கி போட்டதுபோல், ஒவ்வொரு பகுதியாய் நாம் விளக்கப்படுத்தி சொல்லக்கூடாது. எதற்காக இயேசுவானவர் அந்த அத்திமரத்தைப்பற்றிய உவமையைக் கூறினாரோ, அதற்குரிய அர்த்தத்தை மாத்திரமே எடுத்துப் பழகவேண்டுமேயொழிய, நாமாக புதிய அர்த்தத்தை ஏற்றி பேசுவது தவறான விஷயம், பாவமான விஷயம். வேதத்தோடு ஒரு எழுத்தைக் கூட்டுகிறது பாவம் என்றதொரு காரியத்தை நாம் மீறுகிறோம் என்று அர்த்தம்.

## <u>நியாயப்பிரமாண கட்டளைகளை விளக்கப்படுத்துதல்:-</u>

நாம் தொடர்ந்து, நியாயப்பிரமாண கட்டளைகளை எவ்விதமாக அர்த்த விளக்கம் செய்யவேண்டும் என்பதைக் குறித்து கற்றுக்கொள்ளப்போகிறோம். அதாவது பழையஏற்பாட்டை நாம் எவ்விதமாக விளக்கப்படுத்தப்போகிறோம்? நியாயப்பிரமாண கட்டளைகளை நாம் அறிந்து அதன்படி வாழ வேண்டுமல்லவா? ஆகவே நியாயப்பிரமாண கட்டளைகளை எவ்விதமாக அர்த்தவிளக்கம் செய்வது என்பதுபற்றி சற்று விளக்கமாக சிந்திக்க இருக்கின்றோம். முதலாவது, நாம் நியாயப்பிரமாணத்தின் தன்மையை அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

## <u>நியாயப்பிரமாணத்தின் தன்மை</u>

இந்த நியாயப்பிரமாணம் என்பது ஒரு உடன்படிக்கையாக இருக்கிறது என்பதை நீங்கள் மறந்துபோகக்கூடாது. தேவன் இஸ்ரவேல் மக்களோடு செய்துகொண்ட உடன்படிக்கைதான் நியாயப்பிரமாணம். அந்த காலகட்டத்தில் சமுதாயத்தில் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்களோடு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அப்படிப்பட்டதொரு உடன்படிக்கையாகவே, இந்த நியாயப்பிரமாணம் காணப்படுகிறது. இந்த உடன்படிக்கையில் உயர்ந்தவர் வாக்களிக்கும் நன்மைகளை தாழ்ந்தவர் அனுபவிக்கிறது வழக்கம். அதேவேளையில், உயர்ந்தவர், அதாவது அந்த உடன்படிக்கையைச் செய்துகொள்கிறவர், விதிக்கும் நிபந்தனைகளை தாழ்ந்தவர்

கைக்கொள்ள வேண்டியதும் அவசியமாய் இருந்தது. பழைய ஏற்பாட்டு காலத்தில் அவ்வாறுதான், அநேக உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டதை நாம் பார்க்கிறோம். பெரியவர், சிறியவர்களோடு உடன்படிக்கை செய்துகொள்கிற வழக்கமாக இருந்தது. அப்படிப்பட்ட தன்மைதான் நியாயப்பிரமாணத்தில் காணப்பட்டது. பெரியவராகிய தேவன், சிறியவர்களாகிய இஸ்ரவேல் ஜனங்களோடு செய்துகொண்ட உடன்படிக்கைதான் நியாயப்பிரமாணம். இந்த நியாயப்பிரமாணம் 5 புத்தகங்களை உள்ளடக்கியது என்பதை நாமறிவோம். ஆனாலும், பழைய ஏற்பாடு முழுவதிலும் நியாயப்பிரமாணம் என்று சொல்லப்படுவதை ரோமர் 3:19-ல் நாம் வாசித்துப் பார்க்க முடியும். ***"மேலும், வாய்கள் யாவும் அடைக்கப்படும்படிக்கும், உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும்படிக்கும், நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம்."*** அதைத்தொடர்ந்து வருகிற வசனங்களையும் நீங்கள் வாசித்துப் பார்ப்பீர்களானால், முழு பழைய ஏற்பாட்டுக்கும், நியாயப்பிரமாணம் என்றே சொல்லப்படுகிறதை புரிந்துகொள்ள முடியும். இவ்விதமாக முழு பழைய ஏற்பாடும் நியாயப்பிரமாணம் என்றழைக்கப்படுகிறது. ஆகவே இஸ்ரவேல் ஜனங்களோடு செய்துகொண்ட உடன்படிக்கைதான் இந்த நியாயப்பிரமாணம் என்று நாம் வேதத்திலிருந்து அறிகிறோம். நாம் யாத்திராகமம் 19ம் அதிகாரம் முதல் உபாகமம் முடிகின்ற வரையில் இந்த நியாயப்பிரமாணத்தைப்பற்றி அதிகமாக, நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளைப் பற்றி அதிகமாக அறிந்துகொள்ள முடிகிறது. இஸ்ரவேல் ஜனங்களுக்கு மோசே இந்த கட்டளைகளை தேவனிடமிருந்து பெற்றுக் கொடுக்கிறதையும், வேத விளக்கத்தை அந்த கட்டளைகளுக்கு கொடுக்கிறதையும் நாம் இந்தப் பகுதிகளில் பார்க்கிறோம். இதைக்குறித்து சுருக்கமாக கற்றுக்கொள்ளலாம்.

நியாயப்பிரமாணம் என்பது இஸ்ரவேல் ஜனங்களோடு செய்துகொண்ட உடன்படிக்கை. எகிப்திலே அவர்கள் அடிமைகளாய் இருந்தபோது, இஸ்ரவேல் மக்கள் விடுதலையாக்கப்பட்டு, வாக்குத்தத்த பூமியில் எவ்விதமாக வாழ வேண்டுமென்று கொடுக்கப்பட்ட கட்டளைகளைத்தான், இந்த நியாயப்பிரமாணத்தில் உள்ளன என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, இந்த நியாயப்பிரமாண கட்டளைகள், பெரும்பாலும் அவர்களுடைய சமய வாழ்வோடு, சமுதாய வாழ்வோடு சம்பந்தப்பட்ட விஷயமாய் இருக்கிறது. இன்னும் புரியும்படி சொல்லவேண்டுமானால், அடிமைத்தனத்தில் இருந்தவர்கள் எவ்வாறு வாழவேண்டும் என்ற கட்டளைகள், அதைத்தொடர்ந்து, அந்த அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட பின்பதாக, கானான் தேசத்தில் எவ்விதமாக விடுதலையோடு வாழவேண்டுமென்பதற்கு கொடுக்கப்பட்ட கட்டளைகள்தான் இந்த நியாயப்பிரமாணம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்த கட்டளைகளில் அல்லது நியாயப்பிரமாணத்திலே, அன்றையகாலகட்டத்தில் செய்யப்பட்ட உடன்படிக்கைபோலவே காரியங்கள் இருக்கிறதை நீங்கள் பார்க்க முடியும். அதாவது, இந்த கட்டளைகளில்,

நியாயப்பிரமாணத்தில் பார்க்கும்போது, அதில் முன்னுரை இருக்கும். யார், யாரோடு செய்துகொண்ட உடன்படிக்கை? என்று சொல்லி பழைய ஏற்பாட்டு காலத்திலிருந்த சமுதாய மக்கள் மத்தியில் எவ்விதமாய் செய்துகொள்ளப்பட்டதோ, அதைப்போலவே இங்கேயும் தேவன் உடன்படிக்கை செய்துகொள்கிறதை, முன்னுரையில் சொல்கிறதை நாம் பார்க்கமுடியும். அடிமைத்தன வீட்டிலிருந்து உன்னை விடுவித்த கர்த்தராகிய நான் என்று அவர் சொல்வார். உதாரணமாக, யாத்திராகமம் 20:2, ***"உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே."*** என்று சொல்லி தேவன் உடன்படிக்கை செய்கிறதை நாம் பார்க்க முடிகிறது. அதாவது, உனக்கும், உன் தேவனாகிய எனக்குமிடையில் செய்யப்படுகிற உடன்படிக்கை என்ற அர்த்தத்தில் இது காணப்படுகிறது. ஏனெனில் உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின தேவன் நான். அடுத்து 'உன் தேவனாகிய' என்று இஸ்ரவேல் மக்களைக் குறித்தும் பேசுகிறார். ஆக, இஸ்ரவேல் ஜனங்களுக்கும், தனக்குமிடையில் ஏற்பட்ட உடன்பாடு அல்லது உடன்படிக்கை என்பதை இங்கே அவர் தெளிவுபடுத்துகிறதை நாம் பார்க்கலாம். எனவே இது முன்னுரை.

அதைத்தொடர்ந்து, அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி, அதில் இருக்கும். அதையே நீங்கள் இந்த வசனத்தில் பார்க்க முடியும். இந்த முன்னுரையில், முன்னுரைக்கு அடுத்தபடியாக, இந்த முன்னுரையிலேயே, அவர்களுக்கிடையே இருக்கிற உறவு சுருக்கமாகச் சொல்லப்படும் என்பதுதான் அன்றைய காலகட்டத்தில் காணப்பட்ட உடன்படிக்கை. இங்கே சொல்கிறார் அல்லவா? உன்னை அடிமைத்தன வீட்டிலிருந்து புறப்படப்பண்ணின தேவன் நான்தான் என்று சொல்கிறார். எகிப்திலிருந்து உன்னைக்கொண்டு வந்தவர் நான்தான். அடிமைத்தனத்திலிருந்து கொண்டுவந்த தேவன்-என்ற உறவை, அந்த முன்னுரையிலேயே சொல்கிறதைப் பார்க்க முடியும். அதைத்தொடர்ந்து, இந்த உடன்படிக்கைக்கு, அவசியமான காரியங்கள் என்னென்ன? என்று சொல்லப்படுகிறவைகள். அந்த காலகட்டத்தில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் தன்மையாக இருந்தது. அதையேதான் கர்த்தர் இங்கே சொல்கிறதையும் பார்க்க முடியும். யாத்திராகமம் 20:3-7 வரையுள்ள வசனங்களில் நீங்கள் அதைப்பார்க்க முடியும். இந்த கட்டளைகளைக் கைக்கொள்வதற்கு என்னென்ன காரியங்கள் உள்ளடக்கியிருக்க வேண்டுமென்று சொல்லி அதில் சொல்லப்பட்டிருக்கிறதைப் பார்க்கலாம்.

அடுத்து, அந்த உடன்படிக்கைக்குரிய சாட்சிகளும் அதிலேயே சொல்லப்படும். அங்கே நாம் வேதாகமத்தில் பார்க்கும்போது எபிரெயர் நிருபத்தில் கர்த்தரே அதற்கு சாட்சியாக இருக்கிறதைப் பற்றி அவர் சொல்கிறார். எபிரெயர் 6:13-14 வரையுள்ள வசனங்களை வாசிக்கலாம்.

13. ஆபிரகாமுக்கு தேவன் வாக்குத்தத்தம்பண்ணினபோது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாதபடியினாலே தமது பேரிலே தானே ஆணையிட்டு:

14. நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப்பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றார்.

இதில் சாட்சி யார்? என்று சொல்லுகிறார் என்றால், உடன்படிக்கையின் தேவனாகிய கர்த்தரே சாட்சி என்று நாம் வேதத்தில் பார்க்கிறோம். நாம் பத்திரம் எழுதும்போதுகூட, சாட்சி கையெழுத்து போடுகிறதைப் பார்க்கிறோம், அல்லவா? அதைப்போலத்தான், உடன்படிக்கையும் அவ்வாறு காணப்படுகிறது. கர்த்தரே சொல்கிறார். நானே சாட்சி என்று தெரிவித்து, தம்பேரில் ஆணையிட்டுச் சொன்னார் என்று வாசிக்கிறோம். அதைத்தொடர்ந்து, இந்த உடன்படிக்கையின் அடிப்படையில் என்னென்ன வழங்கப்படும் என்பதைக்குறித்து, அந்த உடன்படிக்கையில் சொல்லப்பட்டு இருக்கும். அதுபோலத்தான், தேவன் இஸ்ரவேல் ஜனங்களோடு செய்துகொண்ட உடன்படிக்கையில் என்னென்ன ஆசீர்வாதங்கள் வரும், என்னென்ன சாபங்கள் வரும் என்று சொல்லுகிறதை நாம் வாசித்துப் பார்க்கிறோம். அதை நாம் பழைய ஏற்பாட்டில் அதிகமாகப் பார்க்கிறோம். உடன்படிக்கை இவ்விதமாக அமைந்திருக்கும். அதற்குப்பிறகு நாம் இதனுடைய நிறைவுப்பகுதியைப் பார்க்கிறோம். அடுத்து இறுதியாக இந்த உடன்படிக்கை அல்லது சாட்சிப்பிரமாணமானது, தேவனுடைய ஆலயத்திலே வைக்கப்படவேண்டும் என்று பழைய ஏற்பாட்டிலும் பார்க்கிறோம். அந்த காலகட்டத்தில் காணப்பட்ட மற்ற உடன்படிக்கையின் தன்மைகள் அவ்வாறுதான் காணப்பட்டது என்று வரலாற்றில் நாம் வாசித்துப்பார்க்கிறோம். நீங்கள் யாத்திராகமம் 25:16ம் வசனத்தைப் பார்க்கும்போது, ***"நான் உனக்குக்கொடுக்கும் சாட்சிப் பிரமாணத்தை அந்தப் பெட்டியிலே வைப்பாயாக."*** என்று கர்த்தர் சொல்லுகிறதைக் காண்கிறோம். ஆகவே, இந்த உடன்படிக்கையின் சாட்சிப்பிரமாணம் அல்லது பத்திரம் தேவாலயத்தில் வைக்கப்படவேண்டும். பிறகு அது எடுத்து வாசிக்கப்படவேண்டும். இவ்விதமாக அது புதுப்பிக்கப்பட்டுக்கொண்டே வரும் என்று சொல்லி நாம் பழைய ஏற்பாட்டு காலத்தில் காணப்பட்ட வரலாற்று நிகழ்வுகளைப் பார்க்க முடியும். ஆகவே, இதே காரியம் கர்த்தராகிய தேவன் இஸ்ரவேல் ஜனங்களோடு, உடன்படிக்கை செய்து கொண்டபோது, இது நடந்தது. அதற்கு முன்னுரை இருந்தது, பிறகு அதற்கு என்னென்ன காரியங்கள் தேவையாயிருக்கிறது என்று சொல்லப்பட்டது, சாட்சி யாரெல்லாம் என்று சொல்லப்பட்டது. அதைப்போல, அதனால் உண்டாகும் நன்மைகள், ஆசீர்வாதங்கள் இல்லாவிட்டால் சாபங்கள் என்னென்ன? அல்லது என்னென்ன காரியங்களை இந்த உடன்படிக்கை நிறைவேற்றித்தரும்? அல்லது உங்களுக்கு கிடைக்கத்தரும் என்று அதில் சொல்லப்பட்டு இருக்கும். இது பத்திரப்படுத்தப்பட்டு, தேவாலயத்தில் வைக்கப்பட்டு, அதை அவ்வப்போது புதுப்பித்து, மக்கள் மத்தியில் வாசித்து காண்பிக்க வேண்டுமென்று சொல்லி, உடன்படிக்கையின் ஏற்பாடுகள் அன்று காணப்பட்டது என்று நாம் வாசித்துப்பார்க்கிறோம். தேவன் அவ்விதமாகவே, இஸ்ரவேல் ஜனங்களோடு, உடன்படிக்கை செய்துகொண்டார்.

இவ்விதமாக செய்துகொள்ளப்பட்ட ஒன்றைத்தான் நாம் நியாயப்பிரமாணம் என்று அழைக்கிறோம் என்பதை இப்போது கற்றுக்கொண்டு இருக்கிறோம். இவ்விதமாக இஸ்ரவேலிலே வாழ்ந்த அவர்கள் எகிப்திற்கு அடிமைகளாகச் சென்று, அடிமைகளாக அங்கேயிருந்த அவர்கள், எவ்விதமாய் வாழவேண்டுமென்று நியாயப்பிரமாணம் சொன்னது. அங்கிருந்து விடுதலையான பிறகு, கானானிலே எவ்விதமாய் விடுதலையின் பூமியில் வாழவேண்டுமென்று சொல்லி நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. இதுதான் நியாயப்பிரமாணத்தின் தன்மை.

## <u>*நியாயப்பிரமாணத்தின் உண்மை*</u>

இந்த நியாயப்பிரமாணத்தின் உண்மைதான் என்ன? இந்த நியாயப்பிரமாணம் இயேசுகிறிஸ்துவின் காலம் வரைக்குமான உடன்படிக்கையின் நிபந்தனை என்று பார்க்கிறோம். லூக்கா 16:16, "***நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான்வரைக்கும் வழங்கிவந்தது, அதுமுதல் தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது, யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள்.***" என்று வாசிக்கிறோம். நியாயப்பிரமாணம் எதுவரைக்கும் பிரயோஜனமாய் இருந்தது? என்று இதில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, இயேசுகிறிஸ்துவின் காலம் வரைக்கும், யோவான் வரைக்கும் இந்த நியாயப்பிரமாணம் பயன்பாட்டில் இருந்து வந்திருக்கிறது. அதுமுதல் அதாவது, அதற்கு பின்பதாக தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு, கிருபையின் காலம் வருகிறது என்பதை இந்த வசனம் கூறுகிறதை சற்று கவனித்துப்பாருங்கள். நியாயப்பிரமாணத்தின் உண்மைத்தன்மை என்ன? அது இயேசுகிறிஸ்துவின் காலம் வரைக்கும் கொடுக்கப்பட்ட காரியம்.

நியாயப்பிரமாணம் மனிதனுக்கு பாவம் என்றால் என்ன? என்பதை அறிந்து, அவர்களைப் பாவம் செய்யாதபடி எச்சரித்து வந்திருக்கிறது என்றுதான் புதிய ஏற்பாட்டில் பவுல் எழுதுகிறார். கலாத்தியர் 3:19, "***அப்படியானால் நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக்கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது.***" என்று வாசிக்கிறோம். இதன் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும், அதாவது புதிய ஏற்பாடு வருமளவும் இது பாவத்தை அறிவிக்கிறதாக, பாவம் என்றால் என்ன? என்று அறிந்து, பாவம் செய்யாதபடி எச்சரித்து வந்துள்ள காரியமாய் அமைந்தது என்று பவுல் ரோமர் 7:7-ல் எழுதுகிறார், "***ஆகையால் என்ன சொல்லுவோம்? நியாயப்பிரமாணம் பாவமோ? அல்லவே. பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றப்படி அறியவில்லை, இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் அறியாமலிருப்பேனே.***" என்று எழுதுகிறார். இவ்விதமாக நியாயப்பிரமாணம் என்பது எப்படியிருக்கிறது என்று பவுல்

எழுதுகிறார், அதாவது பாவம் என்றால் எது என்று, அது அறிய வைத்தது, அதைச் செய்யக்கூடாது என்று எச்சரித்தது என்றுதான் கூறுகிறார். மனிதனுடைய பாவங்கள், தவறான குற்ற செயல்கள் என்று சட்டரீதியாக காண்பிப்பதற்காக நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது என்று நாம் அறிந்துகொள்கிறோம். மனிதன் செய்கிற பாவங்கள் அல்லது செயல்கள் எல்லாம் தவறான குற்ற செயல்களாக இருக்கிறது. அதைச் சட்ட ரீதியாக(Law) தெரிவிக்கிறதுதான் நியாயப்பிரமாணம் என்று அறிந்துகொள்கிறோம். இதுதான் நியாயப்பிரமாணத்தின் உண்மைநிலை.

நியாயப்பிரமாணம் மக்களை இயேசுகிறிஸ்துவிடம் வழிநடத்துவதற்காக கொடுக்கப்பட்டது. இரட்சகர் தேவை என்பதை அது சுட்டிக்காட்டியது என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டு, மனிதன் பாவி என்று சுட்டிக்காட்டினாலும், அவன் பாவம் செய்கிறான். இது பாவம் என்று அறிய வைத்தாலும், அதற்கு இரட்சிக்கும் வல்லமை இல்லையென்பதை அறிந்துகொள்ள வேண்டும். நியாயப்பிரமாணம் மனிதனை, பாவத்திலிருந்து மீட்டெடுக்க இயலாததாகவே இருக்கிறது. ஆக, இந்த நியாயப்பிரமாணம் ஒரு இரட்சகர் நமக்குத் தேவை என்பதை சுட்டிக்காண்பிக்கிறது. மட்டுமல்ல, இது இரட்சகரிடம் வழிநடத்தும் ஒன்றாகவும் இருக்கிறது என்பதை நாம் வேதத்தில் பார்க்கிறோம். நீங்கள் கலாத்தியர் *3:19 - 24* வரையுள்ள வசனங்களை வாசித்துப் பாருங்கள். இப்போது, நாம் 24ம் வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறதைக் காணலாம். ***“இவ்விதமாக, நாம் விசுவாசத்திலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது.”*** நியாயப்பிரமாணம் இயேசுகிறிஸ்துவினிடத்திற்கு நடத்துகிற ஒரு வாத்தியார் மாதிரி இருக்கிறது. நியாயப்பிரமாணம் இரட்சகரிடத்தில் வழிநடத்துகிற ஒன்றாக இருக்கிறது. இதுதான் நியாயப்பிரமாணத்தின் உண்மையான நிலை. இதை நீங்களும், நானும் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஆக, நியாயப்பிரமாணம் எங்கே கொண்டுவந்துவிடுகிறது என்றால், இயேசுகிறிஸ்துவினிடத்தில் கொண்டுவந்து விடுகிறது. ஒரு இரட்சகர் தேவை என்று அது சுட்டிக்காட்டுகிறதே தவிர, அது இரட்சகர் அல்ல. அது இரட்சிக்கும் வல்லமையுடையது அல்ல. நியாயப்பிரமாண கட்டளைகளெல்லாம், உயிரற்றவையாக இருக்கிறது. ஆனால், ஜீவனுள்ளது என்பதை புதிய ஏற்பாடுதான் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

## நியாயப்பிரமாணமும், நாமும்

நியாயப்பிரமாணத்திற்கும், நடக்குமிடையில் உள்ள உறவு எவ்வாறு இருக்கிறது என்பதை சற்று சிந்திக்கலாம். கிறிஸ்தவர்களாகிய என்னையும், உங்களையும் இயேசுகிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து மீட்டிருக்கிறார். நம்மீது நியாயப்பிரமாணத்தின் சாபமில்லை. கலாத்தியர் *3:13*, ரோமர் *6:7* போன்ற வசனங்களை

வாசித்துப் பாருங்கள். ஆகவே, நீங்களும், நானும் இப்போது நியாயப்பிரமாணத்திற்கு கீழானவர்கள் அல்ல. ரோமர் 10:4, ***"விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாக, கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்."*** என்றும், ரோமர் 4:7, ***"எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள்."*** என்றும் வாசிக்கிறோம். இவ்விதமாக, அநேக வசனங்களைப் பார்க்கும்போது, நாம் நியாயப்பிரமாணத்திற்கு கீழானவர்கள் அல்ல, அதனுடைய கட்டுப்பாட்டின் கீழ் இல்லை. அந்த சாபத்திலிருந்து இயேசு நம்மை மீட்டுள்ளார் என்று சொல்லி நாம் பார்க்கிறோம்.

நியாயப்பிரமாணத்திற்கும், நமக்கும் இடையேயுள்ள உறவு எவ்வாறு இருக்கிறதென்றால், இயேசுகிறிஸ்து நியாயப்பிரமாணத்தை என்ன செய்தார்? என்பதை கொஞ்சம் கவனித்துப் பார்க்க வேண்டும். அவர் நியாயப்பிரமாணத்தில் உள்ள மார்க்க சம்பந்தமான சடங்காச்சார சட்டங்கள் அனைத்தையும் தன் சிலுவை மரணத்தினால் நீக்கிவிட்டார் என்று எபேசியர் 2:15ம் வசனம் (***"சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி'***) கூறுகிறது. தம்முடைய மாம்சத்தினால், அதை இல்லாமல் செய்துவிட்டார், அல்லது ரத்து செய்துவிட்டார் என்பதை நாம் பார்க்கிறோம். நியாயப்பிரமாணத்தை சிலுவை மரணத்தினால் இயேசு ரத்து செய்துவிட்டார். எந்த நியாயப்பிரமாணங்களை மார்க்க சம்பந்தமான, சடங்காச்சாரம் சம்பந்தமானவைகளை ரத்து செய்துவிட்டார். கொலோசெயர் 2:16, ***"நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து]"*** என்று வாசிக்கிறோம். நியாயப்பிரமாணத்தை இயேசு ரத்து செய்துவிட்டார். ஆனால், அதேவேளையில், ஒழுக்கம் சம்பந்தமான விஷயங்களை நிலைநிறுத்தி இருக்கிறார். நியாயப்பிரமாணத்தில் அநேக ஒழுக்கம் சார்ந்தவைகள் உள்ளன என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதற்கு இயேசு புதிய விளக்கத்தைக் கொடுத்துள்ளார். அதாவது, தம்முடைய கிருபையின் பிரமாணத்தில், புதிய உடன்படிக்கையில், நீங்கள் எவ்விதமாய் ஒழுக்கம் சம்பந்தப்பட்ட விஷயங்களை கைக்கொள்ள வேண்டும். அதை எவ்வாறு கைக்கொள்ள வேண்டும்? என்று சொல்லி அவர் விளக்கப்படுத்தியிருக்கிறதை நீங்கள் மத்தேயு 5:17-48 வரையுள்ள வசனங்களில் பார்க்க முடியும். மார்க்க சம்பந்தமான, சடங்காச்சாரமான காரியங்களை இயேசு சிலுவையில் நிறைவேற்றி விட்டார், ரத்து செய்துவிட்டார் என்று பார்க்கிறோம். ஆனால் ஒழுக்கம் சம்பந்தமான அநேக காரியங்கள், பழைய ஏற்பாட்டில் நியாயப்பிரமாணத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு இயேசு புதிய விளக்கத்தைக் கொடுத்துள்ளார். புதிய ஏற்பாட்டில், இயேசு எவ்வாறு விளக்கம் கொடுத்துள்ளாரோ, அதற்கு ஏற்றபடி, நீங்களும், நானும் நடக்க, அந்த நியாயப்பிரமாணத்தை அப்படியாய் கைக்கொள்ள

அழைக்கப்படுகிறோம். ஆகவே, இயேசுகிறிஸ்துவை தெய்வமாகக் கொண்டுள்ள ஒருவன், விசுவாசிக்கிற ஒருவன், அவரது விளக்கத்தின்படியே நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவனாய் இருக்க வேண்டுமென்றுதான் ரோமர் *3:31*, *7:12-14* வரையுள்ள வசனங்கள் கூறுகிறதை நீங்கள் பார்க்கலாம். ரோமர் *3:31*, ''அப்படியானால், விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல, நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே.'' மேலும் ரோமர் *7:12-14* வசனங்கள்,

12. ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது.
13. இப்படியிருக்க, நன்மையானது எனக்கு மரணமாயிற்றோ? அப்படியல்ல; பாவமே எனக்கு மரணமாயிற்று; பாவம் கற்பனையினாலே மிகுந்த பாவமுள்ளதாகும்படிக்கும், அது நன்மையானதைக் கொண்டு எனக்கு மரணத்தை உண்டாக்கினதினாலே, பாவமாகவே விளங்கும்படிக்கும் அப்படியாயிற்று.
14. மேலும், நமக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது, நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு, மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன்.

என்று பவுல் கூறுகிறார். ஆகவே, இது ஆவிக்குரியதாய் இருக்கிறது. மட்டுமல்ல, நாம் *12*-ம் வசனத்தில் பார்க்கிறதுபோல, அது பரிசுத்தமுள்ளது. அது நீதியாயும், நன்மையாயும் பரிசுத்தமாயுமிருக்கிறது என்று சொல்லியெல்லாம் வேதம் கூறுகிறது. அப்படியானால், என்ன அர்த்தம் தருகிறார்? இயேசுகிறிஸ்துவானவர் நியாயப்பிரமாணத்திற்கு கொடுக்கிற விளக்கம் ஆவிக்குரியது, பரிசுத்தமானது, நீதியானது. அவர் கூறுகிற விளக்கத்தின்படி நாம் கைக்கொள்ள வேண்டும் என்றுதான் பவுல் நமக்கு எழுதுகிறார். நியாயப்பிரமாணமும், கிறிஸ்தவர்களும் என்றதொரு கருத்தை இதுவரை சிந்தித்தோம். நியாயப்பிரமாணமும், கிறிஸ்தவர்களும் எவ்வாறு ஒன்றுக்கொன்று இணைந்து செல்ல முடியும் அல்லது நியாயப்பிரமாணமும், நீங்களும், நானும் எப்படியிருக்கிறோம். நமக்கும் நியாயப்பிரமாணத்திற்கும் இடையேயுள்ள உறவு என்ன? அது என்ன நிலையில் நம்மை வைத்திருக்கிறது என்று பார்த்தோம். இயேசுகிறிஸ்து நம்மை நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து விடுவித்து விட்டார். அதனால், இப்போது நாம் நியாயப்பிரமாணத்திற்கு கீழானவர்கள் அல்ல, நாம் இயேசுகிறிஸ்து கூறிய விளக்கத்தின்படிதான் பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ள வேண்டும். அதில் குறிப்பாக மார்க்கசம்பந்தமான சடங்காச்சாரம் சம்பந்தமான அனைத்து நியாயப்பிரமாணத்தையும் இயேசு சிலுவையில் நிறைவேற்றி ரத்து செய்துவிட்டார். அதைக் கைக்கொள்ள நீங்களும், நானும் கடமைப்பட்டவர்களல்ல. அதைக் கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றெல்லாம் பார்த்தோம்.

ஆகவே, ஆவிக்குரிய ரீதியில் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ள கர்த்தர் அழைக்கிறார். அது எப்பொழுது ஆவிக்குரியதாய் மாறும்? இயேசுகிறிஸ்து அதற்கு கொடுத்த விளக்கத்தின்படி அது நீதியுள்ளதாய், பரிசுத்தமுள்ளதாய், ஆவிக்குரியதாய் மாறும். ஆக, நீங்கள் பழைய ஏற்பாட்டை எவ்வாறு அணுகவேண்டும் என்பதை, எப்படி

விளக்கப்படுத்த வேண்டுமென்று இப்போது புரிந்துகொண்டு இருக்கிறீர்கள். அதை அப்படியே நியாயப்பிரமாணத்தின்படி நாம் இப்போது கைக்கொள்ள நம்மை அழைக்கவில்லை. அது இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுக்கப்பட்ட காரியம். ஆகவே, அது அப்படியே நமக்கு நடைமுறைக்கு வராது. அதில் இயேசு எப்படிக் கைக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறாரோ, அந்த விதமாய் நாம் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ளவேண்டும். ஆவிக்குரிய ரீதியில் கைக்கொள்ளவேண்டுமென்று பார்த்தோம்.

இதை உணர்ந்து நீங்கள் வாழ்கிறீர்களா? என்பதுதான் முக்கியம். அநேகர் இன்று இதையெல்லாம் புரிந்துகொள்ளாமல் முழுவதும் பழைய ஏற்பாட்டைச் சார்ந்து வாழ்கிறார்கள். அதிலுள்ள காரியங்களையே முக்கியப்படுத்தி பேசுகிறார்கள். அது நமக்கு ஒரு விதத்தில் சொந்தமாகும் என்பது உண்மைதான். ஆனால் அப்படியே நமக்கு ஒத்துவரும் என்று சொல்லி அதை எடுத்துக்கொள்வீர்களானால், அது தவறான காரியமாக இருக்கும். பிரியமானவர்களே, அது இஸ்ரவேல் மக்கள், கானானுக்கு வந்தபின்பு கொடுத்த மார்க்க சம்பந்தப்பட்ட காரியமாய் இருக்கிறது. சமூகம் சம்பந்தப்பட்ட, சமயம் சம்பந்தப்பட்ட காரியங்களை உள்ளடக்கியதாய் இருக்கிறது என்பதையும் கருத்தில் கொண்டு நீங்கள் விளக்கப்படுத்த வேண்டும். அவ்விதமாக சரியான விளக்கம் கொள்ளுங்கள். இன்று நியாயப்பிரமாணத்தை நாம் கைக்கொள்ளும்போது, அதை விளக்கம் கொள்ளும்போது, எப்படியெல்லாம், செயலாற்ற வேண்டுமென்று அடுத்த பாடத்தில் சிந்திக்கலாம். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

## <u>கேள்விகள்:-</u>

1. *உவமைகளின் தன்மைகள் எவ்விதமாக இருக்கிறதென்பதனை வசன ஆதாரங்களுடன் கூறுக?*
2. *மாற்கு 4:10-12 வசனங்களின் அடிப்படையில் உவமைகளைக் குறித்து நாம் அறிந்துகொள்கின்றவைகள் யாவை?*
3. *உவமைகளைக் குறிக்கும் ஆங்கில வார்த்தை, கிரேக்க வார்த்தை மற்றும் அரேமிய மொழியின் வார்த்தைகளையும், அதற்கான அர்த்தங்களையும் கூறுக?*
4. *நான்கு முக்கியமான உவமைகள் என்னென்ன என்பதனைக் கூறுக? (பெயர்கள் மட்டும்)*
5. *நான்கு முக்கியமான உவமைகளில் உவமைக்கதை, ஒப்புவமை மற்றும் உருவகங்கள் குறித்து சற்று விளக்கமாக கூறுக?*
6. *நான்கு முக்கியமான உவமைகளில் மறைபொருள் கதைகள் குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?*
7. *நியாயப்பிரமாணத்தின் தன்மைகளைக் குறித்து விளக்கமாக கூறுக?*

8. நியாயப்பிரமாணத்தின் உண்மை நிலை அல்லது நியாயப்பிரமாணத்தின் நோக்கம் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
9. நியாயப்பிரமாணத்திற்கும், நமக்குமான உறவு எவ்வாறு இருக்கிறது என்பதனை வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?

# <u>வேதாகம விளக்கவியல்</u>

## பாடம் - *13*

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே, நாம் கடந்த பாடத்தில் நியாயப்பிரமாணத்தை எவ்வாறு விளக்கம் செய்யவேண்டும் என்று ஒருசில காரியங்களை கற்றுக்கொண்டோம். இந்தப்பாடத்திலும் தொடர்ந்து அதனைப்பற்றி மேலும் அறிந்துக்கொள்வோம். இந்தப்பாடத்தில் புதிய ஏற்பாட்டை எவ்விதம் வியாக்கியானம் செய்யவேண்டும் என்பதையும் கற்றுக்கொள்வோம்.

நியாயப்பிரமாணம் மற்றும் கட்டளைகள் ஆகியவற்றை வியாக்கியானம் செய்யும்போது, நாம் என்னென்ன காரியங்களைக் கருத்தில்கொள்ள வேண்டும்? என்பதை சிறிது சிந்திக்கலாம். நாம் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை வியாக்கியானம் செய்யும்போது, முதலாவது கவனத்தில் கொள்ளவேண்டிய காரியம், அந்த கட்டளையின் வகையை அறிந்து, அதன் காரணத்தைப் புரிந்து வியாக்கியானம் செய்யவேண்டும். உதாரணமாக கடந்த பாடத்தில் நாம் கற்றுக்கொண்டபோல, அது சடங்காச்சாரம் சார்ந்த கட்டளையாக இருக்கலாம், சுகாதாரம், சமூகநலம் போன்ற காரியங்களாக அல்லது அதைப்பற்றிய கட்டளைகளாக இருக்கலாம். சடங்காச்சாரம் சம்பந்தப்பட்ட காரியத்தை, மார்க்க சம்பந்தமான காரியங்களை இயேசுகிறிஸ்து சிலுவையில் தம்முடைய மரணத்தினால் ரத்து செய்துவிட்டார் என்று கடந்த பாடத்தில் கற்றது நினைவிருக்கும். அதையெல்லாம் நிறைவேற்றி முடித்துவிட்டார். பலியைச் செலுத்திவிட்டார். எல்லாவித மார்க்க சம்பந்தமான, சடங்காச்சாரமான காரியங்களை சிலுவையில் இயேசுகிறிஸ்து அகற்றி விட்டார். ஆகவே, அது எந்தவிதமான கட்டளை என்பதை நீங்கள் கண்டுபிடித்து, அதற்கு பிறகு, அதற்கேற்றபடி வியாக்கியானம் செய்ய வேண்டும். சடங்காச்சாரமான கட்டளைகளை நாம் இன்றைக்கு கைக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அதை இயேசுகிறிஸ்து நிறைவேற்றிவிட்டார். ஒழுக்கம் சம்பந்தப்பட்ட கட்டளைகளை, இயேசுகிறிஸ்து எவ்விதம் விளக்கம் கொடுத்து இருக்கிறார்? அந்த விளக்கத்தின் அடிப்படையில் பின்பற்ற வேண்டும். ஒருவேளை இயேசுகிறிஸ்து அதற்கு விளக்கம் கொடுக்கவில்லையென்றால் அந்த பழைய கட்டளை தொடர்ந்து நம்முடைய வாழ்விலே பயன்படுத்தப்பட வேண்டுமென்றுதான் அர்த்தம். இன்னும் சில கட்டளைகள், சுகாதாரம் பற்றிய, அதாவது இஸ்ரவேலர்களின் சுகாதாரத்திற்காக கொடுக்கப்பட்ட கட்டளைகள் இருக்கிறது, எதை உண்ணவேண்டும்? எதை உண்ணக்கூடாது? மட்டுமல்ல சமூக நலத்தைப் பேணுவதற்காக கட்டளைகள் கொடுக்கப்பட்டிருந்தது, அடைக்கலப்பட்டணம் போன்ற காரியங்களையெல்லாம் பார்க்கிறோம் அல்லவா? இதுபோன்ற கட்டளைகள் சமூகநலம் சார்ந்தவை. எவ்விதமாக சமூகத்தில் நீதி, நியாயம் போன்றவை கடைப்பிடிக்க வேண்டுமென்றுசொல்லி, கர்த்தர் கூறியவைகள் சமூகநலம்

சார்ந்தவைகள். இவற்றையெல்லாம் நாம் கவனத்தில் கொண்டு, வியாக்கியானம் செய்ய வேண்டும். அதுதான் சரியாக இருக்கும்.

கட்டளையானது இன்றைய வாழ்விற்கு பொருத்தமானது என்பதையும் கவனத்தில் கொண்டு விளக்கம் கொடுக்க வேண்டும். ஏனெனில், அநேக கட்டளைகளை இயேசுகிறிஸ்து நிறைவேற்றி விட்டார் என்று கற்றிருக்கிறோம். இன்னும் சில கட்டளைகள், இஸரவேல் சமூகத்தினருக்கு மட்டுமே கொடுக்கப்பட்டவைகள். சில கட்டளைகள் இந்த இஸ்ரவேல் ஜனங்களுக்கு, அடிமைத்தேசமாகிய எகிப்தில் எவ்விதமாய் வாழவேண்டுமென்று கொடுக்கப்பட்டவைகள். அடுத்து, கானான் தேசத்திற்கு வந்தபிறகு எவ்விதமாய் வாழவேண்டுமென்று கர்த்தர் கொடுத்த கட்டளைகள் அதிலே அடங்கீருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் நாம் கருத்தில் கொள்ளவேண்டியது அவசியம். இது தவிர அந்தகால சமூக, கலாச்சார நிலையைப் பார்க்கவேண்டும். அந்த சமூக, கலாச்சார நிலைமையில் மட்டுப்படுத்தப்பட்ட காரியங்களும் இருக்கிறது, அதாவது அந்த சமூக, கலாச்சார நிலைமைக்கு ஏற்றபடி கொடுக்கப்பட்ட கட்டளைகளும் இருக்கின்றது. அதை நாம் கருத்தில்கொண்டு, இது அந்த காலகட்டத்திற்கு கொடுக்கப்பட்டது. எனவே, அவைகள் இந்த காலகட்டத்திற்கு ஒவ்வாதவையாக இருக்கலாம் என்பதை நாம் பார்க்கவேண்டும். இஸ்ரவேல் சமூகத்திற்கு கொடுக்கப்பட்ட காரியங்கள், இன்று நம்முடைய வாழ்க்கைக்கு அதிகமாக பொருந்துவதில்லை. சில காரியங்கள் ஆவிக்குரிய ரீதியில் பொருந்தக்கூடும். ஆனால் எல்லா கட்டளைகளும் இஸ்ரவேல் தேசத்து சமூக நிலையில் கொடுக்கப்பட்ட அந்த நியாயப்பிரமாணம், இன்றைக்கு அது பொருந்துமா? என்று கருதி சற்று சிந்திக்கவேண்டும். இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டுதான் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாண கட்டளைகளை வியாக்கியானம் செய்யவேண்டியது அவசியம்.

அடுத்து, நாம் பழைய ஏற்பாட்டின் அமைப்பை சற்று புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். பழைய ஏற்பாடு எவ்விதமாக எழுதப்பட்டிருக்கிறது தெரியுமா? அது மூன்றுவிதமான நிலைகளில் எழுதப்பட்டிருக்கிறது. அதாவது மூன்றுவிதமான காரியங்களை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். தேவனுடைய உலகளாவிய திட்டத்தின் அடிப்படையில் பழைய ஏற்பாடு எழுதப்பட்டிருக்கிறது. அங்கே தேவனுடைய உலகளாவிய திட்டம் இருப்பதை நீங்கள் காணலாம். இதில் என்ன வரும் என்றால், அவருடைய சிருஷ்டிப்பு, மனித வீழ்ச்சி, பாவம், மீட்பு, கிறிஸ்துவைப் பற்றிய வாக்குத்தத்தம், சபை எவ்விதமாய் உருவாகி வளரும் என்பது போன்ற காரியங்களை, உலகளாவிய திட்டமாக நாம் அதிலே பார்க்க முடிகிறது.

இரண்டாவது காரியம், இஸ்ரவேல் ஜனங்களோடு, தேவனுடைய நடவடிக்கைகளைப் பற்றிய வரலாற்றை நாம் இதிலே பார்க்கலாம். இஸ்ரவேல் ஜனங்களோடு தேவன் செய்கின்ற காரியம். இதில் ஆபிரகாமின் அழைப்பைப்

பார்க்கிறோம். மோசேயினுடைய யாத்திராகமத்தைப் பார்க்கிறோம். யோசுவாவின் தலைமையின்கீழ் கானான் நிர்வகிக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். அதைப்போல தேவனுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனங்களின் வரலாற்றை தொடர்ச்சியாகவுள்ள பகுதிகளை நாம் இந்தப் பகுதியிலே பார்க்கிறோம். ஆக, இஸ்ரவேல் ஜனங்களோடு தேவன் செயல்பட்ட விதம் பற்றிய வரலாறு. இது இரண்டாவது நிலை.

மூன்றாவது நிலையானது, ஒரு குறிப்பிட்ட மனிதனோடு, தேவனுடைய செயல்பாடு இருப்பதைப் பற்றியது என்று சொல்லலாம். குறிப்பிட்ட மனிதர்களோடு தேவனுடைய செயல்பாடுகள் இருப்பதை நாம் வேதத்தில் வாசிக்கிறோம். அது ஆபிரகாமாய் இருக்கட்டும், ஆதாம், ஏவாள் போன்றோராய் இருக்கட்டும். தொடர்ந்து சொல்லப்படுகிற எல்லா இராஜாக்கள், தீர்க்கதரிசிகள் மற்றும் தனிப்பட்ட மனிதர்களின் பெயர்கள் வருகிறதே, அவர்களோடு தேவன் எவ்விதமாய் செயல்பட்டார் என்பதைப்பற்றிய வரலாற்றை நாம் பழைய ஏற்பாட்டில் பார்க்கிறோம். இவ்விதமான அமைப்பில் பழைய ஏற்பாடு அமைந்திருக்கிறது என்பதை நீங்கள் கருத்தில் கொண்டு விளக்கம் செய்யவேண்டியது அவசியம். இன்னும் அதிகமான காரியங்களை நீங்கள் வேதாகமக் கல்லூரியில் பயில முடியும். இவ்வாறு பல காரியங்களை கருத்தில்கொண்டு, வியாக்கியானம் செய்யவேண்டியது அவசியம். குறிப்பாக, நியாயப்பிரமாணத்தை எவ்விதமாய் நாம் விளக்கப்படுத்தப்போகிறோம்? என்பதைக்குறித்துதான் பேசிக்கொண்டிருக்கிறோம். அதை வியாக்கியானம் செய்யும்போது, எதையெல்லாம் நாம் கவனம் செய்யவேண்டும் என்ற காரியத்தைத்தான, நாம் இந்த தலைப்பின் கீழ் கற்றுக்கொண்டு, இப்பொழுது அறிந்து கொண்டிருக்கிறோம். மட்டுமல்ல, பழைய ஏற்பாட்டின் அந்த விளக்கங்கள் 5 வித தன்மைகளோடு காணப்படுகிறதை நாம் தொடர்ந்து கற்றுக்கொள்ளலாம்.

முதலாவது, இந்த பழைய ஏற்பாட்டு காரியங்கள் தேவனுடைய செயலை முக்கியப்படுத்துவதாக இருக்குமே தவிர, மனிதனுடைய செயலை முக்கியப்படுத்துவதாக இருக்காது. தேவாதி தேவனே முக்கியமான Hero-வாக(கதாநாயகனாக) இருப்பார். அவர்தான் மத்தியில், அந்த நிகழ்வின் மத்தியபகுதியில் அவர் இருப்பார். எகிப்து தேசத்தில் வந்த வாதைக்கு மோசேயும் காரணமல்ல, பார்வோனும் காரணமல்ல, கர்த்தரே மையப்பகுதியில் இருப்பதைப் பார்க்க முடியும். பார்வோனையும், மோசேயையும், இந்தத் திட்டத்தில் கர்த்தர் பயன்படுத்தினாரேயொழிய, மோசேயும், பார்வோனும், இதில் எந்தவித பகுதியையும் உடையவர்களாக, மையப்பகுதியில் அவர்கள் காணப்படவில்லை. பார்வோனுக்கு சில பாடங்களை பயிற்றுவிப்பதற்காக, சில வாதைகள் வருகிறது. அவன் அதினால் பாதிக்கப்படுகிற நிலையிலிருக்கிறதைப் பார்க்கிறோம். மோசே, தேவனிடத்தில் ஜெபித்து விடுதலை தருகிறதையும் நாம் பார்க்கிறோம். இவ்வாறு இவர்கள் தேவனுடைய மையத்திட்டத்தில் இருக்கிறார்களே தவிர, இவர்கள் அந்த வாதைக்கு காரணம் அல்ல. இவ்வாறுதான் பழைய ஏற்பாட்டு வரலாறு கூறப்படும். தேவனே மையப்பகுதியில் இருப்பார். அவரே கதாநாயகராக

இருப்பார் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். அவர் எவ்விதமாய் இருக்கிறார் என்பதைப் பற்றித்தான் அதிகமாய் சொல்லப்பட்டிருக்குமேயொழிய, அவர் தன்னுடைய சிருஷ்டிப்புகளோடு எவ்விதமாய் செயல்பட்டார் என்பது சொல்லப்பட்டிருக்காது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இரண்டாவது, இந்த பழைய ஏற்பாட்டில் காணப்படுகிற சம்பவங்கள் எல்லாமே, தேவனுடைய சித்தத்திற்கும், கிரியைகளுக்கும் உட்பட்டதாக செய்யப்பட்டிருக்கிறதை நாம் பார்க்கலாம். அதாவது தேவ திட்டம் மற்றும் சித்தத்தின் அடிப்படையில் வரையறைக்கு உட்பட்டு, செயல்பட்டதாய் இருக்கும் என்பதை நீங்கள் கவனிக்கவேண்டும். அதாவது, தேவனுடைய சித்தத்தின் அடிப்படையில் எவ்வளவுதூரம் விளக்கப்படவேண்டுமோ, அவ்வளவுதான் அங்கே விளக்கப்பட்டிருக்கும்.. அதைத்தான்டி, முழுமையான தகவலை நீங்கள் வேதத்தில் சில நிகழ்வுகளுக்கு சொல்லப்பட்டிருக்கிறதை பார்க்க முடியாது, அதாவது எல்லாத் தகவலும் சொல்லப்படாது என்ற கருத்தை நாம் அறியலாம். உதாரணமாக, டைனோசரைப்பற்றி நாம் அறிந்திருக்கிறோம். தேவன் படைத்த அதற்கு என்ன நிகழ்ந்தது? என்பதைக் குறித்த முழுத் தகவலை நம்மால் அறிந்துகொள்ள முடியவில்லை. இன்னும்கூட தேவன் வானத்தையும், பூமியையும் படைத்தார். அதைத்தவிர தேவன் அநேக நட்சத்திரக் கூட்டங்கள், கிரகங்களைப் பார்க்கிறோம். இவையெல்லாவற்றையும் படைத்தார், அண்ட சராசரங்களைப் படைத்தார். எரிகோவின் வீழ்ச்சிக்குப் பின்பு என்ன நடந்தது? என்பதை நாம் அறிந்துகொள்ள இயலாது. ஏனெனில் அதைப்பற்றி சொல்லப்படவில்லை. இதைப்போல தானியேல் சிங்கக் கெபியிலிருந்து காப்பாற்றப்பட்ட பின்பு, என்னவெல்லாம் நடந்தது என்பதைக்குறித்து நாம் அறிந்து கொள்ள முடியவில்லை. தேவன் எதைச்சொல்ல விரும்புகிறாரோ, அவருடைய சித்தத்தின்படி எந்தளவுக்கு தெரிவிக்க விரும்புகிறாரோ, அந்தளவுக்குத்தான் பழைய ஏற்பாட்டில் நமக்கு எழுதப்பட்டு தரப்பட்டிருக்கிறது. ஆக, இதுவொரு வரையறைக்கு உட்பட்டது. இவைகளெல்லாம் தேவ சித்தத்தின் அடிப்படையிலேயேதான் எழுதப்பட்டிருக்கிறது. இதுதான் பழைய ஏற்பாட்டின் தன்மை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மூன்றாவது, பழைய ஏற்பாட்டு விளக்கங்கள் நம்மை அனுபவத்திற்கு அழைக்கிறது, அதாவது பழைய ஏற்பாடு எழுதப்பட்டு விளக்கமாய் சொல்லப்பட்ட காரியங்கள் யாவும், நாம் அதை நம்முடைய தனிப்பட்ட வாழ்விலே அனுபவித்துப்பார்க்க வேண்டுமென்று அழைக்கிற ஒரு அழைப்பாக இருக்கிறது. அதற்காகவே பழைய ஏற்பாட்டு காரியங்கள் எழுதப்பட்டிருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் நாம் வாசிக்கும்போது, அது எந்த சூழலில் நடைபெற்று இருக்கிறது? அதில் வருகின்ற ஒவ்வொரு காரியங்கள், அதில் வருகிற மனிதர்கள், அவர்களுடைய தன்மைகள், அதில் நடக்கிற நிகழ்வுகள் போன்றவற்றை நாம் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று வேதம் எதிர்பார்க்கிறது. அதற்காக நாம் அந்த வரலாற்று பின்னணியைப் பார்க்கவேண்டும். இலக்கணப்

பின்னணியைப் பார்க்க வேண்டும். மட்டுமல்ல அந்த வசனத்தின் ஆழத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டுமென்று இந்த பழைய ஏற்பாட்டு வசனங்கள், காரியங்கள் நம்மிடம் எதிர்பார்க்கிறது. ஆகவே, பிரியமானவர்களே, நம் வாழ்விலே இதை நடைமுறையாக பார்க்கவேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

நான்காவது காரியம், பழைய ஏற்பாடு விளக்கவுரையாக சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய, அது பரிந்துரையாய் சொல்லப்படவில்லை என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, பழைய ஏற்பாட்டு சம்பவங்கள் யாவும், விளக்கமாக, அதன் காரியங்களை சொல்கிறதேயொழிய, அதைக்கொண்டு இவ்விதமாய் செய்யவேண்டுமென்று சொல்லி பரிந்துரை செய்யப்படுகிற காரியங்கள் மிக மிக குறைவாகவே இருக்கிறதை நீங்கள் பார்க்க முடியும். அதுதான் பழைய ஏற்பாட்டின் தன்மை. உதாரணமாக, பழைய ஏற்பாட்டு சம்பவங்களை எடுத்துப்பார்த்து சிந்தித்துக்கொள்ளுங்கள். அது, நேரடியாக இப்படிச் செய் என்று சொல்கிற காரியங்கள் மிகக்குறைவாக இருக்கிறதை நீங்கள் அறிய முடியும். உதாரணமாக, யோனாவின் கதை அல்லது சம்பவங்களை எடுத்துப்பாருங்கள். அது நடந்த நிகழ்வு. ஆனால், அதில் இவ்விதமாய் செயல்படுங்கள், இல்லாவிட்டால் யோனாவிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள் என்று எதையும் பரிந்துரை செய்யவில்லை. ஆக, இவ்விதமாகத்தான் பழைய ஏற்பாட்டு சம்பவங்கள் விளக்கமாக கொடுக்கப்பட்டிருக்கிறதேயொழிய, அதிலிருந்து பாடங்களை, நீங்களும், நானும் புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்திலேயே கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதைத்தான் நாம் ஏற்கனவே பார்த்தோம்.

பழைய ஏற்பாட்டு சம்பவங்களை நாம் எவ்விதமாய் அர்த்தவிளக்கம் செய்யவேண்டுமென்று பார்த்தோம். இங்கே சம்பவங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறதை நாம் சம்பவத்தை வைத்து அப்படியே உபதேசமாக போதிக்காமல், அதற்கு கட்டளையாய் கொடுக்கப்பட்ட பழைய ஏற்பாட்டு காரியம் அல்லது புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்திலே இந்த சம்பவங்களை விளக்கம் கொள்ள வேண்டும். அது யோனாவின் சம்பவமாய் இருக்கட்டும். எதுவாக இருந்தாலும், நாம் அவ்விதமாக, அந்த விளக்கத்தின் அடிப்படையில் அல்லது கட்டளையின் அடிப்படையில்தான் கூறவேண்டுமென்று அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். இந்த யோனாவின் சம்பவத்திலே, கர்த்தர் நினிவே மக்களின்மீது கொண்ட அன்பை நாம் பார்க்க முடியும். அந்த அன்பினாலே, இந்த யோனாவைக் கர்த்தர் அழைத்து, எச்சரிப்பைக் கொடுக்க அழைத்து, பயன்படுத்துகிறதையும், அதற்கு யோனா மறுத்ததினாலே இவ்விதமாக சம்பவங்கள் சென்றதையும் நாம் வேதத்திலே வாசித்துப் பார்க்கிறோம். அதை நாம் அறிந்து, புரிந்து நம்முடைய வாழ்க்கைப் பகுதியில் நடைமுறைப்படுத்த வேண்டியது நம்முடைய கைகளில்தான் இருக்கிறது. அதனுடைய விளைவுகள், ஒருவேளை கீழ்ப்படியாமல் போனதினால் நினிவேயின் காரியங்கள், அதைப்போல யோனா கீழ்ப்படியாமல் போனதினால் ஏற்பட்ட காரியங்கள், திரும்ப அவனைக் கட்டாயப்படுத்தி கீழ்ப்படிய வைத்து நினிவேக்கு அனுப்பி, எச்சரிக்கை செய்து, அவர்கள் மனந்திரும்பி தேவன்

வழிநடத்தின விதங்களை நாம் பார்க்கிறோம். இவ்விதமாக, நாம் வேதாகமத்தின் சம்பவங்களை வாசிக்கும்போது, தேவன் எவ்விதமாய் மக்களோடு செயல்பட்டார் என்பதையெல்லாம் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது, அதாவது தேவன் இந்த இராணுவத்தை வெறுக்கிறார், இந்த பீரங்கிகளை, இரதங்களை வெறுக்கிறார் என்று சொல்லி போதிக்கிறபோது, இப்படிப்பட்ட எடுத்துக்காட்டுகளையெல்லாம் கூறுகிறார்கள். அப்படியல்ல, அவைகளை தனிப்பட்ட பாடங்களாக பிரித்துப்பார்க்க கூடாது.

அதைப்போல, இஸ்ரவேல் ஜனங்கள், எரிகோவுக்கு எதிராக ஏழுமுறை சென்றபோது, ஆர்ப்பரித்தபோது, அங்கே எரிகோ கோட்டை வீழ்ந்தது என்று பார்க்கிறோமே. அதைப்போல நாமும் 7 முறை ஜெபம் செய்து ஆர்ப்பரித்து தேவனிடத்தில் கேட்டுவிட்டால், எல்லா எதிராளிகளின் கோட்டைகளும் வீழ்ந்துவிடும் என்று சொல்லி நாமாகவே ஒரு பாடத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது. தேவன் சொன்னால் அவ்வாறு செய்வார், இல்லையென்று சொல்லமுடியாது. ஆனால், பழைய ஏற்பாட்டில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது, அந்த சம்பவம் அவ்வாறு இருக்கிறதல்லவா? ஆகவே நானே விசுவாசத்தோடு இவ்வாறு செய்கிறேன் என்று செய்துவிட்டு, பிறகு ஏமாற்றம் கண்டு, ஆவிக்குரிய வாழ்வில் சோர்ந்து போகக்கூடாது. ஏனெனில், அது மொத்தமாக கூறப்பட்ட காரியங்களாக இருக்கிறது. இஸ்ரவேலுக்கு கூறப்பட்ட காரியமாக இருக்கிறது, குறிப்பிட்ட சம்பவத்துக்கு, குறிப்பிட்ட வழிநடத்துதலாக காணப்படுகிறது என்றெல்லாம் பார்க்கவேண்டும். ஏன் அவ்வாறென்றால், தேவன், ஒவ்வொரு நிகழ்விலும், ஒவ்வொருவிதமாய் செயல்படுகிறவர். தாவீதின் வாழ்வை எடுத்துக்கொண்டால், தேவன் தாவீதை சவுலோடு வைத்து, யுத்தத்திற்கு அனுப்பி, பின்பு அவரால் துரத்தப்பட்டு, காடுகளில் அலைகிற ஒரு நபராக நடத்தி, பின்பு ராஜாவாக மாற்றினார். ஆகவே ஒரேமுறையில் அவர் செயல்படுகிறவர் அல்ல, எப்போதுமே இவ்வாறுதான் செயல்பட வேண்டுமென்று அவர் கூறவில்லை. ஆகவே, தாவீதை மட்டுமே எடுத்துக்கொண்டால்கூட, பல விதங்களில் அவரைப் பயன்படுத்தி, சூழல்களைப் பயன்படுத்துவாரானால், நாம் எவ்வளவு தூரம் காணப்படுவோம், யோசித்துப்பாருங்கள்.

நாம் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டதுபோலவே இப்படித்தான் என்றொரு முடிவுக்கு வரக்கூடாது. ஒருவேளை தேவன் சொல்லக்கூடும். அதையும் இல்லையென்று சொல்லமுடியாது. அவ்வாறு சொல்வோமானால் சிலருக்கு, அவர்களுடைய விசுவாசத்தை தொலைப்பதாக இருக்கும். அப்படியும் இல்லை, இருக்கலாம். தேவன் சிலருக்கு ஒருவேளை, எரிகோவின் கோட்டை விழுந்ததுபோல, உன் வாழ்விலும் செய்வேன் என்று சொல்லக்கூடும். ஆனால் அதைவொரு போதனையாகவோ, அல்லது பாடமாகவோ எடுத்து போதிக்கக் கூடாது என்றதொரு கருத்தை நாம் பழைய ஏற்ப்பாட்டை விளக்கம் கொள்ளும்போது, கவனம் கொள்ளுதல் அவசியம்.

நீங்கள் பழைய ஏற்பாட்டு சம்பவங்களை விளக்கப்படுத்தும்போது, கவனத்தில் கொள்ள வேண்டிய படிநிலைகள்:-

1) ஒரு வேதபகுதி எந்த நோக்கத்தை தெரிவிக்க விரும்புகிறது என்பதை முதலாவது கண்டுபிடிக்க வேண்டும். ஒரு கதையையோ அல்லது நிகழ்ச்சியோ என்ன நோக்கத்திற்காக சொல்லப்பட்டிருக்கிறது? எதைக் கர்த்தர் நமக்கு அதன் மூலம் கற்றுத்தர விரும்புகிறார்? என்ற நோக்கத்தை முதலாவது புரியவேண்டும். அதற்காக நீங்கள் இலக்கணத்தைப் பயன்படுத்தலாம். வரலாற்று பின்னணியைப் பார்க்கலாம். அதைப்போல இறையியல் கோட்பாடுகளைப் பார்க்கலாம். அந்த நிகழ்ச்சியின் அமைப்பு, அதில் வருகிற மனிதர்கள், அதில் காணப்படுகிற செயல்பாடுகள், நடந்த நிகழ்வுகள் தீமையா? நன்மையாய் நடந்த நிகழ்ச்சிகள் என்னென்ன? என்பதையெல்லாம் புரிந்து அந்த நிகழ்ச்சியை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அந்த நிகழ்ச்சியைப் படிக்கும்போது, அந்தப்பகுதிக்குள்ளாக, அதாவது, சமய, சந்தர்ப்பத்தைப் பார்க்கவேண்டும். சந்தர்ப்ப சூழ்நிலையைப் பார்க்கவேண்டுமென்று ஏற்கனவே நாம் கற்றிருக்கிறோம். இப்பொழுது சற்று நினைவுக்குக் கொண்டு வாருங்கள். முன்னே, பின்னேயுள்ள வசனங்களைப் பாருங்கள். அந்த சந்தர்ப்பத்தைப் பாருங்கள் . என்ன காரியத்தை இந்த சம்பவம் விளக்கப்படுத்த விரும்புகிறது என்று சொல்லி, இறையியல் கருத்துகளின் அடிப்படையில் கண்டுபிடிக்க முயற்சி எடுங்கள். இதை முதலாவது படி என்று வைத்துக்கொள்ளுங்கள்.

2) இரண்டாவது படி, குறிப்பிட்ட சம்பவம்/நிகழ்ச்சிகளை விளக்கமாக சொல்லிக்கொண்டு போகிறது. ஆனால், என்ன செய்யவேண்டும் என்று பரிந்துரை செய்யாமல் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது, நாம் ஏற்கனவே கற்றுக்கொண்டதுபோல, வேதத்திலே மற்ற இடங்களில் இதுகுறித்து என்ன சொல்லியிருக்கிறது என்று நீங்கள் பார்க்க வேண்டும். அது கட்டளையாக இருக்கலாம், வேத வசனமாக இருக்கலாம். உதாரணமாக, தாவீது, பத்சேபாள் சம்பவத்தைப் பார்க்கிறீர்கள். இதற்கு கட்டளை என்ன சொல்லியிருக்கிறது. விபச்சாரம் செய்யாதிருப்பாயாக! என்று நாம் 10 கட்டளைகளில் பார்க்கிறோம், அல்லது வேறு இடத்தில் வருகிற வசனத்தை இதற்கு ஒப்பிட்டு பார்த்து, ஒவ்வொரு சம்பவத்திற்கும், அந்த சம்பவத்திற்கு பாடமாக, கட்டளையாக, அநேக வசனங்கள் இருக்கும், கட்டளைகள் இருக்கும், அதைக்கொண்டு நாம் விளக்கப்படுத்த வேண்டும்.

3) மூன்றாவது படி, இந்த பழைய ஏற்பாட்டின் காரியங்களுக்கு புதிய ஏற்பாட்டு விளக்கங்களை நாம் பார்க்கலாம். பெரும்பாலும் பழைய ஏற்பாட்டு சம்பவங்களுக்கு புதிய ஏற்பாடு அதிகமான விளக்கத்தைக் கொடுக்கவில்லை என்பதுதான் உண்மை. இதை நோக்கமாகக்கொண்டு புதிய ஏற்பாடு எழுதவில்லை. ஆனாலும், பழைய ஏற்பாட்டு சம்பவங்களுக்கு, புதிய ஏற்பாட்டிலே அதிக வெளிச்சத்தை, புதிய ஏற்பாட்டு விளக்கத்திலிருந்து பெற முடியும். உதாரணமாக, இயேசுகிறிஸ்து யோனாவைப்பற்றி கூறியிருக்கிறார், நோவாவின் சம்பவத்தை விளக்கப்படுத்தியிருக்கிறார்.

இன்னும்கூட சில சம்பவங்களுக்கு, நாம் ஏற்கனவே அறிந்திருக்கிறதுபோல, தாவீது, பத்சேபாள் சம்பவத்தை ஒருவேளை எடுத்துக்கொள்வோமானால், அதைக்குறித்து நேரடியாக இயேசுகிறிஸ்து என்ன கூறியிருக்கிறார்? அல்லது இந்த விபச்சார பாவத்தைக் குறித்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்ன சொல்லியிருக்கிறார்? என்பதை வைத்து விளக்கப்படுத்தி புரிந்துகொள்ள முடியும். நமக்கு என்ன பாடத்தைக் கர்த்தர் கற்றுத் தருகிறார் என்று ஒவ்வொரு சம்பவத்திலும் இயேசுகிறிஸ்து கூறுகிற வசனத்தின் வெளிச்சத்திலே நீங்கள் பழைய ஏற்பாட்டை படித்து பாருங்கள். அநேகப் பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும்.

அடுத்து பழைய ஏற்பாட்டு இறையில் செய்திகளை, அதை நம்முடைய வாழ்வின் நடைமுறைப் பகுதிக்கு கொண்டுவந்து பழக்க வேண்டும். பழைய ஏற்பாட்டு சம்பவங்களை வாசிக்கும்போது, அதில் கூறப்பட்ட காரியங்களை, நம்முடைய வாழ்வின் நடைமுறைக்கு அதன் இறையியல் அடிப்படையிலான விளக்கங்களை எடுத்து நம்முடைய வாழ்வுக்கு கொண்டுவர வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதைக்கருத்தில்கொண்டு கவனம் செய்ய வேண்டும். இறையியல் அடிப்படையில் வேதத்தைச் சிந்தித்துப் பாருங்கள். அதற்குத்தான் நீங்கள் இப்போது இறையியல் வகுப்பில் சேர்ந்து கற்றுக்கொண்டிருக்கிறீர்கள். இறையியலில் வேதத்தை எவ்விதமாய் வியாக்கியானம் செய்யவேண்டும்? எவ்விதமாய் வேதத்தைப் பயன்படுத்த வேண்டும்? எவ்விதமாய் வேதத்தை நீங்கள் பிரசங்கிக்க வேண்டும்? என்று எல்லாவற்றையும் இந்தப்பாடத்தில் கற்றுக்கொண்டிருக்கிறீர்கள். அந்த விளக்கத்தின் அடிப்படையில் பழைய ஏற்பாட்டை நீங்கள் வாசித்துப்பாருங்கள். அதைக்குறித்து அநேக காரியங்களை இந்தப் பாடத்திலிருந்து கற்று இருக்கிறோம். அதையும் நினைவில் கொண்டு, நீங்கள் பழைய ஏற்பாட்டை விளக்கப்படுத்தப் பாருங்கள்.

## <u>தவிர்க்கவேண்டிய சில பொதுவான காரியங்கள்:</u>

### <u>உருவகப்படுத்துதல்</u>

பழைய ஏற்பாட்டில் அநேக மறைமுகமான அர்த்தங்கள் மறைந்திருக்கிறது என்று சொல்லி, ஆவிக்குரிய அர்த்தம் இருக்கிறது என்று சொல்லி, நாம் அதன் நேரடி அர்த்தத்தை அநேக வேளைகளில் பார்க்க தவறி விடுகிறோம். நாம் ஏற்கனவே சிந்தித்து இருக்கிறோம். கிரேக்க தத்துவ ஞானிகள், தங்கள் மதம் சம்பந்தப்பட்ட புத்தகங்களை நேரடியாகக் கூறப்பட்ட காரியங்களுக்கு கூட, அநேக ஆவிக்குரிய அர்த்தம் இருப்பதாக, மறைமுகமான அர்த்தங்கள் இருப்பதாக கூறி அவர்கள் விளக்கப்படுத்தினார்கள். அவர்களைத் தொடர்ந்து, அந்த கிரேக்க தேசத்திலிருந்த யூதர்கள் அவ்விதமாகவே பழைய ஏற்பாட்டை விளக்கப்படுத்த ஆரம்பித்தார்கள். பிறகு அது கிறிஸ்தவத்தையும் வந்து தொற்றிக்கொண்டது என்பதை நாம் எளிதாக அறிந்து கொள்ளலாம். இவ்விதமாகவே, உருவகப்படுத்துதல் மறைமுகமானதாக இருக்கிறது, ஆவிக்குரிய வகையில் இருக்கிறதென்று சொல்லி, சொல்லியே, பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் அர்த்தம் கற்பிக்க கூடாது. அவ்விதமாயச் செய்யும்போது, நாம் தேவன் சொல்லாத காரியத்தைக் கூட, அவர் சொன்னதாக சொல்லிவிட அநேக

வாய்ப்புகள் இருக்கிறது. நம்முடைய பழைய ஏற்பாடு, அநேக உருவக அர்த்தத்தை உடையதாக இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அதற்கு முன்னும், பின்னும் அதற்குரிய விளக்கத்தை நாம் பார்க்க முடியும். எந்த இடத்தில் உருவகமாய்க் கூறப்பட்டிருக்கிறது என்பதை நாம் அந்தப் பகுதியை வைத்தே புரிய முடியும் என்றெல்லாம் முந்தின பாடங்களிலே படித்திருக்கிறோம். அவ்வாறு இல்லாத காரியங்களை வைத்துக்கொண்டு, எல்லாமே ஆவிக்குரிய அர்த்தத்தைக் குறிக்கிறது என்று கற்றும் இருக்கிறோம். எலியாவின் சம்பவத்திலே, விதவை பொறுக்கின இரண்டு விறகு கூட, சிலுவையைக் குறிக்கிறது என்று ஒரு பிரசங்கியார் கூறியிருக்கிறார். அவ்வாறு சொல்வது எல்லாம் தவறான விஷயங்களாகும். எல்லாவற்றிற்கும் சிலுவையை அர்த்தப்படுத்தக் கூடாது. மாராவின் தண்ணீரை மதுரமாக்கின அந்த சம்பவத்தை வைத்துக்கூட சிலர், அந்த மாராவிலே போடப்பட்ட மரம், சிலுவை மரத்தைக் குறிக்கிறது. அந்த சிலுவை மரம், அந்த கசப்பை இனிமையாக மாற்றின சம்பவம்போல், உன் வாழ்வின் கசப்பை இனிமையாக மாற்றும் ஒரு மரம் என்று கூறப்படுகிற, சில விளக்கங்களையும் நாம் கேள்விப்படுகிறோம். ஒரு விதத்தில் இது சரியாக இருக்கலாம், அந்தவேளையில் எழுதிய அந்த ஆசிரியர், அந்த நோக்கத்தோடு அதை எழுதவில்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பழைய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்துவைப் பற்றி அநேக தீர்க்கதரிசனங்கள் சொல்லப்பட்டிருப்பது முற்றிலும் உண்மை. நீங்கள் தவறாய் புரிந்து கொள்ளக்கூடாது என்பதற்காகத்தான் இந்தக் காரியங்களை நாம் கற்றுக்கொண்டிருக்கிறோம். இயேசுவைப் பற்றிய காரியங்கள், தீர்க்கதரிசனங்கள், பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் தேசத்தைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிற காரியங்கள் உங்களுக்கும் பொருந்தும். தேவன் அதை தனிப்பட்ட முறையில் உங்களுக்கும் சொல்லக் கூடும். இல்லையென்று கூறவில்லை. ஆனால் அதேவேளையில் எல்லாமே, மறைமுக அர்த்தம் கற்பிக்கிறது என்று சொல்லி, சொல்லி, நேரடியாக அர்த்தம் கற்பிக்கிற வசனங்களை நாம் மறைபொருளாக அர்த்தம் எடுக்கக் கூடாது என்பதும் மிகவும் முக்கியமான காரியம். இவ்விதமாக உருவகப்படுத்துதலின்போது, அதிக கவனம் கொள்ள வேண்டும். அதைத் தவறுதலாக அர்த்தப்படுத்தி விடக்கூடாது.

வேதத்தை, குறிப்பாக பழைய ஏற்பாட்டை வியாக்கியானம் செய்யும்போது, அந்த பகுதியைவிட்டு, பிரித்து எடுத்து பார்க்கிறதை விட்டுவிட வேண்டும். குறிப்பிட்ட சம்பவத்திலிருந்து குறிப்பிட்ட ஒரு வசனத்தை எடுத்து பார்க்கிறது, ஒரு பெரிய தவறாக இருக்கிறது என்பது இன்றைய காலகட்டத்தில் காணப்படுகிறது. அநேகர் அந்தத் தவறைச் செய்து விடுகிறார்கள். ஆனால், நாம் அந்த சம்பவத்தோடு பார்க்கவேண்டும். சந்தர்ப்ப சூழ்நிலையோடு பார்க்கவேண்டும் என்று சொல்லி, நாம் ஏற்கனவே கற்றிருக்கிறோம். ஆனால், பொதுவாக இன்றைக்கு செய்யப்படுகிற மாபெரும் தவறு, அந்த சந்தர்ப்ப சூழலைப் பார்க்காதபடி, குறிப்பிட்ட வசனத்தை எடுத்துக்கொண்டு விளக்கம் கொடுக்கிற ஒரு பண்பு. உதாரணமாக, 2 சாமுவேல் 1:26ம் வசனம், ***"என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன், நீ எனக்கு வெகு***

***இன்பமாயிருந்தாய், உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது, ஸ்திரீகளின் சிநேகத்தைப்பார்க்கிலும் அதிகமாயிருந்தது.''*** என்று யோனத்தானுக்காக தாவீது புலம்புகிறதைப் பார்க்கிறோம். இந்த புலம்பல் பகுதியிலிருந்து நாம் இந்த வசனத்தை தனியே எடுத்துப் பார்க்கும்போது, ஒருவேளை அது தவறான அர்த்தத்தை கொடுத்துவிடும் என்பதற்காக இந்தப் பகுதியை படித்திருக்கிறீர்கள். அங்கே புலம்பல் பாடும்போது, அவனுடைய friendship (நட்பு) மிகவும் ஆழமான அர்த்தத்தில் இருந்தது என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். அதை நாம் தனியே எடுத்துப்பார்க்கும்போது, ஒருவேளை தாவீதுக்கும், இந்த யோனத்தானுக்கும் தவறான தொடர்பு இருந்திருக்குமோ என்று நினைக்கிற ஒரு இடத்திற்கு கூட கொண்டுசெல்ல வாய்ப்பிருக்கிறது. சிலர் அவ்வாறும் விளக்கப்படுத்துகிறார்கள். அதனால்தான் வசனத்தை, அதன் பகுதிகளோடு, சந்தர்ப்ப சூழலோடு பார்க்கவேண்டும். அதைத்தாண்டி, தனியே எடுத்து விளக்கம் கொடுக்கும்போது, அநேக தவறான விளக்கங்கள் உருவாகிவிடும். இன்று அநேகப்பிரசங்கிமார்கள் செய்கிற தவறும் இதுதான். ஒரு குறிப்பிட்ட வசனத்தை மட்டும் எடுத்துவிட்டு, அதனுடைய பின்னணியைக் கூறாமல் முழுவதும் நேரடியாக நம்முடைய வாழ்விற்கு ஒப்பிட்டுப் பேசி விளக்கப்படுத்திக் கொண்டிருக்கிறதைப் பார்க்கிறோம். நமக்கு அதில் பிரயோஜனம் இருக்கிறது, ஆனால் அதேவேளையில் அதன் பின்னணியையும் கூறிவிட்டு, அது எந்தளவுக்கு இஸ்ரவேலுக்கு பொருந்துகிறது, இல்லாவிட்டால், ஒரு குறிப்பிட்ட மனிதனுக்கு பொருந்துகிறது அல்லது ஒரு குறிப்பிட்ட சூழலுக்கு பொருந்துகிறது என்று கூறி அதிலிருந்து மொத்தமான பாடங்களை எடுக்கவேண்டுமென்று கற்று இருக்கிறோம். இவ்விதமானதொரு தவறை நீங்களும், நானும் செய்துவிடக்கூடாது. ஆகவே பழைய ஏற்பாட்டை வியாக்கியானம் செய்யும்போது, இதையும் கவனத்தில் கொள்ளுங்கள். ஒரு வசனத்தை வியாக்கியானம் செய்யும்போது, அந்த வசனத்திற்கு முன்னே, பின்னேயுள்ள வசனங்களின் பின்னணியையும், சூழலையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இன்னொரு காரியத்தைப் பார்க்கலாம். நாம் வசனப்பகுதியையும் பார்க்கவேண்டும், முன்னும், பின்னும் உள்ள வசனங்களைப் பார்க்கவேண்டும் என்று சொல்வதுபோல, சில வேளைகளில் தவறாக வசனங்களை சேர்த்துப் படிக்கவும் வாய்ப்பிருக்கிறது என்றதொரு காரியத்தையும் கவனம் கொள்ளவேண்டும். அதாவது முந்தின வசனத்தின் அர்த்தத்தையும், நாம் தெரிந்துகொண்டு, தொடர்ந்த வசனத்தின் அர்த்தத்தையும் சேர்த்து எடுக்கும்போது, தவறுகள் ஏற்படட வாய்ப்பு உள்ளது. சில வேளைகளில், தவறான அர்த்தங்களை நீங்கள் விளக்கப்படுத்த வாய்ப்பிருக்கிறது. உதாரணமாக, சங்கீரம் *23:5-6* வசனங்களைப் பார்ப்போம், ***“என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர், என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும். நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.''*** என்று தாவீது சொல்கிறார். இந்த தவறான சேர்க்கை என்று சொல்கிற அந்த அர்த்தத்தில் அடிப்படையை பார்க்கும்போது, சிலர் கூறுகிற

கருத்து என்னவெனில், சத்துருக்களுக்கு முன்பாக தேவன் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்துவதாக தாவீது சொல்கிறார் அல்லவா? அதைத் தொடர்ந்து, நான் கர்த்தருடைய வீட்டில் நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன் என்றும் சொல்கிறார் அல்லவா? அப்படியிருக்கிறபடியால், நம்முடைய சத்துருக்கள், தேவனுடைய ஆலயத்திலேயே இருக்கிறார்கள் என்று கூறுகிற சிலர் உண்டு. உன் வீட்டாரே உன்னுடைய சத்துருக்கள் என்று இயேசு கூறினாரே, அதைப்போல இங்கே விளக்கம் கொடுக்கிறவர்கள், கர்த்தருடைய வீட்டிலேயே, அதனால்தான் கர்த்தருடைய வீட்டில் வைத்து ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தியிருக்கிறார் என்று கூறிவிட்டு, அதைப்போல, நான் நீடித்த நாட்களாய் தேவனுடைய ஆலயத்தில் நிலைத்திருப்பேன் என்ற அர்த்தத்தில் கூறுகிறார். ஆகவே, நம்முடைய எதிராளிகள் தேவாலயத்திலே இருப்பார்கள் என்று சிலர் கூறுவதுண்டு. அது அவ்வாறல்ல, இதற்குத்தான் தவறாக சேர்த்துப் பார்ப்பது என்று அர்த்தம். வசனத்தை தவறாக இணைத்துப் பார்ப்பது. இதையும் நீங்கள் கவனம் செய்ய வேண்டியது அவசியம். தொடர்ச்சி இருக்கலாம், ஆனால் அதே வேளையிலே, முந்தின கருத்துக்கும், பிந்தின கருத்துக்கும் தொடர்பு இல்லாமலும் நிறைய வசனங்கள் அதனுடைய ஆசிரியர்கள் எழுதியிருக்கிறதை நீங்கள் பார்க்கலாம். அநேக வசனங்கள் அவ்வாறு இருக்கிறது. தொடர்ச்சியான அந்த கருத்தின் தொடர்ச்சி, அடுத்த வசனத்திலும் இருக்கும் என்பதுதான் உண்மை. ஆனாலும் சில இடங்களிலே, ஆசிரியர்கள் அடுத்த கருத்துக்கும் போவார்கள் என்பதையும் கருத்தில் கொண்டு விளக்கம் செய்யவேண்டும் என்பதையும் கவனம் கொள்ளுங்கள்.

வேத வசனத்தை, பழைய ஏற்பாட்டை விளக்கம் செய்யும்போது, இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளவேண்டியது அவசியம். ஆக, நீங்களும், நானும் கட்டளையை இன்றைக்கு பயன்படுத்த வேண்டுமானால், அது எதற்காக கொடுக்கப்பட்டது? என்பதை முதலாவது நாம் கண்டறிந்து, அதை எப்படி இன்றைய காலகட்டத்தில் பயன்படுத்த முடியும் என்பதை அறிந்துகொண்டு அதைப்பின்பற்ற வேண்டும். அது உங்களுடைய அறிவுக்கு ஆவியானவர் நிச்சயம் தெரிவிப்பார்.

அதைப்போல சமுதாயம், கலாச்சாரம், மக்களது நிலைமை இன்று மாறுபட்டிருக்கிறது என்பதையெல்லாம், நாம் கருத்தில்கொண்டு, கட்டளையை பயன்படுத்துவதில் கவனமாக இருக்க வேண்டும். முன்பு இருந்த சமுதாயங்கள் வேறு, ஆனால் இன்றைய காலகட்டத்தில் நாம் எவ்விதமாக பின்பற்றவேண்டுமென்பதை, ஞானத்தோடு, விவேகத்தோடு பின்பற்றவேண்டியது அவசியம். இதைக்குறித்து அநேக எடுத்துக்காட்டுகளை நாம் முந்தைய பாடங்களில் கற்று இருக்கிறோம். ஏனெனில், கள்ளத்தீர்க்கதரிசிகள் கொல்லப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிற கட்டளையை நாம் இன்று எவ்வாறு எடுக்கவேண்டும் என்றெல்லாம் சிறிது ஞாபகம் செய்து பாருங்கள். பழைய ஏற்பாட்டில் அப்படிப்பட்ட கட்டளை இருக்கிறது என்பதும் உண்மைதான். ஆனால் இன்றைய காலகட்டம் எப்படியிருக்கிறது? என்பது சற்று யோசித்துப்பாருங்கள். நாம் கள்ளத்தீர்க்கதரிசிகளை கொன்றுவிட முடியுமா? கொலை செய்யலாமா? சட்டம் என்ன சொல்லுகிறது? அதற்கு புதிய ஏற்பாடு என்ன சொல்லுகிறது? என்றெல்லாம்

தியானித்து, இன்றைய மக்களின் நிலை, சட்டநிலை, சமுதாயம், கலாச்சாரம் ஆகியவைகளைப் புரிந்து, சரியானதொரு விதத்தில், புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் புரிந்துகொண்டு, பழைய ஏற்பாட்டை விளக்கம் கொண்டு வாழுங்கள் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். இதுவொரு கடினமான காரியமாக இருக்கலாம். ஒருவேளை நீங்கள் நினைக்கலாம், வேதத்தை சரியானபடி கைக்கொள்ளாமல் இன்றைய சூழலைப் பார்த்து பின்பற்றுங்கள் என்று சொல்லுகிறதுபோல, உங்களுக்குத் தோன்றலாம். ஆனால், அப்படியல்ல பிரியமானவர்களே, பழைய ஏற்பாடு இன்றும் என்னென்ன சூழ்நிலையில் இருக்கிறது என்பதை விரிவாக நாம் கற்று இருக்கிறோம். அது இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டது. அது அடிமைத்தனத்திலிருந்தபோது கொடுக்கப்பட்ட பிரமாணங்களை உள்ளடக்கியதாய் இருக்கிறது. பிறகு, விடுதலையானபின்பு, கானான் தேசத்தில் எப்படி வாழவேண்டுமென்று, அவர்களுக்கு கொடுக்கப்பட்ட முறைமையாய் இருக்கிறது. தனிப்பட்ட மனிதர்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளைகளை உள்ளடக்கியதாய் இருக்கிறது என்றெல்லாம் நீங்கள் இப்போது கற்று இருக்கிறீர்கள். இவற்றையெல்லாம் உணர்ந்து, இன்றைய சமுதாயத்திற்கு, நமக்கு அது எவ்விதமாய் பொருந்தும் என்பதைப் புரிந்து கொள்வதற்கு புதிய ஏற்பாடு அநேக விதங்களில் உதவி செய்கிறது. இதை நீங்கள், புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் பாருங்கள். இயேசுவானவர் நிறைவேற்றிய காரியங்களை, கைக்கொள்ள எவ்வாறு விளக்கம் செய்தாரோ, அதனடிப்படையில் பின்பற்ற நாம் அனைவரும் அழைக்கப்படுகிறோம்.

இவ்வாறு நாம் வேதாகம வசனங்களை விளக்கம் செய்யும்போது, அது அநேகரை விடுவித்து, நன்மையானதைச் செய்யவும், அநேகர் ஆசீர்வதிக்கப்படுவதற்கும் ஊன்றுகோலாய் இருக்கும். கர்த்தர்தாமே உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக. ஆமென்!

**<u>கேள்விகள்:-</u>**

1. நியாயப்பிரமாணம் மற்றும் கட்டளைகளை வியாக்கியானம் செய்யும்போது, நாம் கருத்தில் கொள்ள வேண்டியவைகளைக் குறித்து விளக்கமாக கூறுக?
2. நியாயப்பிரமாணம் எந்த மூன்று காரியங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கிறது என்பதனைக் கூறுக?
3. பழைய ஏற்பாட்டிற்கான விளக்கத்தினுடைய ஐந்து தன்மைகளை விளக்கமாக கூறுக?
4. பழைய ஏற்பாட்டு சம்பவங்களை விளக்கப்படுத்தும்போது, கவனத்தில் கொள்ளவேண்டிய படிநிலைகளை வரிசைப்படுத்தி விளக்கமாக கூறுக?
5. பழைய ஏற்பாட்டு சம்பவங்களை விளக்கப்படுத்தும்போது தவிர்க்கவேண்டிய சில பொதுவான காரியங்களைக் குறித்து விளக்கமாக கூறுக?